ஆண்டறிக்கை
2021

இலங்கை மகாவலி அதிகார சபை

இலங்கை மகாவலி அதிகார சபையின் ஆண்டறிக்கை – 2021

உள்ளடக்கம்		**பக்கம்**
நோக்கு மற்றும் குறிக்கோள்		1
வரலாற்றுப் பின்னணி		2-6
2021 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் அமைப்பு		6
சிரேஷ்ட முகாமைத்துவம்		7-10
2021 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை		11-12
பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு		13
2021 ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை		14-15
கடந்த 07 ஆண்டுகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்		16-17
இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிப்பாளர் சபை - 2021		18
பாகம் 01	**நிர்வாக அறிக்கை**	
முதலாவது அத்தியாயம்	**இலங்கை மகாவலி அதிகார சபையை நிருவுதல்**	**19-57**
	இலங்கை மகாவலி அதிகார சபையின் அமைப்பு மற்றும் பணி வினைகள் கட்டமைப்பு	20-23
	மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிருவாகம்	24-50
	திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு	51
	உள்ளக கணக்காய்வுப் பிரிவு	51-52
	நீரியல் முகாமைத்துவச் செயலகம்	52-56
	கொள்முதல் பிரிவு	57
இரண்டாம் அத்தியாயம்	**தொழில்நுட்ப சேவைப் பிரிவு**	**58-103**
	வகிபாகங்கள்	58
	செயற்திட்ட திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல்	59
	தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு	59-61
	பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்	61-64
	ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம்	65-67
	மின் மற்றும் இயந்திரவியல் பிரிவு	68-84

	உள்ளடக்கம்	**பக்கம்**
	பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவு	85-90
	காணி உபயோக திட்டமிடல் பிரிவு	91-97
	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	98-103
மூன்றாம் அத்தியாயம்	**அபிவிருத்திப் பிரிவு**	**104-139**
	காணிப் பிரிவு	104- 107
	விவசாய அபிவிருத்திப் பிரிவு	108-112
	மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு	113-125
	தாபன அபிவிருத்திப் பிரிவு	126-130
	வியாபார அபிவிருத்திப் பிரிவு	131-134
	ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு	135-139
நான்காம் அத்தியாயம்	**மனித வள மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு**	**140-155**
	ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு	140-142
	சட்டப் பிரிவு	143-144
	நிதிப் பிரிவு	145-146
	மகாவலி பாதுகாப்புப் படையணி	147-150
	போக்குவரத்துப் பிரிவு	151-155
ஐந்தாம் அத்தியாயம்	இ.ம.அ.சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்	156
பாகம் 02 -	வருடாந்த கணக்குகள்	157-172
பாகம் 03 -	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	173-185
பாகம் 04 -	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை	186-201
பாகம் 05 -	இ.ம.அ.சபையின் மொத்த செயலாற்றுகை	202-213

நோக்கு

நிலைபெறுதகு விவசாயம், புதுப்பிக்கத்தகு வலு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் மகாவலி அதிகார பிரதேசங்களில் வசிக்கின்ற பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நிலத்தை மற்றும் நீரை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இலங்கையின் அதி சிறந்த தாபனமாக மாறுதல்.

குறிக்கோள்

மகாவலி சமூகம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக புதுப்பிக்கத்தகு வலுவை தோற்றுவித்தல், பசுமைச் சூழல் மற்றும் சூழற் தோழமையுடைய சுற்றுலா தொழில்துறையை உதவியாகக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்க மற்றும் நிலைபெறுதகு விவசாய உற்பத்தித் திறனிற்காக நிலம் மற்றும் நீர் வளத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக நெறிப்படுத்துதல்.

வரலாற்றுப் பின்னணி

மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இலங்கையில் இதுவரையில் செயற்படுத்தப்பட்டுள்ள மாபெரும் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். அடிப்படையாக உலர் வலயங்களில் கிராமிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இச்செயற்திட்டமானது 1968 ஆம் ஆண்டு அக்காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்/ உணவு மற்றும் விவசாயத் தாபனத்தின் (UNDP/FAO) மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளுடன் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் காணப்படுகின்ற இயற்கை நீர் வளத்தை உலர் வலயங்களின் விவசாயத்திற்காக மற்றும் குடியிறுப்பு அபிவிருத்திகளுக்காக பயன்படுத்தும் செயல்பாட்டில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரிய வகிபாகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பானது சடுதியாக அதிகரித்தமையால் எழுந்த இடைப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் பொழுது உற்பத்தி வேகத்தை அதிகரிப்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. 1969 ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகை 11.8 மில்லியனாக காணப்பட்டது. இது 1940 ஆம் ஆண்டு காணப்பட்ட சனத்தொகையின் இரு மடங்காகுவதுடன் வருடாந்த சனத்தொகை விருத்தி அதிகரிப்பு 3.1% ஆக காணப்பட்டது. இவ்வாறு சனத்தொகை அதிகரித்தமையால் உணவிற்காக 1980 ஆம் ஆண்டாகும் போது அரிசி 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் தேவைப்படும் என ஊகிக்கப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டில் அரிசி 0.7 மில்லியன் மெட்ரிக் தொன் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டது. அதைப் போலவே, தொழிற்சாலை மேம்பாட்டிற்கு மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக மின்சாரமானது மணித்தியாலத்திற்கு 2000 கிகா வொட் தேவைப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டாகும் போது மின் உற்பத்தியானது வருடத்திற்கு 470 கிகா வொட்டாக மாத்திரமே காணப்பட்டது. அதில் 388 மணித்தியால கிகா வொட்டானது நீர் மின் உற்பத்தியின் மூலமாகவும், எஞ்சிய தொகை பெற்றோலிய தகனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனல் மின் உற்பத்தியாகும். மேலும், 1960 – 1967 கால எல்லையில் அரிசி 466,000 மெட்ரிக் தொன் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அதற்காக ஆண்டொன்றிற்கு 200 மில்லியன் ரூபாய் வீதம் வெளிப்பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது. இதைத் தவிர, உப உணவுப் பயிர்களுக்காக 139 மில்லியன் ரூபாயும் வருடாந்தம் செலவாகி உள்ளது. அச்செலவானது மிக அதிகமான பெறுமதியாகும்.

இலங்கையில் ஈர வலயத்தின் பக்கம் மக்கள் ஒன்றுதிரள்வது காணக்கூடிதாக இருந்தது. ஈர வலயத்தில் சனத்தொகையானது சதுர கிலோமீட்டரிற்கு 465 ஆக காணப்பட்டதுடன் உலர் வலயத்தில் சதுர கிலோமீட்டரிற்கு 80 ஆக மாத்திரமே காணப்பட்டது. நாட்டில் முழு நிலப் பரப்பில் 66% உலர் வலயத்திற்கு உட்படுவதுடன் சனத்தொகையில் 70% மக்கள் ஈர வலயத்திலேயே வாழ்ந்தனர். இதற்கமைய, உலர் வலயத்தில் பாரிய நிலப் பரப்பில் மிகக் குறைந்த சனத்தொகைப் பரவலே காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய, இலங்கையில் ஏனைய ஆறுகளுடன் ஒப்பிடும் பொழுது ஈர வலயத்தில் மத்திய மலைநாட்டில் ஊற்றெடுக்கும் மகாவலி கங்கையானது நாட்டின் முழு நிலப் பரப்பில் 6 இல் 1 இற்குக் கிடைக்கின்ற மழை நீரை தனது பிடிக்குள் கொண்டு உலர் வலயத்தின் ஊடாக கடலை நோக்கி வழிந்தோடுகின்ற மகாவலி கங்கையானது வருடத்தின் அனைத்து காலங்களிலும் வளம்பொருந்திய நதியாகும். இதற்கமைய, மகாவலி கங்கையை உலர் வலயத்திற்குத் திசை திருப்புவதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நீரின் மூலம் உலர் வலயத்தின் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், மேல் மகாவலி அதிகார பிரதேசத்தை அண்மித்து நீர்மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் இலங்கையின் எதிர்கால தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என உணரப்பட்டது. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் பெறுபேறாக அரசாங்கம் மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைய இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தூதுக் குழுவொன்று உலர் வலயத்தில் காணி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென 1956 ஆம் ஆண்டு இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இலங்கையில் நீர்ப்பாசன மற்றும் நில அளவீட்டுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கனேடிய அரசின் தொழில்நுட்ப உதவியுடன் கனேடியன் ஹன்டின் சேர்வே கோர்பரேஷன் நிறுவனமும் இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய மகாவலி கங்கை தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இந்நிறுவனம் அவ்வாய்வு தொடர்பாக சுயாதீன அறிக்கைகள் இரண்டை 1961 ஆம் ஆண்டு முன்வைத்துள்ளது. இவ்வறிக்கையானது அங்கீகாரத்திற்காக 1962 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஒட்டுமொத்த மகாவலி வடிநிலத்தினதும் நீர் வளம் தொடர்பாக முழுமையான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளாமல் மகாவலி நீரின் ஒரு பகுதியை திசை திருப்புவதானது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், இலங்கை நிபுணர்களின் அபிப்பிராயம் காரணமாக பாராளுமன்றம் இப்பிரேரணையை அங்கீகரிக்கவில்லை. அதன் பின்னர், மகாவலி கங்கை உட்பட ஏனைய நதிகளை அண்மித்த காணிகள் மற்றும் நீர் வளங்கள் தொடர்பாக ஒட்டுமொத்த ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அபிவிருத்தி தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்களைத் தெரிவு செய்து சுயாதீன பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு 1962 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு கோரிக்கை முன்வைக்க வேண்டி ஏற்பட்டது. அதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டம் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் விசேட நிபுணர்கள் உள்ளடங்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அதற்கு மேலதிகமாக, அக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இலங்கையைச் சேர்ந்த விசேட நிபுணர்கள் குழு மற்றும் பதவியணியும் நியமிக்கப்பட்டது.

நான்கு வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வின் பின்னர் 1968 ஆம் ஆண்டு 14 புறம்பான விசேட அறிக்கைகளை உள்ளடக்கிய 03 தொகுதிகளைக் கொண்ட ஆய்வு அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது 1968 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

வட மத்திய மாகாண மற்றும் கிழக்கு மாகாணத்தை அண்டிய அனுகூலங்களைப் பெறுகின்ற பிரதேசங்கள் 13 வலயங்களாக பிரிக்கப்பட்டதுடன், அதனை ஆங்கில அரிச்சுவடிப்படி A இல் இருந்து M வரை பெயரிடப்பட்டது. பொருளாதார ரீதியில் அதிகூடிய விளைத்திறனான மற்றும் குறைந்த முதலீட்டின் ஊடாக அதிகூடிய பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான செயற்திட்டங்கள் முதலாம் கட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டன.

மகாவலி பெருந்திட்டம்.

மகாவலி பெருந்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது யாதெனில், மகாவலி கங்கையின் நீர் வளத்தின் மூலம் சுமார் 6,900 மில்லியன் கன அடி நீரை நீர் மின் உற்பத்தி மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக விநியோகிப்பதாகும். 15 நீர்த் தேக்கங்களை அமைத்து அதில் 11 ஐ பிரதானமாக மின் உற்பத்திக்காக பயன்படுத்துவது இரண்டாவது நோக்கமாக காணப்பட்டது.
ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பால் முன்வைக்கப்பட்ட மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி கங்கை வடிநிலத்தில் மற்றும் உலர் வலயத்தினுள் காணப்படுகின்ற ஏனைய நதிகளின் வடிநிலங்களில் அமைந்திருந்த நிலப்பரப்பு, 364,372 ஹெக்டயர் இற்காக சிறுபோகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரு பருவங்களின் போதும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த மொத்த நிலப்பரப்பில் 264,777 ஹெக்டயார் நிலப்பரப்பானது விவசாயத்திற்கு திறந்துவிடப்படவிருக்கும் புதிய நிலங்களாக காணப்பட்டன. எஞ்சிய 110,404 ஹெக்டயார் நிலப்பரப்பில் ஏற்கனவே ஒரு பருவத்தின் போது மாத்திரம் சாகுபடி செய்யப்பட்டிருந்து. திட்டமிடப்பட்டிருக்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி மணித்தியாலத்திற்கு 2037 கிகா வொட் அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் 30 வருட காலப் பிரிவின் போது இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதிகளின் உபயோகம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றின் வசதியைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக அபிவிருத்தியின் பயனானது அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற விடயத்தைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் 03 கட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன;

I முதலாவது கட்டம்

முதலாவது கட்டமானது 1969 – 1980 காலப்பரிவின் போது அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் போது 74,494 ஹெக்டயார் புதிய நிலங்களுக்கும், 58,300 ஹெக்டயார் பழைய நிலங்களுக்கும் நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கு வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 820 கிகா வொட் நிலையான மின் வலுவை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் நடவடிக்கைகள் 03 செயற்திட்டங்களாக மேற்கொள்வதற்குப் பிரிக்கப்பட்டு இருந்தன;

- பொல்கொல்ல திசை திருப்பல் (1969 – 1973)
- விக்டோரியா/ மினிப்பே திசை திருப்பல் (1973 – 1977)
- மொரகஹகந்த பல்நோக்கு அலகு

II இரண்டாவது கட்டம்

இவ் இரண்டாவது கட்டத்தின் போது மாதுறு ஓயா நீர்த்தேக்கம், பல்நோக்குக் கட்டிடத் தொகுதி, கந்தகாடு அணைக்கட்டு போன்ற முதன்மைப் பணிப் பிரிவுகளில் மகாவலி மற்றும் மாதுறு ஓயா வடிநிலங்களில் அமைந்திருக்கும் 93,117 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு விவசாயம் செய்வதற்காக நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப் பெறுவதுடன், இதில் 8502 ஹெக்டயார் நிலப்பரப்பானது ஏற்கனவே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலப்பரப்பாக கணக்கில் கொள்ளப்பட்டிருந்தது. 15 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின் உற்பத்தி நிலையத்தை தல்தெனியவில் நிர்மாணிப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை வளப்படுத்துவதற்காக உல்ஹிடிய ரத்கிந்த நீர்த்தேக்கத்தில் இருந்து சுரங்கப் பாதை ஒன்றை அமைப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்திற்கு அருகில் 4.9 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பது இதன் பிரதான பணிகளாகும்.

III மூன்றாவது கட்டம்

இதன் மூலம் நாட்டின் வட மத்திய மாகாணத்தில் 105,668 ஹெக்டயார் புதிய நிலப்பரப்புகள் அபிவிருத்தி செய்யப்படும். நீர் மின் உற்பத்தியின் இறுதித் திட்டத்தைச் செயற்படுத்தி 293 மெகா வொட் அலகு நிறுவப்பட்ட ஆற்றல் உடைய மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்படுவதுடன், அதன் மூலம் வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 1169 கிகா வொட் அலகு நிலையான மின் உற்பத்தி செய்யப்படும். பழைய மினிபே இடது கரைக் கால்வாயை அபிவிருத்தி செய்தல், 164 கிலோ மீட்டர் நீளமான வட மத்திய கால்வாயை நிர்மாணித்தல், ரொடலாவல, உமா ஓயா, றண்தம்பே, கொத்மலை மற்றும் களு கங்கை ஆகிய நீர்த் தேக்கங்களை நிர்மாணத்தில் இக்கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.
எனினும், நடப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி மகாவலி பெருந்திட்ட அபிவிருத்தியானது 03 கட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

மகாவலி பெருந்திட்டத்தைச் செயற்படுத்துதல் (01 ஆவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டதின் கீழ் முதலாவது செயற்திட்டமாக பொல்கொல்ல மற்றும் போவதென்ன திட்டமானது 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 1976 ஆம் ஆண்டாகும் பொழுது கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தது. இதன் மூலம், முன்பு ஏற்கனவே காணப்பட்ட 16,000 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு மற்றும் 23,000 ஹெக்டயார் புதிய நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கும், 40 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின்னை உற்பத்தி செய்தற்கும் முடியுமாக இருந்தது. இத் திட்டத்தின் கீழ் மகாவலி எச் வலயத்திற்குரிய கலா ஓயா பள்ளத்தாக்கில் 23,000 விவசாய குடும்பங்கள் 1977 ஆம் ஆண்டாகும் பொழுது குடியேற்றப்பட்டன. தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் எச் வலயத்தில் சகல குடியேற்ற நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு குடியேற்றப்பட்டுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 39,500 ஆகும்.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது இலங்கைப் பொருளாதாரம் பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தது. அரிசி உட்பட விவசாய உற்பத்தி இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமை பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. பயன்பாட்டிற்கு அவசியமாகின்ற அரிசியில் 69% மாத்திரமே நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுடன், 31% இறக்குமதியிலேயே தங்கி இருந்தது. அதற்கு மேலதிகமாக அவசியமான பிற விவசாய உற்பத்திகள் பலவும் இறக்குமதி செய்யப்பட்டன.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது மின்சார சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட மின் கொள்ளளவானது சுமார் 408 மெகா வொட் அலகாக இருந்து வந்ததுடன், அது அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவி வந்த கேள்வியை நிறைவேற்றி வைப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை. மின் துண்டிப்பானது சாதாரண விடயமாக மாறி இருந்து வந்ததுடன், ஒரு வருடத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்து இருந்தது.

இலங்கையில் வேலையின்மையானது 17% வரை அதிகரித்துக் காணப்பட்டது. வேலையின்மையைக் குறைக்க வேண்டியது அத்தியாவசிய அம்சமாகக் காணப்பட்டது. இப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு இருந்தது.

இப்பிரச்சினையைத் இயன்றளவு அவசரமாக தீர்க்கும் ஒரு படிமுறையாக மகாவலி அபிவிருத்திப் பெருந்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என 1977.10.12 ஆம் திகதி அப்போதைய அரசாங்கம் தீர்மானித்தது.

துரிதப்படுத்தப்பட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் (இரண்டாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் பலவற்றை ஒரே தடவையில் ஆரம்பித்து சுமார் 06 வருட குறுகிய காலப் பிரிவில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு 1977 இல் அரசாங்கம் தீர்மானித்தது. அதனைச் செயற்படுத்துவதற்காக புறம்பாக ஒரு அமைச்சும் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகலை மற்றும் மாதுறு ஓயா நீர்த் தேக்கங்களுக்காக முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இதற்கு றன்தம்பே செயற்திட்டமும் உள்ளடக்கப்பட்டது. இதில் மாதுறு ஓயாவைத் தவிர ஏனைய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நீர் மின் உற்பத்தி செய்யப்பட்டதுடன், அதே நீரே நீர்ப்பாசனத் துறைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய, மகாவலி சி மற்றும் பி வலயங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளை குடியேற்றுவதும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய பி வலயத்தில் 30,465 குடும்பங்களும், சி வலயத்தில் 45,488 குடும்பங்களும் குடியேற்றப்பட்டு உள்ளன.

இச்செயற்திட்டத்திற்காக முறையே சுவீடன், பெரிய பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகள், கீழ் பள்ளத்தாக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி, EEC, ஜப்பான் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் நிதி உதவிகளை வழங்கி உள்ளன. இச்செயற்திட்டத்தை தொடங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபை நிறுவப்பட்டதுடன், பொறியியல் மற்றும் வடிவமைப்புப் பணிகளுக்காக மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையமும், மீள் குடியேற்றுதல்களை மேற்கொள்வதற்காக மகாவலி பொருளாதார முகவர் நிலையமும் நிருவப்பட்டன. அதைப் போலவே, துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்த்தேக்கங்களை முகாமைத்துவம் செய்வதற்காக முதன்மைப் பணிகளை நிர்வாகித்தல், நிறைவேற்றுதல், மற்றும் இயக்கற் பிரிவானது 1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டாகும் பொழுது துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டதுடன், அதன் மூலம் மின்சார துறை மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக கணிசமான அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக விவசாயத் துறையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டியமையால் மகாவலி பெருந்திட்டத்திற்குரிய மொரகஹகந்தை நீர்த்தேக்க செயற்திட்டமானது இடைநிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், நீண்ட காலமாக சார்புரீதியாக கோப்புக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்திச் இச்செயற்திட்டமானது தற்பொழுது செயற்படுத்தப்படும் நிலைமைக்கு எட்டியுள்ளமை மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பிரதிபலன்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு காரணமாக அமையும்.

மகாவலி இயக்கத்தின் தற்போதைய வகிபாகம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள். (மூன்றாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நாட்டின் நாலா புறமும் விரிவுபடுத்தும் கட்டமாக மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தைக் குறிப்பிடலாம். மொரகஹகந்தை களு கங்கை நீர்த்தேக்க முன்மொழிவின் ஊடாக வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேல், மத்திய மாகாணங்களில் சிறிய அளவான குளங்கள் 1200 இற்கு நீரை விநியோகிக்கும் நோக்கில் மொரகஹகந்தை மற்றும் களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டமானது செயற்படுத்தப்பட்டது. எலஹர பிரதேசத்தின் வயல்களுக்கு, பொலன்னறுவை பிரதேசத்தின் சகல நீர்த்தேக்கங்களுக்கும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சகல பிரதான நீர்த்தேக்கங்களுக்கும் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக நீர் விநியோகத்தை வழங்கி 81,000 ஹெக்டயார் புதிய பயிர்ச்செய்கை நிலப்பரப்பிற்காக நீரை விநியோகித்து விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை தற்போசணை நாடாக மாற்றுவதற்கு பங்களிப்பு வழங்குவதும், மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி மூலம் தேசிய மின்சாரத் தொகுதிக்கு 25 மெகா வொட் அலகு கொள்ளளவை ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்குப் பங்களிப்பு வழங்குவதும் இதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். அதைப் போலவே, செயற்திட்டத்தின் ஊடாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசியமான குடியேற்றங்களை அமைத்துக் கொடுப்பதுடன் மாத்திரம் நிறுத்தி விடாமல், சகல உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய லக்கல நகரத்தை புதிதாக நிர்மாணித்து மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கும் மாபெரும் பணியானது தற்பொழுது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தை 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்திக் கொண்டதன் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மற்றுமொரு படிமுறையின் வெற்றிகரமான நிறைவைக் காணக் கூடியதாக இருக்கும்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது தமது பணிவினைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உமா ஓயா பல் நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இதன் மூலம் உமா ஓயா நதியின் வடிநில நீரை வெலிமடை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரு

நீர்த்தேக்கங்களுக்கு ஒன்று சேர்த்து, நாட்டில் முதல் தடவையாக 15.6 கி.மீ. நீளமான சுரங்கப் பாதையின் ஊடாக கிரிந்தி ஓயா வடிநிலத்திற்கு திசை திருப்பி அனுப்பப்படுகின்றது. அதன் மூலம், ஆசியாக் கண்டத்தின் மாபெரும் நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகா வொட் அலகு கொள்ளளவை தேசிய மின்சாரத் தொகுதிக்கு ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்கு பங்களிப்பு வழங்குவதற்கும், மிகவும் பின்தங்கிய வட மேல் மாகாணத்தின் விவசாய விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதல் போன்ற தனது அடிப்படை நோக்கங்களை நோக்கி இச்செயற்திட்டமானது வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கின்றது. இச்செயற்திட்டமானது 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலூக்க நீர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு உட்படுத்தப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்களைச் சுத்தம் செய்யும் செயற்திட்டத்தைப் போன்றே, நீர் வளம் பொருந்திய பிரதேசங்கள், நதிகளின் வடிநிலங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டமும் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நிலைபெறுதகு வலு நிகழ்சித் திட்டத்தின் கீழ் மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கக் கூடிய சூரிய மின் படலத் தொகுதிகளைப் பொருத்துதல் மற்றும் சிறிய அளவான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் முலம் சுற்றாடல் தோழமையான விதத்தில் தேசிய மின்சார தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கும், அதன் மூலம் பாரிய வருமான வழிகளை ஏற்படுத்துவதன் மூலம், இலங்கை மகாவலி அதிகார சபையானது புதிய மூலோபாய வருமான வழிகளை இனங்கண்டு வருகின்றது.

இதனுடன், மாதுறு ஓயா தெற்குக் கரையின் அபிவிருத்திச் செயற்திட்டம், வலவ வலயம், ரம்பகெண் ஓயா, மகாவலி பி வலயம், மகாவலி எச் வலயம் ஆகிய வலயங்களை அண்மித்து மேலும் மாபெரும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூன்றாவது கட்டத்தின் சகல அடிப்படை நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் போது நாட்டின் நாலா புறமும் பரவலடைந்து தேசியப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக விவசாய, நீர்ப்பாசன மற்றும் கால்நடை வளங்கள், மின்சக்தி உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளினால் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்கும் கட்டத்தை நோக்கி படிப் படியாக முன்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

பணிப்பாளர் சபை தொடர்பான விபரம் – 2021

தொடர் இலக்கம்	பெயர் / பதவி	காலம்
01	திரு. அநுர திஸாநாயக்க செயலாளர் நீர்ப்பாசன அமைச்சு	2021 ஜனவரி தொடக்கம்
03	திரு. கீர்த்தி பி. கொடகம பணிப்பாளர் நாயகம் இலங்கை மகாவலி அதிகார சபை	2021 ஜனவரி தொடக்கம்
04	திருமதி. மலர்மதி கங்காதரன் மேலதிக பணிப்பாளர் நாயகம் நிதி அமைச்சு	2020 ஜனவரி தொடக்கம்
05	திரு. ஏ.பீ.ஆர். ஜயசிங்ஹ உறுப்பினர	2020 ஜனவரி தொடக்கம்
06	திரு. கே.வி.ஜி. ரஞ்சித் டி சில்வா உறுப்பினர்	2020 ஜனவரி தொடக்கம்

சிரேஷ்ட முகாமைத்துவம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு நிறைவடையும் போது இருந்த சிரேஷ்ட முகாமைத்துவம் தொடர்பான தகவல்

தொடர் இலக்கம்	பதவிப் பெயர்	பெயர்
01	பணிப்பாளர் நாயகம்	பொறியியலாளர் திரு. சுனில் எஸ். பெரேரா (2019.12.24 – 2021.02.10 ஆம் திகதி வரை)
		திரு. கீர்த்தி பி. கொடகம (2021.02.11 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
02	மேலதிக பணிப்பாளர் நாயகம்	-
03	பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)	திரு. ஜீ.டி.என். டி செல்வா (வழிமொழிதலின் அடிப்படையில் - 2021.07.22 ஆம் திகதி தொடக்கம் 2022.02.03 ஆம் திகதி வரை)
04	பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை)	பொறியியலாளர் திரு. பீ. ஜி. குணபால (2019.04.19 – 2021.02.06 ஆம் திகதி வரை)
		பொறியியலாளர் திருமதி டீ. எம். அத்தபத்து (2021.02.07 - 2021.10.27 ஆம் திகதி வரை - பதில் கடமை)
		திரு டி.எம்.என்.ஜே. தனபால, பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்) 2021.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரையில் பதில் கடமை புரிதல்
05	பிரதி பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)	திரு. ஆர். எம். நெவில் ராஜபக்ஷ, பணிப்பாளர் (விவசாயம்) 2021.12.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரையில் பதில் கடமை புரிதல
06	பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்)	திரு. எச். எம். கே. ஆர். ஹேரத், விதிவிட வணிக முகாமையாளர் (2020.02.13 - 2020.02.27 ஆம் திகதி வரை பதில் கடமை புரிதல்) மற்றும் (2020.02.28 - 2021.04.04 ஆம் திகதி வரை நிரந்தரம்)
		திருமதி எச். ஜீ. ஜே. பீ. விஜயவர்தன, இராஜாங்க அசைசின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (2021.04.05 - 2021.07.25 ஆம் திகதி வரை பதில் கடமை)
		திருமதி எம். டப்லியூ. ஆர். என். டெல்பட், இராஜாங்க அசைசின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) (2021.07.26 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமை)
07	பணிப்பாளர் (நிதி)	திரு. டீ.டி. பிரியந்த
08	பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)	திருமதி எச். என். யாலிங்க (2021.06.07 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)

09	பணிப்பாளர் (மகாவலி கேந்திர மையம்)	திரு பீ. சி. கே. பரணகம (2020.12.30 - 2021.12.21 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில்)
10	பணிப்பாளர் (விவசாயம்)	திரு. ஆர். எம். நெவில் ராஜபக்ஷ (2017.03.15 - 2021.11.30 ஆம் திகதி வரை)
		திருமதி டி. கே. எச். டப்லியூ. எம். டப்லியூ. ஆர். செனவிரத்ன பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி) (2021.12.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை புரிதல்)
11	பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளம்)	திருமதி. எம். ஜி. டீ. பிரியதர்ஷனி (2018.12.20 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
12	பணிப்பாளர் (காணி)	திருமதி எஸ். ஏ. ஈ. டப்லியூ. குலரத்ன, நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாளர் (காணி) (2021.01.26 - 2022.05.31 வரை பதில் கடமை)
13	பணிப்பாளர் (தாபன அபிவிருத்தி)	திரு. எம். எல்.டி.சி. அபேகுணவர்தன, பிரதிப் பணிப்பாளர் (தாபன அபிவிருத்தி) (2017.09.08 -2022.03.31 ஆம் திகதி வரை பதில் கடமை)
14	பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி)	திருமதி. டி. கே. எச். டப்லியூ. எம். டப்லியூ. ஆர். செனவிரத்ன (2019.06.25 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
15	பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்)	பொறியியலாளர் திருமதி. டீ.எம். அதபத்து (2016.05.18 - 2021.10.27 ஆம் திகதி வரை)
		பொறியியலாளர் திரு. எஸ். ஏ. ஏ. தர்மசிறி, பிரதிப் பணிப்பாளர் (கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி) (2021.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை பதில் கடமை புரிதல்)
16	பணிப்பாளர் (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி)	திரு டீ. ரணசிங்ஹ, பிரதிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) (2021.04.30 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
17	பணிப்பாளர் (பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாடு)	பொறியியலாளர் திரு. எஸ். ஆர். கே. அருப்பொல (2017.02.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
18	பணிப்பாளர் (ஆற்று வடிநில முகாமைத்துவம்)	பொறியியலாளர் செல்வி. சந்திரா செனரத்
19	பணிப்பாளர் (காணி உபயோக திட்டமிடல்)	திருமதி. ஜே.எம்.ஐ.எச். ஜயவர்தன, உதவிப் பணிப்பாளர் (காணி உபயோக திட்டமிடல்) (2018.08.27 - 2021.08.31 ஆம் திகதி வரை பதில் கடமை) மற்றும் (2021.09.01 ஆ திகதி தொடக்கம் கடமையாற்றுதல்)
20	பணிப்பாளர் (வன மற்றும் சுற்றாடல்)	திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க
21	பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்)	பொறியியலாளர் திரு. டி. எம். என். ஜே. தனபால (2021.04.30 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)

22	பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்)	திரு. பி. எல். பி. சேனாரத்ன, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) (2018.08.27 - 2021.08.03 ஆம் திகதி வரை பதில் கடமை) மற்றும் (2021.08.04 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமையாற்றுதல்)
23	பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டம்)	திருமதி. டி.கே.வி. விஜயவீர
24	பணிப்பாளர் (மின் மற்றும் பொறிமுறை)	திரு. ஜே. ஆர். போபிடிய, பிரதிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) (2019.11.15 - 2021.08.31 ஆம் திகதி வரை பதில் கடமை) (2021.09.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமையாற்றுதல்)
25	பணிப்பாளர் (சட்டம்)	திருமதி. ஆர். எல். ராஜபக்ஷ (2021.05.15 ஆம் திகதி வரை)
26	வதிவிட வணிக முகாமையாளர் (பி வலயம்)	திரு. பீ. ஜீ. நொயெல் ஜயசிறி, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2020.11.03 - 2022.08.01 ஆம் திகதி வரை பதில் கடமை)
27	வதிவிட வணிக முகாமையாளர் (சி வலயம்)	திரு. ஐ.எம்.யூ.கே. குமார (2020.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
28	வதிவிட வணிக முகாமையாளர் (டி வலயம்)	திரு. ஜே.பீ. ஜயதிலக்க, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (விவசாயம்) (2017.04.04 - 2021.02.11 ஆம் திகதி வரை பதில் கடமை)
		திரு. ஏ. எம். ஏ. பீ. ஜீ. குணவர்தன (2021.02.04 - 2022.07.31 ஆம் திகதி வரை)
29	வதிவிட வணிக முகாமையாளர் (ஈ வலயம்)	திரு. ஏ. எம். ஏ. பீ. ஜீ. குணவர்தன (2018.06.05 - 2021.02.03 ஆம் திகதி வரை)
		திரு. ஜே.பீ. ஜயதிலக்க, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (விவசாயம்) (2021.02.12 - 2022.08.04 ஆம் திகதி வரை பதில் கடமை)
30	வதிவிட வணிக முகாமையாளர் (ஜீ வலயம்)	திரு. ஏ.ஜீ.டீ. ஹேமந்த ஜயசிங்ஹ, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2017.02.01 - 2022.07.27 ஆம் திகதி வரை பதில் கடமை)
31	வதிவிட வணிக முகாமையாளர் (எல் வலயம்)	திரு. ஆர்.எம்.கே.பி. ரன்தெணிய, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2020.02.27 – 2021.03.07 ஆம் திகதி வரை பதில் கடமை)
		திரு. ஏ. எம். ஏ. பீ. ஜீ. குணவர்தன (2021.03.06 - 2021.04.04 ஆம் திகதி வரை பதில் கடமை)
		திரு. எச். எம். கே. ஆர். ஹேரத் (2021.04.05 - 2022.08.03 ஆம் திகதி வரை

32	வதிவிட வணிக முகாமையாளர் (எச் வலயம்)	திரு. டப்லியூ. எம். எஸ். வீரசிங்ஹ, தொகுதி முகாமையாளர் (2020.10.29 ஆ திகதி தொடக்கம் தற்பொழுது வரை பதில் கடமை)
33	வதிவிட வணிக முகாமையாளர் (ஹுருளுவெவ வலயம்)	திரு. எம். எம். ஏ. குணதிலக (2020.10.14 - 2022.08.02 ஆம் திகதி வரை)
34	வதிவிட வணிக முகாமையாளர் (ரம்பகெண் ஓயா வலயம்)	திரு. எச்.எம். விஜேரத்ன (2018.11.01 ஆம் திகதி தொடக்கம் 2021.10.02 ஆம் திகதி வரை பதில் கடமை)
		திரு. ஏ.எல். ஒஸ்மன் டி சில்வா (2021.10.04 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
35	வதிவிட வணிக முகாமையாளர் (வலவ வலயம்)	திரு. ஏ.எல். ஒஸ்மன் டி சில்வா (2019.08.31 ஆம் திகதி வரை – பதில் கடமையாற்றுதல்) மற்றும் 2019.09.24 ஆம் திகதி தொடக்கம் 2021.10.03 ஆம் திகதி வரை பதவியில் நிரந்தரமாக கடமையாற்றி உள்ளார்)
		திரு. எல். எம். என். பிரியந்த, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (நிர்வாகம்) (2021.10.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை பதில் கடமை புரிதல்)

2021 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை.

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் விசேட அதிகாரங்களுடன் கூடியதாக பன்முக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இந்நாட்டில் அமுல்படுத்தப்பட்ட மாபெரும் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்திச் செயற்திட்டமாக காணப்படுவதுடன் அதன் மூலம் ஆரம்பத்தில் இருந்து தற்பொழுது வரை பல்வேறு விடயத் துறைகள் மூலம் இலங்கையன் தேசிய பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி உள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்கியதாக தேசிய உணவு உற்பத்திக்கு அவசியமான நீர்ப்பாசன நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், புதுப்பிக்கத்தகு மின்சார உற்பத்தி, குடி நீர் மற்றும் வணிகச் செயற்பாடுகளுக்கு அவசியமான நீரை விநியோகிப்பது போன்றே மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மகாவலி அபிவிருத்தித் திட்டமானது 05 தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் தேசிய பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றது. தற்பொழுது மகாவலி அதிகார சபையானது 10 வலயங்களில் 50 தொகுதிகள் மற்றும் பிரதேச மட்டத்தில் 238 அலகுகளின் கீழ் அபிவிருத்திப் பணிகளை இயக்கி வருகின்றது. பல்வேறு விடயத் துறைகளின் கீழ் அபிவிருத்திப் பணிகளை மிகவும் வினைத்திறனாக பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல் மற்றும் கண்காணிக்கும் கட்டமைப்புடன் கூடிய தாபனமாக அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிகளை விளைத்திறன் மிக்கதாக முதலீடு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ன.

இவ்வருடம் உலகம் பூராகவும் கடும் பேரழிவாக காணப்பட்ட கொவிட் 19 தொற்றுப் பரவலின் பாதிப்பானது எமது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய ஆதிக்கத்தை ஏற்படுத்திய ஆண்டாக காணப்பட்டது. இவ்வாறான நிலைமைக்கு மத்தியிலும் மகாவலி அதிகார பிரதேசங்களில் வாழ்கின்ற 1.23 மில்லியன் சனத்தொகையின் (குடும்பங்களின் எண்ணிக்கை 347,285) தேவைப்பாடுகளை முகாமைத்துவம் செய்து பிரதான நீர்த்தேக்கங்கள் 19, சிறிய குளங்கள் 654, கி.மி. 9,585 நீளமான நீர்ப்பாசன அமைப்பு மற்றும் கி.மீ. 10,134 ஐக் கொண்ட வீதியமைப்பைப்ப பாதுகாத்து 3,784 MCM நீர்க் கொள்ளளவை நீர்ப்பாசன ந்வடிக்கைகளுக்காக மற்றும் குடிநீரைப் போன்றே வீட்டுப் பாவனைகளுக்கு அவசியமான நீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. எதிர்வரும் காலத்தில் நிலவுகின்ற பாரிய நீர்த் தேவைக்கு மத்தியில் நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய பிரதேசங்களுக்கும், கடுமையான வரட்சியான காலநிலை காணப்படுகின்ற பிரதேசங்களுக்கும் நீரை வழங்குவதற்கு விசேட நீர்ப்பாசன முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

பேரழிவு நிலவிய காலப் பகுதியிலும் கூட இவ் ஆண்டு விவசாயத் துறையில் கணிசமான அளவு விருத்தி பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளதுடன், உள்நாட்டு அடையாளத்துடன் கூடிய தரம் வாய்ந்த நெல் மற்றும் மேலதிக பயிர் வித்துக்களின் உற்பத்தியை மேம்படுத்துதல், இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டு உள்ள தெரிவு செய்யப்பட்ட பயிர்களை மகாவலி வலயங்களுக்கு அண்டிய விவசாய நிலங்களில் பயிர்ச் செய்தல் மற்றும் அதிக விளைச்சலைப் பெற்றிக் கொள்ளுதல், உணவில் தன்னிறைவாக்குவதற்காக வீட்டுத் தோட்ட விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வலுவூட்டுதல், சேதனப் பசளை உற்பத்தி செய்தல் மற்றும் பயன்பாட்டை விருத்தி செய்தல், நீர்ப்பாசன நிலங்களை வளப்படுத்துவதற்காக நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய குளங்களை புணர் நிர்மாணம் செய்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மிக முக்கியமானவை. மீன்பிடி மற்றும் கால்டை வள விருத்தியின் கீழ் திரவப் பால் உற்பத்தி, முட்டை

உற்பத்தி, நன்னீர் மற்றும் அலங்கார மீன்கள் உற்பத்தி மற்றும் நன்னீர் இறால்கள் உற்பத்தி ஆகிய அனைத்து நிழச்சித் திட்டங்களிலும் 100% இற்கும் அதிகமான முன்னேற்றம் எட்டப்பட்டு உள்ளது. விவசாய மற்றும் கால்நடை வளம் ஆகிய பிரிவுகளுக்காக நிலவிய பாரம்பரிய முறைகளுக்கு மாற்றமாக நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன் மகாவலி இளைஞர் குழுக்களை விவசாயத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்காக விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாகும்.

சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவுகள் முலம் நீர்த் தேக்கங்களில் விரைவாகப் பரவி வருகின்ற ஆக்கிரமிப்புத் தாவரங்களை நீக்கி சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று மற்றும் நீர் வளம் பொருந்திய பிரதேசங்களில் உயிர் பல்வகைமையைப் பாதுகாப்பதற்காக மரக் கன்றுகளை நடுதல் உட்பட வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து சுற்றாடல் பாதுகாப்புப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. புதிய அபிவிருத்தி வலயங்களாக வடமேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு எம் மற்றும் என் எனும் பெயரில் பொருளாதார வலயங்கள் இரண்டை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. சமூக அபிவிருத்தியை துரிதப்படுத்தி குடியேற்றவாசிகளுக்கு காணி உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

மேற்குறிப்பிட்ட பணிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அவசியமான அடிப்படை வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற நீர்ப்பாசன அமைச்சரான கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற பக்கபலத்தை மிகவும் பாராட்டத்தக்க விடயமாக கருதுகின்றேன். அதைப்போலவே, கௌரவ மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அமைச்சு மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டல்களுக்கு அமைய மேற்குறிப்பிட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு செயற்படுகின்ற மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளுக்கும் மற்றும் சகல செயற்திட்ட பதவியணிகளுக்கும் நன்றி செலுத்துவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



கீர்த்தி. பி. கொடகம
பணிப்பாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகார சபை

பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு.

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அறிக்கையை 2020-12-31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கின்றோம்.

2021 ஆம் ஆண்டு தொடர்பான மீளாய்வு.

பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்புரையில் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான விவரமான கூற்று உள்ளடக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பாக கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளைக் குறைக்கும் நோக்குடன் உள்ளக நிர்வாகம் தொடர்பாக சிறந்தொரு முகாமைத்துவத்துடன் செயற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளாலும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் காட்டியுள்ள அளப்பரிய அர்ப்பணிப்பு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் எமது பாராட்டுக்களை இத்தாள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. அநுர திஸாநாயக்க,
செயலாளர்,
நீர்ப்பாசன அமைச்சு

திருமதி. மலர்மதி கங்காதரன்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
நிதி அமைச்சு

திரு. ஏ.பி.ஆர். ஜயசிங்ஹ - உறுப்பினர்

திரு. கே.வி.பி. ரஞ்சித் டி சில்வா – உறுப்பினர்

2021 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு :

இலங்கை இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கைக் குடியரசினால் வெளியிடப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் (Financial Regulations), நிர்வாக பிரமாணம் (Administration Regulations), காலத்திற்கு ஏற்ற விதத்தில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் நோக்கங்களை உறுதி செய்து கொள்வதற்காக, விசாரணைகள் கண்காணிப்புக்களின் மூலம் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்தி, முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

<u>வகிபாகங்கள்</u>

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் செயற்படுத்தும் போது, நிலவுகின்ற உள்ளக நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு இணங்கியதாக மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்கியதாக அமுல்படுத்தப்படுகின்றதா எனவும், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொருளாதார ரீதியான பிரதிபலன்கள் (Value for Money) கிடைக்கின்றதா எனவும், கணக்காய்வு விசாரணைகளின் கண்காணித்தல்கள் ஒப்பீடுகள், பௌதீக பரிசீலனைகள் என்பன இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் (ICA) மூலம் மற்றும் சர்வதேச கணக்கியல் தர நியமங்கள் (IAS) மூலம் வெளியிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு அமைவாக, கணக்காய்வை மேற்கொண்டு மேலாண்மைக்கு அறிக்கையிடுதல்.

2021 ஆம் ஆண்டில், பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

1. உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 28 ஆகும்.
2. வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 15 ஆகும்.
3. நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் மேலாண்மை ஒன்று கூடல்களின் எண்ணிக்கை
    - அமைச்சுக்கள் மட்டத்திலான கணக்காய்வு மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
    - அதிகார சபைகளின் மட்டத்திலான கணக்காய்வு மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
4. உள்ளக கணக்காய்வு உசாவல்களுக்கு வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் உவாசவல்கள் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை செயற்படுத்துதல், அவற்றின் பின்னரான பின்தொடர்வுகளை மேற்கொள்ளுதல்.
5. கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக, முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஆலோசனைகளை வழங்குதல்.

<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு</u>

இலங்கை மகாவலி அதிகார சபையின், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பின்வரும் விதத்தில் அமைகின்றது.

1. திருமதி மலர்மதி கங்காதரன் - தவிசாளர் – திறைசேரி
2. திரு. கே.வி.பீ. ரஞ்சித் டி சில்வா – குழு உறுப்பினர் சபை

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர்

3. திரு. ஏ.பீ.ஆர். ஜயசிங்ஹ - குழு உறுப்பினர்
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர் – அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணக்காய்வு அத்தியட்சகர்
6. பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு) – அமைச்சு

குழுவில் கலந்து கொள்கின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்

7. பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
8. பணிப்பாளர் (நிதி)
9. தேவைக்கு அமைய அழைப்பு விடுக்கப்படுகின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்.

<u>குழுவின் வகிபாகம் :</u>

- வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை மேற்பார்வையிடுதல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் அதன் மூலம் இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 இலக்க நிதி தொடர்பான சட்டத்தின் 14 (2) (இ) உப பிரிவிற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

கடந்த 07 வருடங்களுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்.

	2021	2020	2019	2018	2017	2016	2015
	Rs'000	Rs'000	Rs'000	Rs'000	Rs'000	Rs'000	Rs'000
சொத்துக்கள்							
நடைமுறை அல்லாத சொத்துக்கள்							
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	115,083,911	119,033,935	4,972,468	4,675,657	4,116,187	4,195,724	4,294,893
முதலீடுகள் (LT)	23,104	164,555	166,299	171,313	187,531	178,556	152,577
புலனாகாத சொத்துக்கள்	6	785					
மூலதன செயன்முறையிலுள்ள பணிகள்	28,496	57,166	47,482	84,947	78,552	41,301	74,286
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்	**115,135,517**	**119,256,441**	**5,186,249**	**4,931,917**	**4,382,270**	**4,415,581**	**4,521,756**
உயிரியல் சொத்துக்கள் – மூலதனம்	286,717	259,342	219,777	167,027	134,578	101,940	-
முன்மொழியப்பட்ட தள்ளுபடி			-	-	859	859	-
நடைமுறை சொத்துக்கள்							
சரக்கு இருப்புகள்/ இருப்புகள்	278,716	166,810	170,983	180,342	184,815	168,173	157,428
உயிரியல் சொத்துக்கள் – வணிகம்	41,118	42,721	47,178	26,312	15,875	22,630	-
வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள்	3,432,901	2,594,637	2,997,661	2,032,715	2,084,069	1,730,015	1,307,077
தொங்கல் கணக்கு			-	-	-	-	-
முற்கொடுப்பனவுகள்			-	4,767	3,896	8,754	5,172
வங்கி உத்தரவாதங்கள்	-	377	374	6,292	6,164	4,153	1,372
முகவருக்கு இடையிலான			-	-	-	-	-

நடைமுறைக் கணக்கு மீதிகள்							
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	1,177,597	667,498	258,877	312,702	343,312	312,750	429,588
மொத்த நடைமுறை சொத்துக்கள்	4,930,332	3,472,043	3,475,073	2,563,130	2,638,131	2,246,475	1,900,637
மொத்த சொத்துக்கள்	**120,352,566**	**122,987,826**	**8,881,100**	**7,662,074**	**7,155,838**	**6,764,855**	**6,422,393**
பொறுப்புக்கள்							
நடைமுறை பொறுப்புக்கள்							
கொடுப்பனவுகள்	39,894,796	39,970,622	968,185	651,986	879,967	376,737	341,286
குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ்			-	-	2,153	3,080	
அட்டுறுச் செலவுகள்	104,067	94,434	211,909	102,067	175,733	122,286	46,159
முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள்			-	-			
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்	**39,998,864**	**40,065,057**	**1,180,094**	**754,053**	**1,057,853**	**502,103**	**387,445**
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்							
பணிக்கொடைக்கான ஒதுக்குகள்	1,343,221	1,500,519	1,371,814	1,379,494	1,388,101	1,489,288	1,551,379
வங்கிக் கடன்			-	-		2,455	
குத்தகை கட்டணங்கள்			-	219	271	2,653	11,247
பிற்போடப்பட்ட வரி	-	612	612	612	612	612	612
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்	**1,343,221**	**1,501,131**	**1,372,426**	**1,380,325**	**1,388,984**	**1,495,008**	**1,563,238**
மொத்த பொறுப்புக்கள்	**41,342,085**	**41,566,188**	**2,552,520**	**2,134,378**	**2,446,837**	**1,997,111**	**1,950,683**
மொத்த தேறிய சொத்துக்கள்	**79,010,481**	**81,421,638**	**6,328,579**	**5,527,696**	**4,709,001**	**4,767,744**	**4,471,710**

தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை							
நிதி கூட்டுத்தொகை	73,874,727	76,926,922	1,837,751	24,649,830	24,407,260	24,066,161	23,702,950
ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி	(490,550)	(1,178,028)	(657,528)	(24,040,551)	(23,755,208)	52,121	53,992
வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள்	-	48,288	48,288	50,865	4,006,082	4,019,027	4,021,721
மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் –	5,626,304	5,624,456	5,100,069	4,867,551	50,865	(23,369,566)	(23,276,474)
மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை	**79,010,481**	**81,421,638**	**6,328,580**	**5,527,696**	**4,708,999**	**4,767,743**	**4,502,189**

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிப்பாளர் சபை - 2021

தொடர் இலக்கம்	நிறுவனங்கள்	தவிசாளர்	பணிப்பாளர் சபை	பிரதான அலுவலக முகவரி
01	வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்	-	1. திரு. பராக்கிரம அபேவர்தண 2. திரு. எட்வர்ட் டி மெல் (பணிப்பாளர்) 3. திரு. ஒஸ்மன் டி சில்வா (பணிப்பாளர்)	இலக்கம் 260/20, பேஸ்லயின் வீதி, கொழும்பு 09
02	வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம்	திரு. டி, எம். அநுர ரணவீர பண்டார திஸாநாயக்க	1. எல். எம். கே. ஆர். ஆஷா ராஜகீய (பணிப்பாளர்) 2. பீ. ஏ. ஏ. பீ. கான்தி பன்னல (பணிப்பாளர்) 3. ஆர். எம். பி. ராஜகருணா (பணிப்பாளர்) 4. எஸ். சி. ரம்யலதா தமயந்தி (பணிப்பாளர்) 5. இ. ஏ. சி. குமார எதிரிசூரிய (பணிப்பாளர்)	இலக்கம் 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05
03	இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம்	-	1.பொறியியலாளர் திரு. பி.டப். என்.டப். செனவிரத்ன பண்டா 2.திரு. என்.எம்.கே.பி. அத்தநாயக்க	வேல்ல பிரதேசம், பொல்கொல்ல, கண்டி

நிர்வாக அறிக்கை

பாகம் - 01

முதலாவது அத்தியாயம்.

1.1 இலங்கை மகாவலி அதிகார சபையை ஸ்தாபித்தல் மற்றும் அதன் அமைப்பு.

1979 ஆம் ஆண்டின் இலக்கம் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் விசேட பிரதேசம் ஒன்று தொடர்பாக அதிகார சபையின் பணி வினைகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

(அ) நீர்த் தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் விநியோகிப்பதற்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் மற்றும் இயக்குதல் உட்பட மகாவலி கங்கையின் அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல். அவ்வாறு இருப்பினும், மின்சாரத்தை விநியோகிப்பதற்குரிய பணி வினைகளை வேறு ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் உள்ள வேறு ஏதேனுமொரு அதிகார சபையினால் செயற்படுத்துவதற்கு முடியும்.

(ஆ) முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போசித்து வளர்த்தல் மற்றும் அவ்வபிவிருத்தியைத் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(இ) விவசாய விளைத்திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு ஆற்றல்களை உயர்ந்த பட்ச நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் விவசாய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(ஈ) பௌதீக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

(உ) மக்களின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகித்தல்.

(ஊ) உள் மற்றம் வெளி பிரத்தியேக மூலதனத்தை விவசாய அபிவிருத்திகளில் பயன்படுத்துவதை முன்னேற்றுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டத்தை திட்டமிடும் போது மற்றும் அதனைச் செயற்படுத்தும் போது அரச திணைக்களங்கள், அரச தாபனங்கள், உள்ளூராட்சி மன்ற தாபனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட தாபனங்கள், பிரத்தியேக அல்லது வேறு நபர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

1.2 இலங்கை மகாவலி அதிகார சபையின் பணி வினைகள்.

பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழ் நிறுவப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் துறைகளுக்குரிய அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலானது பிரதி பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட வணிக முகாமையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய பின்வரும் பணி வினைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிறைவேற்றப்படுகின்றன.

- கூட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய தாபனத்தின் முன்னேற்றத்தை மாதாந்தம் பரிசீலித்து அவசியமான தலையீடுகள் மூலம் உரிய இலக்கை எட்டுதல்.

- சொத்துக்களைத் தாபரித்தல் மற்றும் நிர்வாகித்தல் தொடர்பாக பொருத்தமான திட்டம் ஒன்றிற்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.
- கால வரையறைக்கு அமைய மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கம் மற்றும் கிவுல் ஓயா நீர்த்தேக்கம் ஆகியவற்றை நிர்மாணித்தல்.
- பி வலயத்தின் வலது கரை மற்றும் எல் வலயத்தின் நீர்ப்பாசன நிலப்பரப்பை அதிகரித்துக் கொள்வதற்காக பிரதேசங்களை இனங்கண்டு அடிப்படைச் சூழல் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.
- விவசாய உதவிச் சேவைகள் மேம்பாடு, விவசாய மேம்பாடு மற்றும் வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.

- நீர்ப்பாசனத் தொகுதிகளை தாபரித்தல் மற்றும் முகாமைத்துவத்தை விவசாய அமைப்புக்களுக்கு ஒப்படைப்பதற்கு இயன்ற வகையில் விவசாய அமைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் உழவர் பிரதிநிதிகளை பலப்படுத்துதல்.

- "செல்வச் செழிப்பு மிக்க தேசம் ஒன்றிற்கு மகாவலி கால்நடை உற்பத்திகள்" என்ற தொனிப் பொருளின் கீழ் மகாவலி குடியேற்ற சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கு கால்நடை வளங்கள் துறையை பலப்படுத்துதல்.

- விவசாய நிலங்கள் வரையறுக்கப்பட்ட வளமாகி வருகின்றமையால் மகாவலி குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறைகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு பாரம்பரிய விவசாயத் துறைக்கு அப்பாற்பட்ட தொழில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழி காட்டுதல்.

- சகல மட்டங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பதவியணியின்

தகவல்களை கணினி மயப்படுத்தி (இலத்திரனியல்) e - மனித வள முகாமைத்துவ தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.


- நேரியல் தாபனங்களுடன் கலந்துரையாடி சாகுபடி பருவ செயற்பாட்டுத் திட்ட செயல்முறைகள் மூலம் பிரதான நீர்த்தேக்கங்கள் மூலம் நீர்ப்பாசன குடியேற்ற செயற்திட்ட பிரதான நீர்மின் உற்பத்தி மற்றும் வீடுகளுக்கான நீர் மின் மற்றும் வீடுகளுக்கான நீர் வழங்கலுக்காக நீரை வேறு பிரித்துக் கொடுத்தல்.

- பி, சி, எச், எல், டி, மொரகஹகந்த, ஹுருளுவெவ, வலவ, விக்டோரியா மற்றும் புதிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ரம்புக்கன் ஓயா ஆகிய செயற்திட்டங்களில் பயிர் பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு, நீர் பிரி நிலங்களின் முகாமைத்துவம், சூழல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.

- பிரதான நீர்த் தேக்கங்களில் திசை திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுறு தொழிற்பாட்டு தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் உழவர் அமைப்புக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

1.3 இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு



1.4 மகாவலி வலயம் – கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் தற்போதைய நிலைமை

மகாவலி கங்கை வடிநில அபிவிருத்திப் பெருந்திட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட குடியேற்றங்களை நிர்வாகித்தல், நீர்ப்பாசனத் தொகுதியை இயக்குதல், தாபரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக மகாவலி அதிகார பிரதேச வலயம் என்ற அடிப்படையில் நிர்வாக அலகுகள் 10 நிறுவப்பட்டுள்ளன. மகாவலி கங்கைப் பள்ளத்தாக்கை அண்மித்து பி,சி,டி,எச், மொரகஹகந்தை, விக்டோரியா, ஹுரூளு வெவ ஆகிய வலயங்களும், உடவலவ, வெலி ஓயா (எல் வலயம்) மற்றும் ரம்புக்கன் ஓயா வலயம் ஆகிய விசேட வலயங்களும் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


மகாவலி வலயங்களில் மற்றும் விசேட பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பணி வினைகள் வதிவித வணிக முகாமையாளர்களின் அதிகாரங்களுக்குக் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட வணிக முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியதுடன், பிரதி பணிப்பாளர் நாயகங்களின் மேற்பார்வையின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக பிரதான அலுவலகத்தில் ஒவ்வொரு துறைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு கிடைகைப் பெறும்.


அவ்வாறே, அனைத்து வலயங்களுக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரி வதிவிட வணிக முகாமையாளராகுவதுடன், தொழில்நுட்ப, காணிகள், விவசாயம் மற்றும் அபிவிருத்தித் துறைகளுக்காக கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட வணிக முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். அலகுகள் பலவற்றிற்காக ஒரு தொகுதி முகாமைத்துவ அலுவலகமும், அவ்வலுவலகத்திலட ஒவ்வொரு விடயத் துறைகளுக்கும் தொகுதி முகாமையாளர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவர், தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், கமநல உத்தியோகத்தர் மற்றும் காணிகள் உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வனைத்து உத்தியோகத்தர்களினதும் கண்காணிப்பின் கீழ் சகல விடயத் துறைகளினதும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் ஒவ்வொரு அலகிற்கும் ஒவ்வொரு முகாமையாளர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு அலகானது பொதுவாக 250-300 அளவான காணி உரித்துடைய குடும்பங்களை குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்படுவது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தை முதன்மையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிகள் கொள்கைகளுக்கு அமையவாகும். அரசாங்கத்தின் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வெளியேற்றுவதில் இருந்து பிரதான பத்திரம் வெளியிடுவது வரை அடிப்படை நடவடிக்கைகள் அக்காணிகளுக்குரிய பின் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வணிக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக காணிகள் குத்தகை அடிப்படையில் வெளியேற்றுவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு மேலதிகமாக இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகளுக்கு காணிகளை வழங்குவதும் வலய அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதைப் போலவே, நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், தாபன அபிவிருத்தியின் ஊடாக நீர்ப்பாசனத் தொகுதியை தாபரித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும், விவசாய அபிவிருத்தின் கீழ் விதைகளை உற்பத்தி செய்தல், பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரி நடவடிக்கைகளும், கால்நடை வள, மீன்பிடி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைச் செயற்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தரமான கடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல், வணிக, விவசாய வியாபாரத்தை இயக்குதல், விவசாயத்திடன் தொடர்புடைய சுய தொழில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதலும் வலய நிர்வாகத்தின் கீழ் இடம்பெறும்.

மகாவலி வலயம் – வரைபடம்





பி (B) வலயம்


வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி பி வலயமானது மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ் பள்ளத்தாக்கின் 75,441.5 ஹெக்டாயர் பருமட்டான மொத்த நிலப்பரப்பில் பரந்து விரிந்து காணப்படுவதுடன், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களின் கீழ் கொள்ளப்பட்டுள்ள மாபெரும் செயற்திட்டமாக இதனைக் குறிப்பிட முடியும். நீர்ப்பாசன முகாமைத்துவ நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்ட பிரதேசங்களானது 08 நிர்வாக பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மாபெரும் மகாவலி வலயமாக இருப்பது பி வலயமாகும். அது சுமார் 94,225 ஐக் கொண்டதாகும். மகாவலி பி வலயமானது 1982 - 1983 ஆகிய காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தி வலயமாகும். இவ்வலயமானது 08 தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன் 48 அலகுகளைக் கொண்டுள்ளது. பிரதான பயிராக நெல் காணப்படுவதுடன் ஏனைய பயிர் வளர்ப்புக்களும் சிறிய அளவில் முன்னெடுக்கப்படுகின்றது. பிரதானமாக பாரிய நீர்த்தேக்கமாக மாதுருஓயா நீர்த்தேக்கம் உள்ளதுடன் அதன் மொத்த கொள்ளளவு 596.6 MCM ஆகும். இதற்கு மேலதிகமாக சிறிய அளவிலான குளங்கள் 74 காணப்படுகின்றன. மகாவலி பி வலயமானது இடது கரை மற்றும் வலது கரை ஆகிய பகுதிகள் இரண்டைக் கொண்டுள்ளதுடன், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு உரியதாக அமைந்துள்ளது. வெலிகந்த, திம்புலாகல, கோரளைப் பற்று வடக்கு, வாகரை ஆகிய பிரதேச செயலகங்கள் மூன்றும் இதில் உள்ளடங்குகின்றன. மகாவலி பி வலயமானது 1979.06.15 ஆம் திகதி வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டதுடன், இலங்கை மகாவலி அதிகார சபையில் விசேட அதிகார பிரதேசமாக காணப்படுகின்றது.

மகாவலி பெருந் திட்டத்திற்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட மாதுறு ஓயா நீர்த் தேக்கமானது பி வலயத்தின் பிரதானமான நீர் மூலாதாரம் ஆகும். மாதுறு ஓயா பிரதான கால்வாய் 52.887 கி.மீ. நீளமானது ஆகும். மேலும், பிம்புரத்தேவ நீர்த்தேக்கமும் பி வலயத்தில் அமைந்துள்ளதுடன் அதன் பிரதான கால்வாய் 22 கி.மீ. நீளமானது ஆகும். 77.605 கி.மீ. நீளமான கிளைக் கால்வாய்கள் அமைந்துள்ளன. அவ்வாறே, பிரிப்புக் கால்வாய்கள் 474.137 கி.மீ. நிளத்தைக் கொண்டுள்ளன. மேலும் வலயத்தில் களக் கால்வாய்கள் கி.மீ. 1117.78 காணப்படுவதுடன் தற்பொழுது இடது கரையானது மகாவலி மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு மகாவலி தொகுதி அலுவலகங்கள் எட்டைக் கொண்டுள்ளதுடன் நிர்வாக காணிகள், விவசாயம், நீர்ப்பாசனம், சமூக விருத்தி, தொழில்நுட்ப ஆகிய பிரிவுகளின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைகள்	82.60	79.25	96%
02	காணிப் பிரிவு	19.90	19.82	100%
03	காணி உபயோக திட்டமிடல்	0.66	0.64	98%
04	தாபன அபிவிருத்திப் பிரிவு	53.92	53.22	99%
05	வணிக அபிவிருத்திப் பிரிவு	6.55	6.38	97%
06	காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு	1.00	0.99	99%
07	வன மற்றும் சுற்றாடல்	6.23	6.23	100%
08	நிர்வாகம்	8.65	8.39	97%
09	போக்குவரத்து	11.71	11.71	100%
10	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	40.71	37.51	92%
11	கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்)	18.44	17.59	95%
கூட்டுத் தொகை		131.16	**250.37**	**241.75**
01	விவசாயப் பிரிவு (செயற்திட்டம்)	50.00	50.00	100%
02	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	51.00	50.99	100%
கூட்டுத் தொகை		**101.00**	**100.99**	**100%**
MCP செயற்திட்டம்		**217.00**	**194.00**	**89%**
மொத்த கூட்டுத் தொகை		**568.37**	**536.73**	**94%**



சி (C) வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய அபிவிருத்தி வலயமாக ஆரம்பிக்கப்பட்ட "சி" வலயமானது மேல் மாகாணத்தில் மகாவலி கங்கையிலும், கிழக்கில் உல்ஹிடிய நீர்த்தேக்க ஒதுக்கு மற்றும் மாதுறு ஓயா வனப் பூங்காவும், வடக்கில் மகாவலி பி வலயமும், தெற்கில் மஹியங்கனை பிரதேசத்தையும் எல்லையாகக் கொண்டு, பதுளை, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் 03 ஐயும் உள்ளடக்கி அமைந்துள்ளது. இவ்வலயத்தின் பருமட்டான மொத்த நிலப்பரப்பு 30,760 ஹெக்டயார் ஆகும்.


மகாவலி சி வலயமானது தெஹிஅத்த கண்டியவை பிரதான நகரமாகக் கொண்டு வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற விவசாய வலயமாகும். இதன் பிரதானமான விவசாய பயிராக நெல் காணப்படுவதுடன், தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு 4% ஆகும். குடியேற்றவாசிகளை குடியேற்றி அவர்களுக்குப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அவசியமான காணிகளை வழங்குதல், குடிநீர் மற்றும் வீட்டுப் பாவனைகளுக்கு நீரை வழங்குதல், மின்சாரம் உட்பட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்ட வலயமாகும். இவ்வலயத்தில் விவசாய நிலங்களுக்கு அவசியமான நீர்ப்பாசன நீரை மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்படுவதுடன் 100% இற்கும் அதிகமான வினைத்திறன் பெறுமதியைக் கொண்டுள்ளது. மகாவலி இளம் சமூகத்தை முதன்மையாகக் கொண்ட பயிர்ச் செய்கை கிணறுகளை அண்டி பழப் பயிர்ச் செய்கை, பாதுகாப்பு வீடுகளுக்குள் பயிர்ச் செய்கை, அலங்கார மீன் வளர்ப்பு ஆகியவை முதன்மையான இடத்தைக் கொண்டுள்ளன. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் பாரிய பணிகளை நிறைவேற்றுகின்ற இவ்வலயமானது உயிர் பல்வகைமையை பாதுகாப்பதற்காக விசேட சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. வலயத்தின் மக்களை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அமைப்பானது அதிகார சபையின் பணிகளை மக்களுக்கு மேலும் நெருக்கப்படுத்தி உள்ளது.

தொடர் இலக்கம்	**தொகுதி**	**அலகுகளின் எண்ணிக்கை**	
01	கிராந்துரு கோட்டை	7	கிராந்துரு கோட்டை, ரொடலவெல, மில்லத்தேவ, கல்போருயாய, ஹொபரியாவ, கின்னோருவ, உல்ஹிடிய
02	மெதகம	3	தியவித்தாகம, நவமெதகம, ஹெனானிகல
03	சந்துன்புற	6	லிஹிணியாகம, முவகம்மன, சந்தமடுல்ல, லத்பந்துர, பக்மிதெணிய, சந்துன்புற
04	சிறிபுற	4	பலுதெணிய, முதுன்கம, பரகஸ்வெவ, சந்தனகம
05	நுவரகல	3	நுவரகல, பல்லேகம, பிஹிடிவெவ
06	வெஹெரகல	5	கஜுவத்த, வெஹெரகல, வீரலந்த, உல்பத்வெவ, மல்தெணிய
07	மஹவனாவெல	3	மஹவனாவெல, சூரிய பொகுண, குடாகல
கூட்டுத் தொகை		**31**	

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைகள்	130.51	130.52	100%
02	காணிப் பிரிவு	20.00	20.00	100%
03	காணி உபயோக திட்டமிடல்	2.11	2.11	100%
04	தாபன அபிவிருத்திப் பிரிவு	27.37	27.36	100%
05	வணிக அபிவிருத்திப் பிரிவு	0.48	0.47	98%
06	காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு	4.38	4.38	100%
07	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	3.45	3.46	100%
08	நிர்வாகப் பிரிவு	5.60	5.60	100%
09	போக்குவரத்துப் பிரிவு	8.05	8.05	100%
10	விவசாயப் பிரிவு	82.00	82.00	100%
11	கால்நடை வளர்ப்புப் பிரிவு	14.99	14.99	100%
கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**298.94**	**298.94**	**100%**
12	கால்நடை வளர்ப்புப் பிரிவு	21.34	100%	100%
கூட்டுத் தொகை - செயற்திட்டம்		21.34	21.34	100%
மொத்த கூட்டுத் தொகை		**320.28**	**320.28**	**100%**

வலயத்தின் அடிப்படைத் தகவல்கள்

- விவசாய காலநிலை வலயம் - $DL_1/DL_2/IL_2$
- பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பு ஹெக்டயார் - 22,406
- அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் - 35,640
- வலயத்தின் சனத் தொகை - 185,356
- பயிர் செய்யப்படுகின்ற பிரதான பயிர் - நெல்



டி (D) வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு மெதிரிகிரிய பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள மகாவலி "டி" வலயமானது 03 தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவை யாதெனில் பிசோபுற, சூரியபுற மற்றும் மீகஸ் வாவி ஆகியவை ஆகும். பிசோபுற தொகுதியானது மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது குடியேற்றப் பெருநகர் ஆகும். பிசோபுற தொகுதியானது 04 அலகுகளையும் (தஹம் வாவி, பண்டார வாவி, பிசோபுற, நபட வாவி) மற்றும் சூரியபுற தொகுதியானது 02 அலகுகளையும் (சமகிபுற, சூரியபுற), மீகஸ் வாவி தொகுதியானது 04 அலகுகளையும் (மீகஸ் வாவி, தம்சோபுற, ஜயகம்புற, தியசென்புற) உள்ளடக்கியவையாகும்.

வடக்கே திருகோணமலை மாவட்டத்தின் கந்தலைப் பிரதேசம் வரையிலும், கிழக்கே சேறுவில பிரதேசம் வரையிலும், தெற்கு மற்றும் மேற்கே பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுற, ஹிங்குரன்கொட பிரதேசம் வரையிலும் பரந்து விரிந்து காணப்படுகின்றது.

விசேட செயற்திட்டங்கள்.

இலங்கை மகாவலி அதிகார சபையானது, டி வலயம், மெதிரிகிரிய வதிவிட வணிக முகாமையாளரின் அலுவலத்தின் கீழ் நிர்வாகிக்கப்படுகின்ற பல்வேறு பிரிவுகள் பதினொன்று (11) காணப்படுகின்றன. அதாவது, தொழில்நுட்ப சேவைப் பிரிவு, விவசாய அபிவிருத்திப் பிரிவு, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, தாபன அபிவிருத்திப் பிரிவு, கலாச்சார மற்றும் விளையாட்டுப் பிரிவு, காணிப் பிரிவு, சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு, வியாபார அபிவிருத்திப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக பங்களிப்பு வழங்கி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.






தொழில்நுட்ப சேவைப் பிரிவின் மூலம் வலயத்திற்குரிய சகல கட்டுமானப் பணிகளுக்கும் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. மெதிரிகிரிய புதிய அபிவிருத்தி வலயத்தின் கட்டுமானப் பணிகளுக்காக மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் மானியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையால் 2021 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப சேவைப் பிரிவின்

சகல மூலதன நிதிகளானது பிசோபுற, சூரிய வாவி மற்றும் மீகஸ் வாவி தொகுதிகளுக்குச் சொந்தமான கிராமங்களில் வசிக்கின்ற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு உள்ளது. விசேடமாக வீதி அமைப்புக்களை மேம்படுத்துதல், நீர்ப்பாசன அமைப்பை மேம்படுத்துதல், விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காக அம்மானியங்கள் ஒதுக்கப்பட்டு உள்ளன.

விவசாய பிரிவின் மூலம் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளடங்கும் விதமாக விவசாய சமூகத்தின் சகல விவசாயம் சார்ந்த தேவைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளன. விசேடமாக, விவசாயிகளின் பயிற்சி நடவடிக்கைகள், வித்துக்களின் தேவைப்பாடுகள், பல்வேறு மரக் கன்றுகளை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப அறிவை விவசாயிகளுக்கு வழங்கி விவசாய சமூகத்திக் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அளப்பரிய அர்ப்பணிப்பு ஆற்றப்பட்டு வருகின்றது. மேலும், அலுவலகத்தில் உள்ள பண்ணையில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்கள் மற்றும் மரக்கறி உற்பத்தி நடவடிக்கைகளைப் போன்றே, கால்நடை வளர்ப்பின் மூலம் வருமானம் ஈட்டப்படுகின்றது. அவ்வாறே, நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக் கன்றுகள் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்குதல் முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறே, தேனீ வளர்ப்பு போன்ற விவசாயிகளுக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியுமான பிரிவுகள் தொடர்பாகவும் விவசாய பிரிவினால் கவனம் செலுத்தப்பட்டு உள்ளது. தற்பொழுது வலயத்தில் இது சம்பந்தமாக பாரியளவு வருமானம் ஈட்டக் கூடிய விவசாயிகள் காணப்படுவதுடன், மாதிரி அமைப்புக்களாக பிற வலயங்களின் விவசாயிகளுக்கு கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.









மீன்பிடி மற்றும் கால்நடை வள பிரிவின் மூலமும் சகல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவும் உள்ளடங்கும் விதமாக மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பணிகளுக்காக சேவையை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசேடமாக பாற் பசு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பாக விரிவான அறிவானது நிறுவனத்தின் மூலம் அவை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற விவசாய மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு

வருகின்றன. அலுவலகத்தில் பண்ணை நிலத்திற்கு அருகில் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்ற மீன் இன விருத்தி மத்திய நிலையத்தின் மூலம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கும், விவசாயிகளுக்கு அவசியமான மீன் குஞ்சுகளை (குஞ்சுத் திரள்கள், குஞ்சுகள்) உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்குவதற்கும், அதன் முலம் எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அவ்வாறே, மீன்பிடி மற்றும் கால்நடை வள செயற்பாடுகளுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சின் பின்னர் தேவைப்படுகின்ற உபகரணங்களை வழங்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் அதிகளவில் தற்பொழுது நடாத்தி வெற்றிகரமான விவசாயிகள் குழு ஒன்றை வலயத்தில் உருவாக்குவதற்கு இப்பிரிவிற்கு முடியுமானதாக உள்ளது.

குடியேற்றவாசிகள் மற்றும் மகாவலி அதிகார சபைக்கு இடையில் மிகவும் சிறந்த தொடர்பை ஏற்படுத்த முடியுமான பிரிவாக விளங்குவது தாபன அபிவிருத்திப் பிரிவு ஆகும். இப்பிரிவின் மூலம் பல தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மெதிரிகிரிய டி வலயத்தினாலும் வலயத்தின் குடியேற்றவாசிகளுக்கு பல நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இப்பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ்,


- விவசாய அமைப்புக்களை வலுப்படுத்துதல் மற்றும் புதிதாக விவசாய அமைப்புக்களை உருவாக்குதல்.
- பல்வேறு குடியேற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- மகளிர் மற்றும் இளைஞர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்.
- சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- கலாச்சார நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மகாவலி விளையாட்டு போன்று நிகழ்ச்சித் திட்டங்கள்.

அவ்வாறே, வலயத்தின் காணிப் பிரிவின் மூலம் காணி நிர்வாகத்தை முன்னெடுப்பதும், காணி அபிவிருத்தியை முன்னெடுப்பதும் அதன் மரபுரிமையை குடியேற்றவாசிகளுக்கு வழங்குவதும் முன்னெடுக்கப்படுகின்றது. வலயத்தின் சுற்றாடல் பிரிவின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பிற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உயிர் பல்வகையை நிலைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் சுற்றுளாத் துறையை மேம்படுத்துவதற்காவும் வியாபார அபிவிருத்திப் பிரிவின் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள வகிபாகமானது அதிக மதிப்பைப் பெறுகின்றது.






தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)	பௌதீக முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	31.07	24.20	78%	100%
02	தாபன அபிவிருத்திப் பிரிவு	40.97	40.97	100%	100%
03	காணிப் பிரிவு	19.50	19.40	100%	100%
04	வணிக அபிவிருத்திப் பிரிவு	2.85	2.74	96%	100%
05	சுற்றாடல் பிரிவு	2.80	2.72	97%	100%
06	மகாவலி கேந்திர மையம்	0.58	0.58	96%	100%
07	விவசாயப் பிரிவு	25.19	23.48	93%	95%
08	மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு	12.45	10.50	84%	95%
09	போக்குவரத்துப் பிரிவு	1.4	1.40	100%	100%
10	நிர்வாகப் பிரிவு	2.00	2.00	100%	100%
கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**142.71**	**131.89**	**92%**	**95%**
செயற்திட்டம் மூலம் ஒதுக்குதல்					
11	மீன்பிடி மற்றும் கால்நடை வளப் பிரிவு	17.9	17.00	95%	95%
கூட்டுத் தொகை - செயற்திட்டம்		**17.90**	**17.00**	**95%**	**95%**
மொத்த கூட்டுத் தொகை		**160.61**	**148.89**	**93%**	**90%**



ஈ (E)வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் மகாவலி அதிகார சபை நிறுவப்பட்ட பின்னர் உலர் வலயங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு கொத்மலை நீர்த்தேக்கம், ரன்தெணிகல நீர்த்தேக்கம் மற்றும் ரண்தம்பே நீர்த்தேக்கங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் காரணமாக தூண்டுதலால் பாதிக்கப்பட்டவர்களை மீள குடியமர்த்துவதற்காக மற்றும் நீர்த்தேக்கம் அமைப்பதற்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக விக்டோரியா விசேட வலயம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறே, 2019 ஆம் ஆண்டில் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மினிப்பே மற்றும் வில்கமுவ பிரதேச செயலாளரின் அதிகார பிரதேசங்கள் மகாவலி "ஈ" வலயமாக பெயரிடப்பட்டு உள்ளது. அதற்கமைய தற்பொழுது கொத்மலை, விக்டோரியா விசேட அதிகார பிரதேசமும், மிணிப்பே மற்றும் வில்கமுவ தொகுதிகளும் உள்ளடங்கலாக ஒட்டு மொத்தமும் மகாவலி "ஈ" வலயமாக ஒரே வதிவிட வணிக முகாமையாளரின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை வரலாற்றிலேயே மிக முக்கியமான பிரதேசமாகத் திகழ்கின்ற கொத்மலை மற்றும் மகாவலி கங்கைக்குக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மிணிப்பே அணைக்கட்டு உட்பட நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் பலவற்றைப் போன்றே மகாவலி அதிகார சபையின் இதயமாக கருதப்படுகின்ற கொத்மலை, விக்டோரியா, ரன்தெணிகல, ரண்தம்பே மற்றும் பொல்கால்லை நீர்த்தேக்கங்களும் இவ்வலயத்தில் உள்ளடங்குகின்றன.


"ஈ" வலயத்திற்குச் சொந்தமான நிர்வாக மாவட்டங்களான மாத்தளை, கண்டி, நுவரெலியா மாட்டங்கள் பெயரிடப்பட முடியும் என்பதுடன், காணி நிர்வாக நடவடிக்கைகள் மகாவலி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்ட பிரதேசங்களில் மாத்திரம், அதாவது விக்டோரியா, கொத்மலை பிரதேசங்களில் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றன. மகாவலி "ஈ" வலயமாக கருதுவதற்கு காரணமான தொகுதிகள் இரண்டான மிணிப்பே மற்றும் வில்கமுவ தொகுதிகள் இரண்டிலும் 10 அலகுகள் (ஹந்தகனாவ, மொரயாஹசலக, உல்பதகம, கொலொன்கொட, நுககொல்ல, வில்கமுவ, ஹெட்டிபொலதேவகிரிய, நாமிணிகம என்பன காணப்படுகின்றன). "ஈ" வலயத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 75 உள்ளடங்கும் விதமாக 28,059 குடும்பங்களின் சனத்தொகை 94,108 வாழ்கின்றனர். விவசாய பின்பிலத்தை கருத்திற் கொள்ளும் போது விவசாய காலநிலை வலயம் - IL2 இற்குச் சொந்தமானதாக காணப்படுவதுடன் மண் வகை - Reddish Brown Latasolic Soil ஆகும். இவ்வலயத்தின் வருடாந்த மொத்த மழை வீழ்ச்சி 1500 - 1800 mm ஆகும்.

கொத்மலை, விக்டோரியா நீர்த்தேக்க செயற்திட்டம் காரணமாக காணிகளை இழந்தவர்களின் குடும்பங்கள் 3500 இற்கு கொத்மலை வலயத்தில் குடியேற்றப்பட்டு உள்ளதுடன், விக்டோரியா ரன்தெணிகல நீர்த்தேக்கங்களை அமைப்பதன் காரணமாக காணிகளை இழந்த 500 குடும்பங்கள் இவ்வலயத்தில் மீள் குடியமர்த்தப்பட்டு உள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, நீர்த்தேக்க செயற்திட்டங்கள் காரணமாக அகற்றப்பட்ட நகரங்களுக்குப் பதிலாக திஸ்பனே, கொத்மலை, அதிகாரிகம, குருதெணிய, குண்டசாலை, திகன, தெல்தெணிய புதிய நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டு உள்ளன. கடுகஸ்தோட்டையை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளும் இவ்வலயத்தில் உள்ளடங்குகின்றன.

2021 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு அமைய விக்டோரியா கொத்மலை பிரதேசங்களில் காணி கடமைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாத்திரம் திறக்கப்பட்டுள்ளதுடன், மிணிப்பே மற்றும் வில்கமுவ ஆகிய தொகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டு இருந்தன. அவ்வாறே, மிணிப்பே வன ஜீவராசிகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 18 வட்டாரங்கள் மீண்டும் வர்த்தமானி இடுவதற்காக தற்பொழுது சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்று திட்டமிடப்பட்டு வருகின்றது. பின்வரும் பிரிவுகளின் கீழ் இவ்வலயத்தின் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடர் இலக்கம்	**பிரிவு**	**2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)**	**2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)**	**2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)**
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	56.27	56.27	100%
02	காணிப் பிரிவு	20.07	20.07	100%
03	காணி உபயோக திட்டமிடல் பிரிவு	0.13	0.01	10%
04	தாபன அபிவிருத்திப் பிரிவு	10.29	10.29	100%
05	வணிக அபிவிருத்திப் பிரிவு	2.60	2.60	100%
06	காலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு	0.01	0.01	100%
07	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	1.00	1.00	100%
08	நிர்வாகப் பிரிவு	2.15	2.15	100%
09	போக்குவரத்துப் பிரிவு	5.00	5.00	100%
10	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	10.00	10.00	100%
11	கால்நடை வளர்ப்புப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	6.99	6.99	100%
கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**114.51**	**114.39**	**100%**
12	கால்நடை வளப் பிரிவு (செயற்திட்டம்)	6.85	6.00	88%
கூட்டுத் தொகை - செயற்திட்டம்		**6.85**	**6.00**	**88%**
மொத்த கூட்டுத் தொகை		**121.36**	**120.39**	**99%**



ஜீ வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி பெருந் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது அணையாக பொல்கொல்ல நீர் விநியோக அமைப்பானது நீர் மார்க்கங்கள் இரண்டின் ஊடாக நீர் விடுவிக்கப்படுகின்றது. போவதென்ன நீர்த்தேக்கமானது அபன் கங்கையில் இருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கும், எலஹர கால்வாயின் ஊடாக கிரிதலை, மின்னேரியா, கவுடுல்ல மற்றும் கந்தளாய் நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்படுகின்றன.

1982 இலிருந்து 1999 வரை "ஜீ" வலயமானது மகாவலி "பி" வலயத்தின் தொகுதி அலுவலகமாக நடாத்திச் செல்லப்பட்டு உள்ளது. பின்னர் அது 1999 இல் "ஜீ" வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் மகாவலி "ஜீ" வலயமானது பகமூண மற்றும் அத்தனகடவல ஆகிய தொகுதிகள் இரண்டை உள்ளடக்கி இருந்தது.

மகாவலி பெருந் திட்டத்தின் இறுதி நீர்த்தேக்க செயற்திட்டமாக காணப்படுவது மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டமாகும். செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் லக்கல, பல்லேகம மற்றும் நாவுல பிரதேச செயலாளரின் அதிகார பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 24 இற்கு தாக்கம் செலுத்தியது. ஆகையால் மொரகஹகந்த, களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் காரணமாக தமது ஊருகளில் இருந்து நீங்கிச் சென்ற மக்கள் களு கங்கை இடது கரை மற்றும் களு கங்கை வலது கரைகளில் மீள் குடியமர்த்தப்பட்டனர்.

அதற்கமைய, "ஜீ" வலயத்திற்கு 4,524 ஹெக்டயர் ஒருங்கிணைக்கப்பட்டு மொரகஹகந்த வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டு களு கங்கை இடது கரைப் பிரதேசத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக வெல்லெவெல மற்றும் களு கங்கை வலது கரைப் பிரதேசத்தின் நிர்வாகத்திற்காக குருவெல ஆகிய தொகுதிகள் 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.

மொரகஹகந்த வலயமானது 15,058.41 ஹெக்டயர் இற்கு பரந்து விரிந்து காணப்படுவதுடன் மொரகஹகந்த வலயத்திற்கு வடக்கே தியபெதும - கடுகெலியாவவும், கிழக்கே களு கங்கை - வஸ்கமுவவும், தெற்கே நகல்ஸ் மலைத்தொடரும், மேற்கே கிரிதலை - மின்னேரியா இயற்கை ஒதுக்கும் அமைந்துள்ளன. மொரகஹகந்த வலயமானது வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்திற்கு மற்றும் மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திற்கு உரித்தாகின்றது.


- வலயத்திற்குச் சொந்தமான மாவட்டங்கள் - பொலன்னறுவை மற்றும் மாத்தளை
- மொத்த நிலப்பரப்பு - 30,889 ஹெக்டயர்
- அபிவிருத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு - 19,670 ஹெக்டயர்

- தொகுதிகள் - 04
- அலகு அலுவலகங்கள் - 17
- குடும்பங்களின் எண்ணிக்கை - 13,462
- சனத்தொகை - 55,885
- உழவர் அமைப்புக்களின் எண்ணிக்கை - 62
- மகளிர் மற்றும் சிறு குழுக்களின் எண்ணிக்கை - 73

வகிபாகங்கள்

- நீர்ப்பாசன அமைப்பின் உரிமையை கையளிப்பதன் மூலம் அமைப்பின் பாதுகாப்பு, பேணுகை, தொழிற்பாடு மற்றும் தாபரிப்பை சிறப்பான முறையில் நடாத்திச் செல்லப்படுவதுடன், மட்டுப்படுத்தப்பட்ட நீரை உகந்த விதத்தில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் நீர் விளைத்திறனை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்ற சமூக அடிப்படையிலான சட்ட அமைப்பாக உழவர் அமைப்புக்களைக் கொண்டு வருதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.
- விவசாய உற்பத்தி விளைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்திச் செலவை குறைப்பதற்காக அவசியமான உற்பத்தி உள்ளீடுகளை தயாரிக்கின்ற, நவீன விவசாய தொழில்நுட்ப விவசாய உற்பத்தியாளர்களிடம் கொண்டு செல்கின்ற சுற்றாடல் தோழமை மிக்க உழிவர் சமூகத்தின் அமைப்பாக உழவர் அமைப்புக்களை மாற்றுதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைத் தேவைகளுக்கு அமைய தமது உற்பத்திகளை கையாளக் கூடிய, பெறுமதியைச் சேர்த்து இலாபத்தை அதிகரிக்க முடியுமான புதிய விவசாய உற்பத்திகளை தயார் செய்யப்பட்ட பொருட்களாக அறிமகப்படுத்துகின்ற, வியாபார குறிக்கோள்கள் ஊடாக பயணிக்கின்ற விவசாய தொழில் முயற்சியாளர்களின் அடி மட்டத்திலான தரம் வாய்ந்த பொருளாதார அலகாக உழவர் அமைப்புக்களை மாற்றுதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.
- விவசாய உற்பத்திகளை பொதியிடுதல், களஞ்சியப்படுத்துதல், பல்வேறு விற்பனை சங்கிலிகளுடன் ஒன்றிணைந்து உயர்ந்த விலைக்காக போட்டியிடக் கூடிய விற்பனை மேம்படுத்துபவராக உழவர் அமைப்புக்களை கொண்டு செல்லுதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.
- எமது பண்பாட்டைப் பாதுகாக்கின்ற கால்வாய்கள், குளங்கள், அணைகள், நீர் என்பவற்றை நேசிக்கின்ற நீர்ப்பாசன விழுமியங்களுடன் கூடிய உரிமைகளைப் போன்றே கடமைகளுக்கும் முன்னுரிமை வழங்குகின்ற அறிவால், பண்பால் மற்றும் நன்றி உணர்வால் நிரம்பிய தாய் நாட்டை நேசிக்கக் கூடிய உழவர் சமூகத்தை உருவாக்குகின்ற அடி மட்டத்தில் உள்ள அமைப்பாக உழவர் அமைப்புக்களை மாற்றுதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.
- பாரம்பரிய எமது கலாச்சார மரபுரிமைகளை பாதுகாக்கின்ற சமூக விழுமியங்கள் மற்றும் நம்பிக்கையைப் பாதுகாக்கின்ற மற்றும் பேணுகின்ற முறைகளுக்கு அமைய செயற்படுகின்ற கட்டுப்பாடான சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அமைப்பாக உழவர் அமைப்புக்களை மாற்றுதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.
- வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய உடல் ரீதியான மற்றும் உளவியல் ஆரோக்கியத்துடன் கூடிய சுறு சுறுப்பான இளைஞர் யுவதிகளை விளையாட்டின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்குக் கொண்டு செல்லுதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	29.20	29.20	100%
02	காணிப் பிரிவு	15.80	15.80	100%
03	காணி உபயோக திட்டமிடல் பிரிவு	10.00	10.00	100%
04	தாபன அபிவிருத்திப் பிரிவு	26.50	26.50	100%
05	வணிக அபிவிருத்திப் பிரிவு	5.50	5.50	100%
06	காலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு	0.50	0.50	100%
07	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	5.00	5.00	100%
08	நிர்வாகப் பிரிவு	10.13	10.10	100%
09	போக்குவரத்துப் பிரிவு	6.00	6.00	100%
10	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	24.93	24.63	99%
11	கால்நடை வளர்ப்புப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	8.99	8.99	100%
கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**142.55**	**142.22**	**100%**
12	விவசாயம் (செயற்திட்டம்)	50.00	48.70	97%
13	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	10.10	10.10	100%
மொத்த கூட்டுத் தொகை		**202.65**	**201.02**	**99%**



"எச்" வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

கலா ஓயாவை மையமாகக் கொண்டு 1977 – 1978 காலப் பகுதியில் 31,500 குடும்பங்களுக்கு ஈர நிலத்தில் 2 ½ ஏக்கர்களும் (01 ஹெக்டயார்), உலர் நிலத்தில் ½ ஏக்கர்களும் பிரித்து வழங்கப்பட்ட மகாவலி முன்மொழிவுத் திட்டத்தின் அதி விசேட வலயமாக மகாவலி "எச்" வலயம் கருதப்படுகின்றது. இதில் விவசாய நிலங்கள் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர்களும் (நீர்ப்பாசன மற்றும் உலர்நில) காணப்படுகின்றது. **மகாவலி முன்மொழிவுத் திட்டத்தின் தொடக்க குடியேற்ற வலயமான இதில்** வதிவிட வணிக முகாமையாளரின் அலுவலகத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற பிரதானமாக 08 பிரிவுகள் காணப்படுகின்றன. அதாவது, தொழில்நுட்ப சேவைப் பிரிவு, விவசாய அபிவிருத்திப் பிரிவு, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, காணிப் பிரிவு, சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு, வணிக அபிவிருத்திப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கி செயற்பட்டு வருகின்றன.

வலயத்தின் அமைவிடமாக மேற்கே, அநுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியும், வடக்கே தெற்குக் ஆற்றங்கரைக் கால்வாயும், தெற்கே பலுவெவ ஆற்றங்கரை – உஸ்கல சியபலன்கமுவ ஊடாக ராஜாங்கன ராஜாங்கன ஆற்றங்கரைக் கால்வாயை எல்லையாகக் கொண்டுள்ளதுடன் மேலதிகமாக காகம கடியாவ மற்றும் உஸ்கல சியபலன்கமுவ ஆகிய பழமையான குடியேற்ற பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது.

மாவட்டம்	02	குளங்களின் எண்ணிக்கை	127
கிராம உத்தியோகத்தர் பிரிவு	144	விவசாய அமைப்புக்களின் எண்ணிக்கை	225
கிராமங்கள்	576	வலயத்தின் பருமன்	57,225.49 ha
பிரதேச செயலகங்கள்	10	குடும்பங்களின் எண்ணிக்கை	74,096
தொகுதி அலுவலகங்கள்	07	சனத்தொகை	229542
அலகு முகாமைத்துவ அலுவலகம்	22	இலங்கையின் மொத்த சனத்தொகையில் "எச்" வலயத்தின் பிரதிநிதித்துவம்	1%
பொதுவான வெப்பநிலை	28 C^0	அநுராதபுரத்தின் மொத்த சனத்தொகையில் "எச்" வலயத்தின் பிரதிநிதித்துவம்	23%
பொதுவான மழை வீழ்ச்சி	900-1,100mm	நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய மொத்த கால்வாய்களின் நீளம்	2,481 Km
விவசாய சூழலியல் வலயம்	DL1b		
பிரதான மண் வகை	சிவப்புக் கபில மண்		
பிரதான நீர் கொள்ளளவு	கலா வாவி **100,000acft**		
போக்கு மாற்று நீர் மூலாதாரம்	கொத்மலை		
வலயத்தின் நீர்ப்பாசன நிலப்பரப்பு	**25,390 ha**		

இலங்கை மகாவலி அதிகார சபை, எச் வலயம், தம்புத்தேகம வதிவிட வணிக முகாமையாளரின் அலுவலகத்தில் பிரதானமாக 08 பிரிவுகள் காணப்படுகின்றன. அதாவது, தொழில்நுட்ப சேவைப் பிரிவு, விவசாய அபிவிருத்திப் பிரிவு, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, காணிப் பிரிவு, சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு, வணிக அபிவிருத்திப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கி செயற்பட்டு வருகின்றன.

நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு ஆதாரமாவதற்கு நீர்ப்பாசன காணிகள் 25,390 ஹெக்டயர் நிலப்பரப்பானது சிறு, பெரும் போகங்கள் இரண்டிலும் இயன்றளவு அதிகமாக தேசிய தேவைப்பாட்டிற்கு உகந்த விதத்தில் பயிர்ச் செய்கையை முன்னெடுத்தலும், வீட்டுத் தோட்ட நிலங்களை விளைத்திறன் மிக்கதாக மேம்படுத்துவதற்காக வினைத்திறனாக பயன்படுத்துதல் விவசாய பிரிவின் மூலம் பிரதானமாக முன்னெடுக்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டிற்காக செயற்திட்ட செலவினத் தலைப்பின் கீழ் வருடாந்த மூலதனத்தை ஒதுக்குதல் 100.00 மில்லியன் ரூபாயாக காணப்படுவதுடன், செயற்திட்ட செலவின தலைப்பின் கீழ் வருடாந்த நிதி ஒதுக்கீடு 70 மில்லியன் ரூபாய் ஆகும்.







2021 ஆம் ஆண்டின் எச் வலய பயிர் உற்பத்திசார் முன்னேற்றம் மற்றும் தேசிய உற்பத்திக்கு மகாவலி எச் வலயத்தின் பங்களிப்பு

	2021 சிறு போகம்			2021/22 பெரும் போகம்		
பயிர்	பயிர்ச் செய்கை இலக்கு (ஹெக்.)	பயிர்ச் செய்கை முன்னேற்றம் (ஹெக்.)	உற்பத்தி (மெ.தொன்)	பயிர்ச் செய்கை இலக்கு (ஹெக்.)	பயிர்ச் செய்கை முன்னேற்றம் (ஹெக்.)	உற்பத்தி (மெ.தொ)
நெல்	10156	16910	87932	21755	11719	60938.8
சோளம்	454	287.9	2303.2	564	64	512
குரக்கன்	55	19.4	34.92	25	6	10.8
சோயா	4500	2252	4504	254	21.6	43.2
பயிறு	250	186.5	242.45	32	5	6.5
உளுந்து	200	82.7	124.05	73	2	3
கௌபி	268	124	161.2	57	3	3.9
எள்ளு	35	49.1	34.37	7	1	0.7
நிலக்கடலை	250	91.1	182.2	0	0	0
பெரிய வெங்காயம்	250	206.7	5167.5	2	1.5	37.5
சிவப்பு வெங்காயம்	0	1.5	22.5	0	0	0
மிளகாய்	125	102.2	1022	107	18	180
பழங்கள்	1769	1536.5	15365	1479	1376.6	13766
மரக்கறிகள்	1412	1380.3	20704.5	881	328.5	4927.5
கிழங்குப் பயிர்கள்	166	102.3	1023	121	207	2070
பிற பயிர்கள்	258	287.7	2301.6	33	416.9	3335.2

தேசிய உற்பத்திக்கு பிரதான பயிர்கள் மூலம் மகாவலி எச் வலயத்தின் பங்களிப்பு மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் - 2021






வயல்வெளி நிகழ்ச்சித் திட்டங்கள் 22 அலகு மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு உள்ளதுடன், அதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு உள்ளது.

தொ.இ.	நிகழ்ச்சித் திட்டம்	எண்ணிக்கை	பயனாளர்களின் எண்ணிக்கை
01	ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்	24	605
02	பயிர் சிகிச்சை நிலையம்	19	210
03	களத் தின நிகழ்ச்சித் திட்டங்கள்	7	295
04	பரக்குடை தட்டுகள் வழங்குதல்	50000	125
05	விவசாய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	28	827
06	விளைச்சல் கணிப்பீடு	66	66
07	விளைச்சலை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்	32	976

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	169.03	169.03	100%
02	காணிப் பிரிவு	26.10	26.10	100%
03	காணி உபயோக திட்டமிடல் பிரிவு	0.20	0.20	100%
04	தாபன அபிவிருத்திப் பிரிவு	56.65	56.65	100%
05	வணிக அபிவிருத்திப் பிரிவு	8.00	8.00	100%
06	காலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு	1.35	1.35	100%
07	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	4.63	4.63	100%
08	நிர்வாகப் பிரிவு	7.50	7.50	100%
09	போக்குவரத்துப் பிரிவு	13.00	13.00	100%
10	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	70.00	70.00	100%
11	கால்நடை வளங்கள் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	23.94	23.94	100%
மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**380.40**	**380.40**	**100%**
01	விவசாயம் (செயற்திட்டம்)	100.00	100.00	100%
02	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	31.41	31.41	100%
கூட்டுத் தொகை		**131.41**	**131.41**	**100%**
மொத்த கூட்டுத் தொகை		**511.81**	**511.81**	**100%**




எல் வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

1984 ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரதேசமானது 1988 ஆம் ஆண்டில் 562 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 163,000 ஹெக்டயார் ஆக காணப்பட்ட இவ்வலயமானது 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி 1487/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிலப்பரப்பானது 199209 ஆக விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. இதில் 16857 ஹெக்டயர் நிலப்பரப்பின் அப்விருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உள்ளன. 03 தொகுதிகளில் 16 அலகுகள் நிறுவப்பட்டு 7711 குடும்பங்கள் குடியேற்றப்பட்டு உள்ளன. வயல் 2359 ஏக்கர்களும், நீர்ப்பாசன நீரை விநியோகிக்கின்ற சிறு குளங்கள் 24 நிர்மாணிக்கப்பட்டு உள்ளன. இவ்வலயத்தில் நிலப்பரப்பானது வடக்கே முல்லைதீவு – வவுனியா பிரதான வீதியும், கிழக்கே முல்லைதீவு கடற்கரையும், தெற்கே புல்மோட்டை கெபிதிகொல்லாவ பிரதான வீதியும், மேற்கே சிங்ஹயா உல்பதஹின்ன திரிகோண ஸ்தளத்தின் ஊடாக மகஹெட்டியாவஹின்ன மலைத்தொடரின் ஊடாக கோடானது புலியன்குளம் வவுனியா வீதியின் ஊடாக எல்லையைக் கொண்ட பிரதேசம் பூராக பரந்து காணப்படுகின்றது.

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	காணி உபயோக திட்டமிடல் பிரிவு	1.00	0.34	34%
02	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	7.56	0.38	97%
03	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	67.75	52.84	78%
04	கால்நடை வளப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	10.12	5.00	49%
மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**86.43**	**58.56**	**68%**
01	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	13.75	5.38	39%
மொத்த கூட்டுத் தொகை		**100.18**	**63.94**	**64%**



ஹுருளு வாவி வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1997.07.16 ஆம் திகதிக்குரிய இலக்கம் 984/5 உடைய அறிவித்தல் மூலம் ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் நீர் முகாமைத்துவத்தை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 1998.05.09 ஆம் திகதி ஹுருளுவெவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகமானது தம்புள்ளை பெல்வெஹரவில் நிறுவப்பட்டது.

அதற்கமைய அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவை, பலாகல மற்றும் கலென்பிதுனுவெவ ஆகிய பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 49 உம், மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை மற்றும் நாவுல பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 32 உம், கல்கிரியாகம, மடாடுகம, பளுகஸ்வெவ, களுந்தேவ மற்றும் சீகிரியா ஆகிய தொகுதிகள் 05 இற்கும் உட்படுகின்றன.

செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்கள்.

- பொல்கொல்லையில் இருந்து போவதென்னவிற்கு திசை திருப்பப்படுகின்ற மகாவலி நீரானது லெனதொர சுரங்கப் பாதை வெளியேற்றத்தில் இருந்து 33 கிலோ மீட்டர் நீளமான ஹுருளு நீர் வழங்கும் கால்வாய் மற்றும் யான் ஓயாவின் ஊடாக தடைகள் எதுவும் இன்றி ஹுருளுவெவவிற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடுதல்.
- ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கைகளை முறையாக மற்றும் உயர்ந்தபட்ச விளைத்திறனைப் பெற்றுக் கொள்ளும் விதமாக விவசாயம் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கண்டலம நீர்த்தேக்கத்தால் மற்றும் தம்புளுஓயா நீர்த்தேக்கத்தால் மடாடுகம மற்றும் கல்கிரியாகம தொகுதிக்கு விநியோகிக்கின்ற நீரின் மூலம் உயர்ந்தபட்ச விளைத்திறனை நோக்கி விவசாயிகளை ஆற்றுப்படுத்தி அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீர்ப்பாசன, காணிகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் சமூக அபிவிருத்தியைப் போலவே சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	63.15	48.23	76%
02	காணிப் பிரிவு	10.00	9.18	92%
03	தாபன அபிவிருத்திப் பிரிவு	15.43	13.82	90%
04	வணிக அபிவிருத்திப் பிரிவு	1.40	1.40	100%
05	காலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு	0.62	0.61	99%
06	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	3.00	2.96	99%
07	நிர்வாகப் பிரிவு	2.12	2.09	99%
08	போக்குவரத்துப் பிரிவு	4.00	3.43	86%
09	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	35.73	35.73	100%
10	கால்நடை வளப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	6.87	6.87	100%
மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**142.32**	**124.31**	**87%**
01	விவசாயம் (செயற்திட்டம்)	20.00	19.04	95%
02	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	12.95	11.66	90%
கூட்டுத் தொகை		**32.95**	**30.70**	**93%**
மொத்த கூட்டுத் தொகை		**175.27**	**155.02**	**88%**



ரம்பகன் ஓயா வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்


1979 இலக்கம் 23 ஐ உடைய மகாவலி அதகார சபைச் சட்டத்தின் 3/1 ஆம் பிரிவின் கீழ் விசேட செயற்திட்ட பிரதேசமாக 2000.05.07 ஆம் திகதிக்குரிய இலக்கம் 1130 (13) ஐ உடைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலயமாகும். அதற்கமைய 2010.09.01 ஆம் திகதியில் இருந்து மகா ஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதிகளில் நிலவுகின்ற நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை உபயோகித்து பிரதேசத்தின் நிலைபெறுதகு அபிவிருத்தியை இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்படுவதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் நிலவுகின்ற வறுமையைப் போக்குவதல் மற்றும் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்க வேண்டிய பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள இவ்வபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நேரியல் தாபனங்களுடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமாக செயற்படுத்தப்படும். இதற்கமைய ரம்பகெண்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் நீர்ப்பாசன காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

ரம்பகன் ஓயா வலயமானது அம்பாறை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களைக் கொண்டது. மகா ஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதியானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திற்கு உரியது ஆகும். மகா ஓயா பிரதேச செயலாளர் தொகுதியானது கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் 17 ஐ உள்ளடக்கி உள்ளதுடன், பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதியானது 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளன. ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் தொகுதியானது ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு உரியது ஆகும். ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் தொகுதியானது கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 42 ஐ உள்ளடக்கி உள்ளது. 2021 ஆம் ஆண்டாகும் போது வலயத்தின் மொத்த சனத்தொகை 110,502 ஆக காணப்பட்டதுடன், மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 35,102 ஆகும்.

இலங்கை மகாவலி அதிகார சபையினால் 2010 ஆம் ஆண்டு மகா ஓயா பிரதேசத்தில் வதிவிட வணிக அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பொல்லேபெத்த, பதியதலாவ மற்றும் ரிதிமாலியத்த ஆகிய தொகுதி அலுவலகங்கள் மூன்று ரம்பகன் ஓயா வலயத்தில் செயற்பட்டு வருகின்றன.

ரம்பகன் ஓயா வலயமானது அடுத்த வலயங்களை விட கவனத்தில் கொள்ள வேண்டிய அடையாளங்களைக் கொண்டுள்ளது. அதில் பிரதான அடையாளமாக காணப்படுவது யாதெனில் பொல்லேபெத்த பிரதேசத்தில் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றமையாகும். பேராசிரியர் ஸ்பீடெல் (1940 - 1950) இந்த ஆதிவாசி சமூகம் குறித்து அவருடைய சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார். இப்பிரதேசமானது சத்தாதிஸ்ஸ மன்னனின் யுகத்திற்கு உரியதாகும். ஆகையால் தொல்பொருளியல் சிதைவுகள் பல காணப்படுவதுடன் புராதன விகாரைகளும் அமைந்துள்ளன.

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்)	17.60	15.40	88%
02	கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்)	6.69	6.65	99%
மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**24.29**	**22.06**	**91%**
01	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	15.50	12.00	77%
மொத்த கூட்டுத் தொகை		**39.79**	**34.05**	**86%**



வலவ வலயம்

வலயம் தொடர்பான அறிமுகம்

வலவ ஆற்று வெளியிடையானது 2442 சதுர கி.மீ. ஐக் கொண்டுள்ளதடன் அது இலங்கையில் பலாங்கொடை இரத்னபுரி மலைப் பிரதேசத்தில் இருந்து ஹம்பாந்தோட்டை/ ரன்ன தெற்கு கடற் கரையோரம் வரை பரந்து விரிந்து காணப்படுகின்றது. புராதன குளங்கள் பல நூற்றுக் கணக்கில் வலவ பள்ளத்தாக்கில் அமைந்துள்ளன.

உடவலவ பல்நோக்கு முன்மொழிவுத் திட்டம் 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உடவலவ நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டதும், அதற்கு இணக்கமாக குடியமர்த்தல்கள் மற்றும் விவசாய நிலங்களின் அபிவிருத்தி என்பன 1981 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டது ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் மூலமாகும்.

1979 ஆம் ஆண்டு இலக்கம் 23 ஐ உடைய இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 1981/04/06 ஆம் திகதிக்குரிய இலக்கம் 137 ஐ உடைய வர்த்தமானி பத்திரிகை மூலம் கௌரவ காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமிணி திஸாநாயக்க அவர்களால் வலவ வலயமானது வலவ விசேட அதிகார பிரதேசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 1982.01.01 ஆம் திகதியில் இருந்து வலவ வலயத்தில் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

வலவ வலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்பொழுது 34 வருடங்கள் கடந்துள்ளதுடன், இக்காலத்தினுள் வலயமானது விரைவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இவ்வலயமானது தென் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகிய 03 மாகாணங்களுக்குச் சொந்தமான ஹம்பாந்தோட்டை, இரத்னபுரி மற்றும் மொணராகலை ஆகிய 03 மாவட்டங்களுக்குரியது ஆகும்.

அங்குனுகொளபெலெஸ்ஸ, முரவெசிஹேன, சூரிய வாவி, மயுரபுற, சந்திரிகா வாவி, கிரிஇப்பன் வாவி மற்றும் செவனகல ஆகிய 07 தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன், 39 அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

வலயத்தில் உள்ள நிலப்பரப்புகள் தொடர்பாக தகவல்

- மொத்த நிலப்பரப்பு - ஹெக்டயர் 60,803
- நீர்ப்பாசன இடப்பரப்பு - ஹெக்டயர் 23,203
- பண்படுத்தப்பட்ட இடப்பரப்பு - ஹெக்டயர் 14,064
- புற் தரைகள், குள ஒதுக்குகள், தொல்பொருளியல் பிரதேசங்கள் போன்றவை - ஹெக்டயர் 24,536

தொடர் இலக்கம்	பிரிவு	2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	74.05	73.71	100%
02	இயந்திர வேலைத்தளம்	10.45	10.39	99%
03	காணிப் பிரிவு	18.80	18.56	99%
04	காணி உபயோக திட்டமிடல் பிரிவு	64.00	62.63	98%
05	தாபன அபிவிருத்திப் பிரிவு	27.52	27.17	99%
06	கலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு	0.43	0.43	100%
07	வணிக அபிவிருத்திப் பிரிவு	4.50	4.50	100%
08	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	6.35	6.23	98%
09	நிர்வாகப் பிரிவு	4.80	4.66	97%
10	விவசாயப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	26.27	14.22	54%
11	கால்நடை வளப் பிரிவு (நிறுவன ரீதியான மூலதனம்)	14.10	12.43	88%
மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)		**251.3**	**234.9**	**93%**
01	விவசாயம் (செயற்திட்டம்)	80.00	57.04	71%
02	கால்நடை வளங்கள் (செயற்திட்டம்)	19.20	11.41	59%
கூட்டுத் தொகை		**99.20**	**68.45**	**69%**
மொத்த கூட்டுத் தொகை		**350.50**	**303.32**	**87%**

2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் – வலய அடிப்படையில்

தொடர் இலக்கம்	வலயம்	2021 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மில்.)	2021-12-31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.மில்.)	நிதிசார் முன்னேற்றம் %
1	பி	568.37	521.58	91 %
2	சி	320.28	320.18	99%
3	டி	160.61	149.29	92%
4	ஈ	121.37	120.46	99%
5	ஜீ	202.65	201.02	99%
6	எச்	511.81	501.68	98%
7	ஹுருளு வாவி	175.27	146.88	83%
8	உடவலவ	350.47	303.38	86%
9	ரம்பகன் ஓயா	396.79	344.10	86%
10	எல்	333.18	282.09	84%
	மொத்தம்	**3,140.78**	**2,890.67**	**92%**

பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பிரிவுகள்

1. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
2. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
3. நீரியல் முகாமைத்துவ செயலகம்
4. கொள்முதல் பிரிவு

01. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

வகிபாகங்கள்

- தாபனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளிற்கு அமைய ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விசேட செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பொருளாதார சமூக கணிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- செயற்பாட்டுத் திட்டத்தில் மற்றும் செயற்திட்ட அறிக்கைகளில் உள்ள முன்னேற்றத்தை மாதாந்தம், காலாண்டிற்கு ஒரு முறை மற்றும் வருடாந்தம் மீளாய்வுக்கு உட்படுத்துதல். செயற்திட்ட மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு மற்றும் இயக்க ஒருங்கிணைப்புத் தொகுதி ஒன்றை சான்றுப்படுத்துதல்.
- தொழில்நுட்ப அறிக்கைகள், இயல்வாய்ப்பு அறிக்கை இயக்கல்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பாதுகாத்தல் மற்றும் பயன்பாட்டிற்கு வழங்குதல்.
- மகாவலி கணினி வலையமைப்பை இயக்குதல், தாபரித்தல் மற்றும் உத்தியோகபூர்வ வலைத் தளத்தை நிறுவுதல். இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஆதிக்கத்திற்கு உட்படுகின்ற துறைகள் தொடர்பான ஆயவுகளை ஒருங்கிணைத்தல்.

02. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கைக் குடியரசினால் வெளியிடப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் (Financial Reguations), நிர்வாக பிரமாணம் (Adminstration Regulations), காலத்திற்கு ஏற்ற விதத்தில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் நோக்கங்களை உறுதி செய்து கொள்வதற்காக, பரிசீலனைகள் கண்காணிப்புக்களின் மூலம் உள்ள கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்தி, முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

<u>வகிபாகங்கள்</u>

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் செயற்படுத்தும் போது, நிலவுகின்ற உள்ளக நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு இணங்கியதாக மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்கியதாக அமுல்படுத்தப்படுகின்றதா எனவும், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொருளாதார

ரீதியான பிரதிபலன்கள் (Value for Money) கிடைக்கின்றதா எனவும், கணக்காய்வு உசாவல்களின் கண்காணித்தல்கள் ஒப்பீடுகள், பௌதீக பரிசீலனைகள் என்பன இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் (ICA) மூலம் மற்றும் சர்வதேச கணக்கியல் தர நியமங்கள் (IAS) மூலம் வெளியிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு அமைவாக, கணக்காய்வை மேற்கொண்டு மேலாண்மைக்கு அறிக்கையிடுதல்.

2021 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 28 ஆகும்.
- வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 15 ஆகும்.
- நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் மேலாண்மை ஒன்று கூடல்களின் எண்ணிக்கை
- அமைச்சுக்கள் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
- அதிகார சபைகளின் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
- உள்ளக கணக்காய்வு உசாவல்களுக்காக வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் உசாவல்கள் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை செயற்படுத்துதல், அவற்றின் பின்னரான பின்தொடர்வுகளை மேற்கொள்ளுதல்.
- கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக, முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஆலோசனைகளை வழங்குதல்.

03. நீரியல் முகாமைத்துவ செயலகம்


நீர் முகாமைத்துவ செயலகம் மூலம் வருடாந்த சிறு போகம் மற்றும் பெரும் போகங்களுக்காக இயக்கற் கொள்கைகளை பரிந்துரைத்து மகாவலி தொகுதிக்காக இயக்கற் திட்டங்களை தயாரித்தல் முன்னெடுக்கப்படுவதுடன் இது அடிப்படையாக நீர்ப்பாசன மற்றும் மின்வலுத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதானமாக நெல் மற்றும் மேலதிக பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திக்காக விரிவான பங்களிப்பை வழங்குகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டமாகும்.
இதற்கு அவசியமான தொழில்நுட்ப வல்லுனர்களின் ஆலோசனைகளை வழங்நகுகின்ற அலகாக நீரியல் நிர்வாக செயலகத்தின் மூலம் நீரியல் நிர்வாக குழுவிற்குச் சொந்தமான உறுப்பு நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சகல இயக்கற் திட்டங்களை வாராவாரம் மேற்பார்வையிட்டு அதன் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் வருகின்ற வாரங்களுக்கான நீரியல் இயக்கற் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது முன்னெடுக்கப்படுவதுடன் அதனை விவசாய, மின்சார மற்றும் குடிநீர் தேவைகளை கருத்திற் கொண்டு மொத்தத் தொகுதியிலும் பரிந்துரைக்கப்பட்ட நீர்த் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கின்றது.

2020/21 பெரும் போகம் (2021 ஜனவரி மாதம் 01 – 2021 மார்ச் மாதம் 31)

2020/21 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியின் சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது 2021 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியாகும் போது, கொத்மலை 77.3%, விக்டோரியா 77.0%, மொரகஹகந்த 52.8%, எம், எச் வலயத்திற்குரிய ஹுருளு வாவி 35.0%, பி வலயத்திற்குரிய மாதுறு ஓயா 42.7% மற்றும் வலவ வலயம் 41.1% ஆக காணப்பட்டது.


அதற்கமைய 2020/21 பெரும் போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லை 191,561 ஹெக்டயராக காணப்பட்டதுடன் அது ஒட்டு மொத்தமாக 98% ஆக காணப்பட்டது. அப்பொழுது கிடைக்கப் பெற்றிருந்த பருவ இடை மழை மற்றும் வடகீழ் தொடர் பருவ மழை என்பன எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெறாமையினால் நீரை விநியோகிப்பதை தாமதிக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதற்மைய நீரை விநியோகித்தல், பி,சி, வலவ வலயங்களில் நவம்பர் மாதம் நடுப்பாதி வரையில் தாமதித்து ஆரம்பிக்கவேண்டி ஏற்பட்டது.

இச்சாகுபடியில் மகாவலி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 380.9 கிகா வொட் உம்,, களனி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 313.0 கிகா வொட், மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டது. மின்சார உற்பத்தியானது 2020/21 பெரும் போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் முதலாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



முதலாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2020/21 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் இரண்டாம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




இரண்டாவது வரைபடம்

2021 ஆம் ஆண்டின் சிறு போகம் – (2021 ஏப்ரல் மாதம் 01 – 2021 செப்டம்பர் 30)

2021 ஆம் ஆண்டு சிறு போகத்திற்கான மகாவலி நீர் நிர்வாக குழு ஒன்றுகூடலானது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியின் சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 62.9%, மாதுறு ஓயா 93.2%, கலா வி 56.1%, ஹுரூளு வாவி 71.3% ஆக காணப்பட்டதுடன், பராக்கிரம சமுத்திரத்தின் நீர் மட்டமானது 98.1% உயர்ந்த பட்ச நீர் மட்டத்தை எட்டியிருந்தது.


ஆகையால் ஒட்டு மொத்தமாக பயிர்ச் செய்கையானது சுமார் 96% உயர்ந்த பட்சமாக எதிர்பார்க்கப்பட்டதுடன், பராக்கிரம சமுத்திரம், D01 முறைமை மற்றும் ஏந்திக்காகவும் 100% முன்மொழியப்பட்டது. அதற்கமைய 2021 சிறு போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லையானது 184,419 ஹெக்டயராக இருந்ததுடன் அது அண்ணளவாக மொத்த பயிர்ச் செய்கையில் சுமார் 96% ஆக இருந்தது.

இச் சிறு போகத்தில் மகாவலி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 1567.1 கிகா வொட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. மின்சார உற்பத்தியானது 2021 சிறு போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் மூன்றாது வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.



மூன்றாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2021 சிறு போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் நான்காம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நான்காவது வரைபடம்


2021/22 பெரும் போகம் (2021 ஒக்டோபர் மாதம் 01 – 2021 டிசம்பர் மாதம் 31 வரை)

2021/22 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியில் எதிர்பார்க்கப்பட்ட சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 72.1%, விக்டோரியா 78.9%, வலவ 73.1%, ஹுருளு வாவி 19.3%, மட்டத்தைக் கொண்டிருந்ததுடன் மாதுறு ஓயா 49.5% ஆக காணப்பட்டது.

அப்பொழுது கிடைக்கப் பெற்றிருந்த பருவ இடை மழை மற்றும் வடகீழ் தொடர் பருவ மழை என்பன எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெற்றமையால் நீரை விநியோகிப்பதானது அதற்கமைய H, D02 மற்றும் வலவ வலயங்களில் 2021 நவமபர் மாதம் 01 ஆம் வாரமாகும் போது ஆரம்பிக்க முடியுமானதாக இருந்தது.


அதற்கமைய 2021/22 பெரும் போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லையானது 194,639 ஆக இருந்ததுடன் அது ஒட்டு மொத்தமாக சுமார் 100% ஆக இருந்தது.

இச்சாகுபடியில் மாகவலித் முறைமையில் மணித்தியாலத்திற்கு 1194.1 கிகா வொட் மின்சாரமும், களனி முறைமையில் மணித்தியாலத்திற்கு 767.8 கிகா வொட் மின்சாரமும் தோற்றுவிக்கப்பட்டது. மின் உற்பத்தியானது 2021/22 பெரும் போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் ஐந்தாவது வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளது.



ஐந்தாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2021/22 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் ஆறாம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆறாவது வரைபடம்

04. கொள்முதல் பிரிவு

வகிபாகங்கள்

1. இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை ஒன்று கூடலை நடாத்துவதற்குரிய செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
2. திணைக்கள கொள்முதல் குழு நடாத்துதல் மற்றும் அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
3. இ.ம. அதிகார சபையின் ஒன்றிணைந்த கொள்முதல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவசியமான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
4. பிராந்திய கொள்முதல் குழு, செயற்திட்ட கொள்முதல் குழு மற்றும் சகல தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களையும் நியமித்தல் மற்றும் பின் தொடர்வுகள்.
5. கொள்முதல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அரச வழிகாட்டல்கள், சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவுறுத்துதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
6. உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் நிதிசார் அதிகாரங்களை பன்முகப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் கொள்முதன் செயன்முறைகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மற்றும் தெளிவானதாக பேணிச் செல்லுதல்.
7. இ.ம.அ. பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களுக்கு அவசியமான கொள்முதல்களை முன்னெடுத்தல் மற்றும் இயக்குதல்.
8. இ.ம. அதிகார சபையின் பிரிவுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற விலை/ கேள்விலை மனுக்கள் கோருவதற்கான பகிரங்க விலை/ கேள்விலை மனுக்களைத் திறத்தலை முன்னெடுத்தல் அல்லது இயக்குதல்.
9. பணிப்பாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற விசேட/ அவசர கொள்முதல்கள் அல்லது ஏனைய கடமைசார் பணிகளை நிறைவேற்றுதல்.
10. பணிப்பாளர் நாயகம் அவர்களின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படுகின்ற ஆவணங்கள், கோப்புகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையை பரிசோதித்தல், சீர்செய்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.
11. இ.ம. அதிகார சபையின் ஆண்டறிக்கையை இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரித்தல் மற்றும் அதற்குரிய சகல பணிகளையும் செயற்படுத்துதல்.

இரண்டாவது அத்தியாயம்

2.1 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

வகிபாங்கள் :

- நிறுவனத் திட்டம்/ வருடாந்த திட்டத்திற்கு அமைய புதிய உருப்படியில் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்திகளுடன் கூடிய திட்டங்களைத் தயாரித்தல்.
- தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக வழிகாட்டுதல் மற்றும் இயக்குதல்.
- பிரதான அணைகள் மற்றும் நீர் திசை திருப்பு வழிகள் மற்றும் தாழ் பள்ளத்தாக்குப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத் தொகுதி உட்பட பௌதீக வளங்களை உரிய முறையில் தாபரிப்பத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உகந்த செயற்பாடு ஒன்றைத் தயாரித்தல்.
- நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புக்களின் ஊடாக விவசாய நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக உள்ள நீரின் அளவை உரிய விதத்தில் விநியோகிப்பதற்காக முறையான திட்டங்களைத் தயாரித்தல்.
- செயற்திட்ட திட்டமிடல், இயலுமையை மதிப்பிடுதல், இயக்குதல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்விற்கு உட்படுத்துதல்.

அடிப்படையாக மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் இப்பிரிவின் மூலம் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டம் - பி வலயம்
- ரிதிமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்
- ரம்பகன் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம்.
- வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்.
- சூரிய மின் சக்தியை கரைக் காணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நிறுவுதல்.
- சிறு மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்காக வழிகாட்டுதல்.

மகாவலி வலயங்களின் வருடாந்த அனுமதிப் பத்திரங்கள், கொடைப் பத்திரங்கள், விடுப்புக் கொடைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள காணிகளைத் தெளிவாக இனங்காண்பதற்காக அமுல்படுத்தப்பட்ட வரைபடங்களை நிறமூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறமூட்டப்பட்ட வரைபடங்களை எண்ம மயப்படுத்துதல். (வலவ வலயம்)




ஹம்பாந்தோட்டை பொருளாதார வலயத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி போட்டித் தன்மைகளைக் கருத்திற் கொண்டு மயுரபுற தொகுதி முகாமைத்துவ அதிகார பிரதேசத்தில் மகாவலி அதிகார சபையின் மூலம் அபிவிருத்திப் பணிகளுக்காக பிரிந்து காணப்படுகின்ற




இதுவரையில் அபிவிருத்திக்காக கட்டமைப்பு ரீதியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இல்லாத பூமி பிரதேசங்களுக்காக பிரதான வலயங்கள் 04 இன் கீழ் உத்திகளைக் கொண்ட அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.


1. வல்சபுகல புற் தரையை அண்டிய அபிவிருத்தி வலயம்
2. விவசாய ரீதியான அபிவிருத்தி வலயம்
3. சூரிய மின்சக்தி அபிவிருத்தி வலயம்
4. கைத்தொழில் அபிவிருத்தி வலயம்

களத்தைப் பரிசீலிப்பதன் மூலம் மற்றும் எதிர்கால அபிவிருத்திப் போட்டித் தன்மைகளை இனங்கண்டு மகாவலி எல் வலயத்தின் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக முன்மொழிய முடியுமான காணிகளை இனங் காணுதல் மற்றும் பொருத்தமான முதலீட்டுச் செயற்திட்டங்களை முன்மொழிதல்.




மொரகஹகந்த சேதன வலயத்தில் காணி உபயோக அமைப்பொழுங்கின் கீழ் சேதன முன்மாதிரி பயிர்ச் செய்கையின் முன்னேற்றத்தை முன்வைப்பதற்காக ஒவ்வொரு வலயங்களினதும் வரைபடத்தை எண்ம பிரதிகளாக மாற்றுதல்.







மகாவலி உத்தியோகபூர்வ நிலத்தை சிறந்த முறையில் மற்றும் விளைத்திறன் மிக்கதாக பயன்படுத்தும் நோக்கில் வலவ வலயத்தில் முகாம் நிலங்களை களப் பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் இனங்காணுதல் மற்றும் வரைபடமாக்குதல்.


களப் பரிசீலனையை மேற்கொள்ளுதல், தரப்பினர்களின் ஒன்று கூடல்கள் மூலம் நகரத்தில் அபிவிருத்திப் போட்டித் தன்மைகளை இனங்கண்டு வலவ வலயத்தில் மொரகெடிய நகர அபிவிருத்தி திட்டத்தைத் தயாரித்தல்.










பிரதான அலுவலகத்தில் மற்றும் வலய அலுவலகத்தின் தேவைகளின் அடிப்படையில் வரைபடங்களைத் தயாரித்தல்.









மகாவலி வலயத்தில் உகப்பான காணிப் பயன்பாட்டிற்காக வழிகாட்டுதல் மற்றும் ஒழுங்கற்ற காணிப் பயன்பாடுகளை முறைப்படுத்தும் நோக்குடன் மகாவலி வலயங்களில் வசிக்கின்ற குடியேற்றவாசிகளின் கோரிக்கைகளுக்கு அமைய, பண்படுத்தப்பட்ட, நீர்ப்பாசன, வதிவிட மற்றும் ஏனையபொதுத் தேவைகளுக்கு விவசாய நிலங்கள் மற்றும் வதிவிடப் பயன்பாட்டிற்கு அவசியமான காணிகளை திட்டங்களுக்கு அமைய ஒழுங்குமுறைப்படி உபபிரிவுகளைத் தயாரித்து சட்ட ரீதியாக்குவதற்காக 2021 ஆம் ஆண்டில் 794 இடங்களுக்காக பௌதீக திட்டப் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மகாவலி அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற பெற்றோலிய வளங்களை நிறைபெறு விதமாக பிரித்தெடுப்பதற்காக காணிப் பயன்பாட்டை முறைப்படுத்துவதன் மூலம் குடியேற்றவாசிகளின் பொருளாதார மற்றும் சமூக மட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் பெற்றோலிய பிரித்தெடுப்புச் செயற்திட்டங்கள் 541 இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் சுமார் 328.83 மில்லியன் ரூபாய் காணி உபயோக கட்டணம் அறவிடப்பட்டுள்ளது.

2.6வன மற்றும் சுற்றாடல் பிரிவு

அறிமுகம்

இலங்கைக்கு சமூக பொருளாதார பிரதிபலன்கள் பலவற்றை பெற்றுக் கொடுத்து செயற்படுத்தப்பட்டதுடன் அதனை துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எட்டுவதற்காக அதனை நிலைபெறுதகு சுற்றாடல் பாதுகாப்பு ஒழுங்குமுறையின் கீழ் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அடிப்படைத் திட்டங்கள் தீட்டப்பட்டதுடன் அதன் மூலம் முன்மொழியப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் சகல கட்டங்களிலும் இடம்பெற முடியுமான சூழலியல் தாக்கங்கள் மற்றும் மாற்றங்களை இயன்றளவு குறைந்த மட்டத்தில் பேணுவது பிரதான நோக்கதாகும்.

அதற்கமைய விவசாய குடியேற்றமாக அபிவிருத்தி செய்யப்பட்ட கீழ் மகாவலி பள்ளத்தாக்கு வலயத்தைப் போலவே மேல் நீரேந்து பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துவதற்காக அதன் இயற்கை வளங்களை சிறந்த முறையில் திட்டமிடுதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பன சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை வகிபாகம் ஆகும்.

நோக்கம் :-

நிலைபெறுதகு அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மகாவலி கங்கை வடிநிலத்தை ஆரோக்கியமாக மற்றும் வலுவான முறையில் பராமறித்தல்.
(Healthy Mahaweli River Basin for Sustainable Development)

குறிக்கோள்

- ஒட்டு மொத்த மகாவலி அபிவிருத்தி பணிகளின் மூலம் சூழல் பாதுகாக்கும் விதமாக அமுல்படுத்துவதற்காக அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்துதல்.
- வருடம் பூராகவும் தொடர்ச்சியான நீர்த்தாரையை போதுமான விதத்தில் மற்றும் தரம் வாய்ந்ததாக பேணுவதற்காக உயர் மகாவலி நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல்.
- மகாவலி நீர்க் கூறுகள் மற்றும் கீழ் மகாவலி பிரதேசங்களில் இயற்கைச் சூழல் தொகுதியை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மகாவலி பிரதேசங்களில் மரபுரிமை மிக்க தாவரங்கள் மற்றும் கால்நடை இனங்கள் மற்றும் உயிரியலுக்குரிய சுற்றாடல் தொகுதியைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மகாவலி அபிவிருத்திப் பணிகள் காரணமாக அகற்றப்பட்ட காடு வளர்ப்புப் பிரதேசங்களுக்குப் பதிலாக புதிய வளர்ப்புகளை மீள உருவாக்குதல்.

பிரதான பணிகள்

1. உயர் மகாவலி நீரேந்து பிரதேசத்தைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கான பணிகள்
2. மகாவலி தாழ் பள்ளத்தாக்கு மற்றும் ஏனைய மகாவலி வலயங்களில் முன்னெடுக்கப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட்டங்களின் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.
3. மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பாரிய அளவிலான செயற்திட்டங்களில் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் சுற்றாடல் அங்கீகாரத்தின்

நிபந்தனைகளை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் பின் தொடர்தல்கள், அமைச்சு மற்றும் மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களின் தொழில்நுட்ப குழு, இயக்கற் குழு மற்றும் பின்தொடர்வுக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

4. தேசிய சூழலியல் சட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனம் என்ற ரீதியில் சூழலியல் தாக்கங்களை மதிப்பிடும் செயற்பாடுகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பின் தொடர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
5. நேரியல் அரச நிறுவனங்களால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களில் தொழில்நுட்ப குழுவை பிரதிநிதித்துவப்படுத்துதல், தேசிய ரீதியாக அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சூழலியல் செயற்பாடுகள் தொடர்பான ஒன்று கூடல்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்துதல் மற்றும் உள்ளக குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

2021 ஒட்டு மொத்த நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல் மற்றும் முன்னேற்றம்.

இலக்கம்	பிரிவு/ வலயம்	நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல் (ரூ. மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	சதவீதம்
01	சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு – கொத்மலை	35.50	25.78	73%
02	மகாவலி வலயங்கள் -பி, சி, டி, ஈ, ஜீ, எச், வலவ, ஹுருலுவெவ,, ரம்பகெண் ஓயா	34.26	32.84	96%
03	ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் (ரம்பகண் ஓயா)	1.55	1.55	100%
04	ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் (ரிதிமாலியத்த)	0.76	0.70	92%
கூட்டுத் தொகை		**72.07**	**60.87**	**85%**

ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம்

2021 பௌதீக முன்னேற்றம் :

தொ.இ.	திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்	அலகு	வருடாந்த இலக்கு		முன்னேற்றம்		முன்னேற்ற சாராம்சம்
			நிதிசார்/ ரூ.மி.	பௌதீக	நிதிசார்/ ரூ.மி.	பௌதீக	
1.	நீர்வாழ் தாவரங்கள் பரவிக் காணப்படுகின்ற குளங்களை சுத்தம் செய்வதன் மூலம் கெம்போஸ்ட் உரம் தயாரித்தல்	மெ. தொன்	1.305	160	1.2690	148.5	பி (மெ. தொன் 120), சி (மெ. தொன் 10), ஜீ, வலவ, எச் வலயங்களில் (மெ. தொன் 1 வீதம்) மற்றும் கொத்மலை (மெ. தொன் 8.5) உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.
2.	பசுமையான வீதிகள் கருத்திட்டத்தை அமுல்படுத்துதல்	கி.மீ.	1.75	14	0.833	9	டி (4 கி.மீ.), ஈ (1 கி.மீ.), வலவ (1 கி.மீ.), ஹுருளு வாவி (3 கி.மீ.) ஆகிய வலயங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தி புதிதாக மரக் கன்றுகளை நடுதல் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
3.	மரக் கன்றுகள் உற்பத்தி (மகாவலி நாற்று மேடைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் மூலம்)	மரக் கன்றுகள்	13.14	819,284	14.144	508,124	மகாவலி நாற்று மேடைகள் 07 இன் உற்பத்திக்கு பணம் செலவு செய்துள்ளதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட மரக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
4.	மேல் நீரேந்துகள் மற்றும் தாழ் பள்ளத்தாக்கு பிரதேசங்களை அண்டிய மரம் நடுகைகள்	மரக் கன்றுகள்	6.99	431,450	5.69	390,720	உலக நீர் தினம், காடுகள் தினம் மற்றும் புதிதாக புது வருட சுப முகூர்த்தத்தையிட்டு பி. சி. ஈ. ஜீ. எச், வலவ, ஹுருளுவாவி வலயங்களில் மற்றும் மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
5.	பசுமையான பூங்காக்களை உருவாக்குதல்	பூங்காக்கள்	1.18	5	1.223	3	ஹுருளு வாவி, டி, உடவலவ வலயங்களில் பூங்காக்களை அமைப்பதற்குரிய அடிப்படைப்

							பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
6.	சுற்றாடல் கல்வி மற்றும் மேம்பாடு	நிகழ்ச்சித் திட்டங்கள்	1.29	80	1.29	75	ஈ, மொரகஹகந்த, வலவ, ரம்பகன் ஓயா வலயங்களில் மற்றும் மேல் மகாவலி பிரதேசங்களுக்காக நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளதுடன், சுற்றாடல் பிரிவின் மூலம் மக்களுக்கு விளிப்புணர்வூட்டுவதற்காக மகாவலியும் சுற்றாடலும் எனும் பெயரில் வானொலி நிகழ்ச்சி ஒன்றை நடாத்திச் செல்லப்பட்டு உள்ளது.
7.	மின் யானை வேலிகளை தாபரித்தல்	கி.மீ.	3.455	திறந்த	3.1407	116	மெதிரிகிரிய (36 கி.மீ.) ரம்பகன்ஓயா (10 கி.மீ.) மொரகஹகந்த (70 கி.மீ.), பி (255 கி.மீ.) வலயங்களில் மின் வேலிகளின் தாபரிப்பு மற்றும் யானை - மனித மோதல்களை இயன்றளவு குறைப்பதற்குரிய மின்கலம், சக்தியாக்கி, யானை வெடிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. சி வலயத்தில் விவசாய பயிற்சி மத்திய நிலையங்களைச் சுற்றி நிர்மாணிக்கப்படுகிற 08 கி.மீ. நீளமான மின் வேலிகளுக்கு 04 கி.மீ. அளவான நிலத்தைத் தயாரித்தல் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள்
சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு – கொத்மலை

சுமார் 3118 சதுர கி.மீ. உடைய இலங்கையின் மத்திய ஈர வலயத்திற்குச் சொந்தமான மேல் மகாவலி நீரேந்து பிரசேமானது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற நீர்ப்பாசன மற்றும் நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்களுக்கு நீரை விநியோகிக்கின்ற பிரதானமான வழியாகும். அதன் மூலம் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படை நோக்கத்திற்கு மேலதிகமாக நாட்டின் சக்தி வலுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக நீர் மின் உற்பத்திக்கும் பங்களிப்பு வழங்குகின்றது. மகாவலி திட்டத்தின் தொடக்க சந்தர்ப்பத்தில் 50% ஐ அண்மித்துக் காணப்பட்ட இந்நீர் மின் உற்பத்தி ஆற்றலானது நாட்டின் சக்தி வலுத் தேவையின் அடிப்படையில் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் ஏனைய தேசிய தேவைப்பாடுகளுக்காக இவ்வாறு சேகரிக்கப்பட்டு நீரைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் மின் உற்பத்திக்கு பங்களிப்பு வழங்கும் அளவானது குறைந்தாலும், தற்போதும் மகாவலி நீர்த்தேக்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற நீர் மின் உற்பத்தி அளவின் மூலம் நாட்டினுள் தேசிய சக்தி வலுத் தேவைப்பாடுகளுக்காக பாரிய பங்களிப்பை

வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக குடிநீர் தேவைகள் மற்றும் விவசாயத்திற்கு அவசியமான நீர்த் தேவைக்கான பங்களிப்பானது அதில் கூடிய பங்கைப் பெறுகின்றது. விசேடமாக மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் நீண்ட கால பெறுபேறுகளை இலங்கைக்கு பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருக்கும்.

தாழ் பள்ளத்தாக்கில் தற்பொழுது வசித்து வருகின்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மேல் மகாவலி பிரதான நீர் தேக்கங்களில் நீரை விநியோகிக்கும் ஆற்றலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஆகையால் மகாவலி கங்கையின் மேல் மகாவலி நீரேந்து பிரதேசமானது மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் இதய பூமியாகும். மேல் மகாவலி நீரேந்து முகாமைத்துவத்தின் மூலம் இந்த இதய பூமியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும். மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதைப் போலவே மகாவலி வலயங்களில் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல் மற்றும் அதன் சுற்றாடல் தொகுதிகளின் சமநிலையைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்பு வழங்கப்படுவதுடன் அப்பிரதேசங்களில் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேல் நீரேந்துப் பாதுகாப்புச் செயற்பாடுகள்.

- நிலைபெறுதகு சுற்றாடல் செயன்முறைகளின் ஊடாக மேல் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் மண் அரிப்பை இயன்றளவு குறைப்பதன் மூலம் நீர்ப்பாசன மற்றும் நீர் மின் உற்பத்தியின் நிலைபெறு தன்மையை உறுதி செய்தல். விசேடமாக விவசாய நிலங்களில் உயிரியல் மற்றும் இயந்திரவியல் மண் பாதுகாப்பு மற்றும் நீர் மலையிடுக்குகளை பாதுகாத்தல்.
- பல்வேறு காடு வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
- விவசாய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- உயிரியல் பல்வகைமையைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- மரக் கன்று நாற்று மேடைகள் மூலம் மரக் கன்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் உள்நாட்டு மரக் கன்றுத் தேவைகளுக்காக வழங்குதல்.
- மரக் கன்றுகளின் உற்பத்திக்காக பாடசாலை மாணவர்களை தொடர்புபடுத்துவதற்காக மகாவலி மரங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் விவசாயிகளைத் தொடர்புபடுத்தி மரக் கன்றுகளை உற்பத்தி செய்தல். (பசுமை தொழில் வாய்ப்பு)
- இழைய வளர்ப்பு தொழில்நுட்பத்தின் மூலம் நீர்த்தேக்க ஒதுக்குகளை பாதுகாப்பதற்காக மூங்கில் மரங்களை உற்பத்தி செய்தல் மற்றும் வளர்ப்பிற்காக வழங்குதல்.
- சூழலியல் பாதுகாப்புப் பணிகள் தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்காக சூழலியல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- மகாவலி சுத்தமான கங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,
    a. நீரியல் விஞ்ஞான தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல். அத்தரவுகளை அபிவிருத்திப் பணிகளுக்காக உகந்த முறையில் பயன்படுத்துதல்.
    b. நீரேந்து பிரதேசத்தில் நீரின் தரத்தை ஆய்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
    c. மேல் மகாவலி நீரேந்தில் மற்றும் மகாவலி வலயங்களில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அந்நிறுவனங்களை நீரேந்துப் பாதுகாப்புப் பணிகளுக்கு இணைத்துக் கொள்ளுதல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
    d. ஆற்றங் கரைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்ளை அமுல்படுத்துதல்.
    e. நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களில் பரவிக் காணப்படுகின்ற ஆக்கிரமிப்பு மிக்க கால்நடைகள் மற்றும் தாவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

f. அடர் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீரை மகாவலி கங்கைக்கு ஒன்று சேர்ப்பதை இயன்றளவு குறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மகாவலி வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்.

மகாவலி துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயன்முறைகள் காரணமாக ஆதிக்கத்திற்கு உள்ளான இயற்கை சூழல் தொகுதிகளைப் பாதுகாப்பதை விசேடமாக அவ்வலயங்களில் அதிகரித்து வருகின்ற சனத்தொகை காரணமாக முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் காரணமாக சூழலியல் மற்றும் சமூக ரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்றளவு குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதானது சுற்றாடல் பிரிவின் வழிகாட்டவின் கீழ் முன்னெடுக்கப்படும்.
அதன் கீழ் அடிப்படையாக பின்வரும் சுற்றாடல் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது.

I. காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அவசியமான மரக்கன்று நாற்றுமேடைகளை ஆரம்பித்தல், தாபரித்தல்.
II. நுண் நீரேந்து பிரதேசங்கள், நீர்த்தேக்க ஓதுக்குகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மரம் நடும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
III. மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
IV. நீரின் தரத்தைப் பேணுவதற்காக நீரின் தன்மையைப் பரிசீலித்தல் மற்றும் அடிப்படை தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.
V. தாழ் பள்ளத்தாக்கு அதிகார பிரதேசத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக களப் பரிசோதனையை மேற்கொள்ளல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.
VI. காட்டு மரக்கன்றுகள், பழக் கன்றுகள், மூலிகைத் தாவரங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் அதன் மூலம் நாட்டில் வன மூடுதலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
VII. மகாவலி அதிகார பிரதேசத்தில் உயிரியல் பல்வகைமைப் பாதுகாத்தல் மற்றும் உயிரியல் உற்பத்தியை நிலைகுன்றச் செய்யக் கூடிய ஆக்கிரமிப்பு மிக்க உயிரினங்களை பரவலைக் கட்டுப்படுத்துதல்.
VIII. மகாவலி கங்கை மற்றும் ஏனைய ஆற்றங் கரைகளை அண்டிய பகுதிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள்.
IX. மனிதர்கள் மற்றும் ஜீவராசிகளுக்கு இடையிலான மோதல்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக வன ஜீவராசிகளுடன் ஒன்றியவாழ்வின் இருப்பை உறுதி செய்தல். யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களை இயன்றளவு குறைப்பதற்காக மின் வேலிகளை நிர்மாணித்தல், உயிர் வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் தாபரித்தல்.
X. சுற்றாடல் தோழமை மிக்க மேம்பாடு மற்றும் பசுமைத் தொழில் மேம்பாடு.
XI. சுற்றாடல் தோழமை மிக்க வாழ்க்கைக் கோலத்திற்கு மக்களைப் பழக்கப்படுத்துதல் மற்றும் பசுமையான நகரங்கள் மற்றும் பசுமையான கிராமங்களை மகாவலி கிராமங்களில் மேம்படுத்துதல்.

மூன்றாவது அத்தியாயம்

3.0 அபிவிருத்திப் பிரிவு

3.1 காணிப் பிரிவு

அறிமுகம்

மட்டுப்படுத்தப்பட்ட வளமான காணி நல முகாமைத்துவ ஒழுங்களுகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசத்தினுள் வசிக்கின்ற நலன் பெறும் மக்களின் காணி உரிமையை உறுதி செய்வதன் ஊடாக அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல்.

3.1.1 காணிப் பிரிவின் வகிபாகம்

01. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.


மகாவலி விசேட அதிகார பிரதேசங்களில் அமைந்துள்ள அரச காணி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன காணிப் பிரிவின் பிரதான வகிபாகம் ஆகும். காணிகள் இல்லாத நபர்களுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வசிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் காணிகளை பிரித்து வழங்குதல், அதற்குரிய பிந்திய நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படும்.

02. அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.

வர்த்தக முதலீட்டுச் செயற்திட்டங்கள், வீடுகள், அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தளங்கள் ஆகியவற்றிற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணிகளை கையுதிர்ப்பதைப் போன்றே குத்தகை வருமானத்தைச் சேகரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிந்திய நடவடிக்கைகளானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்து இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிசார் முன்னேற்றம் - 2021


வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	19.90	19.82
சி	20.00	20.00
டி	19.50	19.36
எச்	26.10	26.10
எல்	15.00	14.31
விக்டோரியா	20.07	20.07
ஹுருளுவெவ	10.00	9.18
மொரகஹகந்த	15.80	15.80
வலவ	18.80	18.56
ரம்பகெண் ஓயா	39.98	51.41
பிரதான அலுவலகம்	10.00	0.72
கூட்டுத் தொகை	**215.55**	**215.33**



கொடைப்பத்திரங்களை வழங்குதல்

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் – 2021

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	13,000	7,026
சி	13,000	5,184
டி	1,500	1,010
எச்	11,500	6,058
எல்	9,000	3,150
விக்டோரியா	1,200	230
ஹுருளுவெவ	2,300	1,043
மொரகஹகந்த	3,000	2,387
வலவ	43,000	8,431
ரம்பகெண் ஓயா	2,500	1,018
கூட்டுத் தொகை	**100,000**	**35,537**



காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடுப்பனவுப் பத்திரம்/ குத்தகை வழங்குதல்

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	19	16
சி	370	16
டி	-	05
எச்	-	122
எல்	-	01
விக்டோரியா	-	-
ஹுருளுவெவ	-	01
மொரகஹகந்த	140	16
வலவ	-	69
ரம்பகெண் ஓயா	-	-
கூட்டுத் தொகை	**529**	**246**

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விகாரைகளுக்கு கொடுப்பனவுப் பத்திரம் வழங்குதல் – 2021

வலயம்	**இலக்கு**	**முன்னேற்றம்**
பி	-	06
சி	28	01
டி	04	-
எச்	-	01
எல்	-	-
விக்டோரியா	--	--
ஹுருளுவெவ	-	-
மொரகஹகந்த	06	02
வலவ	-	03
ரம்பகெண் ஓயா	-	-
கூட்டுத் தொகை	**38**	**13**

அரச நிறுவனங்களுக்காக காணிகளை வழங்குதல் – 2021

வலயம்	**கையளிப்புக் கட்டளை**		**காணிகளைக் கையளித்தல்**	
	இலக்கு	**முன்னேற்றம்**	**இலக்கு**	**முன்னேற்றம்**
பி	-	-	-	-
சி	81	03	71	01
டி	05			
எச்	-	10	-	-
எல்	-	01	-	-
விக்டோரியா	--	--	--	--
ஹுருளுவெவ	-	01	-	-
மொரகஹகந்த	15	02	-	-
வலவ	-	-	-	10
ரம்பகெண் ஓயா	-	23	-	-
கூட்டுத் தொகை	**101**	**40**	**71**	**11**

3.2 விவசாய அபிவிருத்திப் பிரிவு

வகிபாகம்

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி வலயங்களில் வசிக்கின்ற விவசாயிகளின் பொருளாதாரத்தை விளைத்திறன் மிக்கதாக மேம்படுத்துவதற்காக சுற்றாடல் தோழமை மிக்க விவசாய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பழக்கப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.
- உணவு உற்பத்திக்கான தேசிய இலக்கு அமைய மகாவலி நீர்ப்பாசன மற்றும் நீர்ப்பாசனம் அல்லாத காணிகளில் பயிர்ச் செய்கை, கால்நடை உற்பத்தி மற்றும் விவசாய வணிகத்தை உருவாக்குவதற்காக வருடாந்த இலக்குகளைத் தயாரித்துக் கொள்ளுதல்.
- வருடாந்த பயிர் உற்பத்தி இலக்கை அணிமித்துக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த ஏற்பாடுகளுக்கு இணங்க பரம்பிய இலக்குகள் மற்றும் உத்தித் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை வலய மட்டத்தில் ஏற்பாடு செய்தல், செயற்படுத்துதல், பின் தொடர்வை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

2021 ஆண்டின் பாதீட்டின் மூலம் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதிசார் ஏற்பாடுகளை வழங்குதல்.

2021 ஆம் ஆண்டிற்காக விவசாய உற்பத்தி விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் 821.22 மில்லியன் ரூபாய் நிதி ஏற்பாடு அங்கீகரிப்பட்டதுடன், அவை பின்வரும் விதமாக மகாவலி வலயங்களுக்காக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டன.

வலயம்	**ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி.**
பி	84.5
சி	82
டி	25.196
ஈ	10
ஜீ	76.434
எச்	170
ஹுருளு வாவி	72
எல்	67
ரம்பகன் ஓயா	99.14
உடவலவ	106.152
பிரதான அலுவலகம்	28.802
கூட்டுத் தொகை	**821.224**

2021 விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மானியங்களை ஒதுக்குதல்.

மேற்குறிப்பிட்ட விதமாக விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட மானியங்களை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களுக்கு அமைய செலவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டில் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைய பின்வரும் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

செயற்பாடுகள்	**இலக்கு ரூ.மி.**	**முன்னேற்றம் (ரூ.மி.)**
இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிர்களை பயிரிடுதல் (நெற் பயிரைத் தவிர ஏனைய இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிர்கள்)	44.110	40.2
முன்மாதிரி வீட்டுத் தோட்டங்களைத் தெரிவு செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த வீட்டுத் தோட்டத்தை தெரிவு செய்தல்	76.49	75.5
வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விவசாய கிணறுகளை அமைத்தல்	63.000	47.25
வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விவசாய கிணறுகளை மேம்படுத்துதல்	28.325	14.5
வலய மட்டத்தில் சூரிய சக்தி, நுண் நீர் வழங்கல் முறைமையை நிறுவுதல்	24.625	30.5
வலய ரீதியாக ½ ஏக்கர் நுண் நீர் வழங்கல் முறைமையை நிறுவுதல்	37.250	26.08
வலய ரீதியில் பாதுகாப்பு இல்லங்களை நிறுவுதல்	51.555	40.75
சிறந்த வித்துக்களின் உற்பத்திக்காக நெல் மற்றும் மேலதிக பயிர் வித்துக்களை வழங்குதல்	38.321	34.42
முன்மாதிரி வயல் வெளி நிகழ்ச்சித் திட்டம்	33.299	32.4
விவசாய/ உத்தியோகத்தர்கள் பயிற்சி மற்றும் விவசாய பரம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள்	24.075	24.64
பண்ணை/ நாற்று மேடைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	204.854	146.76
ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்பாடுகள்	195.32	191
கூட்டுத் தொகை	**821.224**	**704**

2020 ஆம் ஆண்டின் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அமுல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு அமைய முழுமையான முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

செயற்பாடுகள்	அலகு	இலக்கு	முன்னேற்றம்
முன்மாதிரி வீட்டுத் தோட்டங்களைத் தெரிவு செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த வீட்டுத் தோட்டத்தை தெரிவு செய்தல்	வீட்டுத் தோட்டம்	214,970	201,154
வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விவசாய கிணறுகளை அமைத்தல்	கிணறுகள்	372	315
வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விவசாய கிணறுகளை மேம்படுத்துதல்	கிணறுகள்	1,714	857
வலய மட்டத்தில் சூரிய சக்தி, நுண் நீர் வழங்கல் முறைமையை நிறுவுதல்	முறைமை	122	122
வலய ரீதியாக ½ ஏக்கர் நுண் நீர் வழங்கல் முறைமையை நிறுவுதல்	முறைமை	874	504
வலய ரீதியில் பாதுகாப்பு இல்லங்களை நிறுவுதல்	இல்லங்கள்	257	210
சிறந்த வித்துக்களின் உற்பத்திக்காக நெல் மற்றும் மேலதிக பயிர் வித்துக்களை வழங்குதல்	கிலோ கிராம்	161,707	144,070
முன்மாதிரி வயல் வெளி நிகழ்ச்சித் திட்டம்	வயல் வெளிகள்	80	78
விவசாய/ உத்தியோகத்தர்கள் பயிற்சி மற்றும் விவசாய பரம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள்	நிகழ்ச்சித் திட்டங்கள்	1,082	1,223
ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்பாடுகள்	நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்பாடுகள்	1,706	1,671
சேதனப் பசளை உற்பத்தி	மெ. தொன்	355,092	158,060
சீமை அகத்தி நடுகையை விரிவுபடுத்துதல்	மரக் கன்றுகள்	5,000,000	369,025
வீட்டுத் டேட பயிர்ச் செய்கைகளுக்காக வழிகாட்டல்கள் வழங்குதல்	புத்தகங்கள்	214,970	194,049
வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைக்காக வித்துப் பொட்டளிகளை வழங்குதல்	வித்துப் பொட்டளிகள்	214,970	195,164
வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைக்காக நடுகைப் பொருட்களை வழங்குதல்	மரக் கன்றுப் பொட்டளிகள்	107,485	101,618

- 2021/22 பெரும் போகத்தின் போது பசுமை விவசாய கொள்கையின் கீழ் மகாவலி அதிகார பிரதேசங்களின் விவசாயிகளுக்காக கொம்போஸ்ட் உரம் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், விவசாயிகளின் உற்பத்தி இலக்கு 190,488 மெ. தொன் ஆக இருந்ததுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம் 131,094 மெ. தொன் ஆகும். மகாவலி வலயத்தில் ஒட்டு மொத்தமான கொம்போஸ்ட் உற்பத்தி வீதம் 69% ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில் மகாவலி பண்ணைகள் 17 இல் 08 பண்ணைகள் இலாபத்தை ஈன்றுள்ளது.
- மகாவலி வலயத்தில் மூன்றாம் சாகுபடியில் பயிறு விளைச்சல் 6,767 ஹெக்டயரிற்கு முன்னெடுக்கப்பட்டமை விசேட வெற்றியாகும். அதன் மூலம் பயிர்ச் செறிவு 150% ஆல் அதிகரித்தது.

பயிர் உற்பத்தியின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு – 2020/21 பெரும் போகம் மற்றும் 2021 சிறு போகம்.

பயிர்	2020/21 பெரும் போகம்		2021 சிறு போகம்		2021 கூட்டுத் தொகை	
	விதைக்கும் பரவெல்லை (ஹெக்.)	உற்பத்தி (மெ.தொ.)	விதைக்கும் பரவெல்லை (ஹெக்.)	உற்பத்தி (மெ.தொ.)	விதைக்கும் பரவெல்லை (ஹெக்.)	உற்பத்தி (மெ.தொ.)
நெல்	96,026	556,951	86,979	504,480	183,005	1,061,431
சோளம்	6,628	33,141	1,431	7,155	8,059	40,296
மிளகாய்	308	2,775	525	4,728	834	7,503
சோயா	23	53	2,582	5,939	2,605	5,992
பெரிய வெங்காயம்			915	18,294	915	18,294
பயறு	1,257	1,886	6767	10150	8024	12.036
கவ்பி	213	277	623	810	837	1,088
நிலக்கடலை	416	1,041	591	1,478	1,008	2,519
உழுந்து	278	416	2034	3052	2,229	3,343
குரக்கன்	347	834	226	543	574	1,377
எள்ளு	95	81	788	670	883	750
கிழங்கு வகை	898	13,463	1,104	16,560	2,002	30,023
மரக்கறி	3,688	55,323	4,484	67,255	8,172	122,579
பழங்கள்			12,882	193,234	12,882	193,234

தேசிய உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கை மகாவலி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட விவசாய விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்புச் செலுத்தி அல்லது பொருளாதாரத்தை வளமாக்குதல் மற்றும் உற்பத்தி விளைத்திறனை அதிகரித்தல் என்பன மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு உள்ளது.

நெற் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம்





மேலதிக பயிர்களின் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம்






விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டுதல்





மகாவலி பண்ணைகளில் வித்து மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி





3.3 மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

அறிமுகம்

விவசாயத்திற்கு மேலதிகமாக, மகாவலி குடியேற்றவாசிகளின் வருமானத்தை மேம்படுத்தும் மாற்று வழியாக மீன்பிடி மற்றும் கால்நடை வளத் துறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அவ்வாறே, பாற்பசு வளர்ப்பானது வீட்டுப் பொருளாதாரத்தில் பாரிய வகிபாகத்தை நிறைவேற்றுகின்றமையால் கால்நடை வளத் துறையில் அதிக முன்னுரிமையைப் பெறுகின்றது. மேலும், போசணையின் முக்கியத்துவம், கிராமிய மக்களின் போசணைத் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை கருத்திற் கொள்ளும் போது பால் மற்றும் துணை உற்பத்திகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அவ்வாறே, சீரற்ற காலநிலையின் காரணமாக பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து மற்றும் பயிர் உற்பத்திக்கு நிகரான அதிக உற்பத்திச் செலவை ஏற்க வேண்டி ஏற்படுதல் போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளும் போது கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மிகவும் உகந்த மாற்று வருமான மூலமாக நன்னீர் மீன்பிடி மற்றும் பால் எனும் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட முடியும் என்பதுடன் தற்பொழுது மகாவலி விவசாயிகளுக்கு மத்தியில் இத்துறையானது பரந்தளவில் விரிவடைந்து காணப்படுகின்றது.

மகாவலி அதிகார பிரதேசத்தில் கால்நடை வளம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளுக்காக நிலவுகின்ற இயல்திறன் மற்றும் பொருத்தமுடைமையை கருத்திற் கொள்ளும் போது அங்குள்ள பாற்பசுக்கள், பசுக்கள், ஆடுகள் மற்றும் கோழிகளின் தொகை உள்ளடங்கிய பாரிய கால்நடைத் தொகை காணப்படுகின்றமை, நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உகந்த போதியளவான உள்ளக நீரின் அளவு காணப்படுகின்றமை, துறையில் ஈடுபட்ட பாரிய அளவிலான விவசாயிகள் காணப்படுகின்றமை மற்றும் மகாவலி மற்றும் ஏனைய நேரியல் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து வழங்குகின்ற தொழில்நுட்ப உதவியை அறிமுகப்படுத்த முடியும்.

இந்நிலைமைக்கு மத்தியில், மகாவலி வலயங்களில் கால்நடை வளங்கள் மற்றும் நன்னீர் மீன்பிடி மற்றும் துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உரிய தரப்பினர்களை ஒருமைப்படுத்துதல், அவசியமான தொழில்நுட்ப தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ உதவி வழங்குதல், மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.

நோக்கம்

கால்நடை உற்பத்தி மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் குடும்பங்களின் வருமான மட்டத்தை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்தின் போசணை நிலைமையை மேம்படுத்துதல்.

குறிக்கோள்

கால்நடை உற்பத்தி விளைத்திறன் மற்றும் இலாபப் பெறுகைகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கான நிலைபெறுதகு உற்பத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2021 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்

- வருடாந்த பால் உற்பத்தியை 40 மில்லியன் லீட்டராக அதிகரித்தல் மற்றும் தேசிய பால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பங்களிப்பை அதிகரித்தல். (தேசிய பங்களிப்பு 8%)
- வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தியானது 11,000 மெட்ரிக் தொன் வரை அதிகரிக்கச் செய்தல் மற்றும் தேசிய அண்ணளவான உள்நாட்டு உற்பத்திப் பங்களிப்பை 11% வரை அதிகரித்தல்.

- வருடாந்த முட்டை உற்பத்தியை 60 மில்லியன் வரை அதிகரித்தல்.
- வருடாந்த அலங்கார மீன் உற்பத்தியை 37 மில்லியன் சோடிகள் வரை அதிகரித்தல்.
- அவற்றின் போசணைத் தேவையை நிறைவேற்றுவதுடன் கால்நடை உற்பத்தியின் ஊடாக குடியிருப்பாளர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- வினைத்திறன் மிக்க மற்றும் விளைத்திறன் மிக்க தொழில்நுட்ப பரம்பலை மற்றும் பயன்பாட்டை உறுதி செய்தல்.
- உரிய கால்நடை வைத்திய சேவைகளை வழங்குவதன் ஒருங்கிணைப்பின் மூலம் கால்நடைச் சுகாதார பாதுகாப்பிற்கு உறுதியளித்தல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்தி மேம்பாடடையச் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
- சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் குடியிருப்பாளர்களின் வீட்டு வருமானத்தை அதிகரித்தல்.

மீன்பிடி மற்றும் கால்நடை வள முகாமைத்துவத்தின் செயற்திட்ட செயன்முறைகளானது பிரதான துறைகள் நான்கை உள்ளடக்கியது.

- பால் உற்பத்தி விருத்தி
- கோழி வளர்ப்பு
- நன்னீர் மீன் உற்பத்தி.
- அலங்கார மீன் உற்பத்தி.

1. பாற்பசு விருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

மகாவலி பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள பால் பண்ணைகள் பிரதானமாக 2 – 5 மிருகங்களை உள்ளடக்கிய சிறிய அளவிலான அலகுகளைக் கொண்டதாகும். குடிமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல்களுக்கு அமைய நாட்டின் மிகப் பெரிய மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் தொகையானது உலர் வலயத்திலும், மற்றும் இடைநிலை வலயத்திலும் அறிக்கையிடப்படுகின்றன. ஆகையால், பால் உற்பத்தித் தொழிலை தரமுயர்த்துவதற்காக மகாவலி பிரதேசங்களுக்கு பாரிய அழுத்தம் உள்ளது. வளங்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையின் அடிப்படையாகக் கொண்டு, விவசாயிகள் நுண் மற்றும் அரை நுண் மற்றும் சுயாதீன மாட்டு முகாமைத்துவ முறைகளைப் பின்பற்றுகின்றது. மாடுகளின் தொகைகள் ஜர்சி மற்றும் ஜர்சி – சஹிவால் கலப்புப்பிறப்பை போலவே தேசிய பேதங்களைக் கொண்டுள்ளதுடன், அதிக வீதமானது உள்நாட்டு மற்றும் சஹிவால் எனப்படும் பேதங்களை அதிகளவு காணக்கூடியதாக இருக்கும்.

விவசாயிகள் கால்நடைகளின் உணவுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக புற்கள் மற்றும் செறிந்த ஊண் ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன. பயிர்ச் செய்யப்பட்ட புல்லின வேற்றுமைகளுக்கு CO_3, நெருப்பு மற்றும் பக்டீரியா என்பன உள்ளடங்குகின்றன. பிரதேசங்களின் பசுமையான புல்லினங்கள் மட்டுப்படுத்தப்படும் போது உலர் காலங்களுக்காக பயன்படுத்துகின்ற ஏனைய உணவுப் பாதுகாப்பு முறையாக இருப்பது யாதெனில் உலர் புல்லினம் மற்றும் இரைபேணி உற்பத்தியாகும். மகாவலி பிரதேசத்தில் பால் சேகரிப்பதற்காக பிரதானமாக பங்களிப்பு வழங்குவது மில்கோ, நெஸ்லே, கொத்மலை, பெலவத்த ஆகிய நிறுவனங்களாகும். ஏனையவை குழுக்களாக பால் சேகரிப்பவர்களின் கூட்டுறவுச் சங்கம், ரிச்லயிப், கடுவெல, சிஜசி, செலோ, காகில்ஸ் மற்றும் மகாவலி பண்ணை மற்றும் பிரத்தியேக சேகரிப்பாளர்களும் இச்செயற்பாட்டுடன் தொடர்புபட்டு பால் சேகரிக்கும் வலையமைப்பை பலப்படுத்துகின்றனர்.

தற்பொழுது சிறிய அளவிலான மற்றும் வியாபார நோக்கங்களைக் கொண்ட பால் விவசாயிகள் சுமார் 12,749 பேர் பால் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். 2021 ஆம் ஆண்டு திரவப் பால் உற்பத்தியானது 42 மில்லியன் லீட்டராகும். நாளாந்தம் திரவப் பால் சுமார் 100,000 உறுபத்தி செய்யப்படுவதுடன்

மேற்குறிப்பிட்ட சங்கங்களின் பிரதான நோக்கம் சந்தைப்படுத்தலாகும். இதற்கு மேலதிகமாக சிறு அளவு திரவப் பால் நுகர்விற்காக பயன்பாட்டுத்தப்படுகின்றது. பொதுவாக ஒரு லீட்டர் பாலானது ரூ. 80 ஆக இருப்பதுடன் 2021 ஆம் ஆண்டில் மகாவலி விவசாயிகள் பால் உற்பத்தி மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் 3,360.00 மில்லியன் ரூபாயாகும். பால் வழங்கல் மற்றும் விநியோக வலையமைப்பை பலப்படுத்துவதற்காக பால் சேகரிக்கும் மத்திய நிலையங்கள் 471 காணப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு முடிவில் இருந்து, இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் DAPH (கால்நடை உற்பத்திப் பொருட்கள் மற்றும் சுகாதார திணைக்களம்) என்பன ஒன்றிணைந்து இலங்கை பால் உற்பத்தி சிறப்புப் பயிற்சி முன்னெடுப்புச் செயற்திட்டம் (SLDETIP) அமுல்படுத்தப்பட்டதுடன் இதன் மூலம் பால் விவசாயிகளுக்கு அவசியமான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் இடம்பெற்றது. அதறடகமைய, "ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணை விருத்தி" எனும் எண்ணக்கருவை அடிப்படையாக கொண்டு ஒட்டு மொத்த பால் பண்ணைகளிலும் தொழில்நுட்பம், சூழலியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல பிரிவுகளுக்கும் கவனத்தைச் செலுத்தி அதிக இலாபகரமான, நிலைபெறுதகு பண்ணை விருத்திக்காக விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- **பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான உத்திகள்.**

1. உட்கட்டமைப்பு வசதி விருத்தி, வளங்களை நிலைபெறுதகு விதமாக பயன்படுத்துவதன் மூலம் அரை நுண் மற்றும் நுண் மாட்டு வேளாண்மை முறையை மேம்படுத்துதல்.
2. மேம்படுத்தப்பட்ட கால்நடைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கால்நடை இனவிருத்தியை அதிகரிப்பதன் மூலம் பசு மாடுகளின்/ எருமை மாடுகளின் மரபணு வலிமையை மேம்படுத்துதல்.
3. உரிய போசணைத் திட்டங்கள், உணவுப் பாதுகாப்பு முறைகள், பற் தரைகளை நிறுவுதல் மற்றும் வினைத்திறன் மிக்க மிருக வைத்திய சேவையை வழங்குவதை ஒருங்கிணைப்பதன் மூலம் கால்நடைகளின் போசணையை மேம்படுத்துதல் மற்றும் கால்நடைகளின் தொகையை முகாமைத்துவம் செய்தல்.
4. பால் சங்கங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் பால் சங்கங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பால் உற்பத்தித் தொழிலை இலாபகரமான தொழிலாக அபிவிருத்தி செய்தல்.
5. பால் தயாரிப்பு மற்றும் பின்னரான விளைச்சல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்.
6. கொம்போஸ்ட் உற்பத்தி செய்தல் மற்றும் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் உயிர் வாயு அலகை நிலைபெறுதகு சக்தி வலு ஊற்றாக அறிமுகப்படுத்துதல்.
7. உற்பத்தியில் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் தரவுகளைச் சேகரித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுவதற்காக ஒழுங்கு முறையான அணுகு முறைகளைப் பயன்படுத்துதல்.





AI நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.



பாற்பசுப் போசணை நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தி





பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை விற்பனை செய்தல்.



கால்நடைகளின் போசணைகளுக்காக புற்களைத் துண்டாக்கும் இயந்திரம் வழங்குதல்.





முன்மாதிரி பாற் பசு இனவிருத்தி மத்திய நிலையங்கள் நிறுவுதல்



புற் தரைகள் மற்றும் அசோலா வளர்ப்பு முன்மாதிரி அலகுகளை நிறுவுதல்

2. கோழி வளர்ப்பை மேம்படுத்துதல்.

மகாவலி வலயங்களில் கோழி வளர்ப்பானது வணிக ரீதியான மற்றும் வீட்டை அண்டிய பிரதான பகுதிகள் இரண்டாகும். அதற்கமைய கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அடிப்படையாக வீட்டை அண்டிய கோழி வளர்ப்பு மற்றும் வணிக ரீதியான முட்டை மற்றும் பொயிலர் உற்பத்திகளில் ஈடுபட்டு வருகின்றதுடன் அதன் மூலம் மகாவலி விவசாயக் குடும்பங்களின் போசணைத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றது. அவ்வாறே இத்தொழிலானது கிராமிய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான வருமான தோற்றுவிப்புக் காரணியாகும். அதில் வீட்டை அண்டிய கோழி வளர்ப்பானது பிரதானமாக போசாக் குறைவை இயன்றளவு குறைப்பதற்கும், கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் விசேடமாக வீட்டுப் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் உதவியாக இருக்கும். கிராம

மக்களின் புரதத் தேவையை பூர்த்தி செய்வதுடன் நாட்டிலுள்ள 35% ஆன போசாக் குறைவு நிலைமையை இயன்றளவு குறைப்பதற்காக வீட்டை அண்டிய கோழி வளர்ப்பானது ஒரு தீர்வாகும்.

2021 ஆம் ஆண்டில் மகாவலி அதிகார சபையின் மூலம் 50% மானிய பங்களிப்புடன் நடுத்தர அளவிலான கோழிக் கூண்டுகள் 691 மற்றும் பாரிய அளவிலான கோழிக் கூண்டுகள் 95 உம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பிரதேசத்தில் வீட்டை அண்டிய மற்றும் வணிக ரீதியான கோழி வளர்ப்பு மேம்பாட்டிற்காக பங்களிப்பு வழங்குகின்றது. அச் செயற்திட்டத்தின் மூலம் ஒரு நாள் மற்றும் ஒரு மாத கால வயதுடைய கோழிக் குஞ்சுகள் 119,816 ஆனது 50% பங்களிப்பு பிரித்து வழங்கப்பட்டு உள்ளது.

2021 ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபையின் மூலம் உள்நாட்டு முட்டை உற்பத்திக்கு வழங்கப்பட்ட பங்களிப்பு 62 மில்லியன் முட்டைகளாக இருந்ததுடன், அது தேசிய உற்பத்தியில் 1.3% ஆகும். நாட்டு முட்டை ஒன்றின் வழமையான விலை ரூ. 10.00 ஆகும். அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தியின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை 1122 மில்லியன் ரூபாய் ஆகும்.

கோழி வளர்ப்பை விருத்தி செய்யும் உத்திகள்.

1. கோழிக் கூடுகளை அமைப்பதன் மூலம் இறைச்சி மற்றும் முட்டைக்காக காணப்படுகின்ற கோழி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துதல்.
2. வீட்டை அண்டிய கோழி வளர்ப்பின் மேம்பாட்டிற்காக ஒரு மாதம் மற்றும் ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை பகிர்ந்தளித்தல்.
3. உயர் தரத்தைச் சேர்ந்த கோழிக் குஞ்சுகளை விநியோகிப்பதை உறுதி செய்வதற்காக பெற்றோர் பரம்பரையை தாபரித்தல்.
4. உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உணவு பங்கீடுகளை உற்பத்தி செய்து கால்நடைகளின் போசணைத் தேவையை பூர்த்தி செய்வதன் ஊடாக உற்பத்திகளை வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக மேற்கொள்ளுதல்.



50% பங்களிப்புடன் கோழிக் குஞ்சுகளை வழங்குதல்



வீட்டை அண்டிய கோழி வளர்ப்பு



இராக்கைகளில் கோழிக் குஞ்சு உற்பத்தி



(Brooder) புரூடர் இல் கோழிக் குஞ்சுகள் தாபரிப்பு

5. தடுப்பூசியேற்றல் மற்றும் உரிய துப்புறவேற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்.




50% பங்களிப்புடன் கோழிக் குஞ்சுகளை வழங்குதல்

விவசாய பயிற்சிகளை நடாத்துதல்




முட்டை உற்பத்திக்காக கோழி வளர்ப்பு

3. நன்னீர் மீன் உற்பத்தியைக் கட்டியெழுப்புதல்.

நன்னீர் மீன்பிடித் தொழிலின் இருப்பிற்காக மகாவலி பிரதேசங்களில் பிரதான நீர்த்தேக்கங்கள் 10 உட்பட நடுத்தர மற்றும் சிறிய அளவிலான நீர்த்தேக்கங்கள் 591 பயன்படுத்தப்படுகின்றதுடன் நீர் மூலதாரங்களில் முழுமையான பரம்பல் 49,419 ஹெக்டயர் ஆகும். மீனவ சமூகத்தைச் சேர்ந்த மீனவர்கள் சுமார் 3252 பேர் உள்ளனர். இதன் மூலம், மீன்பிடித் தொழிலை விவசாய குடும்பங்களின் போசணைத் தேவைகள் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பை பூர்த்திசெய்வதற்காக உதவுகின்றது. திலாபியா, கெட்லா மற்றும் மிரிகால் நன்னீர் மீன் உற்பத்தியின் முக்கியமான மீன் வகையாக இருப்பதுடன் அவ்வகைகள் மொத்த உற்பத்திக்கு 90% பங்களிப்பை வழங்கி உள்ளது. இதற்கு மேலதிகமாக ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்ட நன்னீர் இறால் வளர்ப்பு முன்னெடுக்கப்படுகின்றது. நீர்த்தேக்கங்களில் தொடர்ச்சியான மீன் குஞ்சுகளை வைப்புச் செய்வதன் மூலம் மீன்பிடித் தொழிலில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. நீர்த்தேக்கங்களுக்கு அவசியமான மீன் குஞ்சுகளை நீர்த்தேக்கங்களில் உற்பத்தி செய்யும் போது அதற்காக மிதக்கும் வலைக் கூடுகள் நிறுவப்பட்டு உள்ளதுடன், அதன் மூலம் மீன் திரள்கள் குஞ்சுகள் வரை விருத்தி செய்து நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்படுத். இதற்கு மேலதிகமாக அதிகளவான குளங்களில் வலைக் கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளப்படும். இதன் மூலம் உற்பத்திச் செலவினங்களை இயன்றளவு குறைத்து இத்துறை மூலம் கிடைக்கின்ற இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முடிவடையும் போது இச்செயற்திட்டம் மூலம் தெரிவு செய்யப்பட்ட மகாவலி நீர்த்தேக்கங்கள் 181 இல் குஞ்சுகள் 20.39 மில்லியன் வைப்புச் செய்வதற்கு முடியுமானதாக உள்ளது. தற்பொழுது தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) மூலம் குஞ்சுகள் தேவைப்பாடுகள் வழங்கப்பட்டாலும், அவ்வளவானது வருடாந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு

போதியளவானதாக இல்லை. அதற்கு தீர்வாக மகாவலி அதிகார சபையினால் மீன் வித்து உற்பத்தி அலகுகள் 11 ஆனது, பி, டி, எச், எல் மற்றும் உடவலவ வலயங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவ்வாறே, வெளிப் பயிர்ச் செய்கையாளர்களை மேம்படுத்துவதன் மூலம் ஒட்டு மொத்த குஞ்சுகளினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக கால வரையறையுடன் தயாரிக்கப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. 2021 ஆம் ஆண்டில் நன்னீர் மீன் உற்பத்தியானது 11,700 மெட்ரிக் தொன் ஆகும். அது 2020 ஆம் ஆண்டின் உற்பத்தியைப் போன்று 5512 மெட்ரிக் தொன்னுடன் ஒப்பிடும் போது 6188 மெட்ரிக் தொன் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அது சதவீதமாக 12% ஆகும். அவ்வாறே, மகாவலி அதிகார சபையின் மூலம் தேசிய நன்னீர் மீன் உற்பத்திக்கு 8% பங்களிப்பு வழங்கப்பட்டு உள்ளது. ஒரு கிலோ கிராம் மீனின் பெறுமதி ரூ. 350 ஆக கொள்ளும் போது மீன் உற்பத்தி மூலம் பெறப்பட்டுள்ள மொத்த பெறுமதி 4095 மில்லியன் ரூபாய் ஆகும். மேலும், 2021 ஆம் ஆண்டில் நன்னீர் இறால் உற்பத்தி 1956 மெட்ரிக் தொன் ஆக பதிவு செய்யப்பட்டு உள்ளதுடன், இறால் ஒரு கிலோவின் பண்ணை விலையை ரூ. 1500 ஆக கருத்திற் கொள்ளும் போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட

நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்.

1. நீர்த்தேக்கங்களில் குஞ்சுகளை வைப்புச் செய்தல் மற்றும் உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல்.
2. பிரதேசத்தில் மீன் குஞ்சுகளின் தேவைப்பாடுகளை உறுதி செய்வதற்காக மீன் இனவிருத்தி மத்திய நிலையங்கள் 11 ஐ நடாத்திச் செல்லுதல்.
3. மீன்பிடி கருவிகள், வலைகள் மற்றும் படகுகள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்குவன் மூலம் மீன்பிடி சங்கங்களை ஊக்கப்படுத்துதல்.
4. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உற்பத்தி செய்தல் மற்றும் மீன் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
5. மீனவர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த அறிவுகளை வழங்குவதற்காக ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.




பயிர்ச் செய்கை குட்டைகள் மற்றும் மிதக்கும் வலைக் கூடுகளில் மீன் குஞ்சுகள் வளர்ப்புச செய்தல்




நீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை வைப்புச் செய்தல்

4. அலங்கார மீன் உற்பத்தியை மேம்படுத்துதல்.

மகாவலி பி, சி, டி, எச் மற்றும் உடவலவ வலயங்களில் அலங்கார மீன் உற்பத்தி அதிகளவில் காணப்படுவதுடன் நிகழ்காலத்தில் அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 1150 ஆக காணப்படுவதுடன், காணப்பட்ட குட்டைகளின் எண்ணிக்கை சுமார் 2655 ஆகும். குடியேற்றவாசிகளாக காணிகளை உரித்துடைய சமூகத்தின் இரண்டாம், மூன்றாம் தலைமுறைகளின் பிள்ளைகளுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் சிறு இடப் பரப்பில் அதிக வருமானம் ஈட்டக் கூடிய தொழிலாக அலங்கார மீன் வளர்ப்பு பிரசித்தி பெற்று காணப்படுகின்றது. இத்தொழிலில் அலங்கார மீன் வளர்ப்பாளர்கள், குஞ்சுகளை உற்பத்தியில் ஈடுபடுகின்ற இனவிருத்தியாளர்கள், மீன் உற்பத்திகளை சந்தைகளுக்காக சேகரிப்பவர்கள் மற்றும் மொத்த மற்றும் சில்லறை அளவிலான விற்பனையாளர்கள் என்ற அடிப்படையில் பாரிய தொகையினர் வலையமைப்பாக ஒன்றிணைந்த உற்பத்திச் செயன்முறையை இத்துறையில் காணக்கூடியதாக இருக்கும். அவ்வாறே, 900 குடும்பங்களும் அதிகமானோருக்காக தமது வாழ்வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள உதவுகின்ற உற்பத்திப் பிரிவாகவும் கருத்திற் கொள்ள முடியும். அதைப்போலவே, பிரதேச மட்டத்தில் கொள்வனவாளர்களால் தரம் வாய்ந்த உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துவதுடன், அதிகளவான உற்பத்திகள் தற்பொழுது ஆற்றுப்படுத்தப்படுவது உள்நாட்டுச் சந்தைகளுக்காகும். அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு முக்கியமாக இவ்வுற்பத்தி ஏற்றுமதி செய்யப்படும். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுச் சந்தைகளில் அதிக கேள்வி உள்ள தாய் மீன்கள் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு உற்பத்திச் செயற்பாடுகளுக்காக ஒப்பந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டுச் சந்தையில் அதிக கேள்வியுடைய மீனாக பொன் மீன்கள் வர்க்கம் இருப்பதுடன் சர்வதேச சந்தைகளுக்காக கப்பி, ஸ்வட்டேல், ப்ளேடி, மோலி ஆகிய வர்க்கங்களுக்காக அதிக கேள்வி உள்ளது.

2021 ஆம் ஆண்டாகும் போது அலங்கார மீன் சோடிகள் 40 மில்லியன்கள் தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி 1200 மில்லியன் ரூபாயாகும்.

- **அலங்கார மீன் வளர்ப்பை மேம்படுத்தும் உத்திகள்.**

1. அலங்கார மீன் உற்பத்திக்காக சேற்றுக் குட்டைகளை அமைத்தல்.
2. மீன் இனங்களின் நிற விருத்தி மற்றும் தரத்தை உறுதி செய்வதற்காக தனிமைப்படுத்தலுடன் கூடிய தாங்கிகளை நிறுவுதல்.
3. விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகளை விநியோகிப்பதற்காக இனவிருத்தி மத்திய நிலையங்களைத் தாபரித்தல்.
4. தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாய சங்கங்களை பலப்படுத்துதல்.
5. சிறு அளவிலான தொழில்முயற்சியாளர்களின் செயற்பாடுகளை பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
6. சந்தைப்படுத்தல் வலையமைப்பை விருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகள் தொடர்பாக கவனத்தைச் ஆற்றுப்படுத்தி உற்பத்தியின் தரத்தை தக்க வைத்தல்.



50% பங்களிப்புடன் தனிமைப்படுத்தப்பட்ட தாங்கிகள் நிறுவுதல்



50% பங்களிப்புடன் வலை உரைகளை வழங்குதல்





அலங்கார மீன் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளுதல்

5. <u>மகாவலி பண்ணை விருத்தி நிகழ்ச்சித் திட்டம்.</u>

இலங்கை அதிகார சபையின் முகாமைத்துவத்தின் கீழ் பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நிகழ்காலத்தில் 13 பண்ணைகள் மகாவலி வலயங்களில் பரவிக் காணப்படுகின்றன. அடிப்படை விவசாயப் பயிர்கள் உற்பத்தி அலகுகள் நடாத்தப்பட்டாலும் சீரற்ற மற்றும் நிச்சயமற்ற காலநிலை காரணமாக பயிர்ச் செய்கை முகங்கொடுத்துள்ள ஆபத்தான நிலைமைக்கு தீர்வாக விவசாய பயிர்களுக்கு மேலதிகமாக கால்நடை வளங்கள் மற்றும் மீன்பிடி உற்பத்தி

நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒன்றிணைந்த பண்ணையாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பண்ணை விருத்திச் செயற்பாடுகளின் அடிப்படை நோக்கமாக இருப்பது யாதெனில்,

- அப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்காக கமநல மற்றும் கால்நடை வளங்கள் குறித்து பிரயோக மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கும் பயிற்சிகள் மற்றும் மாதிரி அலகுகளாக பண்ணைகளைச் செயற்படுத்துதல்.
- விவசாய மற்றும் கால்நடை வளத் துறைகளின் உற்பத்திகளின் விளைத்திறனை அதிகரிப்பதற்காக பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும் அலகாக இருத்தல்.
- மாடுகளின் இனவிருத்தி மத்திய நிலையமாக வலயத்திற்கு அவசியமான ஆட்சியான பரம்பரை இயல்புகள் மற்றும், ஆட்சியான பாற்பசுக் கன்றுகளை வழங்குதல், முட்டைகளை அடைகாக்கும் இயந்திரங்கள் மூலம் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்குதல் மற்றும் பால் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துணை உற்பத்திகளை மேற்கொள்ளுதல் மற்றும் சந்தைப்படுத்தல் அலகாகக் காணப்படுதல்.

இவ்வாறு, மகாவலி பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பிரதேச விவசாயிகளுக்கு பரந்து விரிந்த சேவை கிடைக்கப்பெறும்.

06. ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மீன்படி மற்றும் கால்நடை வள துறையில் தொழில்நுட்ப மற்றும் பிரயோக அறிவை வழங்குதல் மற்றும் நவீன உள்ளீட்டுப் பயன்பாட்டிற்காக மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் மீன்பிடி மற்றும் கால்நடை வள உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்த முடியும் என்பதுடன், செயலாற்றுகையை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்திச் செயன்முறைக்கு மிகவும் வினைத்திறனாக மற்றும் இலாபகரமான வியாபாரத்தை நோக்கி இட்டுச் செல்கின்றது.

நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

- நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குதல், செயன்முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மனப்பாங்கு விருத்தி.
- நடைமுறை அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல்.
- நிலவுகின்ற வளங்களை நிலைபெறுதகு விதமாக பயன்படுத்துவதற்கு அவசியமான அறிவை வழங்குதல்.
- உற்பத்தி விளைத்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல்.

07. புல் வளர்ப்புச் செயற்திட்டம்

மகாவலி வலயங்களில் பால் உற்பத்தி மற்றும் உற்பத்தி விளைத்திறனை அதிகரிப்பதற்காக கால்நடைகளின் போசணை தொடர்பாக அதிக முக்கயத்துவத்தை வழங்க வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளது. அதற்காக கால்நடைகளின் உணவாக தற்பொழுது கைவிடப்பட்டு உள்ள பயிர்ச் செய்கை நிலங்களை பாரியளவில் புற் தரைகளாக அபிவிருத்தி செய்யும் விசேட செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் மூலம் கால்நடைகளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், அதிக போசணையுடன் கூடிய அவசியமான சிறந்த காலந்டை உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருக்கும். இந்நிலப் பிரதேசங்கள் பல உலர் வலயங்களில் காணப்படுவதுடன் சுயாதீன மாடு வளர்ப்பின் கீழ் பாற் பசுக்களின் வளர்ப்பிற்காக வினைத்திறனற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால் அவற்றை மிகவும் வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக மேம்படுத்தும் நோக்கில் இப்பாரியளவான புல் வளர்ப்புச் செயற்திட்டம் மகாவலி பி, சி, டி, எல், வலவ மற்றும்

ரம்பகன் ஓயா ஆகிய வலயங்களில் இனங்காணப்பட்ட காணிகளில் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அச் செயற்திட்டத்தின் கீழ் உலர் பிரதேசங்களுக்கு மிகவும் பொருத்தமான, CO3, CO4, சோளம் மற்றும் பெசோன் ஆகிய மேய்ச்சல் மற்றும் போசணை மிகுந்த பேதங்களுக்குரிய மேம்படுத்தப்பட்ட புல் வகைகளை நடுவதற்கு முன்மொழியப்பட்டு உள்ளது.

இச் செயற்திட்டத்தின் கீழ் பி வலயத்தில் 700 ஏக்கர் நிலத்திலும், சி வலயத்தில் 20 ஏக்கர் நிலத்திலும், டி வலயத்தில் 50 ஏக்கர் நிலத்திலும், வலவ வலயத்தில் 200 ஏக்கர் நிலத்திலும் மற்றும் எல் வலயத்தில 100 ஏக்கர் நிலத்திலும், ரம்பகன் ஓயா வலயத்தில் 100 ஏக்கர் நிலமுமாக மொத்தம் 1180 புற் தரைகள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

பி வலயத்தின் மற்றும் டி வலயத்தின் காணிகளின் தற்பொழுது நிலங்கள் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன், வலவ மற்றும் ரம்பகன் ஓயா வலயத்தில் இனங் காணப்பட்டுள்ள அங்கீகாரத்திற்காக IEA மற்றும் EIA அறிக்கைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.

மீன்பிடி மற்றும் கால்நடை வளத் துறைகளின் உற்பத்தி இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் முன்மாதிரி அலகுகளாக வலய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பௌதீக செயற்பாடுகளின் முன்னேற்றத்தைக் குறிக்கின்ற சாராம்ச குறிப்பு அட்டவணை 1.2 இல் காட்டப்பட்டுள்ளது.

1.2 அபிவிருத்திச் செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் - 2021 ஆம் ஆண்டு

தொ. இல.	செயற்பாடுகள்	அலகு	இலக்கு	முன்னேற்றம்
01	நன்னீர் மீன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்			
	உற்பத்தி இலக்கு (மெட்ரிக் தொன்)	மெ. தொன்	11000	11700
	இலக்காக கொள்ளப்பட்ட நீர்த் தேக்கங்கள்/ குளங்களின் எண்ணிக்கை	எண்ணிக்கை	260	181
	மீன் குஞ்சுகளின் உற்பத்தி			
	மிதக்கும் வலைக் கூண்டுகள்	எண்ணிக்கை	100	120
	பயிர்ச் செய்கை குட்டைகள்	எண்ணிக்கை	17	11
1.1	நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் வைப்புச் செய்தல்	மில்லியன்	35	20.39
1.2	மிதக்கும் வலைக் கூண்டுகளில் குஞ்சு விருத்தி	மில்லியன்	21	15.5
1.3	நன்னீர் இறால் பின் குடம்பிகளை (Post Larvae) வைப்புச் செய்தல்	மில்லியன்	17	10.15
02	அலங்கார மீன் வளர்ப்பு			
	உற்பத்தி இலக்கு	மில்லியன் ஜோடிகள்	37	40
2.1	மீன் இன விருத்திப் பண்ணைகளை நிறுவுதல்	எண்ணிக்கை	51	48
2.2	தனிமைப்படுத்தல் தாங்கிகள் அமைத்தல் (அளவு 10*10' தாங்கிகள் 02 - ரூ. 75,000/= இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	135	258
2.3	சேற்றுக் குட்டைகள் அமைத்தல் (அளவு 60*40' தாங்கிகள் 02 - ரூ. 75,000/= இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	172	167

2.4	உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (பறவை வலைகள், உரை வலைகள்)	எண்ணிக்கை	500	457
03	பாற் பசு விருத்தி			
	பால் உற்பத்தி இலக்கு	மில்லியன் லீட்டர்	40	42
3.1	ஒருங்கிணைந்த பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	எண்ணிக்கை	1000	900
3.2	புல் தரைகளை நிறுவுதல் (குறைந்தது ¼ ஏக்கர் காணி, இ.ம.அ.ச. பங்களிப்பு ரூ. 10,000/=)	நிலத் துண்டுகளின் தஎண்ணிக்கை	279	152
3.3	50% பங்களிப்புடன் வித்து கலப்பு வழங்குதல்	கி.கிராம்	2400	1400
3.4	இறைபேணி கொள்கலன்கள் வழங்குதல் (குறைந்தது 5 கொள்கலன்கள்/ பண்ணை, இ.ம.அ.ச. பங்களிப்பு 50%)	எண்ணிக்கை	1770	1213
3.5	இறைபேணி மற்றும் புல் பாதுகாப்பு அலகுகளை நிறுவுதல் (இ.ம.அ.ச. பங்களிப்பு ரூ. 50,000/=)	எண்ணிக்கை	18	5
3.6	உயர் ரகத்திலான மாடுகளை வழங்குதல் (100% இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	98	30
3.7	உயர் ரகத்தைச் சேர்ந்த பாற் பசுக்கள் மற்றும் கன்னு மாடுகள் வழங்குதல் (75% இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	113	42
3.8	AI நிகழ்ச்சித் திட்டங்கள் (வெற்றிகரமான AI பெண் பசுக் கன்று பண்ணையில் பிறந்துள்ளது) (இ.ம.அ.ச. பங்களிப்பு ரூ. 5000.00 / பசுக் கன்று	முன்னேற்றங்களின் எண்ணிக்கை	429	269
3.9	இன விருத்திப் பண்ணைகளை நிறுவுதல் (இ.ம.அ.ச. பங்களிப்பு ரூ. 12,5000/ பண்ணை)	எண்ணிக்கை	15	12
3.10	மாட்டுத் தொழுவங்கள் அமைத்தல் (ரூ. 100,000/= இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	151	135
3.13	புற்களைத் துண்டாக்குதல் மற்றும் வெட்டும் இயந்திரம் வழங்குதல் (50% இ.ம.அ.ச. பங்களிப்பு - மாதிரிப் பண்ணை)	எண்ணிக்கை	345	352
3.14	பால் உபகரணங்கள் வழங்குதல் (பால் கேன், பக்கற், வடிப்பான்கள்) (மாதிரிப் பண்ணைகளுக்கான இ.ம.அ.ச. பங்களிப்பு 75%)	எண்ணிக்கை	470	400
3.15	நடமாடும் பால் கறக்கும் இயந்திரம் வழங்குதல் (Bucket Milkers) (50% பங்களிப்பு)	எண்ணிக்கை	48	47
3.16	உயிர் வாயு அலகுகள் (ரூ. 100,000/= இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	13	8
3.17	சேதனப் பசளை உற்பத்தி (ரூ. 10,000/=/ பண்ணை இ.ம.அ.ச. பங்களிப்பு	எண்ணிக்கை	688	586

3.18	மிருகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் (ரூ. 3000/ மிருகம் இ.ம.அ.ச. பங்களிப்பு)	எண்ணிக்கை	397	117
3.19	மிருக சிகிச்சையளிப்புக்கள் மற்றும் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	49	18
3.20	விவசாய களப் பாடசாலைகள்	எண்ணிக்கை	74	44
04	கோழி வளர்ப்பு	எண்ணிக்கை		
	முட்டை உற்பத்தி இலக்குகள் (முட்டை மில்லியன்)	மில்லியன்	60	62
4.1	சிறிய அளவிலான/ நடுத்தர அளவிலான மற்றும் பாரிய அளவிலான கோழி அலகுகளை அமைத்தல் (இ.ம.அ.ச. பங்களிப்பு 50%) - 20,000/=	எண்ணிக்கை	994	958
4.2	50% பங்களிப்புடன் கோழிக் குஞ்சுகள் வழங்குதல் (ஒரு நாள் வயது, 07 நாட்கள் வயது, ஒரு மாத வயது குஞ்சுகள்)	எண்ணிக்கை	107700	119816
4.3	கோழிக் கிராமம்	எண்ணிக்கை	260	260
4.4	மகாவலி பண்ணைகளுக்காக முட்டை அடைகாத்தல் இயந்திரங்கள் வழங்குதல் (Distribution of incubators for Mahaweli farms)	எண்ணிக்கை	22	19
05	ஆடு வளர்ப்பு			
5.1	முன்மாதிரி பண்ணைக்காக ஆட்டுத் தொழுவங்கள் அமைத்தல் (இ.ம.அ.ச. பங்களிப்பு ரூ. 100,000/ 01 தொழுவத்திற்கு)	எண்ணிக்கை	50	41
5.2	இனவிருத்திப் பண்ணைகள் (ஆண் மற்றும் பெண்) (இ.ம.அ.ச. பங்களிப்பு ரூ. 30,000/=)	எண்ணிக்கை	25	22

1.3 மீன்பிடி மற்றும் கால்நடை வளப் பிரிவின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றப்பட்ட பங்களிப்பு

உற்பத்தி	**உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை**	**வருமானம் (ரூ. மில்லியன்)**
பால்	42 மில்லியன் லீட்டர்	3360
முட்டை	62 மில்லியன்	1122
நன்னீர் மீன்கள்	5512 மெட்ரிக் தொன்	4095
நன்னீர் இறால்கள்	1956 மெட்ரிக் தொன்	29.34
அலங்கார மீன்கள்	40 மில்லியன் சோடிகள்	1200
மொத்த வருமானம்		**9806.34**

3.4 தாபன அபிவிருத்திப் பிரிவு

அறிமுகம்

தாபன அபிவிருத்திப் பிரிவின் நோக்கு

இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக மகாவலி வலயங்களில் மனித வளங்களை சிறப்பான முறையில் இயக்குதல்.

தாபன அபிவிருத்திப் பிரிவின் குறிக்கோள்

இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக மகாவலி வலயங்களின் குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

தாபன அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள்

சமூக விருத்தி

மகாவலி வலயத்தினுள் போதைப் பொருட்கள் அற்ற, துன்புறுத்தல்கள் அற்ற, துஷ்பிரயோகங்கள் அற்ற, ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஆரோக்கியமான விவசாய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக வழிகாட்டுதலானது சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும்.

இதன் கீழ்,

- போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்காக கிராமிய மட்டத்தில் சுயேட்சைத் தலைவர், தலைவிகளை பயிற்றுவித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள், மகளிர் துன்புறுத்தல்கள், வீட்டு வன்முறைகள், குறைந்த வயது திருமணங்கள் மற்றும் குறைந்த வயதில் கர்ப்பம் தரித்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள்.
- தொற்றா நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சுகாதார சிகிச்சைகள் நடாத்துதல். (விசேடமாக துரிதமாக பரவி வருகின்ற சிறுநீரக நோயில் இருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் இனங்காணப்பட்ட நோயாளர்களை சிகிச்சைக்காக ஆற்றுப்படுத்துதல்)
- கல்விக் கருத்தரங்குகள் நடாத்துதல் (ஐம்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர பரீட்சை, கா.பொ.த. உயர்தரப் பரீட்சைகளுக்காக)
- மகாவலி நிதியத்தால் புலமைப்பரிசில்களை வழங்குதல். (பெற்றோர்கள் மிகவும் வறிய, அங்கவீனமான அல்லது உயிரிழந்த, சாதாரண தரத்தில் சித்திபெற்ற மாணவர்களுக்காக வழங்கப்படும்).

2021 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய இலக்குகளைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 3262 ஆகும். அதில் 3198 நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னேற்றம் கண்டுள்ளதுடன், நிதிசார் இலக்கு 255 மில்லியன் ரூபாயும் மற்றும் நிதிசார் முன்னேற்றம் 250 மில்லியன் ரூபாயாகும். 2021 ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதானமாக குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு குடிநீர் வசதியை வழங்குவதைப் போன்றே மலசலகூட வசதிகளை வழங்குதல், துப்புரவேற்பாடு வசதிகள் அற்ற குடும்பங்களுக்கு துப்புரவேற்பாடு வசதிகளை வழங்குதல் என்பன வலய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டன. துப்புரவேற்பாடு வசதிகள் அற்ற பாடசாலைகளுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் கீழ் 137 பாடசாலைகளுக்கு 108.25 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு உள்ளது. அது அட்டவணை இலக்கம் 01 இல் காட்டப்பட்டு உள்ளது.

வலயம்	மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை	
	இலக்கு	முன்னேற்றம்
மொரகஹகந்த	11	11
மெதிரிகிரிய வலயம்	6	6

எச் வலயம்	39	39
வலவ விசேட	16	16
பி வலயம்	31	31
ஹுருளு வாவி வலயம்	8	8
சி வலயம்	11	11
எல் வலயம்	6	6
ஈ வலயம்	4	4
ரம்பகன் ஓயா வலயம்	5	5
கூட்டுத் தொகை	**137**	**137**

சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் 103 இற்கு குடிநீர் தேவையை வழங்குவதற்காக 11.94 மில்லியன் ரூபாய் செலவாகி உள்ளது. அது அட்டவணை 02 இன் மூலம் குறிப்பிடப்பட்டு உள்ளது.

வலயம்	**குடிநீர் வசதிகள் அற்ற பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்**	
	இலக்கு	**முன்னேற்றம்**
சி வலயம்	54	54
பி வலயம்	29	29
மொரகஹகந்த	9	9
எச் வலயம்	3	3
ரம்பகன் ஓயா வலயம்	8	8
கூட்டுத் தொகை	**103**	**103**

இதற்கு மேலதிகமாக துப்புரவேற்பாடு வசதிகள் அல்ல குறைந்த வருமானம் பெறக்கூடிய 1793 குடும்பங்களுக்கு 72.15 மில்லியன் ரூபாய் செலவில் மகாவலி ஈ வலயம், பி வலயம், மெதிரிகிரிய வலயம் மற்றும் ரம்பகன் ஓயா வலயங்களில் குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன. குடிநீர் வசதிகள் அற்ற 186 குடும்பங்களுக்கு 10.351 மில்லியன் ரூபாய் செலவில் நீர் தாங்கிகள் வழங்குதல், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் 156 இற்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக மெதிரிகிரிய மற்றும் ரம்பகன் ஓயா வலயங்களுக்கு 12.5 மில்லியன் ரூபாய் செலவு ஏற்கப்பட்டு உள்ளது.

இதற்கு மேலதிகமாக, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் 33 இற்கு 6.3 மில்லியன் ரூபாய் செலவில் நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்குதல், 1.68 மில்லியன் ரூபாய் செலவில் மகாவலி வலயங்களில் பத்திலும் உள்ள மாணவ மாணவிகள் 71 பேரிற்கு மகாவலி அறக்கட்டளை மூலம் புலமைப் பரிசில்கள் வழங்குதல், குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசணை மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி அத்தியாவசிய பொருட்கள் வழங்குதல் என்பன பிரதான செயற்பாடுகளாக சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.




புகைப்படங்கள் - மலசலகூட வசதிகள் அற்ற குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகளை வழங்குதல்)

குடியேற்ற திறமைகள் மற்றும் தொழிற் பயிற்சிகள்

- மகாவலி குடியேற்றவாசிகளின் பொருளாதார மட்டத்தை 30,000.00 ரூபாயை விட அதிகரிக்கும் நோக்குடன் தொழிற் பயிற்சிகள் வழங்குதல், மற்றும் அதன் ஊடாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அடிப்படை எதிர்பார்ப்பாகும்.
- விவசாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்களுக்கு கணக்குப் பயிற்சி வழங்குதல் மற்றும் பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் மகாவலி வலயங்களில் உயர் தரத்தில் சித்தியடைந்த இளைஞர் யுவதிகளுக்கு கணக்காய்வுக்கு அவசியமான பயிற்சிகளை வழங்கி விவசாய அமைப்புக்களுக்கு கணக்காய்விற்கான அதிகாரத்தை வழங்குதல் மற்றும் வலயத்தின் விவசாய அமைப்புக்களை வருடாந்த கணக்காய்வு மேற்கொள்ளுதல் என்பன அவர்கள் மூலம் முன்னெடுக்கப்படும்.

2021 ஆம் ஆண்டினுள் இதன் கீழ் 155 நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்காக கொள்ளப்பட்டதுடன், அதில் 154 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்றம் கண்டுள்ளதுடன், 16.58 மில்லியன் ரூபாய் இலக்கு மற்றும் 15.35 நிதிசார் முன்னேற்றம் பெறப்பட்டு உள்ளது. மேலும், வறுமையைப் போக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு மாதாந்த வருமானம் ரூ. 30,000.00 ஐ விட அதிகமாக சம்பாதிக்கின்ற எண்ணிக்கை 821 இற்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குதல் முன்னெடுக்கப்பட்டது.

(புகைப்படங்கள் - குடியேற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்)




மகளிர் அபிவிருத்தி

- கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் வீட்டு நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வழிகாட்டுதல் என்பன இதன் பிரதான நோக்கமாகும்.

- மகாவலி வலயத்தினுள் உள்ள பெண்களை ஊக்கப்படுத்துவதற்காக இதன் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
- தனது வீட்டில் இருந்தே வருதானத்தை ஈட்டுவதற்காக அவர்களுக்கு செயற்பட முடியுமான விதத்தில் சுய தொழில்கள் மற்றும் பல்வேறு தொழிற் பயிற்சிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு அவசியமான உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படும். 2021 ஆம் ஆண்டில் இதன் நிகழ்ச்சித் திட்ட இலக்கு 69 ஆக இருந்ததுடன் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் 70 ஆகும். நிதிசார் செலவு 3.532 மில்லியன் ரூபாயாகும்.

<u>விவசாய அமைப்புக்களின் முன்னேற்றம்</u>

விவசாய அமைப்புக்களின் தேர்வுகளை நடாத்துதல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்காக உரிய கட்டளைச் சட்டங்கள், விதிகளும் ஒழுங்குமுறைகளும், முகாமைத்துவம் ஆகியவை தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படும். அவ்வாறே, விவசாயிகளின் மனப்பாங்கு விருத்தி மற்றும் ஆற்றல் விருத்திக்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதுடன் முகாமைத்துவக் குழுவின் கீழ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக தீர்வுகள் வழங்கப்படுவதும் மேற்கொள்ளப்படும்.

சமூக பங்களிப்புடன் கூடிய நீர்ப்பாசன முறைமைகளின் முகாமைத்துவம்.

- கால்வாய் அமைப்புக்களை தாபரித்தல் மற்றும் இயக்கல் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதன் மூலம் கெத் எலவை நவீன மயப்படுத்தும் சமூக பங்களிப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்.
- புணரமைப்புச் செய்ய வேண்டிய மட்டத்தில் உள்ள கெத் எலவை சமூக பங்களிப்புடன் மற்றும் ஊழிய ஒத்துழைப்புடன் மூலப் பொருட்களுக்கான செலவினங்களை மாத்திரம் ஏற்று புணரமைத்தல்.

(வினைத்திறனான நீர் பயன்பாட்டிற்காக விவசாயிகளை பழக்கப்படுத்துதல் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை நடைமுறையாகவே இதன் மூலம் ஏற்படுத்தப்படுவதுடன் பாரிய செவலினங்களை ஏற்க வேண்டிய செயற்பாடுகளை சமூகத்தின் உழைப்புடன் மிகவும் விளைத்திறனாக மேற்கொள்ளப்படும்.)

உயர்ந்த பட்சம் ஐந்து இலட்சம் ரூபாய் (05) இன் கீழ் கால்வாய்ப் பாதைகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக பணம் வழங்கப்படுவதுடன் அதன் நிறைவுப் பெறுமதி சுமார் 15 இலட்சம் ரூபாயாக இருக்கும் என கணக்குப் பார்க்கப்பட்டு உள்ளது.

வலயம்	**புணரமைக்கப்பட்ட கால்வாய்களின் எண்ணிக்கை**	**நீளம் (கி.மீ.)**	**மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்)**	**உழைப்பின் பெறுமதி (மில்லியன் ரூபாய்)**	**முழுமையான நிறைவுகளின் பெறுமதி (மில்லியன் ரூபாய்)**
பி வலயம்	2	0.155	0.99931	0.311	1.310911
சி வலயம்	17	7.652	7.86	12.9	20.76
மொரகஹகந்த வலயம்	6	0.506	2.968	0.903	3.9726
எச் வலயம்	12	21.9	5.833	2.4	8.233
எல் வலயம்	1	0.15	0.519	0.125	0.394
வலவ வலயம்	9	1.354	4.2	0.3	4.11
ஹுருளு வாவி வலயம்	6	4.85	0.998343	0.723287	1.742175
ரம்பகன் ஓயா வலயம்	2	1	0.97		0.97
கூட்டுத்தொகை	55	37.567	24.347653	17.662287	41.492686

முன்னைய நிலைமை **பின்னைய நிலைமை**





அதற்கமைய, சுமார் 35567 மீட்டர் நீளமான நீர்ப்பாசனத் முறைமைகள் 17.66 மில்லியன் ரூபாய் சேமிப்புடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (சமூக பங்களிப்புடன் கூடிய நீர்ப்பாசன முறைமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்)

<u>விளையாட்டுச் செயற்பாடுகள்</u>

மகாவலி விளையாட்டு வீர வீராங்கனைகளை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டு மகாவலி விளையாட்டுக்களை நடாத்துதல் முன்னெடுக்கப்படுவதுடன், அதன் கீழ்

- அலகுகள்/ தொகுதிகள் மற்றும் வலயங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்.
- விளையாட்டுப் பயிற்சி முகாம்களை நடாத்துதல்.
- மகாவலி விளையாட்டுக் கழகங்களை அமைத்தல்.
- குறைந்த வருமானம் பெறக் கூடிய திறமை வாய்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளின் விளையாட்டுத் திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்காக நிதிசார் மற்றும் பொருள்சார் உதவிகளை வழங்குதல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

என்பன 2021 ஆம் அண்டில் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய பத்து வலயங்களிலும் மகாவலி விளையாட்டுக் கழகங்கள் 317 நிறுவப்பட்டு உள்ளதுடன், அதற்காக விளையாட்டு வீர வீராங்கனைகள் 11,860 பேர் கலந்து கொண்டுள்ளனர். விளையாட்டுச் செயற்பாடுகளுக்காக 2021 ஆம் ஆண்டில் 11.197 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு உள்ளது.





3.5 வியாபார அபிவிருத்திப் பிரிவு

பின் புலம் –

வியாபார அபிவிருத்திப் பிரிவானது, இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான முதன்மையான வகிபாகத்தை நிறைவேற்றுகின்ற பிரிவாகும். மகாவலி வலயத்தினுள் ஒவ்வொரு வலயங்களுக்கும் தனித்துவமான மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உயர்ந்த பட்ச விளைத்திறனாக பயன்படுத்தி தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக பொறுப்புக்களை ஏற்று செயற்படுகின்றது.

அதற்கமைய மகாவலி வலயங்களில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா போன்ற உரிய பல்வேறு துறைகளில் சிறிய, நடுத்தரமான மற்றும் பாரியளவிலான பல்வேறுபட்ட தொழில்முயற்சியாளர்களை தோற்றுவிப்பதற்காக செயற்திட்டங்களை திட்டமிடுதல், செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மூலோபாயங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பிடுதல், தனியார் பிரிவின் வியாபாரங்களை அபிவிருத்திக்காக ஆற்றுப்படுத்துதல், சந்தைப்படுத்தலுக்காக வியாபார நிலைய இணைப்புக்களை ஏற்படுத்துதல், வியாபார மேம்பாட்டிற்காக கடன் திட்டங்களை விரிவுபடுத்தி தொழில்முயற்சியாளர்களின் மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல், அவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

வியாபார அபிவிருத்திப் பிரிவின் நோக்கங்கள் –

01. சுய தொழில் பயிற்சிகள் மூலம் சிறிய அளவிலான உற்பத்தித் துறைக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.
02. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களைத் உருவாக்குதல்.
03. மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான மத்தியஸ்தராக இருத்தல்.
04. தொழில்முயற்சி ஆற்றல் விருத்தி மற்றும் தொழில்நுட்ப திறமைகளை வழங்குதல்.
05. வியாபார நிலைய ஒருங்கிணைப்புகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசங்களின் உற்பத்திகளுக்கு அதிகூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுத்தல்.
06. மகாவலி அதிகார பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல்.
07. முதலீடுகள் மூலமான பிரதேச அபிவிருத்தி.
08. தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு.
09. வியாபார ஆலோசனைகள்/ வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவிகளைச் செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
10. அதிகார சபையின் வருடாந்த வருமான நிலைமையை அதிகரித்தல்.

வியாபார அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள் –

- கிராமிய ரீதியாக இனங்காணப்பட்ட வளங்களின் பரவல் தன்மையின் கீழ் வியாபார திட்டங்களைத் தயாரித்தல்.
- இனங்காணப்பட்ட சுய தொழில் துறைகளின் அபிவிருத்திக்காக திட்டங்களைத் தயாரித்தல்.
- சிறு அளவிலான வியாபாரிகளின் மூலதன தேவைகளுக்கு அவசியமான கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் 50% மகாவலி பங்களிப்பின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.
- விவசாய மற்றும் கால்நடை வளரப்பு செயற்திட்டத்தின் ஊடாக அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல்.

- கால்நடை வளர்ப்பு, அலங்கார மீன்கள், தேங்காய்ப் பயிர்ச்செய்கை, ஏனைய பயிர்கள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை ஆகிய முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகளை வழங்குவதன் அடிப்படையில் குத்தகை வருமானம் பெற்றுக் கொள்ளுதல்.
- சூரிய மின் சக்தி, உயிர்த் திரள் மின் சக்தி, நீர் மின் சக்தி ஆகிய மின்சாரச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட காணிகளின் குத்தகை வருமானம்/ மகாவலி அதிகார சபையுடன் பங்கு வியாபாரமாக ஆரம்பிப்பதன் மூலம் இலாபத்தை ஈட்டுதல்.
- கைத்தொழில் பூங்காக்களை நடாத்திச் செல்வதன் ஊடாக பிரதேச மட்டத்தில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல்.
- மகாவலி அதிகார பிரதேசங்களில் கவர்ச்சி மிக்க இடங்களில் அமைந்துள்ள சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறப்பதன் ஊடாக வருமானத்தை ஈட்டுதல்.
- பாரம்பரிய தேசிய உணவுகளை பிரபலமாக்குதல் மற்றும் மகளிர் தொழில்முயற்சி விருத்திக்காக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.
- சுற்றாடல் தோழமையுடைய சுற்றுலா வாய்ப்புக்களை விரிவடையச் செய்வதற்காக நீர்த்தேக்க சுற்றுலாப் படகுச் சேவைகளுக்காக அனுமதி வழங்கி வருடாந்த குத்தகைத் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்.

சுற்றுலா மாளிகைகள் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்

சுமார் ஒரு வருட காலமாக நிலவிய கொரோனா தொற்று காரணமாக சுற்றுலா மாளிகைகள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக திறக்க முடியாமல் போனமையாலும், பயணக் கட்டுப்பாடு காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகை தராமையால் மற்றும் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளின் கீழ் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் அனைத்து சுற்றுலா மாளிகைகளினதும் பதிவுகள் பின்னடைவைச் சந்தித்ததுடன், 2021 ஆம் ஆண்டின் இறுதிப் பாதியில் இந்நாட்டின் அனைத்து துறைகளும் மீள இற்றைப்படுத்தப்பட்டமையால் 2021 ஒக்டோபர் மாதத்தில் மகாவலி அதிகார சபைக்குரிய சொகுசு சுற்றுலா மாளிகையாக கலா வாவி சுற்றுலா மாளிகை திறந்து வைக்கப்பட்டது.

மேலும், இதனை ஒட்டி 2021 நவம்பர் மாதத்தில் இருந்து சகல சுற்றுலா மாளிகையை ஒதுக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் சுற்றுலா மாளிகைகளுக்காக புதிய சுற்றறிக்கை மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய உணவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளது.

அதன் மூலம் 2021 ஆம் ஆண்டு இறுதியில் சுற்றுலா மாளிகைகளின் மூலம் பெறப்பட்ட வருமானம் 5.4 மில்லியன் ரூபாய் ஈட்டக் கூடியதாக இருந்தது.

2021 ஆம் ஆண்டின் இலக்கு 5.7 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன் அதன் நிதிசார் முன்னேற்றம் 94% ஆகும்.

ஹெல போஜுன் விற்பனை நிலைய செயற்திட்டம்.

மகாவலி அதிகார சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட ஹெலபோஜுன் குழுவிற்காக 2020 ஆம் ஆண்டில் இருந்து நிர்மாணிக்கப்பட்டு வந்த மகாவலி சி வலயத்தின் கிராந்துரு கோட்டை நகரத்தை அண்டி புதிய ஹெலபோஜுன் விற்பனை நிலையம் 2021 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. மேலும், எச் வலயத்தில் தம்மென்னாவ பிரதேசத்திற்கு புதிய ஹெலபோஜுன் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அதற்கமைய, லக்கல, தெஹியத்த கண்டிய, கிராந்துரு கோட்டை, மனம்பிடிய, மெதிரிகிரிய, ஹுருளு வாவி மற்றும் எம்பிலிபிடிய ஆகிய இடங்களில் ஹெலபோஜுன் விற்பனை நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றன.

பாரம்பரிய தேசிய உணவை பிரபலப்படுத்துதல் மற்றும் மகளிர் தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் மூலம் இல்லத்தார்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்திதல், தேசிய உணவுகளை குறைந்த விலையின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு மற்றும் வலய ரீதியில் நேரடியாக மற்றும் மறைமுகமான தொழில்களைத் தோற்றுவித்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய செயற்திட்டமாக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மகாவலி வலயங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை நிறுவுவதன் மூலம் நச்சுப் பொருட்கள் அற்ற தேசிய உணவுகளை ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மகாவலி வலயங்களில் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புக்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும் இவ்வருடம் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக பல தடவைகள் இவ் ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மூட வேண்டி ஏற்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முடியாமல் போனது. அதற்கமைய நீண்ட காலமாக மூடி வைக்கப்பட்டமையால் அத்தியாவசிய தாபரிப்பு மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் பிரதானமாக முன்னெடுக்கப்பட்டு உள்ளன. உழத்திகள் 62 பேரிற்கான தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

எவ்வாறாயினும், நிலவிய கொரோனா தொற்று காரணமாக 2021 ஆம் ஆண்டில் ஜனவரி மற்றும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களைப் போன்றே ஒக்டோபர் மாதத்திலும் பல சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக வியாபார நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டிய ஏற்பட்டதுடன், ஒட்டு மொத்தமாக உழத்திகளின் வருமானம் சடுதியாக குறைந்து சென்றது.



மகாவலி வலயங்களில் நிலவுகின்ற பௌதீக மற்றும் மனித வள தொழில் முயற்சி அபிவிருத்திக்காக விளைத்திறனாகப் பயன்படுத்தி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்களை தேசிய பொருளாதாரத்திற்கு பங்குதாரர்களாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் இயக்குதல் இப்பிரிவின் வகிபாகங்களாகும்.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் வியாபார அபிவிருத்திப் பிரிவின் கீழ் தொழில் முயற்சியாளர்களுக்காக முதலீட்டுச் செயற்திட்டக் காணிகள் வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மற்றும் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள முதலீட்டுக் காணிகளை விளைத்திறனான பயன்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் அதற்குப் பின்னரான பின் தொடர்வுகள் என்பன முன்னெடுக்கப்பட்டு உள்ளன. வலவ வலயத்தில் கைத்தொழில் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக முதலீட்டாளர்கள் 30 பேரிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. பி வலயத்தில் விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நிர்வாக செயற்திட்டத்திற்காக காணிகளை வழங்குவதற்கு அவசியமான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன், குறை பயன்பாட்டு காணிகளுக்கு கணிப்பீட்டு

நடவடிக்கைகள் காணி மற்றும் காணி உபயோகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு உள்ளது. முதலீட்டுக் காணிகளின் விளைத்திறனை அதிகரிப்பதற்காக முதலீட்டு மேம்பாடு மற்றும் முறைப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் 17 ஐ நடாத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பிந்திய கோவிட் தொற்று நிலைமையின் கீழ் முகங்கொடுக்க வேண்டிய ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மகாவலி ஹெலபோஜுன் விற்பனை நிலையங்கள் சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றி இடையிடையே மகாவலி ஹெலபோஜுன் விற்பனை நிலையங்கள் சிலவற்றை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன், மகாவலி எச் வலயத்தில் புதிய ஹெலபோஜுன் விற்பனை நிலையத்தின் கட்டுமானங்கள் விவசாய திணைக்களத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அவ்வாறே, ஹெலபோஜுன் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கு அவசியமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு நடாத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

சுற்றாடல் தோழமை மிக்க வள்ளங்கள் மற்றும் படகுகள் மகாவலி வலயத்தை அண்டிய குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் அமுல்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புதிய செயற்திட்டங்கள் 04 இற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. இரண்டிற்கு ஒப்பந்தம் இட்டு செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை கட்டியெழுப்புவதற்காக GYB மற்றும் IYB பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் சந்தைகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் கொவிட் தொற்றுப் பரவல் நிலைமையிலும் உரிய ஆலோசனைகளைப் பின்பற்றி நிகழ்ச்சித் திட்டங்கள் 15 ஐ நடாத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. 50% நிதிசார் பங்களிப்புடன் தொழில் முயற்சியாளர்கள் 383 பேரிற்கு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும், நிலவுகின்ற தொழில் முயற்சிகளை உயர் தரத்திற்கு கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

மேலும், பண நெருக்கடிகள் உள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டு பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒருங்கிணைந்து அமுல்படுத்தப்படுகின்ற "மகாவலி சவிய" கடன் திட்டத்தின் கீழ் அனைத்து வலயங்களையும் இலக்காகக் கொண்டு தொழில் முயற்சியாளர்கள் 54 பேரிற்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மொரகஹகந்த புதிய அபிவிருத்தி வலயத்தை இலக்காகக் கொண்டு "மொரகஹகந்த அத்வல" கடன் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளர்கள் 09 பேரிற்கு கடன் வழங்கப்பட்டு உள்ளது.

3.6 ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு.

நோக்கம்

நவீன தொழில்நுட்பம் மற்றும் மூலோபாய முறைகள் மூலம் மகாவலி அதிகார வலயங்களில் பல்-பிரிவுசார் அபிவிருத்தியை சான்றுப்படுத்துதல்.

குறிக்கோள்

மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்காக மகாவலி பெருந் திட்டத்திற்கு அமைய உள்நாட்டு வெளிநாட்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

<u>பிரிவின் வகிபாகங்கள்.</u>

- மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்-பிரிவுசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரச கொள்கைகள், நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி அதிகார சபையின் பிரிவுகளுக்கான தேசிய மற்றும் வெளிநாட்டு நிதிசார் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுகின்ற விசேட செயற்திட்டங்களைத் தயாரித்தல், அதனை அமுலிற்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல், உரிய பிரிவுகளின் மூலம் செயற்படுத்துதல், இயக்குதல், மேற்பார்வையிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் உட்பட மகாவலி அதிகார பிரதேசங்களில் சுற்றுலா வியாபார நடவடிக்கைகளை பிரபலமாக்குதல் மற்றும் மேம்பாட்டிற்கு அவசியமான மூலோபாய திட்டங்களைத் தயாரிப்பதன் மூலம் அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- மகாவலி குடியேற்றவாசிகளின் வியாபார நிலையங்களை இலக்காகக் கொண்ட விவசாய மற்றும் ஏனைய உற்பத்திகளுக்காக நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தித் தரத்தை அதிகரிப்பதற்குரிய செயற்திட்டங்களைத் செயற்படுத்துதல் மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு ஆராய்ச்சி நிலையங்கள்/ பல்கலைக்கழகங்கள்/ உயர் கல்வி நிலையங்கள் ஆகியவற்றுடன் வளங்களின் தன்மை, பொருளாதார நிலைமாறிகள் மற்றும் நிலவுகின்ற இயல்திறன் ஆகியவை தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், துறையின் மாதிரி ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் ஆய்வின் பெறுபேறுகளை மகாவலி வலயங்களுக்கு ஏற்புறுத்துவதன் ஊடாக குடியேற்றவாசிகளின் வருமான தோற்றுவிப்பை அதிகரிக்கச் செய்தல்.

2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை திட்டத்திற்கு அமைய நிறைவேற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்

- நிதிசார் மானியம் 40.15 மில்லியன்
- யானை - மனித மோதல்களை குறைப்பதற்கான விசேட முறைப்படுத்தல் செயற்திட்டம்
- அரலகங்வில வித்துப் பண்ணை உத்தியோகத்தர் மற்றும் மகாவலி இரண்டாம், மூன்றாம் பரம்பரையைச் சேர்ந்த இளம் தலைமுறையினரை தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வணிக விவசாயிகளாக மாற்றுவதற்கான அடிப்படைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.
- கொத்மலை பச்சை வீடு - நிலத்தைச் சீரமைத்தல், நீர் விநியோக வசதிகள், வேலி அமைத்தல், காணியைச் சீரமைத்தல், ஆலோசனைகள்
- மகாவலி சேதன பயிர்ச் செய்கை செயற்திட்டம்.
- விவசாய புத்தாக்கங்கள் தொடர்பாடல் மற்றும் ஆராய்ச்சி மத்திற நிலையத்தை நிறுவுதல் - மெதிரிகிரிய (தகவல் கிராமம்)
- தகவல் தொடர்பாடல் கிராமத்தை நிறுவுதல்.

2021 ஆம் ஆண்டில் செயலாற்றுகை திட்டத்திற்கு அமைய பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம் மற்றும் செயலாற்றுகைத் திட்டத்திற்கு மேலதிகமாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.

1. யானை - மனித மோதலை இயன்றளவு குறைப்பதற்கான விசேட முறைப்படுத்தல் செயற்திட்டம்.

- மகாவலி எல் வலயத்தில் 20 கி.மீ. மின் வேலிக்கான மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.
- மகாவலி சி வலயத்தில் டோடா பண்ணையைச் சுற்றி 10 கி.மீ. மின் வேலியை அமைக்கும் பணிகளை நிறைவு செய்தல்.
- மதிப்பீட்டுத் தொகை 4.3 மில்லியன் ரூபாய் ஆகும். அரலகங்வில வித்துப் பண்ணையைச் சுற்றி 7.5 கி.மீ. மின் வேலி அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், கந்தகாடு 15% பௌதீக முன்னேற்றம் உள்ளது. உரிய பிரதேசத்தில் காடுகளை வெட்டுதல், வீதியைச் சீரமைத்தல் மற்றும் கம்பங்களை நடுவதற்காக குழிகளைத் தோண்டுதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
- இதற்கு மேலதிகமாக கரந்தபொல கந்தகாடு சிங்ஹபுற 14 கி.மீ. நீளமான மின் வேலியில் 04 கி.மீ. நிறைவு செய்யப்பட்டு உள்ளது.
- பிம்புரெத்தேவ சுற்றுலா மாளிகையைச் சுற்றி 525 மீட்டர் அளவிலான மின் வேலி பொருத்துதல் நிறைவு செய்யப்பட்டு உள்ளது.
- மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் உப அலுவலகத்தைச் சுற்றி 300 மீட்டர் மின் வேலி அமைப்பதற்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதற்காக புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவிடம் இருந்து மதிப்பீடு கோரப்பட்டு உள்ளது.






காலநிலைத் தாக்கத்தை இயன்றளவு குறைப்பதற்கான முன்னோடி உயர் தொழில்நுட்பத்திலான பச்சை வீட்டுப் பண்ணைச் செயற்திட்டம் - நிலத்தைச் சீரமைத்தல், நீர் விநியோக வசதிகள், வேலி அமைத்தல், காணியைச் சீரமைத்தல், ஆலோசனைகள் (SMART GREEN HOUSE PROJECT)

பச்சை வீட்டை அமைக்கும் பணிகள் தாமதமடைந்திருப்பது ஏனெனில், கொரியாவில் இருந்து வருகை தரவுள்ள பொறியியல் பதவியணியானது உலக தொற்றாக காணப்பட்ட கொவிட் பரவல் காரணமாக ஆகும். எனினும், வருடத்தின் ஒக்டோபர் மாதத்தில் கொரியாவில் இருந்து வருகை தந்த பொறியியல் பதவியணியால் இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. நிலத்தை சீரமைப்பதானது தற்பொழுது நிறைவடைந்து உள்ளதுடன், உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பச்சை வீட்டை நிர்மாணிக்கும் பணிகளும் நிறைவடைந்து உள்ளன.



மகாவலி சேதன பயிர்ச் செய்கைச் செயற்திட்டம்

தற்பொழுது மண் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகளுக்காக விவசாய திணைக்களத்திற்கு பணம் செலுத்தப்பட்டு உள்ளது. அடிப்படை பணி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. கொம்போஸ்ட் பசளைத் தொகுதி அமைக்கும் நடவடிக்கையானது CECB நிறுவனம் மூலம் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்து உள்ளது.

அவ்வாறே, கொம்போஸ்ட் பசளை தயாரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது அதன் உற்பத்தி முன்னேற்றம் சுமார் 570 மெட்ரிக் தொன் ஆகும்.

சேதன விஞ்ஞான கட்டிப் பசளை தயாரிப்பதற்காக பரிசோதித்துப் பார்ப்பதற்காக நிபுணர் குழு உறுப்பினருடன் களப் பரிசீலனை முன்னெடுக்கப்பட்டதுடன், அது தொடர்பாக வதிவிட வணிக முகாமையாளருடன் எதிர்வரும் பணிகள் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தப்பட்டு உள்ளது. மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்பட்ட எழுமாறான மண் கணிப்பீட்டின் பின்னர் மண் வரைபடம் மூலம் தொகுதி ரீதியாக மற்றும் அலகு ரீதியாக பயிர்களை இனங்காணுதல் முன்னெடுக்கப்பட்டது. மகாவலி சேதன நிபுணர் குழு உறுப்பினர்களுடன் மொரகஹகந்த வலயத்தில் சேதன செயற்திட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களுடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளன. சேதனத் தொகுதி வளாகத்தில் சரக்குப் பெட்டகங்களைப் பயன்படுத்தி ஆய்வு கூடம் மற்றும் அலுவலகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிப்படைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.








மகாவலி வியாபார மத்திய நிலையம்

இதற்கான அடிப்படை வடிவமைப்புத் திட்டத்தை முன்வைப்பதற்கு பட்டயம் பெற்ற கட்டடக் கலைஞர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டு உள்ளது.





விவசாய புத்தாக்க தொடர்பாடல் மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையத்தை நிறுவுதல் - மெதிரிகிரிய (தகவல் கிராமம்)

தற்பொழுது கணினிகள் 20 மெதிரிகிரிய வலயத்திற்கு வழங்கப்பட்டு உள்ளதுடன், மத்திய நிலையத்திற்கு அவசியமான ஏனைய அலுவலக உபகரணங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கணினி மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது.





விசேட செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எச் வலயத்தில் சுற்றாடல் தோழமை மிக்க மீன் இனவிருத்தி மத்திய நிலையம் மற்றும் சேற்றுக் குட்டைகளை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம்.

இதற்காக செலவாகின்ற தொகையானது ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்ட பிரிவின் கீழ் 2021 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை திட்டத்திற்கு இணங்கியதாக ஒதுக்கப்பட்டுள்ள உரிய மானியங்கள் மூலம் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் முன்னெடுக்கப்பட்டது.







நான்காவது அத்தியாயம்.

4.1. ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு

<u>ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வகிபாகங்கள்.</u>

1. **ஊழியர்களின் தேவைப்பாடுகளை இனங்காணுதல், திட்டமிடுதல் மற்றும் கவர்ந்தெடுத்தல்.**
    - வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருதல்.
    - பரீட்சைகள்/ நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.
    - தகுதியானவர்களைத் தெரிவு செய்தல்.
    - ஊழியர்களின் எண்ணிக்கையை மறுசீரமைத்தல். முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்ட பின்னர்)
2. **ஊழியர் பயிற்சி மற்றும் விருத்தி**
    - புதிய உத்தியோகத்தர்களை நிலைப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
    - குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஆற்றுப்படுத்துதல்.
    - தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள் வழங்குதல்.
3. **நஷ்டயீடுகள் மற்றும் பிரதிபலன்கள் தொடர்பான நடவடிக்கைகள்**
    - பதவியுயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகளை வழங்குதல்.
    - சம்பள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் (தேசிய சம்பளம் மற்றும் ஊழியர்களிக் எண்ணிக்கைகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அமைய)
    - பணிக்கொடைக் கொடுப்பனவு பிரதிபலன்களை விடுவித்தல்.
    - ஊழியர் சேமலாப நிதி/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள்.
4. **ஊழியர் செயலாற்றுகை முகாமைத்துவம்.**
    - பெயர்வழிக் கோவைகளைத் தாபரித்தல்
    - செயலாற்றுகை மதிப்பீடு.
    - பதவியணியைக் மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
    - ஓய்வு செல்லல்.
    - சேவையை நிறைவு செய்தல்.
    - இடமாற்றங்கள்.
    - ஒழுக்காற்று நடவடிக்கைகள் (தாபன விதிக்கோவை மற்றும் ஒழுக்காற்று செயல்முறைகளுக்கு அமைய)
5. **முகாமைத்துவத் தொடர்புகள் மற்றும் ஊழியர் தொடர்புகள்**
    - ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்கு அங்கத்தவர்களைப் பதிவு செய்தல்.
    - இலங்கை மகாவலி அதிகார சபைக்காக சட்ட நடவடிக்கைகளுக்காக ஆஜராகுதல்.
    - ஒருங்கிணைப்பு (பல்வேறு பிரிவுகள், வலயங்கள் மற்றும் வெளியாட்களுக்கு இடையில்)
    - மக்கள் தொடர்பு
    - உத்தியோகபூர்வ விழாக்கள் தொடர்பான நடவடிக்கைகள்.
    - நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனை செயற்குழுவின் நடவடிக்கைகள்
    - பொது மனுக் குழுவின் நடவடிக்கைகள்

- பாராளுமன்ற வாய்மொழி மூல கேள்விகளுக்கு விடையளித்தல் மற்றும் ஏனைய பிரிவுகளை ஒருங்கிணைத்தல்.

ஆளணி மற்றும் நிர்வாக பிரிவின் 2021 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்

1. சகல பிரிவுகளின் ஊழியர் வெற்றிடங்களை இனங்காணுதல் மற்றும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல பிரிவுகளிலும் வருடாந்த இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்துதல்.
3. சகல பிரிவுகளினதும் பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணுதல் மற்றும் அதற்குரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல் 2021.12.31 ஆம் திகதிக்கு

தொடர் இலக்கம்	சேவை வகுதி	பதவி	நியமனங்களின் எண்ணிக்கை
1	MM 1-1	பொறியியலாளர் (சிவில்)	18
2	MM 1-1	பொறியியலாளர் (மின்னியல்)	3
3	MM 1-1	பொறியியலாளர் (எந்திரவியல்)	5
4	MA 2-2	விளையாட்டு உதவியாளர்	1
5	MA 2-2	கணக்குப் பதியுனர்	2
6	MA 2-2	கால்நடை வள அபிவிருத்தி உதவியாளர்	9
7	MA 2-2	நீரியல் விஞ்ஞான உதவியாளர்	2
8	MA 1-2	கள உதவியாளர்	16
9	MA 1-2	முகாமைத்துவ உதவியாளர்	54
கூட்டுத் தொகை			**110**

2020 ஆம் ஆண்டிற்கான உள்ளக பதவியுயர்வுகள்

தொடர் இலக்கம்	சேவை வகுதி	பதவி	எண்ணிக்கை
1.	HM 1-1	பணிப்பாளர் (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி)	1
2.	HM 1-1	பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்)	1
3.	HM 1-1	பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)	1
4.	MM 1-1	உதவிப் பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்)	2
5.	MM 1-1	உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	1
6.	MM 1-1	கணக்காளர்	1
7.	MM 1-1	பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (நிர்வாகம்)	1
8.	MM1-1	உதவிப் பணிப்பாளர் (நிதி)	1
9.	MM 1-1	உதவிப் பணிப்பாளர் (கொள்முதல்)	1

10.	MM 1-1	பொறியியலாளர் (எந்திரவியல்)	1
11.	MM1-1	உதவிப் பணிப்பாளர் (சுற்றாடல்)	1
12.	MM 1-1	பயிராக்கவியலாளர்	8
13.	MM 1-1	தொகுதி முகாமையாளர்	15
14.	MM 1-1	உதவிப் பணிப்பாளர் (சட்டம்)	1
15.	JM 1-1	தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர்	6
16.	JM 1-1	மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்	1
17.	JM 1-1	பண்ணை முகாமையாளர்	2
18.	JM 1-1	உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	1
19.	JM 1-1	தொழில்நுட்ப பொறியியலாளர் (சிவில்)	9
20.	JM 1-1	போக்குவரத்து உத்தியோகத்தர்	1
21.	JM 1-1	விவசாய உத்தியோகத்தர்	2
22.	JM 1-1	வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்	2
23.	JM 1-1	தொழில்நுட்ப பொறியியலாளர் (மின்னியல்)	1
24.	JM 1-1	நூலகர்	3
25.	MA -3	அபிவிருத்தி உதவியாளர்	2
26.	MA 3	அலகு முகாமையாளர்	21
27.	MA 3	உதவி பண்ணை முகாமையாளர்	1
28.	MA 2-2	கணக்குப் பதியுனர்	1
29.	MA 1-2	முகாமைத்துவ உதவியாளர்	11
மொத்தம்			**100**

2021 ஆம் ஆண்டின் பயிற்சிகள்

தொடர் இலக்கம்	**நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்**	**செலவு (ரூ.)**
01	தொகுதி முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை	537956.00
02	முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை	262250.00
03	தாபன முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (வலவ வலய உத்தியோகத்தர்கள்)	42000.00
04	களஞ்சிய முகாமைத்துவம், சரக்கிருப்பு நிர்வாகம், வருடாந்த பொருட் கணிப்பீடு மற்றும் சொத்துக் கையுதிர்ப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை	7000.00
மொத்தம்		**849,206.00**

4.2 சட்டப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் சட்டப் பிரிவானது பிரதான அலுவலகத்தின் 08 ஆம் மாடியில் அமைக்கப்பட்டு உள்ளதுடன், அதன் தலைவராக பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) கடமையாற்றுகின்றார்.

நோக்கு

மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காக மற்றும் ஒட்டு மொத்த மகாவலி அதிகார சபையில் ஏற்படுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கும் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்குதல்.

இலக்கு

உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் மற்றும் குறைந்த செலவில் சட்ட ரீதியான பிரச்சினைகளை குறைப்பதற்காக மற்றும் அதிகார சபையின் வருமான தோற்றுவிப்பிற்காக பங்களிப்பு வழங்குதல்.

சட்டப் பிரிவின் வகிபாகங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற விடயத் துறைகள்.

- ஊழியர்களின் சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தொழில் திணைக்களத்தின், கைத்தொழில் விசாரணை மன்று, ஊழியர் நியாய சபையில் இருந்து உச்ச நீதிமன்றம் வரை உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- நிறுவனத்திற்கு உரிய சகல சட்ட நடவடிக்கைகளிலும் திணைக்களத்தின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபைக்காக கையொப்பம் இடுகின்ற ஏனைய ஒப்பந்தங்களை சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக தயாரித்தல், கையொப்பம் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் எதிர்வரும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் தரப்பினர்களுக்கு இடையில் காணப்படுகின்ற ஒப்பந்தங்கள், உடன்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முரண்பாடுகளின் போது அதற்குரிய மத்தியஸ்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும்/ அல்லது அதற்குரியதாக வழக்குத் தாக்கல் செய்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள், சொத்துக்கள் தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது செயற்படுதல் மற்றும் பின் தொடர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- தொழில்நுட்ப முரண்பாடுகள்,, மத்தியஸ்தம், ஊழியர் நியாய சபை மற்றும் ஏனைய நீதிமன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.
- வரி செலுத்துவதைப் புறக்கணித்தல், சட்ட விரோதமானவற்றை அகற்றுதல் போன்ற காணிகளின் கடமைகளின் போது அவசியமான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- பிரிவிற்குரிய அறிக்கைகளைத் தயாரித்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய சகல பிரிவுகளிலும் எழுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளுக்காக ஆலோசனைகளை வழங்குதல்.
- வாகன விபத்து வழக்குகள்.
- சிறிய அளவிலான மின் உற்பத்திச் செயற்திட்டங்களுக்கு அவசியமான உரிய ஆலோசனைகளை வழங்குதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்பாக செயற்படுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- சட்டப் பிரச்சினைகளுக்குரிய பணிப்பாளர் குழாமின் சிற்றிதழ் மற்றும் அமைச்சரவை சிற்றிதழ்களைத் தயாரித்தல்.

2021 ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்.

வரி நிலுவை அறவிடுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

- அறிவித்தல்களை அனுப்புதல்.
- விளக்கக் கோரிக்கைக் கடிதம் அனுப்புதல்.
- அரச காணிகள் (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் கீழ் அகற்றல் அறிவிப்புக்களை அனுப்புதல்.
- பெறுமதி ரூ. 500,000/= ஐ விட குறைவு எனில் அப்பிரச்சினையை மத்தியஸ்தர் சபைக்கு ஆற்றுப்படுத்துதல்.
- வழக்குத் தாக்கல் செய்தல்.
- எதிர்வரும் ஆண்டிற்காக தற்பொழுது பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட பணிகள் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றப்பட்ட பங்களிப்பு

- இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் ஏனைய புறக்கணிக்கப்பட்ட தொகையை அறவிட்டுக் கொடுத்தல்.
- ஏதேனும் ஊழியர் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்காக நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மத்தியஸ்தம் மேற்கொள்ளுதல்.
- பல்வேறு தரப்பினர்களால் அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளில் நியாயத்தை நிலை நாட்டுவதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல், அரசாங்கத்தின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல்.
- ஏதேனும் மோசடிகளில் ஈடுபட்ட மகாவலி உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்குவதன் மூலம் நேர்மையான மகாவலி உத்தியோகத்தர்களை உருவாக்குவதன் மூலம் விளைத்திறன் மிக்க வினைத்திறனுடன் கூடிய சேவையை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல். அதன் மூலம் அரசாங்கத்தால் ஏற்க வேண்டி ஏற்படுகின்ற செலவுகளைக் குறைத்தல் மற்றும் அதற்காக செலவாகின்ற அரச உத்தியோகத்தர்களின் நேரம் மற்றும் உழைப்பை விளைத்திறனான பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமானதாக இருத்தல்.
- சட்ட ரீதியான பிரச்சினைகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தொழில் ரீதியான உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் மிகவும் சட்ட ரீதியான வழிகாட்டலை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்குவதன் மூலம் நிலைபெறுதகு மகாவலியின் எதிர்வரும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் மகாவலியின் ஊழியர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொள்ள முடியுமாகின்றமையால் தேசிய பொருளாதாரத்திற்கு அச்சிறந்த பெறுபேறை வழங்குவதற்கு முடியுமானதாக இருத்தல்.

4.3 நிதிப் பிரிவு

நிறுவனத்தின் கூட்டுத்தாபன மற்றும் வருடாந்த திட்டங்களின் பிரகாரம் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல், மாதாந்த நிதித் தேவைகளை முன்னறிவித்தல் மற்றும் திறைசேரியிடமிருந்து நிதிகளைப் பெறுதல், தேசிய மற்றும் வெளிநாட்டுத் திட்டங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், பௌதிக சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல், கணக்காய்வு வினவல்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிற்கு தகவல்கள் வழங்குதல் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை வகிபாகம் ஆகும்.

நிதிசார் ஒதுக்கீடுகள் மற்றும் செவினங்கள் தொடர்பான விபரங்கள்.

	மூலதன மூலம்	**ஒதுக்கீடு (Rs.'000)**	**செலவினம்(Rs.'000)**
மீண்டுவரும் செலவினம்		2,161,937	2,161,937
மூலதனச் செலவினம்		2,421,621	2,421,621
மகாவலி செயற்திட்டங்கள்			
மகாவலி ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் "பி"	உள்நாட்டு	194,000	194,000
ரிதீமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்	உள்நாட்டு	137,450	137,450
ரம்பகன் ஓயா செயற்திட்டம்	உள்நாட்டு	172,602	172,602
வெலி ஓயா ஒருங்கிணைப்புச் செயற்திட்டம்	உள்நாட்டு	207,969	207,969
விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டம்	உள்நாட்டு	418,953	418,953
விவசாய திணைக்களம் AMTC		45,029	45,029
மொத்தம்		3,597,624	3,597,624

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

						ரூபாய். '000
விளக்கம்	**01.01.2021 ஆம் திகதிக்கு செலவினம்**	**கொள்வனவுகள்**	**விற்பனைகள், அகற்றல்கள், கைமாற்றல்கள்**	**31.12.2021 ஆம் திகதிக்கு செலவினம்**	**பெறுமானத் தேய்வு**	**பெறுமானத் தேய்வை கழித்த பின்னர் 31.12.2021**
காணிகள்	296,000	-	-	296,000	-	296,000
கட்டிடங்கள் மற்றும் அலுவலகங்கள்	2,732,276	56,979	-	2,789,256	729,433	2,059,823
கட்டிடங்கள் – ஏனையவை	3,090,195	43,248	355	3,133,088	1,840,477	1,292,611
பிரதான கால்வாய்கள்	74,989,140	-	-	74,989,140	2,200,978	72,788,162
மோட்டார் வாகனங்கள்	1,378,861	362,684	23,598	1,717,946	917,843	800,103
அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரிப் பொருட்கள்	165,719	28,867	2,489	192,097	116,084	76,013
மின்பிறப்பாக்கிகள்	6,568,922	1,664	162	6,570,424	1,004,879	5,565,546
இயந்திராதிகளும் உபகரணங்களும் - வேலைத்தல பணிகள்	21,220	6,941	25	28,135	15,169	12,966
இயந்திராதிகளும் உபகரணங்களும் – கட்டுமானங்கள்	489,940	47,798	41	537,696	369,020	168,676
இயந்திராதிகளும் உபகரணங்களும் – பொதுவானவை	221,225	75,940	2,412	294,753	121,491	173,262
தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	316,847	24,536	983	340,400	95,064	245,336
கணினிகள் மற்றும் உதிரிப் பாகங்கள்	148,337	73,394	10,520	211,211	63,289	147,922
பாதுகாப்புக் கருவிகள்	-	4,410	-	4,410	-	4,410
புத்தகங்கள் மற்றும் கையேடுகள்	5,306	1,225	-	6,532	94	6,437
அணைகள்	31,764,287	-	-	31,764,287	317,643	31,446,644
மொத்தம்	**122,188,275**	**727,685**	**40,586**	**122,875,374**	**7,791,463**	**115,083,911**

4.4 மகாவலி பாதுகாப்புப் படையணி

அறிமுகம் –

மகாவலி பாதுகாப்புப் படையானது இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான கட்டுமானங்கள், விருத்தியிலி கட்டிடத் தொகுதி மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் பிரதானமாகக் கொண்டும் மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியணி / குடியேற்றவாசிகளை பாதுகாப்பதற்காகவும் **1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15** ஆம் திகதி 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட பாதுகாப்புப் பதவிகள் 10 ஐ உள்ளடக்கிய **மகாவலி பாதுகாப்பு அமைப்பு** நிறுவப்பட்டுள்ளது.

இந்த கால கட்டத்தில் மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தின் மூலம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலர் மூலமாக நிறைவேற்றப்பட்டதுடன், அவ்வெண்ணிக்கை அளவில் மிகவும் சிறிய அளவாகவே காணப்பட்டது. இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பன்முகப்படுத்தும் நோக்குடன் மற்றும் உரிய முறையில் நிர்வாகம் மற்றும் இயக்கற் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மகாவலி அதிகார சபையின் ஆலோசனைக்கு அமைய மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையம் ஆகியவற்றில் சேவையாற்றிய பாதுகாப்புப் பதவிகள் 1989 ஆம் ஆண்டில் மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு உள்ளடக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 15 ஆம் திகதி இப்படையணி நிறுவப்பட்ட காலப்பகுதியில் நிறுவனத் தலைவர் பதவியாக பணிப்பாளர் பதவி காணப்படாததுடன் இலங்கை இராணுவப் படையில் அதிகாரம் பெற்ற பதவி ஒன்றை துணை நிலை அடிப்படையில் பாதுகாப்பு **ஒருங்கிணைப்பாளராக** இப்பாதுகாப்பு அமைப்பு இயக்கப்பட்டது. அதற்கமைய முதலாவது பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக **லெப்டினன் கேர்ணல் திரு. என்.பீ. பெர்ணாண்டோ அவர்களுக்கு** 1985 ஜூன் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 1988 ஆம் ஆண்டு வரை இந்நிறுவனத்தின் தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக 1988 ஆம் ஆண்டில் இருந்து 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை **கேர்ணல் திரு. பி. மஹிபால** அவர்கள் கடமையாற்றி உள்ளதுடன் 1989 ஆம் ஆண்டின் பின்னர் இந்நிறுவனத்தின் செயற்பரப்பு விரிவடைந்த காரணத்தால் மற்றும் இந்நிறுவனம் பயன்படுத்துகின்ற ஆயுதங்கள் போன்றவற்றைப் போலவே அப்பொழுது பிரதானமாக பாதுகாப்பு வழங்கிய விக்டோரியா, ரன்தெணிகல, மாதுறு ஓயா, கொத்மலை, பொல்கொல்ல, போவதென்ன, போன்ற மட்டுப்படுத்தப்பட்ட எனினும் மிகவும் உணர்வு பூர்வமான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிக ளின் பாதுகாப்பு தொடர்பாக நேரடி பொறுப்பு மற்றும் கடமை தொடர்பாக கவனத்தில் கொண்டு 1990 ஆம் ஆண்டு **பணிப்பாளர் (பாதுகாப்பு)** பதவி நிறுவப்பட்டது.

அதற்கமைய மகாவலி பாதுகாப்பு அமைப்பின் **முதலாவது பணிப்பாளராக (பாதுகாப்பு) மேஜர் திரு. திலக் ரத்னசேகர அவர்கள்** கடமையாற்றினார்.

அவ்வாறே ஆரம்ப கால கட்டத்தை விட 1990 ஆம் தசாப்தத்தின் இறுதி நடுப்பகுதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்புத் தேவைகளை பாரிய அளவில் விரிவடைந்தமையால் அதுவரையில் காணப்பட்ட மகாவலி பாதுகாப்பு அமைப்பானது புது கௌரவப் பெயருடன் **மகாவலி பாதுகாப்பு படையணி** என திருத்தியமைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2011 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளும் செயல்முறைகளின் திருத்தத்தில் இந்நிறுவனத்தில் அதுவரை காணப்பட்ட பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக உதவிப் பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியை நிறுவி அப்பொழுது பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியில் கடமையாற்றிக் கொண்டிருந்த பணிப்பாளர் அவர்கள் அவருடைய பதவிக்கு தனிப்பட்ட ரீதியாக வைத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்பொழுது மகாவலி பாதுகாப்பு படையணிக்கு தலைமை வகிக்கப்படுவது உதவிப் பணிப்பாளர் (பாதுகாப்பு) அவர்களால் ஆகும்.

அவ்வாறே, இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மற்றும் ஆரம்பிக்கப்பட்ட மொரகஹகந்த, களு கங்கை ஆகிய மாபெரும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்புப் பொறுப்பைப் போலவே ரம்பகண் ஓயா, ஈ வலயம், மாதுறு ஓயா வலது கரை, மயுரபுற காட்டு யானை முகாமைத்துவ ஒதுக்கு போன்ற இடங்களினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்பொழுது இப்படையணி மூலம் நிறைவேற்றப்படுகின்றது. விசேடமாக தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற நிலைமைக்கு அமைய ஆரம்ப கால கட்டத்தில் காணப்பட்ட வகிபாகங்களை விட பாதுகாப்பு செயற்பரப்பு விரிவடைந்தமையால் அதிவிசேட பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிகள் தொடர்பான பொறுப்புகள் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன் அதற்கமைய **விக்டோரியா, கொத்மலை, ரன்தெணிகல, பொல்கொல்ல, ரன்தம்பே, மாதுறு ஓயா, மொரகஹகந்த, களு கங்கை, போவதென்ன, உடவலவ உட்பட மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமை கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல், காணிகள் மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள், அலுவலகம், வேலைத் தளங்கள், பண்ணைகள் மற்றும் வியாபார நிலையங்களைப் பாதுகாத்தல், சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல், ஊழல் பெற்றுக் கொள்ளுதல் போன்ற சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல், பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுதல். விசேட பாதுகாப்பு செயற்பாடுகளை திட்டமிடுதல், மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பளித்தல், மகாவலி அதிகார சபையின் பொதுத் தேவைகளுக்காக பாதுகாப்புதவி வழங்குதல், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு உதவி வழங்குதல்** போன்ற பொறுப்புக்களுடன் கூடிய வகிபாகங்கள் தற்பொழுது இப்படையணிக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

பிரதான குறிக்கோள்கள் –

- மகாவலி அபிவிருத்தியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற பிரதான நீர்த்தேக்கங்கள், கால்வாய் அணைகள் மற்றும் கட்டிடங்கள் உட்பட 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், பதவியணி மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் ஒப்படைக்கப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து அலுவலக கட்டிடத் தொகுதிகள், கட்டிடங்கள், களஞ்சிய வளாகங்கள் போன்றவற்றிற்கு அவசியமான பாதுகாப்பை வழங்களுதல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பதவியணி மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதல்.

ஏனைய கடமைகள் மற்றும் வகிபாகங்கள்.

- கௌரவ மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்திப் பிரதி அமைச்சர்கள் உட்பட மகாவலி அபிவிருத்தி அமைச்சின், இலங்கை மகாவலி அதிகார சபையின் முக்கிய பிரமுகர்களுக்கான உபசாரம் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் கடமைகளை மகாவலி விளையாட்டு மற்றும் ஏனைய விசேட விழாக்களுக்கு அவசியமான உபசாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக இராணுவ வீரர்கள் மற்றும் காவல் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

- இலங்கை மகாவலி அதிகார சபை வசமுள்ள பணம் மற்றும் பெறுமதியான சொத்துக்களுக்கு போக்குவரத்தின் போது பாதுகாப்பளித்தல்.
- மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான புலனாய்வுத் தகவல்களை வழங்குதல்.
- மகாவலி நிறுவனங்களின் பிரதான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் செயற்திட்டப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற நிறுவனங்களின் காவலாளிகளின் கடமைகளைக் கண்காணிப்பதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குதல்.
- மகாவலி அதிகார சபையில் மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களில் திருட்டுக்கள், தவறான பயன்பாடுகள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வாறு நடந்து கொள்கின்ற நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
- மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் மகாவலி பிரதேசங்களில் சட்ட விரோதமாக குடியேறுதல், சட்ட விரோத கட்டுமானங்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல்.
- மகாவலி அதிகார சபையின் வசமுள்ள வெடி பொருட்கள், ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகிய பொருட்களை வைத்துக் கொள்ளுதல், பாதுகாத்தல், விநியோகித்தல் மற்றும் கணக்கிடுதல்.
- மகாவலி அதிகார சபைக்கு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு பாதுகாப்பு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- மகாவலி அதிகார சபை, பதவியணிகளுக்கு மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான விதத்தில் பாதுகாப்புப் பயிற்சிகளை நடாத்துதல்.

மகாவலி பாதுகாப்புப் படையணியின் பிரதான வகிபாகங்கள் மேற்குறிப்பிட்ட விதத்தில் அமைவதுடன், அது அரசாங்கத்தின் நீர்ப்பாசன அமைச்சின் மகாவலி வலயங்களை அண்டிய கால்வாய் அணைகள் மற்றும் குடியேற்றங்களின் பாது உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் இராஜாங்க அமைச்சின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் பொதுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது மற்றும் அதனுடன் ஒன்றிய சொத்துக்கள் மற்றும் நபர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இதில் வகிபாகங்களை அமுல்படுத்தும் போது மகாவலி **பாதுகாப்புப் படையணிக்கு ஆணைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக உதவிப் பணிப்பாளர் ஒருவரும், அதன் கீழ் இயக்கற் பிரிவும், களங்களில் அவ்வாணைகள் மற்றும் ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்காக அதிகார பிரதேசங்கள் 10 உம், அவசியமான விதத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் காவல் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான 42 அணிவகுப்புக்களும் தற்பொழுது நிறுவப்பட்டுள்ளன.** அவ்வாறே, சகல பதவிகளினதும் நிர்வாகம் மற்றும் சம்பளம் வழங்குதல் ஆகிய கணக்குசார் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 50 பேரை உள்ளடக்கிய சிவில் பதவியணி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன் திகனையில் அமைந்துள்ள தலைமையகம் மூலம் அதன் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதமாகும் போது எமது படையணியில் முழுமையான பாதுகாப்பு பதவியணியின் எண்ணிக்கை 620 ஆகும்.

அப்பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மிகவும் அடக்கமான முறையில் கடமைகளில் ஈடுபடுவதற்காக அவசியமான நிலையியற் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மகாவலி பாதுகாப்புப் படையணியானது அரசாங்கத்தின் ஏனைய சிவில் பாதுகாப்பு நிறுவனங்களை விட மிகச் சிறந்த தேர்ச்சிகளுடன், ஆயுதம் ஏந்தியதாக அமைக்கப்பட்ட முறையான பாதுகாப்புப் பிரிவாகும்.

2021 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட இலக்குகள் மற்றும் விசேட நிகழ்வுகள்.

மேலும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி நாடு பூராகவும் பரவிய உயிர்கொல்லி கொரோனா தொற்று காரணமாக இலங்கை மகாவலி அதிகார சபையின் சிவில் பதவியணியானது உரிய முறையில் கடமைக்கு சமூகமளிக்காத பின்புலத்தில் தமது உயிர் ஆபத்தை கருத்திற் கொள்ளாது, பல சந்தர்ப்பங்களில் தமது தனிப்பட்ட போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தி பாதுகாப்புக் கடமைகளை தொடர்ச்சியாக மற்றும் முறையாக நடாத்திச் செல்லும் நோக்குடன் பல பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளித்து இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து அசையும் அசையாச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக பெரும் முயற்சியுடனும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக அபிமானத்துடன் நினைவூட்டிக் கொள்கின்றோம்.

அவ்வாறே, மகாவலி பாதுகாப்பு படையணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மற்றும் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் நோக்கில் இப்படையணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ESCORT AIMGUARD வகையைச் சேர்ந்த ரிபீடர் துப்பாக்கிகள் 150 ஐ கொள்வனவு செய்வதற்கு 2021 மார்ச் மாதம் 02 ஆ திகதி முடியுமானதாக இருந்தது.

மேலும், இப்புதிய ஆயுதத்தின் செயற்பாடுகள் தொடர்பான முறையான பயிற்சி மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட அறிவை வழங்குவதற்காகவும், இப்படையணியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஆளுமை மற்றும் நிறுவனம் சார் புத்துணர்ச்சியை விருத்தி செய்யும் நோக்குடன் ஒரு வலயத்திற்கு இரு குழுக்கள் வீதம் இரண்டு நாள் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடாத்துவதற்கும் பணிப்பாளர் நாயகம் அவர்களின் (இலங்கை மகாவலி அதிகார சபை) அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது.

அதற்கமைய, அதன் முதல் கட்டமாக 2021 ஆகஸ்ட் 15 ஆம் திகதியில் இருந்து 2021 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை வலயத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும், இரண்டாவது கட்டமாக 2021 நவம்பர் மாதம் 07 ஆம் திகதியில் இருந்து 2021 நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை மொரகஹகந்த களு கங்கை வலயத்தின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும், மூன்றாவது கட்டமாக 2021 டிசம்பர் மாதம் 04 ஆம் திகதியில் இருந்து 09 ஆம் திகதி வரை ரன்தெணிகல மற்றும் சி வலயங்களின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும், மிகவும் குறுகிய காலத்தில் இப்படையணியின் முழுமையான படையணியினர் பலருக்கு மிகவும் வெற்றிகரமாக நடாத்தி முடிக்க முடியுமானதாக இருந்தமை எமது படையணி பெற்ற பாரிய வெற்றியாக குறிப்பிட முடியும்.

2021 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்.

கணக்கு இலக்கம்		**ரூபாய்**
2003	கடன் வட்டி வருமானம்	1.02
2005	அபராத வட்டி வருமானம்	0.04
2008	மீளச்செலுத்தாத டெண்டர் வைப்புகள்	-
2010	பல்வேறு வருமானங்கள்	-
மொத்தம்		**1.06 மில்லியன்**

2021 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை	28.0
2005 ஆம் ஆண்டின் இலக்கு	28.0
2008 ஆம் ஆண்டு பிரதான அலுவலகத்தில் கிடைத்த தொகை	28.0
2010 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்ட தொகை	11.80
அதற்கமைய நிதிசார் முன்னேற்றம்	42.00%

நிதிசார் முன்னேற்றம்

கணக்கு இலக்கம்	**ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன்)**	**செலவு செய்யப்பட்ட தொகை (மில்லியன்)**
2385 கட்டிடங்கள்	10.4	0.25
2383 வாகன தாபரிப்பு	2.7	2.19
2386 அலுவலக உபகரணங்கள்	0.0	1.049
2112 பாதுகாப்பு உபகரணங்கள்	13.554.41	
2706 வீட்டுப் பொருட்கள் மற்றும் கருவிகள்	1.250.91	
	28.111.80	

4.5 போக்குவரத்துப் பிரிவு

அறிமுகம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் இலக்குகளை எட்டுவதற்கு அவசியமான சேவைகளின் முதன்மை வகிபாகங்கள் போக்குவரத்துப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நிறுவனத்தின் போக்குவரத்துச் சேவை, நிறுவனத்தினுள் நிலவுகின்ற பௌதீக மற்றும் உழைப்புசார் வளங்களை உயர்ந்தபட்ச விதத்தில் பயன்படுத்தி துரிதமான வினைத்திறனுடன் கூடிய போக்குவரத்து சேவைகளாக பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் தாக்கங்களை இயன்றளவு குறைத்து முறையான விதத்தில் நடாத்திச் செல்வது போக்குவரத்துப் பிரிவின் அடிப்படைப் பணியாக கருத முடியும்.

புது எண்ணக்கருக்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு ஒருங்கிணைந்து சுற்றாடல் தோழமையுடைய சேவைகளாக நடாத்திச் செல்வது யுகத்தின் தேவையாகும். இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களின் இயக்கல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சரியான வழிகாட்டல்கள்,, அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், கையிறுப்பில் உள்ள வாகனங்களை முகாமைத்துவம் செய்தல், சரியான பாதைக்கு ஆற்றுப்படுத்துவதன் ஊடாக வினைத்திறன் மிக்க சுற்றாடல் தோழமையுடைய வினைத்திறனான சேவைகளை வழங்குவது எமது நோக்கமாகும். பகுதியான அரச நிறுவனமாக செயற்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபையானது அரசாங்கத்திற்கு செலவுச் சுமையாக செயற்படக் கூடாது என்றும், அதில் வருமானங்களைத் தோற்றுவிக்கின்ற அல்லது இலாபம் ஈட்டும் நிறுவனமாக எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும் எனவும் பொதுத் திறைசேரியால் (நிதி அமைச்சு) ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகளைத் திட்டமிடும் போது போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பிரிவின் பிரதான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள்.

அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பான பொறுப்பு, சகல வாகனங்களினதும் பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்புக்கள், வாகன தாபரிப்புக்கள் மற்றும் எரிபொருட்களுக்கான வருடாந்த செலவினங்களைத் தயாரித்தல், வருமான உத்தரவுப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் என்பன உரிய தினத்திற்கு இற்றைப்படுத்துதல், கடமைக்காக உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் ஒதுக்குதல், சாரதிகளுக்கு மற்றும் சாரதி உதவியாளர்களுக்கு கடமைகளை ஒப்படைத்தல், வாகனப் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல், வாகனங்களுக்கு ஏற்படுகின்ற விபத்துக்களின் போது முறையான செயன்முறைகளுக்கு அமைய செயற்படுதல், வலய மற்றும் பிரதேச அலுவலகங்களின் தலைவர்கள் மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தர்களுடன் உரிய விடயம் தொடர்பாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல், அறிக்கை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் இற்றைப்படுத்துதல் போன்ற போக்குவரத்து பிரிவின் பிரதான பணிகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகும்.

3.0 முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கையிருப்பிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 895 ஆகும். அவை மோட்டார் வாகனங்கள் 552 உம், கனரக வாகனங்கள் 214 உம், இயந்திராதிகள் (லோடர்,

ஜே.சி.பி. ஆகியவை) 129 உம் காணப்படுகின்றன. (மோட்டார் வாகனங்களின் சாராம்ச குறிப்பு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படுகின்றது)

	வாகனங்களின் எண்ணிக்கை 2021.12.31					**மொத்தம்**
வாகன வகை	**0 – 5 ஆண்டுகள்**	**5 – 10 ஆண்டுகள்**	**10 – 15 ஆண்டுகள்**	**15 – 20 ஆண்டுகள்**	**20 > ஆண்டுகள்**	
	(2021 – 2015)	**(2014 – 2010)**	**(2009 – 2005)**	**(2004 – 2000)**	**(1999 <)**	
மோட்டார் சைக்கிள்		**5**	**09**	**5**	**5**	**24**
முச்சக்கர வண்டி					**3**	**3**
மோட்டார் கார்			**1**		**9**	**10**
ஜீப்	**1**	**3**	**2**	**13**	**198**	**218**
இரட்டை கெப்	**38**	**33**	**33**	**78**	**86**	**268**
பேருந்து / வேன்	**3**	**3**	**5**	**4**	**14**	**29**
மொத்தம்	**42**	**44**	**50**	**100**	**315**	**552**

மேற்குறிப்பிட்ட மோட்டார் வாகனங்கள், இயந்திராதிகள் மற்றும் இழுபொறி வண்டிகளை ஓட்டுதல் மற்றும் இயக்குவதற்காக ஒழுங்குமுறையே சாரதிகள் 413 பேரும், இயந்திர இயக்குனர்கள் 71 பேரும், இழுபொறி சாரதிகள் 13 பேரும், சாரதி உதவியாளர்கள்/கையுதவியாளர்கள் 39 பேரும் கடமையாற்றுகின்றனர்.

நிதிசார் முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் போக்குவரத்துப் பிரிவிற்கான மூலதன மானியத்தின் கீழ் 71.31மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அம் மூலதன தொகையானது பிரதான அலுவலகம் உட்பட வலய அலுவலகங்களுக்கு பின்வரும் விதமாக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளது.

பிரதான அலுவலகம்	பி வலயம்	சி வலயம்	டி வலயம்	ஈ வலயம்	ஜீ வலயம்	எச் வலயம்	ஹுருளு வாவி வலயம்	ரம்பகன் ஓயா வலயம்	வலவ வலயம்
10.0	11.71	9.75	1.4	5.0	6.0	13.0	4.0	6.90	10.45

வாகனங்களின் இயந்திரம், தொங்கல் முறைமை, பழுது நீக்கல் (டின்கரின்) மற்றும் நிறம் பூசுதல் மற்றும் வாகனங்களின் (உள் மற்றும் வெளிப்புற) மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக இம் மூலதனம் பிரயோகிக்கப்பட்டதுடன், அதன் முன்னேற்றம் 100% ஆகும். புதிய வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட

கட்டுப்பாடுகள் காரணமாக தற்பொழுது நிலவுகின்ற வாகனங்களை மீள் திருத்தம் செய்து ஓட்டத்திற்கு பயன்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எரிபொருள், சாரதிகளுக்கான கொடுப்பனவு, மேலதிக, பிழைப்பூதியம், வாகனங்களின் சிறு பழுது மீள் திருத்தங்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பாரிய தொகையை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டு அதிகார சபையின் ஒட்டு மொத்த மீண்டு வரும் செலவினம் ரூ. 154,542,000.00 ஆகும்.

மீண்டு வரும் செலவில் முன்னெடுக்கப்பட்ட செலவுகளின் சாராம்ச குறிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டு உள்ளது. அவற்றை முறையான விதத்தில் முகாமைத்துவம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

வருடாந்தம் மீண்டுவரும் செலவினம் - 2021	**ரூபாய்**
எரிபொருளுக்கான செலவு	81,518,000.00
வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகள்	66,539,000.00
காப்புறுதி மற்றும் வருமான உத்தரவுப் பத்திரக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான செலவுகள்	4,326,000.00
வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான செலவுகள்	2,159,000.00
மொத்த செலவு	**151,542,000.00**

மேற்குறிப்பிட்ட நிலைமைகளுக்கு அமைய மற்றும் வாங்கும் திறன் குறைந்து செல்லும் வாகன தாபரிப்புக்கள் மற்றும் மீள் திருத்தங்களுக்கு எதிர்வரும் ஆண்டிற்கு ஒதுக்கப்படுகின்ற மானியங்களை அதிகரிப்பது தொடர்பாக கவனத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

3.2 அதிகார சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின் உரிமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.

கடந்த ஆண்டில் வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் 30 ஐ மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அவ்வாறே, வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு தற்காலிகமாக நீண்ட காலமாக வழங்கப்பட்டு இருந்த 05 வாகனங்களை நிரந்தரமாக உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு முறையான விதத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

3.3 ஓட்ட முடியாத நிலைமையில் உள்ள மோட்டார் வாகனங்களை கையுதிர்த்தல்.

நிதி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் பயன்பாட்டில் இருந்து அப்புறப்படுத்திய கையுதிர்ப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள வாகனங்கள், இயந்திராதிகள் மற்றும் சிதைவுப் பொருட்கள் 145 இனங்காணப்பட்டதுடன் அதில் 37 வாகனங்கள் மீள் திருத்தத்திற்காக நீக்கப்பட்டன. கையுதிர்ப்புக் குழுவினால் அவ்வாறு இனங்காணப்பட்ட வாகனங்களில் மோட்டார் வாகனங்கள் 45 உம், பதிவு இரத்துச் செய்யப்பட்ட சிதைந்த இரும்பாக கையுதிர்ப்பதற்கு வாகனங்கள் 63 உம் பெயரிடப்பட்டுள்ளன. கையுதிர்ப்பின் எதிர்வரும் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு கேள்வி கோரல் (டெண்டர்) மூலம் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

3.3 அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் தகவல்களை இற்றைப்படுத்துதல்.

- அரச உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்காக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரியதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய அதிகார சபையின் உயர் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் கையிறுப்பில் உள்ள வாகனங்களின் முகாமைத்துவமானது சரியான பாதையில் ஆற்றுப்படுத்தப்பட்டது. அச்செயற்பாடுகள் பிரதான அலுவலகத்தில் செயற்படுத்தப்பட்டதுடன் அவ்வொழுங்குளை வலய அலுவலக மட்டத்தில் செயற்படுத்துவதன் ஊடாக விளைத்திறனான சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு காரணமாக இருந்தது.
- பிரதான அலுவலகத்தின் வாகன முகாமைத்துவத்தில் ஒதுக்கப்படுகின்ற வாகனங்கள் (உத்தியோகபூர்வ வாகன உரிமங்கள்) தவிர எஞ்சிய அனைத்து வாகனங்களின் போக்குவரத்தும் குழாமினால் முகாமைத்துவம் செய்யப்படும். நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக நாளாந்த வாகன கோரிக்கையானது மாதம் ஒன்றிற்கு 150 -175 வரையான அளவு முன்வைக்கப்படுவதுடன், மாதம் ஒன்றிற்கு வெளிக்களப் பயணங்கள் சுமார் 70 முன்வைக்கப்படுகின்றன. இவ்வனைத்து கோரிக்கைகளும் குழாமில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட சாரதி வளங்கள் (சாரதிகள் 18 பேர்) மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு போக்குவரத்துப் பிரிவிற்கு ஏற்பட்டு உள்ளது.
- இவ்வாறு ஒரு குழாமினுள் வாகனங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சரியான போக்குவரத்து முகாமைத்துவத்தை நிறைவேற்ற முடியுமாக இருப்பதுடன், போக்குவரத்து வசதிகளுக்காக அதிகார சபையினால் ஏற்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் ஏனைய செலவுகளை நிர்வகிப்பதற்கு முடியுமாக உள்ளது. இதற்கு மேலதிகமாக வாகனங்களின் முறையற்ற பயன்பாடு, மட்டுப்படுத்தப்பட்ட உழைப்பு மற்றும் காலத்தை சேமித்துக் கொள்வதற்கு போன்றே பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் தாக்கங்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கும் முடியுமானதாக உள்ளது.
- குழுவில் உள்ள வாகனங்களுக்கு நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய தினத்திற்கு வலய அலுவலகத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தகவல்களை வழங்குதல்.
- 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய, அதிகார சபையின் வாகனங்களின் எரிபொருள் தகனமடைவதை மீண்டும் பரிசீலிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- இவ்வாண்டில் பிரதான அலுவலகத்தில் ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் (உத்தியோகபூர்வ வாகன உரித்துள்ள) தவிர ஏனைய அனைத்து வாகனங்களையும் ஒரு குழுமத்தின் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன், அதிகார சபையின் கடமைத் தேவைகளுக்காக வாகனங்கள் மற்றும் சாரதிகளைப் ஒதுக்குவது போக்குவரத்துப் பிரிவின் மூலம் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது.
- இதன் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முறையற்ற வாகனப் பயன்பாடு, எரிபொருட்களுக்காக செலவிடுகின்ற தொகை, நிலவிய முகாமைத்துவப் பிரச்சினைகளை இயன்றளவு குறைப்பதற்கு முடியுமாக இருந்ததைப் போலவே நிலவுகின்ற குழாமின் மூலம் இயன்றளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. அரசாங்கத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான போக்குவரத்து முகாமைத்துவத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

3.5 வாகன விபத்துக்கள்

2021 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த (வலய அலுவலகங்கள் உட்பட) வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 21 என பதிவு செய்யப்பட்டு உள்ளதுடன், அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்த மட்டத்தில் உள்ளது.

4.0 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்.

- பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களில் போக்குவரத்துப் பிரிவிற்கான போக்குவரத்து உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவியமையானது செயற்பாட்டு முகாமைத்துவத்தை முறைப்படுத்துவதற்காக நிலவுகின்ற பிரதான சவால் ஆகும். இதனால் எதிர்வரும் காலத்தில் அவ் வெற்றிடங்களை நிரப்ப வேண்டி உள்ளது.
- அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய (சுபீட்சத்தின் நோக்கு) மோசடிகள் அற்ற வினைத்திறனான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கான கருப் பொருளை முதன்மையாகக் கொண்டு விளைத்திறனான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துக் குழாம் ஒன்றை முகாமைத்துவம் செய்வதற்கு நவீன/ நடப்புத் தொழில்நுட்ப முறைகளைப் (Information Communication Technology (ICT) , Global Positioning System (GPS), Fleet Management Soft wear (FMS) பின்பற்றுவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதிகார சபையில் எதிர்வரும் காலத்தில் இத்தொழில்நுட்ப முறைகளுக்கு அமைய செயற்படுவது தொடர்பாக விசே கவனத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- வாகனங்களை மீள் திருத்தம் செய்யும் போது வரையறைகள் இன்றி (பல மாதங்கள் மற்றும் பல வருடங்கள்) தாமதமடைதல் தொகுதி முகாமைத்துவத்தின் போது முகங் கொடுக்கின்ற பிரதான காரணியாக குறிப்பிட முடியும். வாகன மீள் திருத்தங்கள் மூலம் உள் மற்றும் வெளிப்புறம் என பிரதானமாக வகைப்படுத்த முடியும். வெளி பழுது பார்த்தல்களுக்காக டெண்டர் அல்லது விலை மனுக்கள் கோருதல் முன்னெடுக்கப்பட வேண்டுமாக இருந்தாலும், உள் பழுது பார்த்தல்களுக்கு அவ்வாறு செய்வதற்கு முடியாமல் உள்ளது. எவ்வாறாயினும், இந்நிலைமைகளை தெளிவுபடுத்தப்படாத காரணத்தால் மற்றும் கொள்முதல் ஒழுங்குமுறை சிக்கலான நிலைமைக்கு மாற்றிக் கொள்ளுதல் மற்றும் நிலைப்படுத்தாமையால் இவ்வாறான நிலைமைகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டு உள்ளது. முறையான சரியான பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு மற்றும் சுற்றறிக்கைகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பது மிக முக்கியமாகும்.
- போக்குவரத்துப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை சுயாதீனமாக நிறைவேற்றும் போது முகங் கொடுக்க வேண்டியுள்ள பாதிப்புக்களைக் குறைத்தல். இதில் இயந்திர வேலைத்தளம் (மோட்டார் வாகன மீள் திருத்தம்) வேறாக இல்லாமல் ஒரே கூரையின் கீழ் முகாமைத்துவம் செய்வதன் மூலம் விளைத்திறனான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துச் சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கை மகாவலி அதிகார சபை உட்பட பல அரச நிறுவனங்களின் போக்குவரத்துக் குழு முகாமைத்துவ நடவடிக்கைகள் 1970 தசாப்தம் தொட்டு நடாத்தப்பட்டு வருகின்ற சம்பிரதாய முறைகளின் ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பழமையான முறையானது இன்று உலகத்தில் நிலவுகின்ற நவீன முறைகளுடன் (தொழில்நுட்ப முறை) சமாந்தரமாக முன்நோக்கிக் கொண்டு செல்லுதல் யுகத்தின் தேவைகளாக குறிப்பிட முடியும்.

ஆகையால், இலங்கை மகாவலி அதிகார சபையில் அந் நவீன முறைகளைப் பின்பற்றுவதற்கு அவசியமான அடிப்படை நடவடிக்கைகளை நிறைவேற்றினாலும், அதற்கான மானியங்களை ஒதுக்கிக் கொள்ளும் போது நிலவிய அசௌகரியங்கள் காரணமாக அதனை முன்நோக்கிக் கொண்டு செல்ல வேண்டி ஏற்பட்டது.

எவ்வாறாயினும், நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தி சரியான விதத்தில் துரிதமான மற்றும் வினைத்திறனான போக்குவரத்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் எப்பொழுதும் முயற்சித்துக் கொண்டு இருக்கின்றோம். இவ்வாறு சமூக, பொருளாதாரத்தைப் போன்றே சூழலியல் பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கும், துரிதமான மற்றும் வினைத்திறனான விளைத்திறன் மிக்க சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமான வழிகள் தொடர்பாக எமது விசேட கவனத்தைச் செலுத்தி உள்ளதாக குறிப்பிட்டுக் கொள்கின்றேன்.

ஐந்தாவது அத்தியாயம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்.

நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார நடவடிக்கைகளின் ஒரு பகுதி முகாமைத்துவத்திற்காக பின்வரும் தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.
  Mahaweli Livestock & Agro Enterprises (Pvt) Ltd

- வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். (MCB)
  Mahaweli Consultancy Bureau (Pvt) Ltd

- இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். (NRMS)
  Natural Resources Management Services (Pvt) Ltd

2021 ஆம் ஆண்டில் நிறுவனங்களின் செயலாற்றுகை

தொடர் இலக்கம்	நிறுவனம்	வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்/ நிலைமை
01	வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.	❖ மாகாணத்தின் பால் விவசாயிகளிடம் இருந்து பால் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு அதன் மூலம் சேவைகளை வழங்குதல். ❖ பாலுடன் தொடர்புடைய உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் அவ் உற்பத்திகளை மகாவலி வலயங்கள் மற்றும் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்துதல். ❖ ஆண் மாடுகளான பயன்படுத்துவதற்காக நீர் எருமைகளின் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குதல். ❖ 2021 ஆம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளிலும் தரத்தில் உயர்ந்த புரொய்லர் இறைச்சி உற்பத்தி செய்து சந்தைப்படுத்தல். ❖ பெரும் போகத்தில் கிராந்துரு கோட்டை கால்நடை பண்ணையின் 200 ஏக்கருக்கு சோளம் பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் வயல்கள் 25 ஏக்கரில் பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்பட்டு உள்ளது. ❖ தம்மின்ன மிருகப் பண்ணையில் இரு போகங்கள் வித்து நெற்கள் 08 ஹெக்டயரில் (20 ஏக்கர்) பயிரச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ❖ சிறு அளவில் டிராகன் பழம் பயிரிடுதல்.
02	வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.	இந்நிறுவனமானது 2020.12.30 ஆம் திகதியில் இருந்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது.
03	வரையறுக்கப்பட்ட இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம்.	ஏலமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட பின்னர் சகல நிதிக் கூற்றுகளும் சட்டப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

வருடாந்த கணக்குகள்

பாகம் - II

31.12.2021 ஆம் திகதிக்கான நிதிக் கூற்றுக்கள்

		குழுமம்		அதிகார சபை	
		ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000
		2021	2020	2021	2020
	குறிப்பு				
சொத்துக்கள்					
நடைமுறை அல்லாத சொத்துக்கள்					
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	(1)	115,083.911	118,854,645	115,030,068	118,798,415
முதலீடுகள் (நீண்ட கால)	(2)	23,104	164,555	437,085	530,787
புலனாகாத சொத்துக்கள்		6	785	6	785
மூலதன பணிச் செயல்முறை		28,496	36,0333	28,496	36,033
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்		115,135,517	119,056,017	115,495,656	119,366,020
உயிரியல் சொத்துக்கள் – மூலதனம்	(3)	286,717	259,342	278,294	250,156
நடைமுறை சொத்துக்கள்					
சரக்கு இருப்புகள்/ இருப்புகள்	(4)	278,716	155,905	275,535	151,895
உயிரியல் சொத்துக்கள் – வணிகம்	(3)	41,118	42,721	40,242	42,363
வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள்	(5)	3,432,901	2,383,580	3,424,119	2,362,374
வங்கி உத்தரவாதங்கள்		-	377	-	-
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	(6)	1,177,597	667,498	1,175,376	662,746
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		4,930,332	3,250,081	4,915,272	3,219,378
மொத்த சொத்துக்கள்		**120,352,566**	**122,565,441**	**120,689,222**	**122,835,554**
பொறுப்புகள்					
நடைமுறை பொறுப்புகள்					
கொடுப்பனவுகள்	(7)	39,894,796	39,747,952	39,892,577	39,735,335
குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ்	(8)	104,067	94,563	67,279	54,804
பெருகிய செலவுகள்		39,998,864	39,842,515	39,959,856	39,790,139
மொத்த நடைமுறை பொறுப்புகள்					

நடைமுறை அல்லாத பொறுப்புகள்					
பணிக்கொடைக்கான ஏற்பாடு	**(9)**	1,343,221	1,424,246	1,332,168	1,410,245
பிற்போடப்பட்ட வரி		-	612	-	-
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்		1,343,221	1,424,858	1,332,168	1,410,245
மொத்த பொறுப்புகள்		41,342,085	41,267,373	41,292,025	41,200,384
மொத்த தேறிய சொத்துக்கள்		79,010,681	81,298,068	79,397,197	81,635,70
தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை					
நிதிக் கூட்டுத்தொகை	**(10)**	73,874,272	76,779,867	73,874,727	76,779,867
ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி		(490,550)	(1,156,391)	(96,412)	(763,578)
வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள்		-	48,288	-	-
மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் –		5,626,304	5,626,304	5,618,881	5,618,888
மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை		79,010,841	81,298,068	79,397,197	81,635,170

31.12.2021 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள்.

குழுமம்	அதிகார சபை			குழுமம்	அதிகார சபை
ரூ.'000	**ரூ.'000**			**ரூ.'000**	**ரூ.'000**
2020	**2020**			**2021**	**2021**
			அட்ட.		
		வருமானம்	**(01)**		
296,298	296,298	வாடகை		304,110	304,110
452,903	452,903	ஆதாய உரிமை		653,583	653,583
4,911	-	பண்ணை விளைபொருள் விற்பனை		8,859	-
10,403	6,319	முதலீட்டு வருமானம் (நிறுவனங்கள்)		6,478	6,478
192,489	192,489	ஏனைய வருமானங்கள்		3,336,532	3,336,532
957,005	**948,010**	**தோற்றுவிக்கப்பட்ட வருமானம்**		**4,309,562**	**4,300,703**
		கருவூல மானியம் -	**(02)**		

1,810,000	1,810,000	மீண்டுவரும்		2,161,937	2,161,937
823,258	823,258	மூலதனம்		3,314,843	3,314,843
112,977	112,977	விவசாய மற்றும் கால்நடை வளங்கள்		-	-
43,243	43,243	பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன புனரமைப்பு		-	-
3,746,483	**3,737,489**			9,786,341	9,777,483
		குறைந்த : செலவுகள்	**(03)**		
3,118,130	3,103,674	தனிப்பட்ட ஊதியம்		2,817,807	2,815,516
80,705	80,250	போக்குவரத்து /வாழ்க்கைப்படி		86,400	86,343
132,591	132,326	வழங்கல்கள் /போக்குவரத்து		154,543	154,543
68,195	68,149	தாபரிப்பு செலவினங்கள்		440,492	440,492
111,575	110,486	ஒப்பந்தவியல் பணிகள்		134,151	134,100
1,815	1,815	காப்புறுதி		1,950	1,950
92,125	83,795	ஏனைய செலவுகள்		97,007	91,633
657,078	653,007	பெறுமானத் தேய்வு		3,242,826	3,240,416
1,231,123	1,231,123	மறுசீரமைப்பு, மேம்பாடு மற்றும் ஏனைய தாபரிப்புக்கள்	**(04)**	2,495,308	2,495,308
		சமூக விருத்தி மற்றும் குடியேறியோருக்கான சேவைகள்			
16,295	16,295	சுற்றுப்பயண மாளிகையின் நட்டம்	**(05)**	36,400	36,400
1,471	1,471	அபிவிருத்தி மத்திய நிலையத்தின் இலாபம்		6,806	6,806
4,008	4,008	நீர் செயற்திட்ட முகாமைத்துவ நட்டம்		5,950	5,950
(1,183)	(1,183)	பயிற்சிப் பட்டறையின் நட்டம்/ இலாபம்		632	632
24,423	24,423	நாற்றுமேடையின் நட்டம்	**(06)**	34,430	34,430
(18,389)	(18,389)	பண்ணை நட்டம்/ இலாபம்	**(07)**	25,748	25,748
877	877	ஹெல போஜுன்ஹலவின் நட்டம்/ இலாபம்		293	293
(1,185,952)	(1,185,952)	மொரகஹகந்த மின் உற்பத்தி நிலைய நட்டம்/ இலாபம்		(459,736)	(459,736)
4,334,886	**4,306,175**	**மொத்த செயற்பாட்டுச் செலவுகள்**		**9,121,007**	**9,110,823**

(588,403)	(568,686)	**செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான மிகை/ (பற்றாக்குறை)**		(267,788)	665,334
(375)	(375)	நிலையான ஆதனங்களை அகற்றியமை – மேல. இலாபம் / நஷ்டம்	**(08)**	506	506
(588,778)	(569,061)	**வரியின் பின்னரான வருமானம்**		665,841	667,166
	-				
(589,250)	(245,703)	2021.01.01 ஆம் திகதிக்கு கொண்டு வரப்பட்ட மீதி		(1,156,391)	(763,578)
(1,178,028)	**(8,14,764)**	**தேறிய மிகை (பற்றாக்குறை) முன் கொண்டுவரப்பட்ட**		**(490,550)**	**(96,412)**

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	குழுமம்		**அதிகார சபை**
	ரூ.'000		**ரூ.'000**
இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்	665,841		667,166
பணமல்லாத நகர்வுகள்			
பெறுமானத் தேய்வு	4,245,462		4,243,052
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	(81,025)		(78,077)
உயிரியல் ஆதனங்களின் ஆதாய அதிகரிப்பு	(27,375)		(28,138)
ஆதனங்களின் உரிமை மாற்றங்கள்	(193,156)		(193,156)
ஆதன ஒப்படைப்பு	(507)		(507)
இயக்கச் செயற்பாடுகள்			
இருப்புக்களின் அதிகரிப்பு/ குறைவு	(122,811)		(123,640)
உயிரியல் ஆதனங்களின் அதிகரிப்பு/ குறைவு – வணிகம்	1,604		2,121
ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு/ குறைவு	(1,049,321)		(1,061,745)
வங்கி உத்தரவாதங்களின் அதிகரிப்பு/ குறைவு	377		-
கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/ குறைவு	146,844		157,242
அட்டுறுச் செலவுகளின் அதிகரிப்பு/ குறைவு	9,504		12,475

இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்	**3,595,438**		**3,596,794**
முதலீட்டுச் செயற்பாடுகள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(282,805)		(282,781)
புலனாகாத சொத்துக்களின் அதிகரிப்பு	778		778
சொத்து விற்பனைகளின் மூலமான உருவாக்கங்கள்	1,739		1,739
முதலீடுகளின் அதிகரிப்பு/ குறைவு	141,451		93,702
பணி முன்னேற்றங்களின் அதிகரிப்பு/ குறைவு	7,537		7,537
முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்	**(131,299)**		**(179,024)**
நிதிசார் செயற்பாடுகள்			
திரண்ட நிதி மற்றும் ஒதுக்குகளின் அதிகரிப்பு/ குறைவு	(612)		-
நிதிசார் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(2,954,039)**		**(2,905,140)**
காசு மற்றும் காசு உரிமையாண்மைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	**510,099**		**512,630**
01.01.2021 ஆம் திகதிக்கு காசு மற்றும் காசு உரிமையாண்மைகள்	667,498		662,746
31.12.2021 ஆம் திகதிக்கு காசு மற்றும் காசு உரிமையாண்மைகள்	**1,177,597**		**1,175,376**

<u>உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – குழுமம்</u>

	ரூ.'000	**ரூ.'000**	**ரூ.'000**	**ரூ.'000**
விபரம்	**ஒருங்கிணைக்கப்பட்ட நிதி**	**ஒதுக்குகள்**	**வருமானங்கள் மற்றும் செலவினங்கள்**	**மொத்தம்**
01.01.2020 ஆம் திகதிக்கு மீதி	76,826,891	5,077,151	(585,814)	81,318,228
ஆண்டின் போது	145,774	547,305	(588,778)	104,301
மாறுபட்ட வருமானம்	(42,740)			(42,740)
31.12.2020 ஆம் திகதிக்கு மீதி	**76,926,922**	**5,624,456**	**(1,178,028)**	**81,373,350**
01.01.2021 ஆம் திகதிக்கு மீதி	**76,779,867**	**5,626,304**	**(1,156,391)**	**81,249,780**

ஆண்டின் போது	282,781			
மாறுபட்ட வருமானம்	(3,187,920)	-	-	**(3,187,920)**
NRMS	(3,003)	-	(3,436)	**(6,439)**
31.12.2021 ஆம் திகதிக்கு மீதி	**73,874,727**	**5,626,304**	**(490,550)**	**79,010,481**

உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – மகாவலி அதிகார சபை

	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000
	ஒருங்கிணைக்கப்பட்ட நிதி	**ஒதுக்குகள்**	**வருமானங்கள் மற்றும் செலவினங்கள்**	**மொத்தம்**
	நிதி	-	**செலவினங்கள்**	**81,647,912**
01.01.2020 ஆம் திகதிக்கு மீதி	76,823,887	5,069,728	(245,703)	124,018
ஆண்டின் போது	145,774	547,305	(569,061)	(42,740)
மாறுபட்ட வருமானங்கள்	(42,740)	-	-	
31.12.2020 ஆம் திகதிக்கு மீதி	**76,926,921**	**5,617,033**	**(814,764)**	**81,729,190**
01.01.2021 ஆம் திகதிக்கு மீதி	76,779,867	5,618,881	(763,578)	81,635,170
ஆண்டின் போது	282,781	-	667,166	949,947
மாறுபட்ட வருமானங்கள்	(3,187,920)	-	-	(3,187,920)
31.12.2021 ஆம் திகதிக்கு மீதி	**73,874,727**	**5,618,881**	**(96,412)**	**79,397,197**

நிதிக் கூற்றிற்கான பிரமாணக் குறிப்புக்கள்

1.) அறிக்கையிடல் நிறுவனம்

இலங்கை மகாவலி அதிகார சபை (MASL) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. (MDP.)

மகாவலி சட்டத்தின் பிரகாரம், எந்தவொரு விசேட பிரதேசத்திலும் அல்லது அது தொடர்பில் அதிகார சபையின் பணிகள் பின்வருமாறு இருக்கும்.

அ) நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல், நீர்ப்பாசன விநியோக முறைமை மற்றும் மின் சக்தி உற்பத்தி மற்றும் வழங்கல் போன்ற மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தை திட்டமிட்டு அமுல்படுத்துதல்.

ஆ) எவ்வாறாயினும், மின் சக்தி விநியோகம் தொடர்பான செயல்பாட்டை வேறு எந்த எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழும் செய்யத் தகுதிவாய்ந்த எந்த அதிகாரியும் விடுவிக்கலாம்.

இ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல்.

ஈ) விவசாய உற்பத்தித் திறனையும் வேலைவாய்ப்பு திறனையும் மேம்படுத்துதல் மற்றும் எந்தவொரு சிறப்புப் பகுதிக்குள் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல்;

உ) ஏதேனும் ஒரு சிறப்புப் பகுதிக்குள் பௌதிக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

ஊ) எந்தவொரு விசேட பிரதேசத்திலும் சமூகத்தின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அத்தகைய பகுதியின் விவகாரத்தை நிர்வகித்தல்.

எ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியிலும் உள்நாட்டு மற்றும் வெளி மூலதனத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும்

ஏ) மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தைத் திட்டமிடுதல் மற்றும் அமுல்படுத்துதல் மற்றும் ஏதேனும் விசேட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நபர்களின் ஒத்துழைப்பை தனியார் அல்லது பொது மக்களின் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அதே சட்டத்தின் 12 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை மகாவலி அதிகாரசபையானது மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம், மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம், மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) நிறுவனம், மற்றும் மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் நிறுவனம் ஆகிய நான்கு துணை நிறுவனங்களையும் ஒரு இணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது.

அனைத்து துணை நிறுவனங்களும் மற்றும் இணை நிறுவனமும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு பின்வரும் கொள்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பங்கு மூலதனத்தின் விளக்கங்கள் பின்வருமாறு

நிறுவனம்	ஒரு பங்கிற்கான பெறுமதி	வழங்கப்பட்ட மற்றும் பூரணமாக செலுத்தப்பட்ட பங்கு மூலதனங்களிக் பங்குகளின் எண்ணிக்கை	மகாவலி அதிகார சபைக்கு வழங்கபட்ட பங்குகளின் எண்ணிக்கை
1)மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.	ரூ. 10.00	6385	6384
2)இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம்	ரூ. 10.00	1502	1500
3) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்	ரூ. 10.00	1,039,803	1,039,800
4)மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.	ரூ. 10.00	3	-

மகாவலி நிறுவனங்களின் கொள்கை நடவடிக்கைகள்

துணைமை அலகுகள்.

அ) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்

- மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.
- நிறுவனத்திற்கான நிதியை உருவாக்க வணிக முயற்சியை மேற்கொள்ளுதல்.

ஆ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம்

- இயற்கை வளங்கள் துறையில் தொழில்முறை ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குதல்
- மேலாண்மை வடிவமைப்பு மற்றும் பயிற்சி, நீரியல் கண்காணிப்பு, நிலப் பயன்பாட்டு வரைபடம், நீர்ப் பிடிப்பு பாதுகாப்பு மற்றும் வனவியல் போன்றவை.
- தகவல் மற்றும் தரவுகளை வழங்குதல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளை தயாரித்தல்,
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் (EIA), ஆரம்ப சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் (IEER) போன்றவை.

இ) மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.

- மகாவலி விவசாயிகளுக்கு உயர்தர விலங்குகளை கிடைக்கச் செய்வது.
- பால் மற்றும் இறைச்சி பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ஈ) மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.

- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

இணைக்கப்பட்ட நிறுவனங்கள்

அ) மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் (நிறுவனம்)

- பிராய்லர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.
- மகாவலி விவசாயிகளுடன் பிராய்லர் மீள் கொள்வனவு ஏற்பாடுகள்.

எனினும், மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது 2012 ஆம் ஆண்டில் மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனத்தை கலைக்க முடிவு செய்தது. இதன் மூலம் இந்த நிறுவனத்தின் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. பின்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறிப்பு அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டன.

2) தயாரிப்பு அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

நிதிக் கூற்றுக்களானது நிதி நிலைமை, நிதிச் செயல்திறன் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்,மற்றும் நிதி கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறை கணக்கியல் தரத்திற்கு (SLPSAS) இணங்க இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் முந்தைய நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்திருக்கின்றன.

2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கும் எந்தவொரு சீராக்கலும் மேறகொள்ளப்படவில்லை.

2.3 செயல்பாட்டு மற்றும் விளக்கக்காட்சி நாணயம்

இலங்கை ரூபாயிலேயே நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ரூபாய்களில் அளிக்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் மிக அருகில் உள்ள ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை (SLPSAS) உடன் இணங்கிய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு, கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் அறிவிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள், வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளில் நியாயமானவை என்று நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட பிற காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே உண்மையான அனுபவமும் முடிவும் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்களைத் தொடர்ந்து அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளின் திருத்தமானது அந்த காலகட்டத்தையும் எதிர்கால காலங்களையும் மட்டுமே பாதிக்கும் பட்சத்தில் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்ட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.5 கணக்கியல் கொள்கைகளின் மாற்றங்கள்

பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பின்வருனவை தவிர முந்தைய நிதியாண்டின் கணக்குக் கொள்கைகளுடன் ஒத்திருக்கின்றன.

2.5.1 தனிப் பண்ணைகள், தாவர நாற்று மேடைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவை குறிப்பிட்ட மகாவலி அமைப்புகளின் கீழ் தனித்தனி வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளாக கணக்கிடப்பட்டு உள்ளன.

2.5.2 உயிரியல் சொத்துக்கள் நியாயமான மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன. விவசாய கணக்கிலிருந்து ஆதாயம் அல்லது இழப்பு அடையாளம் காணப்படுகிறது.

2.5.3 நடப்பு நிதியாண்டில் கணினிகள் மற்றும் துணைக் கரிவிகளின் மீள் மதிப்பீடு காரணமாக மீள் மதிப்பீட்டு உபரி ரூ. 547,347 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.

3) குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் அந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலத்திற்கும் தொடர்ந்து பொருந்தும்.

3.1 ஒருங்கிணைப்பு அடிப்படை

3.1.1 ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களானது ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தயாரிக்கப்படுகின்றன. இதில் பெற்றோர் மற்றும் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகளை ஒருங்கிணைப்பது அறிக்கையின் முடிவு மற்றும் பங்கு முறையின் அடிப்படையில் அடங்கும். இவ்வாறாக, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானது இ.மா.அ.ச. பற்றிய நிதித் தகவல்களை ஒற்றைப் பொருளாதார அலகாக முன்வைக்கின்றன.

3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

3.2.1 சொத்துக்கான செலவானது அதன் மீள் மதிப்பீட்டு விலை, கொள்முதல் விலை அல்லது கட்டுமானச் செலவு மற்றும் அதன் நோக்கமான பயன்பாட்டிற்காக சொத்தை வேலை நிலைக்குக் கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் செலவு ஆகியவற்றை உள்ளடக்கியது. 2021.01.01 ஆம் திகதி முதல் அனைத்து மோட்டார் வாகனங்களும் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

3.2.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் செலவு அல்லது மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்மானத்தின் ஏற்பாடு கணக்கிடப்படுகிறது. இதனால் சொத்து வகையின் மதிப்பிடப்பட்ட வாழ்க்கைக்கு பொருத்தமான காலத்தில் சொத்துச் செலவு சீர் செய்யப்படுகிறது. சொத்துக்கள் பயன்படுத்துவதற்குக் கிடைக்கும் போது தேய்மானம் வசூலிக்கப்படுகிறது மற்றும் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதத்தில் தெளிவுபடுத்தப்படும் திகதியின் தொடக்கத்தில் நிறுத்தப்படும். மோட்டார் வாகனங்களின் 10% காட்சித் திரை மதிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேய்மான விகிதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அனுமதிக்கப்படுகிறது.

01	கட்டிடங்கள் – அலுவலகம்	2 ½ %	ஆண்டொன்றிற்கு
	ஏனையவை	5%	ஆண்டொன்றிற்கு
02	மோட்டார் வாகனங்கள்	20%	ஆண்டொன்றிற்கு
03	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பொருட்கள்	15%	ஆண்டொன்றிற்கு
04	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - மின் பிறப்பாக்கிகள்	15%	ஆண்டொன்றிற்கு
05	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கட்டுமானங்கள்	15%	ஆண்டொன்றிற்கு
06	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - பொதுவானவை	15%	ஆண்டொன்றிற்கு
07	தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	10%	ஆண்டொன்றிற்கு
08	கணினி மற்றும் துணைக்கருவிகள்	20%	ஆண்டொன்றிற்கு
09	கால்வாய்கள்	4%	ஆண்டொன்றிற்கு
10	அணைக்கட்டுகள்	1%	ஆண்டொன்றிற்கு

3.3 முதலீடுகள்

3.3.1 இணை நிறுவனங்களில் முதலீடு செய்தல்.

இணை நிறுவனத்திலான முதலீடானது செலவுக் கணக்கில் மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் ஒரு நீண்ட கால முதலீடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டு நிறுவனத்தின் நிதி மற்றும் இயக்க கொள்கை முடிவுகளில் அதிகார சபைக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு இல்லை, எனவே உரிமையாண்மை முறையை ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றது.

3.3.2 பிற முதலீடுகள்

பிற முதலீடுகள் இருப்புநிலைக் குறிப்பில் நீண்ட கால முதலீடாகக் கருதப்பட்டு, செலவில் குறிப்பிடப்படுகின்றன.

3.4 சரக்கு இருப்புகள்

சரக்கு இருப்புகளானது குறைவான செலவு மற்றும் தேறிய உணரக்கூடிய பெறுமதியாக மதிப்பிடப்படுகின்றன. மெதுவாக நகரும், குறைபாடுள்ள மற்றும் காலாவதியான பங்குகளுக்கு தேவையான இடங்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.5 வணிக மற்றும் பிற பெறுகைகள்

வணிகம் மற்றும் பிற பெறுகைகள் அடைய மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.6 பணம் மற்றும் பண உரிமையாண்மை.

பணம் மற்றும் பண உரிமையாண்மை என்பன பண மீதிகள் மற்றும் வங்கி மேலதிகபற்று ஆகியவற்றிற்கு இணங்கியது ஆகும், அவை தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படுகின்றன மற்றும் இ.ம.அ.ச. இன் பண முகாமைத்துவத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன. அவை பணப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக பணத்தின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளது.

3.7 வெளிநாட்டு உதவி

2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நன்கொடை முகவர் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த கொடுப்பனவுகளில் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துதல். வெளிநாட்டு நாணயங்களில் செலவீனங்களானது கொடுப்பனவு திகதிகளில் நிலவும் செலாவணி வீதங்களின் மீது ரூபாவுக்கு மாற்றப்பட்டன.

3.8 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

இருப்புநிலைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் பொறுப்புகள், இருப்புநிலைக் குறிப்பு திகதியில் இருந்து தேவையின் பேரில் அல்லது ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடு ஆகும். நடப்புப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் விடயங்கள் இருப்புநிலைக் குறிப்புத் திகதியில் இருந்து ஓராண்டு காலத்திற்கு மேல் காலாவதியாகும் கடப்பாடுகள் ஆகும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

3.9 ஓய்வு பெறும் உதவித் திட்டம்

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் கணக்கீடு, நிதியாண்டின் இறுதியில், சேவையின் முதல் ஆண்டிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும் அரை மாத தகுதிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டது.

3.10 வருமானக் கூற்றுக்கள்

3.10.1. இ.ம.அ.ச வருவாய் என்பது பொது கருவூலத்திலிருந்து பெறப்பட்ட மீண்டும் மீண்டும் கிடைக்கும் மூலதன மானியம் மற்றும் குத்தகை வாடகை வருவாய், அரசு நிலத்திலிருந்து குத்தகை வாடகை வருமானம், குடியிருப்புகளிலிருந்து பெறப்பட்ட வாடகைகள் மற்றும் பங்குவீத உரிமை மற்றும் முதலீடு மற்றும் வட்டியிலிருந்து பெறப்பட்ட வருமானம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

3.10.2 வருவாய் என்பது, அந்த பொருளாதார நன்மைகள் இ.ம.அ.சபைக்கு பாயும் என்றும், நம்பத்தகுந்த வகையில் அளவிடப்பட முடியும் என்றும் அறியப்படுகின்றது.
மற்ற வாடகைகள், பங்குவீத உரிமைகள், வட்டி வருமானம் ஆகியவை ஒரு திரட்டல் அடிப்படையில் அறியப்படுகின்றது.

3.10.3 அரச மானியங்களானது 'மூலதன மானியம் மற்றும் மீண்டுவரும் மானியங்கள்' என அறியப்படுகின்றது.
மானியங்களானது ஈடுசெய்ய உத்தேசித்துள்ள தொடர்புடைய செலவினங்களாக அறியப்படுவதுடன், இ.ம.அ.ச. அங்கீகரிக்கும் காலகட்டங்களில் முறையான அடிப்படை ரீதியில் மீண்டுவரும் மானிய இலாபம் அல்லது இழப்பாக அறியப்படுகின்றது.
நிதி நிலை கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான மூலதன மானியங்களானது வேறுபட்ட வருமானமாக மானியங்களாக இருந்து பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கை மீதுள்ள முறையான அடிப்படை மீதான நிதி செயல்திறன் அறியப்படுகின்றது.

3.11 செலவினம்

நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் செயல்திறன் நிலையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைப் பராமரிப்பதற்கான அனைத்து செலவுகளும் ஆண்டுக்கான இலாபம் / இழப்பை அடைவதில் வருமான அறிக்கைக்கு வசூலிக்கப்பட்டுள்ளன. மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான அனைத்து அறியப்பட்ட பொறுப்புகள் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.12 இருப்புநிலைக் குறிப்புக்குப் பிந்தைய நிகழ்வுகள்

இருப்புநிலைக் குறிப்புத் திகதிக்குப் பிறகு நிகழும் அனைத்து பொருள் நிகழ்வுகளும் தேவையான இடங்களில் சீர் செய்யப்பட்டன.

3.13 தற்செயல் நிகழ்வுகள்

31.12.2021 ஆம் திகதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு வழக்குகளின் மீதான தொடர்ச்சியான தற்செயல் பொறுப்பு 62.631 மில்லியன் ரூபாய் ஆகும்.

3.14 முடிவுருத்தல்

வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிறுவனமானது கடன் வழங்குனர் தன்னார்வ முடிவுருத்தலின் கீழ் உள்ளது.

மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்,

2021.12.31 ஆம் திகதியின் போதான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

(கடன்வழங்குனர் தன்னார்வ முடிவுருத்தலின் கீழ்)

சொத்துக்கள்	**குறிப்பு**	2021 **ரூ.**	2020 **ரூ.**
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	07	3	3
முதலீடு	08	2,794,671	2,749,671
		2,794,671	**2,749,671**
நடைமுறை சொத்துக்கள்			
சிங்கர் இயந்திர இருப்புக்கள்		29,480	29,480
வட்டிப் பெறுகைகள்	10	380,726	380,726
அழுத்தமான கட்டுப்பாட்டுக் கணக்கு		28,336	28,336
வருமான வரி மீளளிப்பு		62,008	62,008
ஏனைய பெறுகைகள்	11	25,000	25,000
கருவூல கட்டணப் பட்டியல்கள்		9,455,896	9,455,896
வங்கியல் உள்ள தொகை	12	4,466,061	4,068,828
கையிருப்பில் உள்ள தொகை		2,521	2,521
		14,450,028	**14,052,795**
		17,244,702	**16,847,469**
மொத்த சொத்துக்கள்			
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்			
உரிமையாண்மை மற்றும் ஒதுக்குகள்			
குறிப்பிடப்பட்ட மூலதனம்	06	10,398,000	10,398,000
பெறப்பட்ட நிதி ATI		150,325	150,325
பெறப்பட்ட நிதி EEC		10,000,000	10,000,000
சபையில் இருந்தான பங்களிப்பு		432,000	432,000
வைத்திருக்கப்படும் இலாபங்கள் (இழப்புக்கள்)		(4,196,788)	(4,594,021)
மொத்த உரிமையாண்மை		**16,783,537**	**16,386,304**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறுச் செலவுகள்	13	71,183	71,183
பல்வேறு பற்றாளர்கள்		310,025	310,025
மொத்த மீதியின் முன்கூட்டிப் பெறப்பட்ட வட்டி		79,957	79,957
மொத்த பொறுப்புக்கள்		**461,165**	**461,165**
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		17,244,702	16,847,469

3.15 அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகளின் சொத்துக்கள்.

2021.12.31 ஆம் திகதியாகும் போது மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகள் ஆகியவற்றின் சொத்துக்களின் சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

3.15.1 குளங்களின் எண்ணிக்கை

வலயம்	குளங்களின் எண்ணிக்கை	குளத்தின் கொள்ளளவு (ஹெக்டயர், அடி)	அணையின் உயரம் (மீட்டர்)	அணையின் நீளம் (மீட்டர்)	குளத்தின் பரப்பளவு (ஹெக்டயர்)
பி வலயம்	76	10,204	-	-	18,214
சி வலயம்	52	20,461	132	-	399
டி வலயம்	52	28,110	-	-	-
ஜி வலயம்	17	708	277	6,567	-
எச் வலயம்	127	23,031	253.	11,682	2,888
எல் வலயம்	31	30,426	-	-	-
வலவ வலயம்	22	54,948	-	-	-
ரம்பகண் ஓயா	73	48,270	-	-	-
ஹுருளு வாவி	13	6,511	31	-	1,090
கூட்டுத்தொகை	**463**	**222,669**	**693**	**18,249**	**22,591**

3.15.2 வீதிகள்

வீதிகள்	வலவ வலயம் (km)	எல் வலயம் (km)	பி வலயம் (km)
பிரதான வீதிகள்	100.0	51.0	549.0
சிறு கிராமிய வீதிகள்	250.0	-	-
சந்தை வீதிகள்	12.5	-	-
விவசாய வீதிகள்	25.0	-	-
பாலங்கள்	5.0	-	-
மதகுகள்	125.0	-	-
ஆற்றிடைப் பாதை	10.0	-	-
கூட்டுத் தொகை	**527.5**	**51.0**	**549.0**

3.15.3 நீர் விநியோகம் மற்றும் கிணறுகள்

வீதிகள்	எல் வலயம் (எண்ணிக்கை)	ஹுருளுவெவ (எண்ணிக்கை)
குடிநீர்க் கிணறுகள்	350.0	-
விவசாயக் கிணறுகள்	150.0	297.0
ஆழ் துளைகள்	100.0	-
மேல் நிலைத் தொட்டிகள்	100.0	-
விவசாய ஆலை	-	1.0
குழாய்க் கிணறுகள்	-	48.0
கூட்டுத் தொகை	**700.0**	**346.0**

3.15.4 அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை

அணைக்கட்டு	செலவினம் (பில்லியன் ரூபாய்)
கொத்மலை	13.0
விக்டோரியா	9.8
ரன்தெனிகல	5.8
ரண்தம்பே	3.2
பொல்கொல்லை	0.09
போவதென்ன	0.05
மினிப்பே	0.65
ரத்கிந்த	1.9
மாதுறு ஓயா	2.6
உடவலவ	0.14
சந்திரிக்கா வாவி	0.08
கூட்டுத் தொகை	**37.31**

3.15.5 இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள்

வலயம்	மொத்த காணிகள் (ஹெக்டயர்)	கையுதிர்க்கப்பட்ட காணிகள் (ஹெக்டயர்)	எஞ்சியுள்ள காணிகள் (ஹெக்டயர்)
பி வலயம்	95,687.0	28,448.0	67,239.0
சி வலயம்	52,564.0	41,024.0	11,540.0
டி வலயம்	16,396.0	1,597.0	14,799.0
எச் வலயம்	80,803.0	33,191.0	47,612.0
ஜி வலயம்	11,940.0	9,560.0	2,350.0
எல் வலயம்	37,338.0	4,762.0	32,576.0
விக்டோரியா	311,118.0	3,384.0	307,576.0
வலவ வலயம்	57,775.0	34,506.0	23,296.0
ஹுருளு வெவ	9,704.0	6,904.0	2,800.0
ரம்பகண் ஓயா	134,002.0	6,111.0	127,891
கூட்டுத் தொகை	**807,327.0**	**169,517.0**	**637,810.0**

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பாகம் - III

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் - IWR/B/MASL/01/21/19

திகதி - 2022 செப்டம்பர் 06 ஆம் திகதி

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை.

இலங்கை மகாவலி அதிகார சபையின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண அவசியங்கள் குறித்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது உறுப்புரைக்கு அமைவான கணக்காய்வாளர் நாயக அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகளைக் கொண்ட 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. அரசியமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையானது பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர, இலங்கை மகாவலி அதிகார சபையின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினை மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை உறுதி செய்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) அதிகார சபையினால் நிர்வாக மற்றும் தாபரிக்கப்படுகின்ற 06 வலயங்களின் 9,237.9 கி.மீ. நீளமான கால்வாயாகது 74,989 மில்லியன் ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும், அக்கால்வாயானது தொழில் தகைமைகளுடன் கூடிய ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரோ அல்லது விலை மதிப்பீட்டுச் சபை

ஒன்றாலோ முன்னெடுப்பதற்கு தவறியுள்ளது. இதனால் அவ்விலை மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாது.

(ஆ) அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் நிலவுகின்ற ஆதனங்களாக 463 குளங்கள் மற்றும் 11 ஆணைக்கட்டுகள் தொடர்பான விபரம் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டு இருந்தாலும், அக்குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் உரிமையானது மகாவலி அதிகார சபைக்கு உள்ளதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டங்களில் இருந்து ரூ. 671,503,748 உம், மொரகஹகந்த செயற்திட்டத்தின் மூலம் ரூ. 430,418,733 உம், காலநிலைப் பாதிப்பைக் குறைக்கும் செயற்திட்டத்தின் மூலம் ரூ. 325,457,540 ஆதனமும் அதிகார சபைக்குக் கிடைக்கப் பெற்று இருந்தாலும், மீளாய்வு வருடமாகும் போது முறையே, ரூ. 537,950,118, ரூ. 225,822,896, மற்றும் ரூ. 185,391,238 ஆதனம் மாத்திரம் கணக்கில் குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும், மொரகஹகந்த செயற்திட்டம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைக்கு அமைய, அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்ட ஆதனங்களின் பெறுமதி ரூ. 586,015,546 ஆகும். அவ்வாறாயினும், இவ் வேறுபாடு தொடர்பாக பரிசீலித்து நிதிக் கூற்றுடன் பொருத்துவற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) மகாவலி ஆலோசனைகள் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனமானது 2020 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதியில் இருந்து நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காரணத்தால் 2021 ஆம் ஆண்டிற்குரிய ஒருங்கிணைந்த நிதிக் கூற்றின் மூலம் அந்நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கைவிடப்பட்டு இருந்தன. அவ்வாறாயினும், இவ் ஒப்படைப்பிற்குரியதாக முன்னெடுக்கப்பட்ட கணக்குப் பொருத்த விபரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத காரணத்தால் உரிய ஒப்படைப்புக்கள் நிதிக் கூற்றுகளில் பொருத்துதல் சீர்மையானது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் போனது.

(உ) எம்பிலிபிடிய வலயத்தில் வணிகக் காணிகளை குத்தகைகு வழங்கிய வருமானமான ரூ. 2,688,000 ஆனது வருமானமாக குறிப்பிடாமல் வியாபார பற்றாளர்கள் என குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால் வருடத்தின் இலாபமானது அப்பெறுமதியில் இருந்து குறைவாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஊ) முரவெசிஹேன முன்மொழியப்பட்ட அலுவலகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்குரியதாக ரூ. 478,496 பெறுமதியான வெட் மற்றும் ரூ. 1,446,980 பெறுமதியான மூலப் பொருள் முற்பணம் அக்கணக்குகளுக்கு பற்று வைப்பதற்குப் பதிலாக சேர்க்கப்பட்ட பெறுமதி ரூ. 1,925,476 ஆனது முன்னெடுக்கப்படுகின்ற பணிகளின் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டதன் காரணமாக முன்னெடுக்கப்படுகின்ற பணியானது ரூ. 1,925,476 இனால் அதிகமாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

(எ) மொரகஹகந்த செயற்திட்டத்தின் கணக்கிற்கு அமைய கடன் பெறுதல் மற்றும் கடன் வழங்கிய பெறுமதிகள் முறையே ரூ. 108,452,464 மற்றும் ரூ. 907,550 ஆக இருந்தாலும் அதிகார சபையின் கணக்குகளில் அப்பெறுமதிகள் முறையே, ரூ, 11,645,087 மற்றும் ரூ. 38,388,969,995 குறிப்பிடப்பட்டு இருந்தது. அதற்கமைய முறையே கடன் பெறுதல் மீதியானது ரூ. 10,737,537 மற்றும் கடன் வழங்கிய மீதியானது ரூ. 38,280,517,531 குறைவாக நிதிக் கூற்றில்

குறிப்பிடப்பட்டு இருந்தாலும், இவ்வித்தியாசம் தொடர்பாக பரிசீலித்து நிதிக் கூற்றுகளுக்கு பொருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) 2015 - 2018 காலப் பகுதியில் ரூ. 80,000,000 செலவில் வெலிகந்த மற்றும் வெலி ஓயா வலயங்களில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரசாலைகள் 30 ஆனது 2020 நிதிக் கூற்றில் நிரந்தர ஆதனங்களாக கணக்கில் இடப்பட வேண்டியதற்குப் பதிலாக பணிப்பாளர் சபையின் அனுமதி இன்றி செலவினமாக பதிவழிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே, அவற்றின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் ஒப்பந்தம் மூலம் உரிய விவசாய அமைப்பிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஐ) இலங்கை அரச பிரிவின் கணக்கிடல் தர நியமம் 07 இல் 47 ஆவது பந்தியின் பிரகாரம் நியாயமான பெறுமதியானது கருத்திற் கொள்ள வேண்டிய அளவு மாறுகின்ற மற்றும் அவசரமாக மாற்றங்களுக்கு உள்ளாகின்ற ஆதனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கில் இடப்பட வேண்டும் எனிலும், அதிகார சபையினால் 1984 - 1989 காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆகுசெலவு ரூ. 64,320,853 பெறுமதியான காணித் துண்டுகள் 02 தொடர்பாக அவ்விதத்தில் செயற்பட்டு இருக்கவில்லை என்பதுடன், அவற்றின் ஆகுசெலவானது கணக்கில் இடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, அதிகார சபையினால் தமது வலய அலுவலகங்ள், பிரிவுகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் போன்றவை அமைந்துள்ள காணிகள் இனங்காணப்பட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்கியதாக என்னால் கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டது. இக்கணக்காய்வு நியமத்தின் கீழான எனது பொறுப்பு, இவ் அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது. எனது முனைப்பழியுள்ள அப்பிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றை வழங்கும் நோக்குடன் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் பொருண்மையானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய விபரங்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கி உள்ள எனினும், நிதிக் கூற்று மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்று தொடர்பான எனது கருத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாது என்பதுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் உறுதியளிக்கவோ கருத்து தெரிவிக்கவோ மாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பான எனது கணக்காய்விற்கு உரியதாக, எனது பொறுப்பாக இருப்பது யாதெனில் மேற்குறிப்பிட்ட இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியுமான போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடனோ அல்லது கணக்காய்வின்

போதோ வேறு விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவிற்கு அமைய பொருண்மையான விதத்தில் பொருத்தம் அற்றதா என்று கருத்தில் கொள்வதாகும்.

அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருண்மையான அளவு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது என நான் ஊகித்தால் பிழை திருத்தம் செய்வதற்காக நிர்வகிக்கின்ற தரப்பினருக்கு அவ்விடயம் தொடர்பாடல் செய்யப்படல் வேண்டும். மேலும் பிழை திருத்தம் செய்யப்படாமல் பிழையாக குறிப்பிடப்பட்டு இருப்பின் அவை அரசியலமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரைக்கு அமைய என்னால் காலப்போக்கில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகிக்கின்ற தரப்புகளின் பொறுப்புக்கள்.

இந்நிதிக் கூற்றானது இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு எண்ணுவதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத வேளைகளில் தொழிற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தைத் தவிர தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் அதிகார சபையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதிகளை ஆவணமாக்கும் செயன்முறைகள் தொடர்பான பொறுப்பானது நிர்வாகிக்கும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) உப உறுப்புரைக்கு அமைய அதிகார சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயன்ற வகையில் சுய வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்து வர வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்.

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்பொழுதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகமோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்

கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்களில் ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புரை மற்றும் தொழில்சார் சந்தேக கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அப்பிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் விலை மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படும். பிழையாக குறிப்படுவதால் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, பிழையான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைத் தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமலாயினும்,, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிர்வாகம் தொடர்பாக பரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் முறைமைகளின் பொருத்தமுடைமை, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் அனுமானிப்பதாயின் நிதிக் கூற்றுக்களுக்கு அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனத்தை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையானதாக இல்லை எனில் எனது அபிப்பிராயத்தை திரிவுபடுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பானது முடிவடையக் கூடும்.

- நீதிக் கூற்றுக்களின் கட்டமைப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு உள்ளமை மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத் தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, இவ் அறிக்கையில் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்களின் கீழ் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், எனது பரிசீலனையின் மூலம் விளங்குகின்ற விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை அதிகார சபையானது பேணி வந்துள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.2 (அ),(இ) மற்றும் (ஐ) பந்திகளில் உள்ளடக்கப்பட்டு உள்ள பரிந்துரைகளைத் தவிர ஏனைய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளுக்கு அமைய மற்றும் பொருண்மையான காரணிகளுக்கு மட்டுப்படுத்துவதன் மூலம், பின்வருவனவற்றை பிரகடனப்படுத்தும் அளவிற்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (இ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையில் எவரேனும் ஒரு உறுப்பினரிற்கு அதிகார சபை சம்பந்தப்பட்டு ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதமாக பொதுவான வியாபார நிலைமையைத் தாண்டி தொடர்பு உள்ளதாக.

.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர வேறு ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டம் ஒன்றிற்கோ அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையின் மூலம் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

சட்ட திட்டங்கள்/ ஆணைக்கு ஆற்றுப்படுத்துல்	**அவதானிப்பு**
---	---

(அ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண இலக்கம் 1646	வாகனங்களின் நாளாந்த ஓட்டத்திற்குரிய குறிப்புக்கள் உரிய மாதத்தின் பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனிலும், அதிகார சபையின் பிரதான அலுவலகத்தின் 57 வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்பானது 2021 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி கணக்காய்வால் கோரப்பட்டு இருந்தாலும், அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.
(ஆ)	1970 ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதிய 803 ஆம் இலக்க திறைசேறி மற்றும் அரச நிர்வாக சுற்றிக்கை	அரசாங்கத்தின் அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்டு இருக்க வேண்டும் எனினும் அதிகார சபையின் எந்தவொரு வாகனம் தொடர்பாகவும் அவ்வாறு செயற்பட்டு இருக்கவில்லை.
(இ)	2003 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 02 ஆம் திகதிய பீ.இ.டி/12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் உறுப்புரை	நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்று மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும் எனினும், மீளாய்வு வருடத்தின் நிதிக் கூற்றுடன் வரைவு ஆண்டறிக்கை முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.
(ஈ)	2015 மே மாதம் 25 ஆம் திகதிய 1/2015 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கை	
	(i) 3.1 ஆம் உறுப்புரை	உத்தியோகபூர்வ வாகனங்களை உடைய எச்.எம். 1-1 வகுதிக்குக் கீழ் வருகின்ற பணிப்பாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 120 லீட்டராக இருந்தாலும் அதற்கு முரணாக 140 லீட்டருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு இருந்தமையால் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய பிரதான அலுவலகத்தினால் ரூ. 1,173,213 தொகை அதிகமாக செலுத்தப்பட்டு உள்ளது.
(உ)	(ii) 3.2 ஆம் உறுப்புரை	கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதாமல் போகின்ற விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட உண்மையான எரிபொருள் செலவு மீள் நிரப்பப்பட முடியுமாயினும், சேவை நிலையத்தில் இருந்து வெளியே கடமைகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டு உள்ளது. அதற்கமைய, மீளாய்வு வருடத்தில் பிரதான அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வாகனங்களைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு ரூ.

			1,262,050 பெறுமதியான எரிபொருள் கொடுப்பனவிற்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி ரூ. 1,657,505 மேலதிக எரிபொருளுக்காக செலுத்தப்பட்டு உள்ளது.
		(iii) 3.6 ஆம் உறுப்புரை	உத்தியோகபூர்வ வாகனங்களை உடைய உத்தியோகத்தர்களுக்கு சேவை நிலையத்தில் இருந்து 40 கிலோ மீட்டரை விட தூரம் விசேட கடமைகளுக்காக குழுவாக கலந்து கொள்வதற்கு குழுப் போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க முடியுமாக இருந்தாலும் அதிகார சபையினால் அவ்வாறான முறையைப் பின்பற்றி இருக்கவில்லை.
(உ)	2015 ஜூலை மாதம் 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் உறுப்புரை		அனைத்து ஆண்டிற்கும் ஒரு முறை வாகன கையுதிப்புச் செயன்முறை முன்னெடுக்கப்பட வேண்டுமாயினும், அதிகார சபையினால் 2016 ஆம் ஆண்டின் பின்னர் வாகன கையுதிப்பு முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.
(ஊ)	2016 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை		
		(i) 3.1 ஆம் உறுப்புரை	அரச வாகனங்களுக்கு அனைத்து எரிபொருள் பரிசீலனைகளின் பின்னரும் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது கி.மீ. 25,000 தூரம் பயணித்த பின்னர் அல்லது இயந்திரத்துடன் தொடர்புடைய பிரதான மீள் திருத்தத்தின் பின்னர் போன்ற காரணங்களில் முதலில் நிகழ்கின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசீலனை முன்னெடுக்கப்பட வேண்டுமாயினும் அதிகார சபையினால் தமது வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு எரிபொருள் பரிசீலனை முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.
		(ii) 3.3 ஆம் உறுப்புரை	வாகனங்களின் மாதாந்த தனகம் மற்றும் மீள் திருத்தம் தொடர்பான குறிப்பானது உரிய மாதிரியமைப்பின் பிரகாரம் தாபரிக்கப்பட்டு கடுமையான விதத்திலான பாதகமான மாற்றங்களுடன் கூடிய வாகனங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட வேண்டுமாயினும் அதிகார சபையினால் தமது வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நிர்வாக முறைகள் அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(iii)	4.2 மற்றும் 4.3 ஆம் உறுப்புரை	வாகனங்களின் வெளிப் பழுது பார்த்தல்களுக்கான விலை மனுக்கள் கோரப்பட வேண்டுமாயினும் உள் பழுது பார்த்தல்களுக்கு அவ்வாறு செய்வதற்கு முடியாமையினால் பகுதிகள் கழற்றப்பட்ட ஊர்தியகத்தின் விலைகளை ஏற்றுக் கொள்ள வேண்டி எற்படுகின்றமையால் அவ்விலைகள் தொடர்பாக அரச பிரிவின் திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது சபை ஒன்றின் தகுதி வாய்ந்த எந்திரவியல் பொறியியலாளர் ஒருவரிடம் அறிக்கை பெற்றுக் கொள்ள வேண்டுமாயினும் அதிகார சபையினால் அவ்வாறான அணுகுமுறையை பின்பற்றி இருக்கவில்லை.
(எ)	2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 (அ) ஆம் உறுப்புரை	ஓட்டக் கூடிய நிலைமையில் இல்லாத வாகனங்கள் 2020 ஆம் அண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு கையுதிர்க்கப்பட வேண்டுமாயினும், கையுதிர்க்கப்பட வேண்டும் என இனங்காணப்பட்டு இருந்த வாகனங்கள் 120 இன் கையுதிர்ப்பு நவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 கணக்காய்வு திகதி வரை கையுதிர்க்கப்பட்டு இருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய அதிகார சபையின் அதிகாரங்கள், பணி வினைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர அதிகார சபையின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக கால வரையறைகளுக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு இணங்கியதாக கொள்முதல் செய்து பயன்படுத்தி இருக்கவில்லை என,

அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டின் கொள்முதல் திட்டத்திற்கு அமைய பிரதான அலுவலகத்தால் ரூ. 5,160,000 மானியத்தின் கீழ் Intel - 3, Intel - 5, Intel - 7 கணினி இயந்திரங்கள் 25 கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தாலும், ரூ. 7,719,450 செலவு செய்யப்பட்டு கணினி இயந்திரங்கள் 54 கொள்வனவு செய்யப்பட்டு இருந்தன. மேலும், ரூ. 7,390,000 மானியத்தின் கீழ் Intel - 5, Intel - 7 மடிக் கணினி இயந்திரங்கள் 45 கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தாலும், மடிக் கணினி இயந்திரங்கள் 61 ஆனது ரூ. 14,690,658 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு இருந்தன. அதற்கமைய, கொள்முதல் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள மானியத்தை மீறி ரூ. 9,800,000 செலவு செய்யப்பட்டு இருந்தது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2002 ஆம் ஆண்டில் கடன் வழங்குவதற்கு மறைமுக நிதியை உருவாக்குவதற்கு 48 மில்லியன் ரூபாய் பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு இருந்தாலும், 2020 ஆம் ஆண்டின் பின்னர் அக்கடன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தாமல் நூற்றுக்கு 4 இற்கும் குறைவான வட்டி வீதத்தின் கீழ் வங்கியில் தரித்து வைக்கப்பட்டு இருந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வட்டியுடன்

அந்நிதியானது ரூ. 93,783,845 ஆக இருந்ததுடன், 2021 ஏப்ரல் மாதம் அதிலிருந்து ரூ. 81,162,538 தொகை அறவிடப்பட்டு இருந்ததுடன், ரூ. 12,621,307 தொகை மற்றும் அதற்குரிய வட்டி மேலும் அறவிடப்பட வேண்டி இருக்கின்றது.

(ஆ) அதிகார சபைக்குச் சொந்தமான இணை நிறுவனங்கள் இரண்டான மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனமானது 2012 ஆம் ஆண்டிலும், இயற்கை வளங்கள் முகாமைத்துவ தனியார் நிறுவனமானது 2019 ஆம் ஆண்டும் ஏலமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தாலும், மீளாய்வு வருடத்தில் ஏலமிடும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(இ) செயற்திட்ட குழுவினால் தெரிவு செய்யப்பட்ட வெளி முதலீட்டாளர் ஒருவருடன் மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வியாபார (தனியார்) நிறுவனமானது அரச தனியார் கூட்டு வியாபாரமாக மீள் ஒழுங்கமைப்பு செய்வதற்காக 2018 செப்டம்பர் 18 ஆம் திகதி அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அங்கிகாரம் வழங்கப்பட்டு இருந்தது. அதற்கமைய, நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற சி வலயத்தின் கிராந்துரு கோட்டை மற்றும் பி வலயத்தின் தம்மின்ன பண்ணைக்குச் சொந்தமான 1,154 ஏக்கர் விதைக்கும் பரவெல்லையுடைய நிலத்தை சகல சொத்துக்களும் உள்ளடங்கியதாக அரச தனியார் பங்குகளைக் கொண்ட ஒருங்கிணைந்த வியாபாரமாக அமுல்படுத்துவதற்காக அபிலாஷைகளைக் கோருவதற்கு 2022 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு இருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலம் சென்றிருந்தாலும் அதற்குரிய பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வு வருடத்தில் குள அணைக்கட்டுகள் மற்றும் விவசாய கால்வாய்களைத் தயாரிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் 37 குளங்கள் புனரமைப்பதற்கும், 66 குளங்களுக்கு கட்டணம் அறவிட்டு வண்டல் சேற்றை அகற்றுவதற்கும் திட்டமிடப்பட்டு இருந்தது. குள அமைப்பை பாதுகாப்பதற்கு எனில் இச் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது தனித் தனியாக குளங்களைத் தெரிவு செய்யாமல் மொத்தமான அமைப்பாக தெரிவு செய்து அவற்றின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுவது உகந்தது என்பது நிபுணர்களின் கருத்தாக இருந்தாலும், ஈ மற்றும் பி வலயங்களுக்குரிய குளங்கள் 11 மொத்த அமைப்புகளுக்கு உரியவையாக இருந்தாலும், அக்குளங்களை சீரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. மீளாய்வு வருடத்தின் இறுதியில் புனரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டு இருந்த 18 குளங்களின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 இற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன், கட்டணம் அறவிடப்பட்டு வண்டல் சேறு அகற்றப்பட்ட குளங்களின் எண்ணிக்கை சுமார் 05 ஆகும். அவ்வாறே, வண்டல் சேற்றை அகற்றுவதன் மூலம் 598.7 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்தாலும், 9.45 மில்லியன் ரூபாய் மாத்திரமே ஈட்டப்பட்டு உள்ளது.

(உ) இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 1/3 பகுதியானது மகாவலி அதிகார பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதுடன், அப்பிரதேசத்திற்குச் சொந்தமான அரச காணிகள் முகாமைத்துவ அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுவதுடன், அதனை மிகவும் வினைத்திறனாக்குவதன் மூலம் குடியேற்றவாசிகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு உகப்பான சேவையை வழங்குவதை இலக்காகக் கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை காணி முகாமைத்துவத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காக அதிகார சபையினால் 2016 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் ரூ. 6,973,405 தொகை தனியார் நிறுவனங்கள் 03 இற்கு மூன்று சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டு உள்ளதுடன், முறைமையை அமுல்படுத்துவதற்காக 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன. எனினும், தற்பொழுது வரையில் காணித் தகவல்

முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்படாமையினால் அச்செலவானது பயன்படா செலவாக மாறி உள்ளது.

(ஊ) கடன் பெறுகை, கடன் வழங்கல் கால பகுப்பாய்விற்கு அமைய 05 வருடங்களை விடவும் அதிகமான ரூ. 242,525,000 உடைய கடன் பெறுகை மற்றும், ரூ. 85,844,000 உடைய கடன் வழங்கல் மீதியும் காணப்பட்டாலும், அம்மீதிகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(எ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய அதிகார சபையினால் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக முதலீட்டாளர்கள் 695 பேருக்கு 6,879 ஹெக்டயர் முழு காணிப் பரப்பு வழங்கப்பட்டு இருந்தது. அதில் பூரணமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணித் துண்டுகளின் அளவு 3,284 ஹெக்டயர் ஆக இருந்ததுடன், குறை அபிவிருத்தி செய்யப்பட்ட காணித் துண்டுகளின் அளவு 2,023 ஹெக்டயரும், அபிவிருத்தி செய்யப்படாத காணித் துண்டுகளின் அளவு 1,572 ஹெக்டயருமாக காணப்பட்டது. இதற்கமைய, வழங்கப்பட்ட காணிப் பரப்பில் 52% குறை அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளாக காணப்பட்டதுடன், அக்காணிகளை மீண்டும் கையகப்படுத்தி வேறு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) நன்னீர் மீன் வளர்ப்பிற்கு அவசியமான மீன் குஞ்சுகளின் தேவைப்பாடுகள் வலயத்திலேயே உற்பத்தி செய்வதற்கான 2019 - 2023 காலப்பகுதிக்குரிய ஐந்து வருட திட்டத்தில் எல் வலயத்தில் 10 நீர்த்தேக்கங்களில் 2021 ஆம் ஆண்டில் 2,164,000 மீன் குஞ்சுகள் வைப்புச் செய்வதற்கு இலக்காக கொள்ளப்பட்டு இருந்தாலும், மறுசீரமைக்கப்பட்ட செயலாற்றுகைத் திட்டத்தின் மூலம் 500 மெட்ரிக் தொன் மீன் விளைச்சலை இலக்காகக் கொண்டு மீன் குஞ்சுகள் 400,000 விடுவிப்பதற்காக ரூ. 1,300,000 மானியம் ஒதுக்கப்பட்டு இருந்தது. வருட இறுதியாகும் போது சுமார் 60,000 மீன் குஞ்சுகள் வைப்புச் செய்யப்பட்டு இருந்தன. மேலும், மீன் குஞ்சுகள் மற்றும் குடம்பி இறால்கள் கொள்வனவு செய்வதற்காக ரூ. 1,300,000 முற்பணமானது நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்டு இருந்தாலும், ரூ. 300,000 முற்பணமானது 2022 ஜூன் மாதம் 20 ஆம் திகதியாகும் போதும் மூடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், எஹடுகஸ் வாவி அமைப்பிற்கு திட்டமிடப்பட்டிருந்த இன விருத்தி மத்திய நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மீன் விளைச்சல் 500 மெட்ரிக் தொன்னாக இருந்தாலும், மீளாய்வு வருட இறுதியில் மீன் விளைச்சல் சுமார் 99.3 மெட்ரிக் தொன்னாக இருந்தது.

(ஐ) மீளாய்வு வருட இறுதியில் அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் பதவிகள் 34 நிலவியதுடன், அதில் 15 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டன. 14 பதவிகள் பதில் கடமை புரிதல், கடமைப் பிரதியீடு, ஒப்பந்த அடிப்படை மற்றும் வழிமொழிவு அடிப்படையில் கடமை புரியப்படுவதுடன், அவ்வெற்றிடங்களை நிரந்தரமான நிரப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், மத்திய முகாமைத்துவ மட்டத்திலான வெற்றிடங்கள் 79 உம், தொழிற்பாட்டு முகாமைத்துவ மட்டத்திலான வெற்றிடங்கள் 730 உம் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீறி நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் 68 பேரும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிகள் 33 உம் மற்றும் மத்திய ஆலோசகர் பதவி ஒன்று உட்பட மிகையான உத்தியோகத்தர்கள் 102 பேரும் உள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிகள் 33 உம் மற்றும் மத்திய ஆலோசகர் பதவிக்காக முறையே ரூ. 2,469,641 மற்றும் ரூ. 832,792 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக மீளாய்வு வருடத்தில் செலுத்தப்பட்டு இருந்தன.

(ஒ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டு அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்று தெஹிஅத்தகண்டிய வதிவிட வணிக முகாமையாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட வாகனம் ஒன்று மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக மெதிரிகிரிய வலயத்தின் சாரதி ஒருவருக்கு வழங்கப்பட்டு இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி வாகனம் விபத்து ஒன்றிற்கு உள்ளாகி உள்ளது. நிதிப் பிரமாணம் 104 (4) இற்கு அமைய சேத நஷ்டம் ஏற்பட்ட தினத்தில் இருந்து 03 மாத காலத்திற்குள் சேதம் தொடர்பாக பூரண அறிக்கை ஒன்று முன்வைக்கப்பட வேண்டுமாக இருந்தாலும் விபத்து தொடர்பாக பூரண அறிக்கையானது நி.பி. 104 (4) மாதிரிக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. வாகனத்திற்கு நேர்ந்த ரூ. 6,915,484 நஷ்டத்தில் ரூ. 2,500,000 மாத்திரமே காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட்டு இருந்ததுடன், எஞ்சிய நஷ்டயீடானது உரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்டு இருக்கவில்லை.

(ஓ) அதிகார சபைக்குச் சொந்தமான களஞ்சிய சாலைகள் 43 ஆனது 2009 ஆம் ஆண்டில் இருந்து நெல் சந்தைப்படுத்தல் சபையால் பயன்படுத்தப்பட்டாலும், அக்களஞ்சிய சாலைகளுக்காக எவ்வித

வாடகைத் தொகையும் மீளாய்வு வருடத்தின் இறுதித் திகதி வரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அக்களஞ்சிய சாலையை நெற் களஞ்சியப்படுத்துவதற்காக தர நியமத்திற்கு அமைய மீள் திருத்தம் செய்யும் தேவை இருக்கின்றமையால், அக்களஞ்சிய சாலைகளின் உரிமையை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு கையகப்படுத்துமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையின் தவிசாளர் அவர்களால் மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டு இருந்த கோரிக்கைக்கு அமைய உரிய கையகப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அக்கட்டிடங்களின் விலை மதிப்பீட்டுப் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடந்த ஆண்டின் கணக்காய்வில் குறிப்பிடப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், 2022 ஜூன் மாதம் 20 ஆம் திகதி கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களுக்கு அமைய அரச காணிகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய அதிகார சபைக்குச் சொந்தமான காணி ஒன்றை சபை ஒன்றிற்கு இலவசமாக கையகப்படுத்துவதற்கு மானியங்கள் இல்லை என்பதால் வாடகை அறவிடுவதற்கோ அல்லது கையகப்படுத்துவது தொடர்பான பிரச்சினையை இதுவரையில் தீர்ப்பதற்கு முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

(ஒள) அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகைகளின் எண்ணிக்கை 27 ஆக உள்ளதுடன், அச்சுற்றுலா மாளிகைகள் 27 இற்கும் வருமானத்தை மீறி செலவு செய்யப்பட்டு உள்ள காரணத்தால் ரூ. 36,385,684 நஷ்டத்தை மீளாய்வு வருடத்தில் ஏற்க வேண்டி ஏற்பட்டு இருந்தது. சுற்றுலா மாளிகைகளின் வருமானம் குறைவடைந்து காணப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் இருந்து இது வரை பணிப்பாளர் (பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க தொழிற்பாடுகள்) அலுவலகத்தின் கீழ் காணப்படுகின்ற சுற்றுலா மாளிகைகள் 05 உம் இணைய வசதி மூலம் முன் பதிவு செய்தல் மற்றும் வெளி நபர்களுக்கு வழங்குதல் என்பன நிறுத்தப்பட்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் சேவைகளின் தேவைப்பாடுகளுக்காக சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு உள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டு இருந்தது.

(க) அதிகார சபைக்குச் சொந்தமான நாற்று மேடைகள் 11 இல் 08 நாற்று மேடைகள் நஷ்டமடைந்து இருந்ததுடன், மீளாய்வு வருடத்தில் ரூ. 35,077,470 நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(ங) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வலவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு இருந்த வாகனம் ஒன்று தொலைந்துள்ளதாக குறிப்பிட்டு 2021 ஜூலை மாதம் 01 ஆம் திகதி கொழும்பு ஊழல் மோசடி விசாரணை அலுலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு இருந்தது. மேற்குறிப்பிட்ட வாகனம் அனுமதியின்றி வெளி தரப்பினருக்கு வழங்கப்பட்டு உள்ளதாகவும், அவ்வாகனத்தின் நிலைப்பாடு தொடர்பாக வருடாந்த பொருட் கணிப்பீட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டு இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டு 2018 ஜனவரி மாதம் 09 ஆம் திகதி கணக்காய்வு உசாவல் மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தாலும், அது தொடர்பாக உரிய கவனத்தைச் செலுத்தப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், நிறுவன ரீதியாக எவ்வித பரிசீலனைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

டப்லியூ. பீ. சி. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயகம்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை

பாகம் IV

இலங்கை மகாவலி அதிகார சபை

இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

IWR/ B/ MASL/ 01/ 21/19

2022.11.15

கணக்காய்வாளர் நாயகம்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

இலங்கை மகாவலி அதிகார சபையின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உங்களால் எனக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட IWR/ B/ MASL/ 01/ 21/19 மற்றும் 2022.09.06 ஆம் திகதிக்குரிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை தொடர்பான எனது பதில்கள் பின்வருமாறு அமையும்.

1.2

(அ) பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை) இன் தலைமையில் நகர வலயங்கள்/ பிரிவுகளின் பிரதி வதிவிட வணிக முகாமையாளர்களின் (தொழில்நுட்ப சேவை) பங்களிப்பில் (பட்டயம் பெற்ற பொறியியலாளர்கள்) ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி இப்பெறுமதி விலை மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது.

(ஆ) மகாவலி அதிகார சபையினால் தாபரிக்கப்படுகின்ற பிரதான அணைகள் 11 மற்றும் குளங்கள் 463 என்பன பௌதீக ரீதியாக இனங்கண்டு ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் குறிப்பு மூலம் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக அவ் ஆதனங்களை விலை மதிப்பீடு செய்ய முடியாமல் போனதுடன் 2022 ஆம் ஆண்டில் அவ் ஆதனங்களை முறையான விதத்தில் விலை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

(இ) காலநிலைத் தாக்கங்களைக் குறைக்கும் செயற்திட்டத்தின் மூலம் (CRIP) 2015 இல் இருந்து 2021/12/31 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட ஆதனங்களாக பின்வரும் விதத்தில் 325.5 மில்லியன் ரூபாய் ஆவணமும், மொரகஹகந்த செயற்திட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஆதனமாக 113 மில்லியன் ரூபாய் ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. 2021 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபையின் சொத்து ஆவணத்தில் செயற்திட்டங்கள் இரண்டின் ஆதனங்களாக பின்வருமாறு கணக்கீடு செய்யப்பட்டு உள்ளது. (இணைப்பு 01)

செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் கணக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு இடையிலான வித்தியாசம் பின்வரும் காரணங்களால் இடம்பெற்றுள்ளது.

1. செயற்திட்டங்களால் வலய/பிரிவுகளின் அலுவலகங்களுக்கு நேரடியாக சொத்துக்களை வழங்குதல் மற்றும் அவ்வாறு வழங்கும் போது உரிய முறைகளைப் பின்பற்றாமை.
2. காலநிலைத் தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டம் (CRIP) மற்றும் அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டம் ஆகிய செயற்திட்டங்களில் வலய/ பிரிவுகளின் அலுவலகத்திற்கு நேரடியாக வழங்கப்பட்டு இருந்த சொத்துக்களை கணக்கீடு செய்வதற்காக விபரங்கள் முன்வைக்கப்பட்ட/ கண்டுபிடிக்கப்பட்டது 2021ஆம் ஆண்டில் ஆகும். இவ்வாறு கணக்கீடு செய்வதற்காக முன்வைக்கப்பட்ட சொத்து ஆவணங்களில் உள்ளடங்குகின்ற பொருட்களை பௌதீக ரீதியில் இனங்காணும் பிரச்சினை ஏற்படுவதால் 2021 ஆம் ஆண்டிற்கு கணக்கீடு செய்யப்பட்டு இல்லை.

எவ்வாறாயினும், செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட சொத்துக்களின் திருத்தமான தகவல்களைத் தேடிப் பார்த்து அத்தகவல்களை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றதுடன், அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டில் கணக்குகளில் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன். அவ்வாறே, இச்சொத்துக்களை கையளிப்பது தொடர்பான ஆவணங்கள் உரிய செயற்திட்டங்கள் மூலம் தாமதமாக முன்வைக்கப்பட்டமையால் (CRIP செயற்திட்டத்தில் இருந்து உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் என்பதால்) இச் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு போதியளவு காலம் இருக்கவில்லை.
அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டம், மொரகஹகந்த செயற்திட்டம் மற்றும் காலநிலைத் தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டம் ஆகிய 03 உம் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற சொத்துக்கள் தற்போதைய கணக்குக் கூற்றில் "மானியம்" ஆக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டு உள்ளதுடன் வருடாந்தம் அச்சொத்துக்களின் பெறுமானத் தேய்வு வீதத்திற்கு அமைய கணக்கிடப்பட்ட பெறுமதி "பிற்போடப்பட்ட வருவாய்" அக நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் பொருத்தப்பட்டு உள்ளது. மேலும், கடன் வழங்கல் மீதியை 2022 ஆம் ஆண்டு நிதிக் கூற்றில் திருத்தியமைப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஈ) ஏற்றுக் கொள்கின்றேன். 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றில் திருத்தியமைப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

(**உ**) ஏற்றுக் கொள்கின்றேன். 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றில் திருத்தியமைப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஊ) முரவெசிஹேன அலுவலகத்தை புனரமைப்பதற்காக பணிகளின் மொத்த பெறுமதி ரூ. 7,314,810.80 ஆகும். எனினும், 2021 இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது ஏற்பட்டுள்ள தாமதக் கோளாரு காரணமாக ரூ. 9,240,287.00 தொகை "முன்னெடுக்கப்படுகின்ற பணிகள்" எனும் கணக்கிற்கு பற்றிடப்பட்டு உள்ளது. அதற்கமைய, அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 1,925,476.20 தொகையை நாளேட்டுப் பதிவின் மூலம் திருத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(எ) மொரகஹகந்த செயற்திட்டம் மூலம் கடன் பெறுகை மீதியானது ரூ. 108,452,464.09 ஆக உறுதிப்படுத்தினாலும், அம்மீதியில் 2021.12.31 ஆம் திகதிக்கு பிரதான அலுவலகத்தின் கடன் பெறுகை மீதியான ரூ. 38,564,344,510.86 தொகை உள்ளடக்கப்பட்டு இல்லை. மொரகஹகந்த செயற்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மற்றும் அதிகார சபையின் நடைமுறைக் கணக்கு ஆகியவற்றுக்கு இடையில் உள்ள வித்தியாசத்திற்கு காரணமாக இருப்பது செயற்திட்டத்தினால் வலய/ பிரிவு அலுவலகங்களுக்கு சொத்துக்களை பௌதீக ரீதியில் வழங்கும் போது அச் சொத்துக்களின் உரிய வலய/ பிரிவின் நடைமுறைக் கணக்கின் ஊடாக பரிமாற்றம் அடையாமல் பிரதான அலுலகத்தின் நடைமுறைக் கணக்கின் ஊடாக மாத்திரம் பரிமாற்றம் இடம்பெற்றமையால் ஆகும். பி, சி, எச், வலவ, எல், ஹுருளுவாவி ஆகிய வலயங்களுக்கு மற்றும் மகாவலி பாதுகாப்புப் படையணி, இயந்திர வேலைத்தளம் - (தம்புத்தேகம), ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம் ஆகிய பிரிவுகளுக்கு உரியதாக பௌதீக ரீதியில் வழங்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி தற்பொழுது சரியான விதத்தில் பொருத்தப்பட்டு உள்ளது. அதற்கமைய,

கடன் பெறுகை மீதியின் மாற்றத்தில் ரூ. 690,000 உம், கடன் வழங்கல் மீதியில் ரூ. 27,545,052.26 பெறுமதியும் இனங்காணப்பட்டு திருத்தப்பட்டுள்ளன.

ஏனைய வலயங்கள் மற்றும் பிரிவுகளுக்கு ஒப்பிடுகைகள் முன்னெடுக்கப்பட்டுச் செல்கின்றதுடன் 2022 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கிற்கு அவசியமான சகல பொருத்தப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு திருத்தம் செய்யப்படும்.

(ஏ) விவசாய அமைப்புக்களுக்கு இவ்வாறான பணியை ஒப்படைக்கும் போது அதனை ஒப்பந்தம் ஒன்றின் மூலம் சட்ட ரீதியாக ஒப்படைக்க வேண்டும் என்பது உண்மையாகும். எனினும், விவசாய அமைப்புக்கள் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் மூலம் நியதிச் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அதிகார பிரதேசத்தில் அதிகாரப்படுத்தப்பட்டுள்ள சட்ட ரீதியான நிறுவனம் ஆகும்.

ஆகையால், இலங்கை மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மகாவலி அதிகார பிரதேசங்களில் நலன் புரிப் பணிகளை முன்னெடுக்கின்ற சந்தர்ப்பங்களில் விவசாய அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து அப்பணிகளை முன்னெடுப்பது வழமையான முறையாகும். மேற்குறிப்பிட்ட இயந்திரம் மகாவலி "பி" மற்றும் "எல்" வலயங்களில் நிறுவும் போதும் விவசாய

அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது. ஏன் எனில், கடுமையான் குடி நீர் தட்டுப்பாடு மகாவலி பி மற்றும் எல் வலயங்களில் நிலவுகின்றமையால் சிறுநீரக பாதிப்பிற்கு இயன்றளவு அவசரமாக தீர்வு ஒன்றைக் காண்பதற்காக அப்பிரதேசங்களில் உள்ள தண்ணீரை சுத்திகரிக்கும் இயந்திரத்தை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ் இயற்திரத்தை நிறுவு செயற்படுத்தும் போது தண்ணீரை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து பிரதேச மக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்பதுடன், அதற்காக அடிக்கடி இயந்திரத்தை இயக்குவதற்கு மற்றும் நீரை விநியோகிப்பதற்கு அதற்காக பணம் அறவிடுவதற்கும் ஒரு நபரை அவ்விடத்தில் தரித்து வைப்பது கட்டாயம் ஆகும். ஆகையால், அதனை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக அடிக்கடி மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவரை அவ்விடத்தில் தரித்து வைப்பது மேற்கொள்ள முடியாத விடயம் என்பதால் அதற்காக விவசாய அமைப்புக்களுடன் கலந்துரையாடி விவசாய அமைப்பின் ஊடாக ஒருவருக்கு இயந்திரத்தின் தொழிற்பாடுகள் தொடர்பாக பயிற்சி வழங்கி அங்கு தரித்துவைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய, இலங்கை மக்வலி அதிகார சபையின் வழமையான மேற்பார்வையின் கீழ் விவசாய அமைப்புக்கள் மூலம் அவ் இயந்திரத்தின் தாபரிப்பு மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அங்கு தரித்து வைக்கப்பட்டுள்ள நபருக்கு தண்ணீரை விற்று கிடைக்கப் பெறுகின்ற பணத்தில் சம்பளத்தை வழங்குவது விவசாய அமைப்பின் மூலம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இதற்கமைய, இப்பணியை சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்கின்ற விவசாய அமைப்பானது சட்ட ரீதியான நிறுவனமாயினும், எதிர்வரும் காலத்தில் முறையான ஒப்பந்தம் மூலம் விவசாய அமைப்பிற்கு இவ் இயந்திரத்தை ஒப்படைப்பதற்காக தற்பொழுது சகல நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

(ஐ) இக்காணித் துணடுகள் இரண்டினதும் தற்போதைய சந்தை விலையை விலை மதிப்பீடு செய்வதற்காக அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2016 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு உள்ளதுடன், இது வரையில் உரிய விலை மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெறவில்லை. இது தொடர்பாக விலை மதிப்பீட்டுத் தினைக்களத்திற்கு நினைவூட்டல் ஆற்றுப்படுத்தினாலும் பதில்

எதுவும் இல்லாத காரணத்தால் தொலைபேசி மூலம் வாய்மொழியால் விசாரிக்கப்பட்டது. அதன் பின்னர் 2022.06.08 ஆம் திகதிய விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் முலம் ஆற்றுப்படுத்தப்பட்ட கடிதத்தின் மூலம் காணியை விலை மதிப்பீடு செய்வதற்குரிய தகவல்கள் கோரப்பட்டு இருந்தன. அத்தகவல்களை துரிதமாக வழங்கி விலை மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.
அவ்வாறே, அபிவிருத்திப் பணிகளுக்காக பிரயோகிக்கப்படுகின்ற காணிகள் மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கையுதிர்க்கப்பட்டும். இதில் விவசாய வகுதியைச் சேர்ந்த நபர்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திபண்ன் கீழ் படுத்தப்பட்ட, நீர்ப்பாசன, விவசாய மற்றும் மானாவாரி காணிகளை இலவசமாக வழங்கப்படுவதுடன் தொழில் முயற்சி மற்றும் அதிக வருமானம் பெறும் வகுதியைச் சேர்ந்த நபர்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வணிக மற்றும் முதலீட்டுக் காணிகளாக அரசாங்கத்தால் விலை மதிப்பீடு செய்யப்பட்ட வரித் தொகையை அறவிட்டு வீட்டுக் காணிகளாக அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டை அறவிட்டு கையுதிர்த்தல் முன்னெடுக்கப்படும்.
அதிகார சபையின் வலய அலுவலகங்கள், பிரிவுகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் என்பன அமைந்துள்ள காணிகள், அரச காணிகள் என்பதுடன் இதன் பிரத்தியேக உரிமை மகாவலி அதிகார சபைக்கு இல்லை என்பதுடன் அதன் நிர்வாகம் மாத்திரமே அதிகார சபைக்குரிமையால் இச்சொத்துக்களை விலை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இல்லை என தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்ட திட்டங்கள்/ ஆணைக்கு ஆற்றுப்படுத்துல்

(அ) பிரதான அலுவலகத்தின் மற்றும் வலயங்கள்/ பிரிவுகளின் நாளாந்த ஒட்டக் குறிப்புப் பத்திரம் அரச கணக்காய்வுப் பிரிவிற்கு ஆற்றுப்படுத்தும் போது கணக்காய்வுப் பிரிவில் அவை ஒன்று சேர்கின்றமையால் தற்காலிகமாக நிறுத்துமாறு கணக்காய்வு அத்தியட்சகர் மூலம் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய பிரதிப் பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் அவ் ஓட்டக் குறிப்புப் பத்திரங்கள் வாகனத்திற்குரிய ஆவணக் கோப்பில் ஆவணப்படுத்துவதற்கு

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாக பிரதிப் பணிப்பாளர் (போக்குவரத்து) அவர்களால் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அவ்வாறே, மீண்டும் சமர்ப்பிக்கும் போது அவற்றை உரிய வாகனங்களின் கோப்புகளில் ஆவணப்படுத்துமாறும் அவசர நிலைமைகளின் போது பெற்றுக் கொள்வதற்கு இலகுவான விதத்தில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அறிவிக்கப்பட்டமையால் அதற்கமைய ஆவன செய்யப்பட்டு உள்ளது. எதிர்வரும் காலத்தில் உசாவல் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மற்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்ட ஓட்டக் குறிப்புப் பத்திரங்களை முன்வைப்பதற்கும் ஆவன செய்கின்றேன்.

(ஆ) அரச இலட்சனை மற்றும் அதிகார சபையின் பெயர் என்பவற்றை அதிகார சபையின் சகல வாகனங்களிலும் குறிப்பிடுவதற்கு எதிர்வரும் காலத்தில் நவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன்.

(இ) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நியதிச் சட்ட ஒருங்கிணைப்பு நிதிக் கூற்று 2022.02.25 ஆம் திகதி உரிய தகவல்களுடன் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அக்காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக (கொவிட் தொற்றுப் பரவல்) வலயங்கள்/ பிரிவுகளிடம் இருந்து ஆண்டறிக்கையின் வரைவில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்களை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டமையால் நிதிக் கூற்றுடன் ஆண்டறிக்கையின் வரைவை உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியாமல் போனது. எதிர்வரும் காலத்தில்

ஆண்டறிக்கையின் வரைவை உரிய தினத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ)

(i) இலங்கை மகாவலி அதிகார சபையின் வதிவிட வணிக முகாமையாளரின் அலுவலகத்தைக் கருத்திற் கொள்ளும் போது அதில் அமைக்கப்பட்டுள்ள தொகுதி அலுவலகம் மற்றும் அலகு அலுவலகங்கள் பல சந்தர்ப்பங்களில் 2-3 மாகாணங்கள், 2-3 மாவட்டங்கள் உள்ளடங்கும் விதமாக களத்தில் பரவிக் காணப்படுகின்றது. வதிவிட வணிக முகாமையாளர்களை எடுத்துக் கொண்டால் மேலதிக அரசாங்க அதிபராகவும் செயற்படுவதற்கு சட்ட விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. அவ்வாறு எடுக்கும் போது இவ் உத்தியோகத்தர் பிரதான தொழிற்பாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றுவதாலும், சகல வலயங்களில் அந்தந்த விடயங்களுக்குரிய விடயங்கள் அந்தந்த விடயங்களுக்குரிய பணிப்பாளர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றமையால் இவ் உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள "பிரதான தொழிற்பாட்டு உத்தியோகத்தர்" இன் கடமை வகிபாகத்தை முன்னெடுக்கின்றமையால் இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல வதிவிட வணிக முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் பிரதான தொழிற்பாட்டு உத்தியோகத்தர்களாக கருத்திற் கொள்ளப்பட்டு 2015/01 அரச நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் எரிபொருள் 140 லீட்டர் வீதம் வழங்கப்பட்டு உள்ளது. எவ்வாறாயினும், அரச நிர்வாக சுற்றறிக்கை 2015/01 (ii) இன் பிரகாரம் சிரேஷ்ட முகாமைத்துவ 1-1 வகுதியின் சகல உத்தியோகத்தர்களுக்கும் மாதம் ஒன்றிற்கு 115 லீட்டர் வீதம் உரிய எரிபொருள் அளவை வழங்கி மேற்குறிப்பிட்ட இந்நிலைமையை சுற்றறிக்கை பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு உள்ளது.

(ii) இலங்கை மகாவலி அதிகார சபையின் 37 ஆவது நிறைவேற்று முகாமைத்துவக் குழு ஒன்று கூடலின் தீர்மானத்திற்கு அமைய எனது அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருட்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு உள்ளன.

எவ்வாறாயினும் அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2015/01 இற்கு அமைய மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற எரிபொருட்களுக்கான கொடுப்பனவுகளுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதி பணிப்பாளர் (போக்குவரத்து) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது.

(iii) அதிகார சபையில் பல பிரிவுகள் காணப்படுகின்றது. அப்பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக குழுப்போக்குவரத்து வசதியை இயன்றளவு வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

ஒவ்வொரு பிரிவிற்கும் பல்வேறு களக் கடமைகளில் ஈடுபட வேண்டிய சந்தர்ப்பங்களில் நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை காரணமாக முகாமைத்துவம்

செய்து குழுப் போக்குவரத்து வசதியை எற்படுத்திக் கொடுத்தாலும் அது தொடர்பாக நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டு உள்ளன. ஆகையால், அச்சந்தர்ப்பங்களில் குழுப் போக்குவரத்து வசதியைக் கருத்திற் கொள்ளும் போது களக் கடமைகளுக்காக முன்னுரிமையை வழங்கி, இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் குழுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

(உ) ஏற்றுக் கொள்கின்றேன், கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக மற்றும் அரசாங்கத்தால் வாகனங்கள் கையுதிர்ப்பது தொடர்பாக வழங்கப்பட்ட

ஆலோசனைகளுக்கு அமைய (வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டு உள்ளமையால் இயன்றளவு வாகனங்களை பழுது பார்த்து பயன்படுத்துமாறு) இப்பணியைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனாலும், 2022 ஆம் ஆண்டில் இப்பணியை நிறவேற்றுவதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஊ)

(i) அனைத்து முறையும் சேவையின் பின்னர் உரிய முகவர் நிறுவனம் மூலம் வாகனம் தொடர்பான அறிக்கை ஒன்று வெளியிடப்படும். அதன் பின்னர் அப்பழுதுபார்த்தல்கள் பௌதீக அவதானத்தின் மூலம் பழுது பார்த்தல்கள் தொடர்பான உறுதி செய்தல் முன்னெடுக்கப்படும். அவ்வாறே, எரிபொருள் தகனம் தொடர்பாக ஏதாவது மாற்றம் இருப்பதாக சாரதியால் பதிவிடப்படும் சந்தர்ப்பத்தில் அது தொடரடபாக பரிசீலனை மேற்கொள்ளப்படுத்.

எவ்வாறாயினும், எனது MASL/HO/TR/ADM/106 ஆம் இலக்க மற்றும் 2022.02.09 ஆம் திகதிய கடிதம் மூலம் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசீலனையை மேற்கொள்ளுமாறு பிரதான அலுவலகம் உட்பட அனைத்து வலய/ பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

(ii) முகவர் நிறுவனத்தின், பருவச் சேவைக்கு ஆற்றுப்படுத்துகின்ற நிறுவனத்தின் முலம் வாகனம் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை ஒன்று வழங்கப்படுவதுடன் அவ் அறிக்கைக்கு அமைய ஏதேனும் பழுதுபார்த்தல் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி இருப்பின் அது தொடர்பாக தேடிப் பார்த்து அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களில் பல 32 ஆம் வகுதியைச் சேர்ந்தவையாக உள்ளதுடன் அவற்றின் உற்பத்தி ஆண்டுகள் 1986 இல் இருந்து 1989 வரை ஆகும். சுமார் 36 வருடங்கள் பழைமையான இவ்வாகனங்கள் அடிக்கடி பழுதுபார்த்தலுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டி உள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

(iii) கடமையின் போது நேர்கின்ற இடரின் போது நிலவுகின்ற நிலைமைக்கு அமைய ஏற்பட்டுள்ள கோளாறை உரிய முறையில் பழுது பாரத்து அதற்காக உள்ளடக்க ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்படும்.

எனினும், சகல வாகனங்களையும் பழுது பார்த்தல் நிறுவனத்தில் காணப்படுகின்ற கொள்முதல் ஒழுங்குமுறைக்கு இணங்கியதாக முன்னெடுக்கப்படுவதாக எந்திரவியல் பொறியியலாளரின் கண்காணிப்பு உள்ளடங்கிய அறிக்கையை ஆற்றுப்படுத்துவதற்கு ஆவன செய்கின்றேன்.

(எ) ஏற்றுக் கொள்கின்றேன், கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக மற்றும் அரசாங்கத்தால் வாகனங்கள் கையுதிர்ப்பது தொடர்பாக வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய (வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டு உள்ளமையால் இயன்றளவு வாகனங்களை பழுது பார்த்து பயன்படுத்துமாறு) இப்பணியைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனாலும், 2022 ஆம் ஆண்டில் இப்பணியை நிறவேற்றுவதற்கு ஆவன செய்கின்றேன்.

2.2.4

2021 ஆம் ஆண்டின் கொள்முதல் திட்டத்திற்கு அமைய பிரதான அலுவலகத்தின் நிலையான ஆதனங்களை கொள்வனவு செய்வதற்காக வருட தொடக்கத்தில் 17 மில்லியன் ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டு இருந்தது. எனினும், அடிக்கடி வருடாந்த திட்டம் திருத்தியமைக்கப்பட்டமையால் 33 மில்லியன் ரூபாய் மானியம் பிரதான அலுவலகம் மற்றும் வலயங்களுக்காக கோரிக்கை

முன்வைக்கப்பட்டுள்ள மேசைக் கணினிகள் மற்றும் மடிக் கணினிகள' மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வருடத்தில் சுமார் 17 மில்லியன் ரூபாய் மானியத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு இருந்தாலும் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய மேற்குறிப்பிட்ட கொள்வனவுகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன என தெரிவித்துக் கொள்கின்றேன்.

2021 ஆம் ஆண்டு நிலவிய தொற்றுப் பரவல் காரணமாக வீட்டில் இருந்து கடமை புரிய வேண்டி ஏற்பட்டமையால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அமைய மடிக் கணினிகள் அதிகளவு கொள்வனவு செய்வதற்கு ஆவன செய்யப்பட்டது.

கொள்முதல் பிரிவுக்காக நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மானியங்கள் ஒதுக்கப்படுவது பிரதான அலுவலகத்தின் கணினி உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் அல்ல, மானியங்கள் ஒதுக்கப்படாத வலய/ பிரிவு/ அலுவலகங்களுக்காகவும் தேவைப்பாடுகளுக்கு அமைய கொள்வனவு செய்வதற்காகும்.

ஈ, பி மற்றும் ஹுருளு வாவி வலய அலுவலகங்களில் கொள்வனவு முன்னெடுக்கப்பட்டு இருப்பது திருத்தியமைக்கப்பட்ட பணித் திட்டத்தை திருத்தியமைத்தாகும்.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) இவ்வைப்புத் தொகையை துரிதமாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தவிசாளர், பிரதேச அபிவிருத்தி வங்கியிற்கு பல சந்தர்ப்பங்களில் தவிசாளர் - பாராளுமன்ற பொது வியாபாரங்கள் தொடர்பான செயற்குழு, செயலாளர் - நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவுத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு பிரதிகளுடன் அறிவிக்கப்பட்டு உள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது உத்தியோகத்தர்கள் உரிய வங்கிக்குச் சென்று உரிய அதிகாரிகளிடம் இந்த பணத்தை விடுவிக்குமாறு அறிவித்தும் உள்ளார்கள். அவ் அறிவிப்புக்களின் பெறுபேறாக மேற்குறிப்பிட்ட வைப்புத் தொகையின் ஒரு பகுதி 2021.04.06 ஆம் திகதி மற்றும் 2021.04.27 ஆம் திகதி இலங்கை மகாவலி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டாலும் மேலும் நிலுவைத் தொகை காணப்பட்டதால் பணிப்பாளர் (நிதி) அவர்களின் MASL/FIN/03/02/RDB ஆம் இலக்க மற்றும் 2021.12.07 ஆம் திகதிய கடிதம் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் (கடன் வழங்கல் மற்றும் நிர்வாகம்) அவர்களுக்கு இந்நிலுவைத் தொகையை துரிதமாக செலுத்துமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டாலும் அதற்காக இதுவரையில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்பதால் பிரதேச அபிவிருத்தி வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் (கடன்) அவர்களுடன் 2022.05.25 ஆம் திகதி இலங்கை மகாவலி அதிகார சபையில் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் இப்பணத்தை துரிதமாக நிர்ணயிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுப்பதாக கூறப்பட்டதுடன் இது தொடர்பாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் (கடன்) அவர்களிடம் துரிதமாக இந்நிலுவைப் பணத்தை இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் செலுத்துமாறு மேலும் அறிவித்து 2022.05.26 ஆம் திகதி மீண்டும் நினைவூட்டல் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

(ஆ) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம் மற்றும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ (தனியார்) நிறுவனம் ஆகிய நிர்வாகிக்கப்பட்ட நிறுவனங்களை ஏலமிடுவது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் திறைசேறியின் ஊடாக நிறைவேற்றித் தருமாறு கோரி (2021.03.15 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் மூலம்) கடிதம் மூலம் ஆற்றுப்படுத்தப்பட்டு இருந்தது. அதற்கமைய திறைசேறியின் சட்ட நடவடிக்கைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அவர்களின் 2021.12.23 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் தற்பொழுது ஏலமிடுபவர்கள் பெயரிடப்பட்டு அச்செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(இ) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி கால்நடை வள விவசாய (தனியார்) நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற சி வலயத்தின் கிராந்துரு கோட்டை மற்றும் பி வலயத்தின் தம்மின்ன பண்ணைகளுக்குச் சொந்தமான 1154 ஏக்கர் விதைக்கும் பரவெல்லையுடன் கூடிய நிலத்தை அனைத்து சொத்துகள்ளும் உள்ளடங்கலாக அரச - தனியார் பங்குடைமை உள்ள ஒருங்கிணைந்த வியாபாரமாக அமுல்படுத்துவதற்காக வெளி முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக அபிலாஷைகளைக் கோருவதற்கு பசநி/21/2229/317/025-1 மற்றும் 2022.01.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2022.02.01 ஆம் திகதிய எனது

குறிப்பின் பிரகாரம் பத்திரிகை அறிவிப்பின் மூலம் முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2022.02.28 ஆம் திகதி பெறப்பட்டு உள்ளது.

அதற்கமைய, பத்திரிகை அறிவத்தல் தயாரிக்கப்பட்டு தினமிண, தினகரன், டேலி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு அவசியமான முறையான கொள்முதல் செயன்முறைகளைத் தற்பொழுது பின்பற்றி வருகின்றதுடன், அதற்கான கோரிக்கை நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

(ஈ)

(i) குளங்களைச் சிரமைப்பதற்கு ஒதுக்கப்பட்டு இருந்த மானியத்தின் அளவிற்கு அமைய முன்னுரிமையை வழங்கி குளங்களைத் தெரிவு செய்வது அந்தந்த வலயங்களின் வதிவிட வணிக முகாமையாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. கொவிட் தொற்று நிலைமை காரணமாக இடையிடையே நாடு மூடப்பட்டமை மற்றும் அலுவலகமும் அடிக்கடி மூடிப்பட்டமை போன்ற காரணங்களால் புனரமைப்புப் பணிகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட முடியாமல் போனது.

- பி வலயத்தில் 11 குளங்கள் புனரமைப்புப் பணிகளுக்காக நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டதின் கீழ் 2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டதுடன், அதற்காக 39.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. 07 குளங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன் 11 குளங்களின் நிதிசார் முன்னேற்றம் 46 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன், 71% பௌதீக முன்னேற்றத்தை 2021 ஆம் ஆண்டு பெற்றுள்ளது.
- ஈ வலயத்தில் 12 குளங்கள் புனரமைப்புப் பணிகளுக்காக நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டதின் கீழ் 2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டதுடன், அதற்காக 26.4 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஒரு குளத்தின் பணி நிறைவு செய்யப்பட்டதுடன் 12 குளங்களின் நிதிசார் முன்னேற்றம் 27.9 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன், 68% பௌதீக முன்னேற்றத்தை 2021 ஆம் ஆண்டு பெற்றுள்ளது.

வண்டல் சேற்றை அகற்றும் பணிகளுக்காக குளத்தின் வண்டல் சேற்றை அகழ்வதற்கு, அகழப்பட்ட வண்டல் சேற்றை கொண்டு செல்வதற்கு மற்றும் மண் கழுவும் இடத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை, தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் ஆகிய ஏனைய நேரியல் நிறுவனங்களிடம் இருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக இடையிடையே நாடு மூடப்பட்டமையால் அந்நிறுவனங்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக காலம் சென்றமையால் இவ் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. மேலும் குங்களின் கீழ் உள்ள வயல்களுக்கு நீரை விநியோகிப்பதற்கு இடையூறுகள் ஏற்படாமல் வண்டல் சேற்றை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆகையால், இந்த வண்டல் சேற்றை அகற்றும் பணிகள் மார்ச், ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் மாத்திரம் முன்னெடுக்கப்பட முடியும் என்பதால் வயல்களின் வண்டல் சேற்றை அகற்றும் பணிகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிதிசார் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது.

(உ) மகாவலி அதிகார பிரதேசங்களில் அமைந்துள்ள அரச காணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நோக்குடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் முகவர் நிலையம் அறிமுகப்படுத்திய அரச காணிகள் முகாமைத்துவ முறைமை (E - Slims) ஆரம்பிக்கப்பட்டது. அரச காணிகள் கட்டளைச் சட்டம் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் குடியேற்றவாசிகளுக்கு காணிகளை வழங்குதல், அதற்குரிய பிந்திய நடவடிக்கைகளை முகாமைத்துவத்தை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்லுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய இலங்கை தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் முகவர் நிலையத்தின் (ICTA) ஆலோசனை மற்றும் கண்காணிப்பின் கீழ் ஒப்பந்தம் இடப்பட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் முகாமைத்துவ முறைமையின் அபிவிருத்தி, தொழிற்பாடுகள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் இடுவதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது.

மகாவலி அதிகார பிரதேசங்களில் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரித்து வழங்கப்பட்டுள்ள (வணிக/ வீடு/ முதலீட்டுச் செயற்திட்டம்/ ஏனையவை) காணித் துண்டுகள் 23,210 அளவின் தகவல்களை உள்ளடக்குதல் ஆரம்பகட்ட நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனுடன் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கொடைப் பத்திரம்/ அனுமதிப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தகவல்களும் இம்முறைமைக்கு உள்ளடக்கப்படும். அதற்கமைய நீண்ட கால குத்தகை/ வருடாந்த அனுமதிப் பத்திரம்/ கொடைப் பத்திரம்/ அனுமதிப்

பத்திரங்கள் 5416 இற்குரிய அடிப்படைத் தகவல்களை முறைமைக்கு உள்ளடக்குவதற்கு தற்பொழுது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
மகாவலி குடியேற்றவாசிகளுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரித்து வழங்கப்பட்டுள்ள சகல கரைப்படுத்தப்பட்ட/ நீர்ப்பாசன/ மானாவாரி காணித் துண்டுகளுக்கான கொடைப் பத்திரங்களை வழங்குதல், காணிப் பிரிவின் செயலாற்றுகைத் திட்டத்தின் பிரதான செயற்பாடாக அமுல்படுத்தப்படுவதனால் இப்பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட மானியங்களில் அதிக சதவீதம் அதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அதற்கமைய நிலவுகின்ற நிதிசார் நிலைமையின் கீழ் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய நிதி மானியம் போதாமல் உள்ளது என தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஊ) ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டில் தீர்த்து வைப்பதற்கு ஆவன செய்ய குறித்துக் கொள்கின்றேன்.

(எ) மகாவலி அதிகார பிரதேசத்தில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக கையுதிர்க்கப்பட்டுள்ள காணிகளை வினைத்திறனாக பயன்படுத்துதல் மற்றும் குறை பயன்பாட்டுக் காணிகளை இரத்துச் செய்வதற்காக முறையான செயன்முறைகளை துரிதமாக அமுல்படுத்துவது தொடர்பாக வலய மட்டத்தில் கையுதிர்க்கப்பட்டுள்ள காணிகளில், திகதி இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைய 2021.06.23 ஆம் திகதி தொடக்கம் 2021.07.08 அபிவிருத்தி நிலைமையை பௌதீக ரீதியில் இனங்காண்பதற்காக விசேட கணிப்பீடு ஒன்று 2021.08.13 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டதுடன், அந்த கணிப்பீட்டுத் தரவுகளுக்கு அமைய செயற்திட்ட காணிகள் தொடர்பான சாராம்சம் பின்வருமாறு.

விபரம்	**அளவு (ஹெக்டயர்)**
வழங்கப்பட்டுள்ள மொத்த காணிப் பரப்பு	6879
முதலீட்டாளர்களின் எண்ணிக்கை	695
பூரணமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணித் துண்டுகளின் அளவு	305
பூரணமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணித் துண்டுகளின் அளவு	3284
குறை அபிவிருத்திக் காணித் துண்டுகளின் அளவு	188
குறை அபிவிருத்திக் காணித் துண்டுகளின் அளவு	2023
அபிவிருத்தி செய்யப்படாத காணித் துண்டுகளின் அளவு	202
அபிவிருத்தி செய்யப்படாத காணித் துண்டுகளின் அளவு	1572

அந்தத் தகவல் எனது MASL/HO/BD/60 ஆம் இலக்க மற்றும் 2022.01.31 ஆம் திகதிய கடிதம் மூலம் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 75% க்கும் குறைவான நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக கையுதிர்க்கப்பட்டு உள்ள காணிகளை முறையான செயன்முறைகளுக்கு அமைய உடனிடியாக இரத்துச் செய்து முன்னேற்றத்தை 2022.02.20 ஆம் திகதிக்கு ஆற்றுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதன்படி, காணிகளை இரத்துச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதிகளவான முதலீட்டுத் திட்டங்களைக் கொண்ட மகாவலி பி வலயத்தில் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பான 1285 ஆன காணித் துண்டுகள் 128 ஐ இரத்துச் செய்வதற்குநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

இதில், ரிதிதன்ன பிரதேசத்தில் அமைந்துள்ள சுமார் 500 ஏக்கர் காணி இளைஞர் விவகார அமைச்சுடன் "இளைஞர் விவசாய முதலீட்டுக் கிராமம்" அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த காணி அமைச்சின் மற்றும் நேரியல் நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்களின்படி எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய உடனடி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், முத்துவெல்ல அலகில் இரத்துச் செய்யப்பட்ட 180 ஹெக்டேர் நிலத்தை, 18 முதலீட்டாளர்களுக்கு குறுகிய கால பயிர்ச் செய்கைக்காக ஓராண்டுக்கு வழங்குவதற்கு 2022.02.28 மற்றும் 2022.03.28 ஆகிய தினங்களில் இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

ஏனைய இரத்து செய்யப்பட்ட நிலங்களுக்கு முறையான முதலீட்டாளர்களின் சாத்தியக்கூறுகளை பரிசீலித்து எதிர்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எல் பிராந்தியத்தில் முதலீட்டுத் திட்டங்களுக்காக கையுதிர்க்கப்பட்ட நிலங்கள், சுற்றுச்சூழல் பரிந்துரைகளைப் பெறும் முறைக்கு இணங்காத காரணத்தினால் அபிவிருத்தி செய்வதற்கு முடியாமல் போன காணிகளாக உள்ளதுடன், அக்காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2019.02.21 ஆம் திகதி இடம் பெற்ற பொது வியாபாரங்கள் தொடர்பான செயற்குழுவில் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்கியதாக 2019.03.27 ஆம் திகதியுடன் கூடிய எமது அதிகார சபையால் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்ட சூழலியல் அங்கீகார விண்ணப்ப படிவத்திற்கு அமைய, சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 08/EIA/AGR/06/2021 ஆம் திகதிய மற்றும் 2022.03.22 ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவ்வழிகாட்டல்களுக்கு அமைய அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கு வதிவிட வணிக முகாமையாளர் அவர்களுக்கு தற்பொழுது அறிவிக்கப்பட்டு உள்ளது.

ரம்பகன் ஓயா பிரதேசத்தில் 06 முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள சுமார் 72 ஹெக்டயர் அபிவிருத்தி செய்யப்படாத மற்றும் வரி செலுத்தப்படாத காணிகளை இரத்து செய்வதற்கான வலய பரிந்துரை 26.11.2021 ஆம் தியதியன்று தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், கொரோனா நிலைமை காரணமாக வரி செலுத்துதல் மற்றும் அபிவிருத்திக்காக 30.07.2022 ஆம் திகதி வரை சலுகைக் காலம் என்னால் வழங்கப்பட்டு உள்ளது.

மொரகஹகந்த மற்றும் விக்டோரியா வலயத்தில் இருந்து நீண்டகால முதலீட்டு திட்டங்களுக்காக வழங்கப்பட்ட காணி பற்றிய தகவல்கள் இதனுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. டி மற்றும் வலவ வலயங்களுடன் தொடர்பான தகவல்களை எதிர்வரும் காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஏ) மகாவலி எல் பிராந்தியத்தில் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்திற்காக 2019-2023 ஆம் ஆண்டு வரை அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு 13 நீர்த்தேக்கங்களில் மீன்பிடி அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. இதன்படி, நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு அதிகபட்சமாக இருக்கும் போது, விளைச்சலை அடிப்படையாக கொண்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மீன் குஞ்சுகளின் அளவைக் கணக்கிட்டு விடுவிப்பதற்கு முன்மொழியப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான எல் வலய நீர்த்தேக்கங்களுக்கு மீன் குஞ்சுகள் 2,164,000 தேவை என மதிப்பீடு செய்யப்பட்டு அம்மீன் குஞ்சுகள் நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்டு இருந்தால் முறையான முகாமைத்துவ ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி மீன் விளைச்சலாக 1490 மெட்ரிக் தொன் பெற்றுக் கொள்ள முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டு திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

1. எனினும், 2021 ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபையின் செயல்திட்டத்தை தயாரிக்கும் போது, மகாவலி எல் வலயத்திற்கு 500 மெட்ரிக் தொன் மீன் அறுவடை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2021 செயல் திட்டத்தில் 400 000 மீன் குஞ்சுகள் வலய நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1.3 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இதன்படி, இந்த மீன் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்வதற்காக முறையான கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தேசிய நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து மீன் குஞ்சுகளை கொள்வனவு செய்வதற்காக கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

3. 2021 ஆம் ஆண்டில் 60,000 மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

4. எனினும், வலயத்தின் நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பி வழிந்தோடுதல் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் தேவைப்படும் நேரத்தில் மீன் குஞ்சுகளை வழங்க முடியாமல் போனமையால் மீதியுள்ள 360,000 மீன் குஞ்சுகளை 2021 ஆம் ஆண்டு விடிவிக்க முடியவில்லை. எனினும், பருவமழை காரணமாக நீர்த்தேக்கங்கள் நிரம்பியதால், 2022 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் உரிய மீன் குஞ்சுகள் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய மகாவலி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள 1.3 மில்லியன் ரூபாய்க்குரிய காசோலைக்காக ஒரு மில்லியனுக்குரிய கட்டணப் பட்டியல் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் 2022.01.17 ஆம் திகதி வெளியிடப்பட்டு உள்ளதுடன் 2022.02.28 ஆம் திகதி அம்முற்பணம் செலுத்தப்பட்டு உள்ளது.

5. அத்துடன் குடம்பி இறால்கள் போதுமான அளவு உரிய நிறுவனத்திடம் இல்லாமையால் ரூ. 300,000 இற்குரிய குடம்பி இறால்களை எதிர்வரும் இரு வாரங்களுக்குள் வழங்குவதாக உரிய நிறுவனம் அறிவித்து உள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில் 99.3 மெட்ரிக் தொன் மீன் விளைச்சல் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது.

6. இலங்கையில் உள்ள நீர்த்தேக்கங்களுக்கு தேவையான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படாமையால், மகாவலி வலயங்களில் உள்ள நீர்த்தேக்கங்களுக்கு தேவையான முழு அளவிலான மீன் குஞ்சுகளைக் கொள்வனவு செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே, மகாவலி வலயங்களில் நீர்த்தேக்கங்களுக்குத் தேவையான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது, அதன்படி, மகாவலி எல் வலயத்திற்கான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக இரண்டு பெருக்க குளங்கள் அமைப்பது பொருத்தமானது என இனங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, 19.03.2021 திகதிய MASL/LD/21 ஆம் இலக்க கடிதத்தின் மூலம், இது தொர்பாக வதிவிட வணிக முகாமையாளர் எல் வலயத்திற்கு தலைமை அலுவலகத்தின் மீன்பிடி மற்றும் விவசாய வள அபிவிருத்திப் பிரிவினால் அறிவிக்கப்பட்டு உள்ளது. இது சம்பந்தமாக வதிவிட வணிக முகாமையாளர் எல் வலயத்தினால் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள RPM/L/AG/67 ஆம் இலக்க மற்றும் 23.09.2021 திகதிய கடிதத்தின் பிரகாரம் குளக் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு இயந்திராதிகளை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டமை மற்றும் அசியமான பிற பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக எஹடுகஸ் வாவி குளக் கட்டமைப்பு 2022 ஆம் ஆண்டிற்குள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளத.

(ஐ) அமைச்சரவைச் செயலாளரின் 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 08/31/2021 ஆம் திகதியுடன் வெளியிடப்பட்ட "பொது செலவின மதிப்பாய்வு" எனும் அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் அது தொடர்பாக 08/28/2021 ஆம் திகதி நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம். அறிவிக்கப்பட்டுள்ள விதத்தில் ஆட்சேர்ப்புக்களை முன்னெடுப்பது ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில், மத்திய முகாமைத்துவ மட்டத்தில் மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவ மட்டத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் உள்ளமையால் பதில் கடமை புரிதல், கடமை பிரதியீடு, ஒப்பந்த அடிப்படையில் பணிகளை ஒப்படைத்தல் மற்றும் வழிமொழிவு அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் வெற்றிடம் நிலவுகின்ற பதவிகளின் கடமைகளைத் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

12.06.2013 ஆம் திகதி புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் மூலம், அதிகார சபையில் காணப்பட்ட சில பதவிகளின் வெற்றிடங்கள் குறைக்கப்பட்டன. இதன்படி, புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, உள்ளடக்கப்படாத பதவிகளில் சேவையில் ஈடுபடுபவர்கள் அவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியாக அப்பதவிகளில் இருந்து ஓய்வு பெறும் வரையில் வைக்கப்பட்டு உள்ளமையால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்படாத பதவிகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் உபரி உத்தியோகத்தர்களாக காட்டப்படுகின்றனர். .

மேலும் அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 மற்றும் 25/2014 (1) இற்கு அமைய இலங்கை மகாவலி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) சேவை வகை (MA 1-2) முதல் முதன்மைத் தொழில்நுட்பம் அல்லாத சேவை வகை (PL1) வரை 180 நாட்கள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

அதற்கமைய, அதனுடன் தொடர்புடைய ஊழியர்களின் எண்ணிக்கையை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்குமாறு கோரப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப ஊழியர்களின் எண்ணிக்கை திருத்தப்படாததால், அவர்கள் உபரிகளாக காணப்படுகின்றனர். அவ்வாறே, சில பதவிகளில் அப்பொழுது காணப்பட்ட நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையை விட அதிகமான பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தமையால் சில பதவிகளில் உபரிகள் இருந்தன. இதற்கமைய, எதிர்காலத்தில் அவர்கள் ஓய்வு செல்லும் போது அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு சமனாகி விடும்.

அவ்வாறே, ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு மகாவலி விவசாயிகளின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக, பல்கலைக்கழகத்தின் அறிவை நேரடியாக விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் போது அதன் ஒருங்கிணைப்புப் பணிகள் வலய ரீதியாக முன்னெடுப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் சமூகத்திற்கு உரிய முறையில் தெரியப்படுத்தப்படாததாலும், தவறான தகவல்கள் பரப்பப்படுவதாலும் தற்போது நிறுவனங்களின் மீது எதிர்மறையான ஊடக தாக்கம் உருவாகியுள்ளது. எனவே, இலங்கை மகாவலி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அதன்

முன்னேற்றத்தை பொறுப்புடன் திருத்தமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்கு வினைத்திறனுடன் முன்வைப்பது இக்காலப்பகுதியில் மிகவும் அத்தியாவசியமான பணியாக இனங்காணப்பட்டுள்ளமையால். அப்பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஊடகத் துறையில் அனுபவம் உள்ள ஒரு உத்தியோகத்தரை "ஊடக ஆலோசகர்" பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையின் ஒப்புதல் மூலம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஓ) வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங'கள் காப்புறுதி நிறுவனத்தால் செலுத்தப்படாத தொகையாக இருந்தால், அத்தொகை உரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தரால் செலுத்தப்படுவதற்கு எழுத்துப்பூர்வமாக விருப்பம் தெரிவித்து உள்ளமையால் அதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஓ) இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான களஞ்சியசாலை கட்டிடங்களை நெற் சந்தைப்படுத்தல் சபை நீண்டகாலமாக பயன்படுத்தி வருவதுடன், அதற்கான வாடகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், வாடகையை செலுத்த முடியாத நிலைமையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உரிய நெற் களஞ்சியசாலைகள் மீள் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதாகவும், அவற்றின் உரிமை அவர்களுக்கு இல்லாமையால் மானியங்களை ஒதுக்குவதில் சிக்கல்கள் உள்ளதாகவும், ஆகையால் உரிய களஞ்சியசாலையை அச்சபைக்கு கையகப்படுத்தித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளது.

ஆனால் அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணியை ஒரு சபைக்கு இலவசமாக மாற்றுவதற்கு எவ்வித ஏற்பாடும் இல்லை. ஆகையால், கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து களஞ்சியசாலைக் கட்டிடங்களின் முழுமையான பெறிமதியை வசூலித்த பின்னர், அக்காணியை அரச விலை மதிப்பீட்டின் 4% பெறுமதியை அறவிடுவதன் நீண்ட கால குத்தகை அடிப்படையில் அல்லது உள்ளக சுற்றறிக்கைகளின் பிரகாரம் வாடகை அடிப்படையில் மாத்திரமே வழங்கப்படலாம்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் காரணமாக, வாடகை அறவிடுதல் அல்லது கையகப்படுத்துதல் தொடர்பான சிக்கலைத் தீர்க்க முடியாமல் போனமையால் இந்நிறுவனங்கள் இரண்டும் சொந்தமான நேரியல் அமைச்சுக்களின் செயலாளர்களின் தலைமையில் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன், நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு, பொதுமக்களுக்கு அத்தியாவசிய சேவையை வழங்கும் நெற் சந்தைப்படுத்தல் சபையினால் பயன்படுத்தப்படும் களஞ்சியசாலை கட்டிடங்களை தம் வசம் வைத்துக் கொண்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதல்ல என்பதாலும் மற்றும் அரச நிறுவனங்களுக்கு இடையில் உள்ள பிரச்சினைகளுக்காக சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லாமல் அமைச்சின் செயலாளர்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என அறிவுறுத்தல்களுடன் வெளியிடப்பட்டுள்ள .சுற்றறிக்கையின் பிரகாரம் இது தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், களஞ்சியசாலைகளின் விலை மதிப்பீட்டுப் பெறிமதியைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தகவல்கள் அனுப்பிய பின்னர், குத்தகை அடிப்படையில் வழங்குவதாயின், நில அளவைத் திட்டத்தை அனுப்பி வைக்குமாறு அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதேச விலை மதிப்பீட்டாளர் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள சிக்கலான சூழலைக் கருத்தில் கொண்டு, குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய பெறிமதியை விலை மதிப்பீடு செய்வது பயனற்றது என்பதனால் (விலை மதிப்பீட்டுப் பெறுமதி வழங்கப்படுவது கோரப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு மாத்திரம் என்பதால் அவ்விலை மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்படைக்க முடியாது.) உரிய தகவல்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்படவில்லை.

(ஔ) மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகைகள் 2017ஆம் ஆண்டுக்கு முன்னர் 1.5 மில்லியன் ரூபாய் சராசரி வருமானத்தை ஈட்டி வந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் வியாபார அபிவிருத்திப் பிரிவிற்கு கையகப்படுத்திய பின்னர் மகாவலி சுற்றுலா மாளிகைகள் நவீன மயப்படுத்தப்பட்டு இணையத்தில் இடும் செயற்திட்டத்தின் மூலம் சராசரி வருமானம் 10 மில்லியன் ரூபாயைத் தாண்ட முடிந்தது.

மேலும், 2020 முதல் தற்போது வரை நிலவுகின்ற உலக தொற்றுநோய் சூழ்நிலையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத் துறை பெரும் பின்னடைவை சந்தித்ததுடன் அந்நிலைமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதங்கு முடியாமல் போனது.

ஒட்டுமொத்தமாக ஒப்பிடும் போது இச் செயற்திட்டத்தில் வருடாந்தம் நஷ்டத்தைக் காட்டினாலும் நீண்ட கால நஷ்டத்தை குறைத்து இலாபம் ஈட்டுவதுடன் சிறந்த தரமான சேவையை வழங்குவதன் மூலம் மகாவலி அதிகாரசபைக்குள் நிலவுகின்ற விசேட செயற்திட்டமாக பேணுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

அவ்வாறே, மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் (பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாடுகள்) கீழ் 05 சுற்றுலா மாளிகைகள் உள்ளன. மேற்படி சுற்றுலா மாளிகைகள் அணைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளதால், பணிப்பாளர் (முதன்மை அணைகள் மற்றும் நீர்த்தேக்கச் செயற்பாடுகள்) விடுத்த வேண்டுகோளின் பேரில், சேவைத் தேவையின் காரணமாக சுற்றுலாப் பயணிகளுக்காக வழங்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

(க) மகாவலி அபிவிருத்தி செயன்முறையை நிலைபெறுதகு விதமாக செயற்படுத்துவதற்கும் அதன் பொருளாதார வினைத்திறனை பேணுவதற்கும் மகாவலி வலயங்களில் நாற்று மேடைகளை பராமரிக்க வேண்டிய தேவை உள்ளது. அதில் பின்வரும் இரு விதங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நோக்கிச் செல்வதற்கு உதவியாக இருக்கும்.

1. மகாவலி விவசாயிகளுக்கு விவசாய பயிர்க் கன்றுகளை வழங்குதல். இப்பயிர்க் கன்றுகள் பணத்திற்கு, 50% பங்களிப்பு (சலுகை விலையில்) அல்லது இலவசமாக வழங்கப்படுகின்றன. இது உரிய ஆண்டின் செயற்திட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய நிகழும்.

2. மகாவலி அபிவிருத்தி நடவடிக்கைகளில் இருந்து அகற்றப்பட்ட வனப்பரப்பை மீளமைப்பதற்கும் மேல் மகாவலி நீரேந்து பகுதிகளில் வனப்பரப்பை அதிகரிப்பதற்கும் அவசியமான வனவளத் தாவரங்களை உற்பத்தி செய்தல் மற்றும் வனவள நிகழ்ச்சித்திட்டங்களின் தேவைக்கு ஏற்ப தாவரங்களை வழங்குதல்.

சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவினால் மகாவலி நீரேந்து பிரதேசத்தைப் பாதுகாத்தல் கீழ் மகாவலி வலயங்களில் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்குடன் இப்பிரதேசங்களில் காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வனச் செடிகளை உற்பத்தி செய்வதற்கும் மற்றும் வனச் செடிகளை நடுவதற்கும் வருடாந்த அமுலாக்கத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அதன்படி, வன தாவரங்கள், பழச் செடிகள், மூலிகைத் தாவரங்கள், விவசாய பொருளாதார பயிர்கள் உற்பத்திக்காக, மகாவலி வலயங்களில் நாற்றுமேடைகளுக்கு மற்றும் மேல் மகாவலி நீரேந்து பகுதியில் உள்ள நாற்றுமேடைகளுக்கு 2021 வரவு செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு மூலதன நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுத் தகவல்கள் கோரப்பட்டுள்ள நாற்றுமேடைகள்	**சுற்றாடல் பிரிவின் மூலம் நாற்றுமேடைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மூலதன நிதி (ரூ.மி.)**	**இலக்காக கொள்ளப்பட்ட மரக் கன்றுகளின் உற்பத்தி**
பி வலயம் (மத்திய நாற்றுமேடை மற்றும் வெலிகந்த நாற்றுமேடை)	3.98	100,000
சி வலயம்	1.467	52,000
மொரகஹகந்த வலயம்	1.15	45,632
எச் வலயம்	இல்லை	இல்லை
வலவ வலயம்	4.404	118,000
சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு - கொத்மலை (நவதெவிட மற்றும் பல்லேகல நாற்றுமேடைகள்)	1.783	116,000

இதற்கு மேலதிகமாக நாற்றுமேடைகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான தாவர உற்பத்திக்கு மேலதிகமாக விவசாயப் பிரிவின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக விவசாய பயிர்கள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறதுடன், இதற்கு அவசியமான சந்தர்ப்பங்களில் விவசாயப் பிரிவின் மூலமும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது (எச் வலயத்தின் நாற்று மேடைகளுக்காக). அவ்வாறே, சுற்றாடல் பிரிவின் மூலம் உரிய விவசாய உற்பத்திகளுக்குரிய மானியங்கள் பயன்படுத்தப்படுகிறன.

சுற்றாடல் பிரிவின் மூலம் ஒதுக்கப்படுகின்ற மூலதன நிதி மானியங்கள் பயன்படுத்தப்பட்டு தாவர உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை (விதைகள், பைகள், மண், உரங்கள், போக்குவரத்து மற்றும் பிற பராமரிப்பு நடவடிக்கைகள்) பெற்றுக் கொள்வதறடகும்மற்றும் நாற்று மேடைகளின் புதிய கட்டுமானங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் காடு, பழம், மூலிகைச் செடிகள் மற்றும் விவசாய பயிர்களை அதிகளவில் ஒவ்வொரு வலயத்திலும் மற்றும் அவ்வலயங்களுக்கு அருகில் உள்ள பிரதேசங்களிலும் நடுவதற்காக, தலைமை அலுவலகத்தின் ஒப்புதலின் கீழ் நேரியல் நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட கோரிக்கை தரப்பினர்களுக்கு மற்றும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குதல் மற்றும் 50% பங்களிப்பின் கீழ் சலுகை விலையில் வழங்கப்படுகின்றது. இதன்மூலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விவசாயப் பொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் எதிர்பார்த்த இலக்குகளை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதுடன், மரம் நடுதல் மற்றும் பராமரிப்புக்காக அதிகார சபை தனியாக ஏற்க வேண்டிய பெரும்செலவினத் தொகையைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு வலயத்துடனும் தொடர்புடைய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

<u>பங்கிலாப குறைவை காட்டுவதற்குரிய அவதானிப்பின் காரணிகள் -</u>

- பங்கிலாப கணக்கீட்டில், 2021 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த விவசாய மற்றும் வன தாவரங்களின் உற்பத்தியில் மற்றும் நாற்று மேடைகள் பராமரிப்பில் (பாதுகாப்பு நடவடிக்கைகள் உட்பட) தொழிலாளர் உழைப்பு அலகுகளை பெற்றுக் கொள்வது தொடர்பான செலவுகள், நிரந்தர ஊழியர் பதவியணி மற்றும் உத்தியோகத்தர்களின் ஊதியச் செலவுகள் மற்றும் மீண்டுவரும் செலவுகள் மூலம் முன்னெடுக்கப்பட்டன. செலவுக் கணக்கீட்டில் இப்பெறுமதிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, நிரந்த ஊழியர் பதவியணி மற்றும் உத்தியோகத்தர்களின் ஊதியச் செலவுகள் மறைமுக செலவுகளாக கணக்கீட்டில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக பாரிய செலவு காட்டப்பட்டுள்ளது. 08 நாற்றுமேடைகளுக்கும் மேலதிகமாக, பங்கிலாப கணக்கீட்டில் இழைய வளர்ப்பு ஆய்வுக்கூடம் மற்றும் வலவ சந்தைப்படுத்தல் நிலையத்தின் செலவுகளும் சேர்க்கப்பட்டுள்ளதால், எட்டு நாற்றுமேடைகளுக்குமுரிய இழப்பு 35,077,470.00 ரூபாய் என பதிவு செய்யப்பட்டு உள்ளது. அப்பெறுமதியை எட்டு நாற்றுடேகளுக்கும் தனித்தனியாக கணக்கிட்டு குறிப்பிடுவது பொருத்தமானது
- மஹாவலி வலயங்களில் ஒரு காட்டுச் செடியை உற்பத்தி செய்வதற்கும் அண்ணளவாக விற்பனை நேரம் வரை அதனைப் பராமரிக்கவும் 50-60 ரூபாய் கடந்த வருடங்களில் (2019) செலவிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு வலயத்திலும் மூலப்பொருட்களைப் பெறுவதற்கான இலகுத் தன்மை மற்றும் திறன் அடிப்படையில் இத்தொகை மாற்றமடையும். தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் அடிப்படையில், மூலப்பொருள் விலைகளின் பிரகாரம் இந்த மதிப்பு ரூ. 100 அதிகமாக இருக்கும். மேலும், உற்பத்திச் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக, தொழிலாளர் உழைப்பு அலகு ஒன்று ரூ.1,300,00 வரை அதிகரித்தமை தாக்கத்தை ஏற்படுத்திஉள்ளதுடன், மற்ற செலவுகளும் பாரிய அளவில் அதிகரித்துள்ளன. அதற்கு இணங்கியதாக உரிய ஆண்டுகளில் (2019 முதல்) தாவரங்களின் விலை திருத்தப்படவில்லை. இதுவும் பங்கிலாபம் குறைவதற்கு வழிவகுத்தது.
- தற்பொழுது மகாவலி நாற்றுமேடையில் ஒரு செடியின் சராசரி விற்பனை விலை ரூ. 30 – 60 விச்சில் காணப்படுகின்றது, குறிப்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக, வன தாவரங்கள் குறைந்தபட்ச விலையில் வழங்கப்பட வேண்டி உள்ளமையால், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மக்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இல்லாவிட்டால், வனச் செடிகளின் விற்பனை குறைவதோடு, செடிகளைப் பராமரிக்கும் செலவும் அதிகரிக்கலாம்.

- அதன்படி, பங்கிலாப கணக்கீட்டில், தற்போதைய சந்தை விலையின்படி, நாற்றுமேடைகளில் சராசரியாக ஒரு செடியின் விற்பனை விலை ரூ. 110 – 125 வீச்சில் வைத்திருப்பது உகந்ததாகும்.

- அவ்வாறே, உயர் ரக செடிகளின் விற்பனை விலை ரூ. 450 – 750 விச்சில் காணப்படுகின்றது. இச்செடிகள் இலவசமாகவும் சலுகை விலையில் வழங்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இதுவும் பங்கிலாபம் குறைவதற்கு ஒரு காரணமாகும்.

- மேலும், உரிய ஆண்டில் எதிர்பார்த்த இலக்குகளை அடைய 96,160 செடிகள் (விவசாய 17,661 மற்றும் வன நடகை 78,499) இந்நாற்று மேடைகளை அண்டி இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (அதன் மொத்த மதிப்பு ரூ. 5,769,600) (ஒரு செடியின் விற்பனை விலை ரூ. 60.00 ஆகக் கருதப்படுகிறது) அந்த தாவரங்களின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை அதிகரிக்கப்பட்டதோடு நிறை மதிப்பும்

பங்கிலாப கணக்கீட்டில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அதனையும் கணக்கிட்டுச் சேர்ப்பது பொருத்தமாக இருக்கும். (இதற்காக முகாமைத்துவம் வழிமுறைகளை வழங்கியுள்ளது)

- 2021ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக, மரங்களை நடுதல் மற்றும் கொள்வனவு செய்தல் குறைந்தமையால் மரக் கன்றுகளின் விற்பனை வருவாய் குறைந்துடன் அதற்கேற்ப பராமரிப்புச் செலவுகளும் அதிகரித்துள்ளன.

மகாவலி அதிகாரசபையினால் உற்பத்தி செய்யப்படும் மரக் கன்று ஒன்று தரையிரக்கப்படுதல் மற்றும் 12 மாதங்களுக்கு பராமரிப்புக்காக சுமார் 1300.00 ரூபா செலவாகும் என்பதுடன் ஒவ்வொரு வலயத்தினதும் தாவர உற்பத்தி இலக்கின்படி வருடாந்தம் இதற்காக அதிகளவிலான பணத்தை செலவிடுவது அதிகார சபைக்கு கடினமாக உள்ளது. (அட்டவணை 3) மரக் கன்றுகளை இலவசமாக வழங்குதல் மற்றும் குறைந்த உற்பத்திச் செலவை மட்டுமே வழங்குவதன் மூலமும் இந்த வெளிச் செலவு இல்லாமல் அதிகார சபையின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வலயங்கள்	**இலக்காக கொள்ளப்பட்ட மர நடுகைகள் (மரக் கன்றுகள்)**
பி வலயம்	100,00
சி வலயம்	25,000
டி வலயம்	50,000
மொரகஹகந்த வலயம்	100,000
ஹுருளு வாவி வலயம்	10,200
எச் வலயம்	20,000
எல் வலயம்	10,000
ஈ வலயம்	6,000
ரம்பகன் ஓயா வலயம்	10,250
வலவ வலயம்	50,000
சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு - கொத்மலை (நவதெவிட மற்றும் பல்லேகல நாற்றுமேடைகள்)	50,000

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மகாவலி பிரதேசங்களில் காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, மகாவலி நாற்றுமேடைகளில் காட்டுத் தாவரங்களை உற்பத்தி செய்வது பொருளாதார ரீதியான தேவை, வழங்கல் நியமங்களிக்கு அமைய கருத்திற் கொள்ளும் போது செலவு அதிகமான விடயமாக அவதானிக்கப்பட்டாலும், வளர்ந்த தாவரங்களால் வழங்கப்படும் சுற்றுச்சூழல் சேவைகள் (இயற்கையாக) மூலதனமான) உற்பத்திப் பொருளாதாரத்துடன் ஒப்பிடும் போது அதிகப் பொருளாதாரப் பலன்கள் பெறப்படுகின்றதாக அவதானிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், நஷ்டமடைந்ததாகக் கூறப்படும் நாற்றுமேடைகளில் தொழிலாளர்களின் கூலிகளை வழங்குவதற்காக பாரிய தொகை செலவழிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுவதுடன், குறைந்த உழைப்பு அலகுகளுடன் வலய நாற்றுமேடைகளின் நாற்று உற்பத்திகளைத் திட்டமிடுவதன் மூலம் எதிர்கால செலவினங்களைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை வதிவிட வணிக முகாமையாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதுடன், விவசாய பயிர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான திட்டத்தையும் இற்றைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

(ங) இது தொடர்பான விசாரணைகள் பொலிஸ் மோசடி விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விசாரணைகளின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
கீர்த்தி பி. கொடகம,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

பிரதி –
1. செயலாளர் – நீர்ப்பாசன அமைச்சு
2. செயலாளர் - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

காலநிலைத் தாக்கத்தைக் குறைக்கும் செயற்திட்டம்

இணைப்பு - 01

(2015 இலிருந்து 2021.12.31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள ஆதனங்கள்

வலயம்/ பிரிவு	ஆகுசெலவு (ரூ.)
பிரதான அலுவலகம்	118,591,059.15
ஹுருளு வாவி	1,506,955.38
பி.அ. மற்றும் நீ. செ. பிரிவு	1,547,275.38
ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு	20,813,584.31
அமைச்சு	1,333,999.00
பி வலயம்	71,998,487.93
சி வலயம்	2,102,528.95
எச் வலயம்	88,395,028.71
எல் வலயம்	15,600,000.00
வலவ	3,568,621.64
கூட்டுத் தொகை	**325,457,540.45**

மொரகஹகந்த செயற்திட்டம்

(2015 இலிருந்து 2021.12.31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள ஆதனங்கள்

வலயம்/ பிரிவு	ஆகுசெலவு (ரூ.)	பெறுமானத் தேய்வு (ரூ.)	நிகர பெறுமதி (ரூ.)
பிரதான அலுவலகம்	117,774,632.40	84,512,684.31	33,261,939.13
பி.அ. மற்றும் நீ. செ. பிரிவு	93,455,494.83	52,472,317.16	40,983,177.69
நீர்ப்பாசனம்	44,721,741.81	41,397,312.88	3,324,428.94
ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு	5,577,214.00	5,014,992.98	562,221.02
மொரகஹகந்த	64,467,759.29	48,352,703.22	16,115,056.02
ம.அ.பி.	17,698,381.50	13,085,126.01	4,613,255.49
ரம்பகன் ஓயா	4,600,000.00	4,140,000.00	460,000.00
பி வலயம்	4,500,001.00	4,050,000.00	450,000.00
டி வலயம்	23,181,591.24	16,224,819.25	6,959,772.04
எச் வலயம்	11,065,000.00	9,958,500.00	1,106,500.00
எல் வலயம்	10,084,608.00	8,826,140.00	1,258,468.00
விக்டோரியா	16,593,601.00	14,924,440.00	1,669,161.00
வலவ	16,698,717.03	14,398,520.52	2,300,196.51
கூட்டுத் தொகை	**430,418,733.10**	**317,357,556.33**	**113,061,176.94**

<u>காலநிலைத் தாக்கத்தைக் குறைக்கும் செயற்திட்டம்</u>

2021 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் சொத்து ஆவணத்தில் கணக்கீடு செய்யப்பட்ட சொத்துக்கள்.

வலயம்/ பிரிவு	ஆகுசெலவு (ரூ.)	பெறுமானத் தேய்வு (ரூ.)	நிகர பெறுமதி (ரூ.)
பிரதான அலுவலகம்	104,326,819.31	50,996,073.44	53,330,745.87
பி.அ. மற்றும் நீ. செ. பிரிவு	3,494,440.95	-	3,494,440.95
ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு	955,638.03	-	955,638.03
பி வலயம்	48,041,569.48	18,388,463.05	29,653,106.43
எச் வலயம்	26,192,609.35	-	26,192,609.35
இயந்திர வேலைத்தளம் மொரகஹகந்த	1,797,165.85	-	1,797.165.85
வலவ	1,582,994.57	1,452,232.01	130,762.56
கூட்டுத் தொகை	**186,391,237.54**	**70,836,768.50**	**115,554,469.04**

<u>மொரகஹகந்த செயற்திட்டம்</u>

2021 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் சொத்து ஆவணத்தில் கணக்கீடு செய்யப்பட்ட சொத்துக்கள்.

வலயம்/ பிரிவு	ஆகுசெலவு (ரூ.)	பெறுமானத் தேய்வு (ரூ.)	நிகர பெறுமதி (ரூ.)
பி.அ. மற்றும் நீ. செ. பிரிவு	46,120,053.80	21,965,969.81	24,154,083.99
ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு	277,221.44	49,899,086.00	227,321.58
மொரகஹகந்த	65,274,920.54	56,959,254.85	8,315,665.69
ரம்பகன் ஓயா	37,600,002.00	6,300,000.00	31,300,002.00
பி வலயம்	7,329,000.00	6,596,100.00	732,900.00
டி வலயம்	31,104,781.24	-	31,104,781.24
எல் வலயம்	4,484,600.00	4,036,140.00	448,460.00
விக்டோரியா	16,593,600.00	14,924,440.00	1,669,160.00
இயந்திர வேலைத்தளம்	340,000.00	-	340,000.00
வலவ	16,698,717.03	14,398,520.52	2,300,196.51
கூட்டுத் தொகை	**225,822,896.05**	**125,230,325.04**	**100,592,571.01**

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2020

பகுதி - V

2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்.

1. மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம்

- **குறிக்கோள்கள்:** மதுரு ஓயா இடது கரைப் பிரதேசத்தில் குடியேறிய கிராமிய சமூகங்களின் வருமான மட்டங்களை அதிகரித்தல் அவர்களின் விவசாயத்திற்கு நீர்ப்பாசன நீர் வழங்கலை உறுதிப்படுத்துதல்.
- **செயற்திட்ட காலம்:** 2007-2021
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 20,000 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு:** ரூபா 4,910 மில்லியன்
- **ஒட்டுமொத்த செலவு (டிசம்பர் 2021):** ரூ . 4,749.55 மில்லியன்
- **31 டிசம்பர் 2021 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்**

ஒதுக்கீடு (மில். ரூ.)	பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.)	செலவினம் (மில். ரூ.)
217.00	194.00	194.00

- **31 டிசம்பர் 2021 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

விபரம்	பௌதீக முன்னேற்றம்
விநியோகிப்புக் கால்வாய்களை நிர்மாணித்தல்/ புனரமைத்தல்	17.7 Km
களக் கால்வாய்களை நிர்மாணித்தல் / புணரமைத்தல்	24.3 Km
18 கட்டிடங்களின் புனர்நிர்மாணம்	16
40 கி.மீ. வீதியின் புனர்நிர்மாணம் மற்றும் தாபரிப்பு	36 Km
05 சிறிய குளங்களின் புனர்நிர்மாணம்	5 குளங்கள்

2. ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

- **குறிக்கோள்கள்:** உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் மகாவலி வலயங்களின் கீழ் உள்ள பிரதேசங்களில் உள்ள குடும்பங்களுக்கு நிலைபேறான வருமான வாய்ப்புகளைத் திறந்து வைத்தல்.
- **செயற்திட்ட காலம்:** 2012-2022
- **பயன்பெற்ற மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை :** பதுளை மாவட்டத்தின் ரிதிமாலியத்த பிரதேசத்தில் 14,782 குடும்பங்கள்
- **மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு:** ரூ. 1,100 மில்லியன்
- **மொத்த செலவினம்:** ரூபா 836.58 மில்லியன்
- **2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்**

ஒதுக்கீடு (மில். ரூ.)	பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.)	செலவினம் (மில். ரூ.)
165.00	152.5	137.45

- **2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

விபரம்	இலக்கு	பௌதீக முன்னேற்றம் 31.12.202
குளங்களைப் புனரமைத்தல்	16 குளங்கள்	11 குளங்கள் புனரமைக்கப்பட்டன
அணைக்கட்டுக்களை புனரமைத்தல்	01 அணைக்கட்டு	01 அணைக்கட்டு புனரமைக்கப்பட்டது
வீதிகளைப் புனரமைத்தல்	50.4 கி.மீ.	50.4 கி.மீ. பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது
பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் தாபரித்தல்	13 கட்டிடங்கள்	12 கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.
இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிர்களின் பயிர்ச் செய்கை	1000 ஹெக்டயர்	1014 ஹெக்டயர்
வீட்டுத் தோட்ட அபிவிருத்தி	240 தோட்டங்கள்	240 தோட்டங்கள்
விவசாயிகள்/ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	30 நிகழ்ச்சித் திட்டங்கள்	28 நிகழ்ச்சித் திட்டங்கள்
நுண் நீர் விநியோக முறைமையை பொருத்துதல்	20 அலகுகள்	20 அலகுகள்
நிறுவன ரீதியான மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	97 நிகழ்ச்சித் திட்டங்கள்	94 நிகழ்ச்சித் திட்டங்கள்
சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்	05 நிகழ்ச்சித் திட்டங்கள்	04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன
மரம் நடுதல் நிகழ்ச்சித் திட்டங்கள்	06 நிகழ்ச்சித் திட்டங்கள்	04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன









3. ரம்பகண் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

- **குறிக்கோள்கள்:** காணி, விவசாயம் மற்றும் குடியமர்வுச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக ரம்பகண் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் மீதியான கீழ்நிலை அபிவிருத்தியை நிறைவு செய்தல்
- **செயற்திட்ட காலம்:** 2012-2023
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** அம்பாறை மாவட்டங்களின் மஹா ஓயா மற்றும் பதியதலாவையைச் சேர்ந்த 3,550 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு :** ரூபா 1,086 மில்லியன்
- **ஒட்டுமொத்த செலவினம் (டிசம்பர் 2021):** ரூ .660.01 மில்லியன்
- **31 டிசம்பர் 2021 இற்கு நிதி முன்னேற்றம்**

ஒதுக்கீடு (மில். ரூ.)	பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.)	செலவினம் (மில். ரூ.)
192.00	191.5	172.602

- **2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

விபரம்	இலக்கு	பௌதீக முன்னேற்றம் 31.12.2021
இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிர்களின் பயிர்ச் செய்கை	1000 ஹெக்டயர்	986 ஹெக்டயர்
வீட்டுத் தோட்ட அபிவிருத்தி	360 தோட்டங்கள்	360 தோட்டங்கள்
விவசாயிகள்/ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	40 நிகழ்ச்சித் திட்டங்கள்	38 நிகழ்ச்சித் திட்டங்கள்
கால்நடை வள அபிவிருத்தி	13 நிகழ்ச்சித் திட்டங்கள்	12 நிகழ்ச்சித் திட்டங்கள்
வீதிகளைப் புனரமைத்தல்	100 கி.மீ.	95 கி.மீ. பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது
குளங்களைப் புனரமைத்தல்	09 குளங்கள்	02 குளங்கள் புனரமைக்கப்பட்டன

பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்தல்	08 கட்டிடங்கள்	06 கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.
நில அளவீடுகள் மற்றும் துண்டுப் பிரிப்புக்கள்	2,900 காணித் துண்டுகள்	1455 காணித் துண்டுகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன
இழப்பீடு செலுத்துதல்	77 காணித் துண்டுகள்	73 காணித் துண்டுகளுக்கு இழப்பீடு செலுத்தப்பட்டது
நிறுவன ரீதியான மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	54 நிகழ்ச்சித் திட்டங்கள்	50 நிகழ்ச்சித் திட்டங்கள்
சிறு குழுக்களைச் சேர்ந்த பெண்களின் உற்பத்திளைச் சந்தைப்படுத்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்	11 பயனாளர்கள்	11 பயனாளர்கள்
50% பங்களிப்பின் கீழ் இயந்திரங்களை வழங்குதல்	13 பயனாளர்கள்	13 பயனாளர்கள்
கிணறுகளை அமைத்தல்		43 கிணறுகள் கட்டப்பட்டு உள்ளன
துப்புரவேற்பாடு வசதிகளை வழங்குதல்		558 மேம்படுத்தப்பட்டன
மின் வேலிகளைத் தாபரித்தல்	10 கி.மீ.	10 கி.மீ.
மரக் கன்றுகளின் உற்பத்தி	5000 மரக் கன்றுகள்	5000 மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன
மரம் நடுதல் நிகழ்ச்சித் திட்டங்கள்	06 நிகழ்ச்சித் திட்டங்கள்	04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன




4. **வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் – எல் வலயம்**




- **குறிக்கோள்கள்:** இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுமனை, நீர்ப்பாசன நிலங்கள் மற்றும் தேவையான பௌதீக, சமூக- பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- **செயற்திட்ட காலம்**: 2012-2023
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை :** அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 6,788 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு:** ரூ. 3,957.10 மில்லியன்
- **ஒட்டுமொத்த செலவு (டிசம்பர் 2021):** ரூ .2496.72 மில்லியன்
- **31 டிசம்பர் 2021 இற்கு நிதி முன்னேற்றம்**

ஒதுக்கீடு (மில். ரூ.)	பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.)	செலவினம் (மில். ரூ.)
233.00	216.00	207.96

- **2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

பூர்த்தி செய்யப்பட்ட பணிகளின் விபரம்	இலக்கு	பௌதீக முன்னேற்றம் 31.12.2020
வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்	100 கி.மீ.	90 கி.மீ. பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது

கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்	-	13 கட்டமைப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன
கால்வாய் அமைப்பை புனரமைத்தல்	2.9 கி.மீ.	2.6 கி.மீ. பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது
கட்டிடங்களை நிர்மாணித்தலும் தாபரித்தலும்	10	09 கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன
நில அளவைக் காணித் துண்டுகள்	5200	2,000 காணித் துண்டுகள் நில அளவீடு மேற்கொள்ளப்பட்டன
உரிமைப் பத்திரங்கள் வழங்குதல்	04 நிகழ்ச்சித் திட்டங்கள்	850 உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.
தாபன அபிவிருத்தியை முன்னெடுத்தல்	451 நிகழ்ச்சித் திட்டங்கள்	275 பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.






5. விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்திட்டம்

- **குறிக்கோள்கள்:** நாட்டிற்கான விவசாய இறக்குமதிகளைக் குறைப்பதற்கும் உள்ளூர் உணவுப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உள்ளூர் உணவுப் பாதுகாப்பு மேம்பாட்டையும் அதிகரித்தல்.
- **செயற்திட்ட காலம்:** ஜனவரி முதல் டிசம்பர் 2021 வரை
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** மகாவலி முறைமைகளில் உள்ள அனைத்து விவசாயக் குடும்பங்களும்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு :** ரூ. 500.00 மில்லியன்

- **ஒட்டுமொத்த செலவு (டிசம்பர் 2021):** ரூ .4418.95 மில்லியன்
- **31 டிசம்பர் 2021 இற்கு நிதி முன்னேற்றம்**

ஒதுக்கீடு (மில். ரூ.)	பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.)	செலவினம் (மில். ரூ.)
500.00	500.00	418.95

விவசாயப் பயிர்கள் வளர்ப்பு

- 2021/ 2021 பெரும் போகத்தின் போது மகாவலி பிரதேசங்களில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள காணிகளின் நிலப்பரப்பு 96,027 ஹெக்டயராக இருந்ததுடன் மகாவலி வலயங்களில் நெல் உற்பத்தியானது பருமட்டாக 556,954 மெட்ரிக் தொன் ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள காணிகளின் நிலப்பரப்பு 86,979 ஹெக்டயராக இருந்ததுடன் பதிவாகியுள்ள நெல் உற்பத்தி 521,874 மெட்ரிக் தொன் ஆகும். 2021/ 2022 பெரும் போகம் மற்றும் 2021 சிறு போகம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த நெல் உற்பத்தி 1,078,828 மெட்ரிக் தொன் ஆகும்.
- ஏனைய பயிர்களை பயிர்ச் செய்கை செய்தல் தோராயமாக 93,906 மெட்ரிக் தொன் விளைச்சலும், 218,960 மெட்ரிக் தொன் பழ விளைச்சலும், 171,805.2 மெட்ரிக் தொன் மரக்கறி விளைச்சலும் பெறப்பட்டு உள்ளன.
- விவசாயத் திணைக்களத்தின் தரவுகளின்படி, நாட்டின் உள்ளூர் விவசாய உற்பத்தி மற்றும் அபிவிருத்தியில் இ.ம.அ.ச. ஆனது ஒரு செயலூக்கமான பாத்திரத்தை வகிக்கின்ற அதே நேரத்தில் நெல் உற்பத்தியில் 20%, சோயா அவரை உற்பத்தியில் 90%, பயறு உற்பத்தியில் 24%, பெரிய வெங்காயம் உற்பத்தியில் 21% பங்களிப்பையும் வழங்குகின்றது. (பயிர் முன்னறிவிப்பு 2021/2022 பெரும் போகம் மற்றும் 2021 சிறு போகம்)

1.2 சகல பிரிவுகளாலும் முன்னெடுக்கப்பட்ட முன்னேற்றம்

1.2.1 விவசாய மற்றும் கால்நடை வளப் பிரிவின் முன்னேற்றம்

இலக்கம்	செயற்பாடு	இலக்கு (மெட்ரிக் தொன்)	முன்னேற்றம் (மெட்ரிக் தொன்)	%
1	**விவசாய உற்பத்திகள் (2020/21 பெரும் போகம் + 2021 சிறு போகம் + 3 ஆம் பருவம்)**			
1.1	**வித்துகள் - மகாவலி பண்ணை**			
	வித்து நெல்	1,805	1,353	75%
	OFC **வித்துகள்**	108	15.71	15%

		இலக்கு (மெட்ரிக் தொன்)	முன்னேற்றம் (மெட்ரிக் தொன்)	%
1.2	**வித்துகள் - மகாவலி பண்ணை**			
	வித்து நெல்	6,503.7	6,972.7	107%
	OFC **வித்துகள்**	851.0	981.8	115%

		இலக்கு (மெட்ரிக் தொன்)	முன்னேற்றம் (மெட்ரிக் தொன்)	%
1.3	**பயிர் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்**			
	நெல்	980,653	1,078,828	110%
	OFC			
	பெரிய வெங்காயம்	31,640	18,880	60%
	சோயா	13,361.9	7,501	56%
	உளுந்து	3,276.3	3,221.4	98%
	கவ்பி	1,345.6	1,141.5	85%
	கேழ்வரகு	1,193.3	1,395.8	117%
	பச்சைப் பயறு	8,804	7,535	86%
	சோளம்	46,556	36,981	79%
	நிலக்கடலை	4,392	3,022	69%
	மிளகாய்	11,349	10,529	93%
	எள்ளு	312	755	242%
	மஞ்சள்	876	1,478	169%
	இஞ்சி	1,100	1,466	133%
		இலக்கு (மெட்ரிக் தொன்)	**முன்னேற்றம் (மெட்ரிக் தொன்)**	**%**
1.4	**பழ உற்பத்தி**			
	வாழைப்பழம்	149,592	166,733.7	111%
	பப்பாசி	28,710.6	28,929.3	101%
	கொய்யா	9,967.8	10,155.5	102%
	ஏனைய பழங்கள் (மாங்காய், டிராகன் பழம், அன்னாசி, கொடிதோடை, தோடை)	11,598.9	13,141.3	113%
1.5	**மரக்கறிகள்**	157,449.9	171,805.2	109%

இலக்கம்		இலக்கு (மெட்ரிக் தொன்)	முன்னேற்றம் (மெட்ரிக் தொன்)	%
2	**சேதனப் பசளை அபிவிருத்தி**	9,275.0	9,740.0	105%
2.1	சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்	244,300	153,240	63%

		இலக்கு (மெட்ரிக் தொன்) வருடாந்தம்	முன்னேற்றம் (மெட்ரிக் தொன்)	%
3.	**கால்நடை வளங்கள்**			
	நன்னீர் மீன் வளர்ப்பு (மெ.தொன்)	11,000	12052.1	110%
	திரவப் பால் (மில்லியன் லீட்டர்)	40	42.02	105%
	முட்டை (மில்லியன்)	60	62.35	104%
	அலங்கார மீன்கள் (மில்லியன் சோடிகள்)	37	39.98	108%



1.2.2. வியாபார அபிவிருத்தி

செயற்பாடு	அலகு	இலக்கு 2021	முன்னேற்றம் 2021
முதலீட்டு மேம்பாடுகள்			
காணி ஒதுக்கீட்டிற்கு முதலீட்டாளர்கைத் தெரிவு செய்யும் முதலீட்டுச் செயற்திட்டங்கள்			
உற்பத்தித் திறனை மேம்படுத்த முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறை செயற்திட்டங்கள்	நிகழ்ச்சித் திட்டம்	11	17
ஒரு கூரையின் கீழ் அனைத்துப் பொருட்களும்			
புதிய கட்டுமானச் செயற்திட்டங்கள்	செயற்திட்டம்	2	1
தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்த வழமையான கண்காணிப்பு மற்றும் சந்தைப்படுத்தல்	நிகழ்ச்சித் திட்டம்	13	13
சுற்றுலாத் துறை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்			
மகாவலி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் சுற்றாடல் தோழமை மிக்க படகுத் தொழிற்பாட்டுச் செயற்திட்டம்	செயற்திட்டம்	8	4
கடல் விமான செயற்திட்டம்	செயற்திட்டம்	1	1
தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை மேம்படுத்த GYB மற்றும் தொழில்முயற்சியாண்மை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	நிகழ்ச்சித் திட்டம்	20	15
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்த 50% நிதி பங்களிப்பின் கீழ் பொருட்கள் மற்றும் உபகரணங்களை விநியோகித்தல்	தொழில் முயற்சியாளர்கள்	200	383
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன் திட்டங்கள்			
மகாவலி சவிய கடன் திட்டம்	தொழில் முயற்சியாளர்கள்	55	54
மொரகஹகந்த அத்வெல கடன் திட்டம்	தொழில் முயற்சியாளர்கள்	60	9

* வலவ வலயத்தின் கைத்தொழில் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக 46 முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர் (56 ஹெக்டயர்) 30 இற்கு சபையின் ஒப்புதல் கிடைக்கப் பெற்று உள்ளது.

* பி வலயத்தின் விவசாய மற்றும் கால்நடை வளரப்புச் செயற்திட்டங்கள் 74 இற்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது. சி வலயத்தின் 50.6 ஹெக்யடர் காணிக்கான விலை மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டு உள்ளன.

*எம்பிலிபிடியவில் 58 ஹெக்யடர் காணியானது 46 கைத்தொழில் செயலாக்க தொழில் முயற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு உள்ளது

1.2.3. காணிகளின் விநியோகம்

காணி அபிவிருத்தி	வருடாந்த இலக்கு	முன்னேற்றம்	%
உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்	100,000	35,485	35%

1.2.4. சுற்றாடல் பாதுகாப்பு

செயற்பாடு	அலகு	இலக்கு 2021	முன்னேற்றம்
குளங்களில் உள்ள நீர்வாழ் தாவரங்களைச் சுத்தம் செய்து கொம்போஸ்ட் உரம் தயாரித்தல்.	தொன்	160	148.5
பசுமை வீதி கருத்திட்டத்தை மேம்படுத்துதல்	கி.மீ.	14	9
தாவர உற்பத்தி (மகாவலி நாற்றுமேடைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் மூலம்)	மரக் கன்றுகள்	819,284	508,124
மேல் நீரேந்து பிரதேசங்கள் மற்றும் கீழ் ஆறுகளில் மரங்களை நடுதல்.	மரக் கன்றுகள்	431,450	385,720
பசுமைத் தோட்டங்களை அமைத்தல்	தோட்டம்	5	3
சுற்றாடல் கல்வி மற்றும் மேம்பாடு	நிகழ்ச்சித் திட்டங்கள்	80	71
மின் வேலிகளைத் தாபரித்தல்	கி.மீ.	Open	116
இழைய வளர்ப்புத் தாவரங்களின் உற்பத்தி	மரக் கன்றுகள்	200,000	66,285